
ஸ்ரீ ஓம்
நர்மதா

# பாகம்: 1

ஸ்ரீ ஓம்

நர்மதா

நாம் எல்லோரும் இங்கு விந்தியமலையின் நர்மதையில் இருக்கிறோம் இதன் காரணம் என்ன முதலில் ஜகதாத்ரி வனத்தில் ஸ்ரீஓம் பஞ்சசக்தி பீடத்தை ஆட்சி புரியும் ஸ்ரீஓம் ஆதிசக்தி தேவி பொற்பாத கமலங்களுக்கு எனது அனந்த கோடி நமஸ்காரம், இந்த பஞ்சசக்தி பீடத்தை நிர்வகித்து நம்முடன் எப்பொழுதும் வாழ்ந்து வரும் நமது பொன்னான தலைவிக்கு எனது நமஸ்காரம். எனது தாயாகிய உங்களது குருவை நான் தாயாக அடையப்பெற்றேன். நமது தேவியின் சரித்திரத்தை இங்கு சொல்ல நான் பெரும் பாக்கியத்தையும் பெருமையும் அடைகிறேன். நான் இதுவரை தேவியின் கதைகளை கேட்டு இருக்கிறேன். ஆனால் முழுமையாககேட்கவில்லை ஏதோ கேட்டேன். இந்த சாதுர்ய மாதத்தில் முழுமையாக கேட்டேன். முதல் அனுபவம் எனது முக்கிய அனுபவம் தத்தாத்ரேயர் எந்த ரூபத்திலும் இருப்பார் என்று தேவி சொன்னாள், அதற்கு முன்னே காக்கை வந்து கத்தி விட்டுபோனது, இதுவரை வராதது, வந்தது.பிறகுதான் தேவியின் கதை கேட்டு தெரிந்து கொண்டேன். பிறகு வரவில்லை இது உண்மை சம்பவம் இதில் முக்கிய கதை கணவன் மனைவி படும் கஷ்டம் கங்கை பீஷ்மர், தத்தாத்ரேயர்,ஜமத்கனி முனிவர், பரசுராமர். நமது தேவி ஸ்ரீஓம் ஆதிசக்தி ஒளியில் உருவாகிய, ஜகதாத்ரியிடம் வளர்ந்த நமது தேவியின் இரண்டாவது கதை நம் தேவி பதினெட்டு அவதாரம் எடுத்தாள் அதில் இரண்டாவது அவதாரம் இக்கதையில் உள்ளது.

## அத்தியாயம் :1

ஸ்ரீ ஓம் நர்மதாயின் வரலாறு

ஸ்ரீ ஓம் நாம் எல்லோரும் இங்கு விந்திய மலையின் நர்மதையில் இருக்கிறோம் இதன்காரணம் என்ன? இந்த விந்திய மலை எவ்வாறு சிறந்தது அதே போன்று இந்த நர்மதை எவ்வளவு சிறப்பு வாயந்தது என்பதையும்

பார்போம், அதுமட்டும் அல்லாது இவ்விரண்டிலும் நமது தேவியின் இரண்டு அவதாரங்கள் முக்கியமாக அமைகிறது, அதாவது நமது தேவியின் பதினெட்டு புராணங்களில் இரண்டாவது புராணம் இவ்விடத்தை சேர்ந்ததாக அமைகிறது. அதனால் தான் நாம் இந்த சாதுர்ய மாதத்தில் இவ்விடத்தை தேர்ந்தெடுத்துள்ளோம். நாம் நன்றாக இந்த மகிமைகளை புரிந்து கொள்ளவேண்டும். காலை வகுப்புகளில் நாம் நர்மதையை பற்றியும், மாலை வகுப்புகளில் விந்தியை பற்றி கூறுவோம். இவ்விடத்தில் முக்கிய அம்சங்கள் நிறைந்துள்ளன. இவை யாவற்றையும் நாம் தெளிவுற தெரிந்து கொள்ள வேண்டும்.

நர்மதையின் பிறப்பு

சப்தரிஷிகளில் ஒருவனான ப்ருகு மகரிஷி தான் தவம் புரிய வேண்டும் என்று எண்ணினார். எல்லாம் வல்ல ஜகஜனனியான நமது ஸ்ரீஓம் ஆதிசக்தி தேவியை தான் தவத்தின் மூலம் பூமியிலிருந்தே பார்க்க வேண்டும் என்று விரும்பினார், ( குறிப்பு: இங்கு முக்கியமாக சப்தரிஷிக்கு அவர் மண்டலத்திருந்தே தேவியை தரிசனம் கிடைக்கும். இருப்பினும் தவத்தின் முலம் தான் அடைய வோண்டும். இப்படி தவம் புரிந்து தேவியை காணலாம் என்று நினைத்தார் ) பூமியில் தவம் செய்ய வேண்டும் என்று புறப்பட்டார். அப்பொழுது சிவபெருமானின் அசரீரி ப்ருகு முனியை நோக்கி வந்தது

“தவசீலரே சப்ரிஷிகளில் ஒருவரே, தாங்கள் எங்கு சென்று கொண்டு இருக்கிறீர்?” .

இறைவா! பரம்பொருளே! யாம் தேவியை தியானிப்பதற்காக பூமியை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம்.

இது என்ன விந்தை தாங்கள் எங்கு நினைத்தாலும் அப்பொழுதே ஜகன்மாதாவான அந்த தேவியை கானமுடியும் அல்லவா? நீர் எதற்காக தவம் புரிய செல்ல வேண்டும்‘‘.

இறைவா பூவுலகில் தவம் புரிந்தும் தேவியை காணலாம். அந்த தேவியின் ரேகைகள் பூவுலகிலும் இருக்கின்றன என்பதை நிரூபன மாக்குவதற்காக சென்று கொண்டிருக்கிறோம்" .தேவியின் ஒளி ரேகை பூமியில் வந்து செல்கிறது என்று நாம் உலகிற்கு நிரூபனமாக்க வேண்டும் அல்லவா. அதை முன்னோக்கியே யாம் செல்கிறோம் .

தாங்கள் செய்வதோ, சொல்வதோ என்றும் உலகிற்கு நன்மையைத்தான் பயக்கும், நீங்கள் சென்று நல்ல விதமாக முடித்து விட்டு வாருங்கள் .

இறைவா எனக்கு உதவி தேவை என்கின்ற நிலை நேர்ந்தால் தங்களை அழைக்கிறேன், தாங்கள் எனக்கு உதவ வேண்டும்.

ப்ருகுவே தங்களுக்கு என் உதவி நிச்சயம் உண்டு சென்று வாருங்கள் என்று ஈசனும் வாழ்த்தி அனுப்பினார்.

முனிவர் நேராக ஜகதாத்ரி இருக்கும் இடத்திற்கு வந்தார். தாயே !பூமியில் நான் எங்கு சென்று தவம் புரியட்டும் .

ரிஷியே! இது ஒரு" விந்தை" நீங்கள்அங்கிருந்து பார்க்கும் தேவியை இங்கு வந்து பார்க்க வேணடும் என்ற ஆர்வத்தில் வந்ததால் இது ஒரு விந்தை அதனால் விந்திய மலையில் தாங்கள் தவம் செய்யலாம் .ஏனெனில் தாங்கள் நித்தமும் இவ்விடமெல்லாம் அதாவது நான் இருக்கும் இடமெல்லாம் வந்து செல்கிறீர்கள்.அப்படி இருக்க விந்தியமலை செல்வது முறையாகும்.அதனால் தாங்கள் அங்கிருந்து தேவியை த்யானிக்கலாம் என்று நானும் அவரை வாழ்த்தி அனுப்பினேன்.

ப்ருகு முனிவர் தாம் தவம் புரிய இவ்விடத்திற்கு வந்தார். வந்தவருக்கு அன்றாடம் காரியங்கள் செய்ய அதாவது நீராடுவதும் சிவ பூஜை செய்யவதும்,போன்ற அனைத்துக்கும் தேவையான நீர் வேண்டுமே என்று நின்ற வண்ணம்

யோசித்தார், நாம் இவ்விடத்திற்கு வந்து விட்டோம் ஆனால் நமக்கு தேவையான அளவிற்கு நீர் வேண்டுமே என்று யோசித்தார், யோசித்தவர் இறைவா ஈசனே உன்னை பிரார்த்திக்கிறேன் இங்கு நதி உண்டாகட்டும் என்றார். ஈசனும் அருள் புரிய இவ்விடத்தில் ''ப்ருகுநதி'' ஏற்பட்டது.

ஆதியில் நர்மதையின் பெயர் ''ப்ருகு நதி'' என்றே ஆகும். எப்படி கங்கைக்கு ''பகீரதி'' என்று பெயரோ அதேபோன்று இங்கு ''ப்ருகு நதி '' நர்மதையின் பெயர் ஆகும். சிவனின் துனை கொண்டு இங்கு வந்ததால் இங்கே சிவனுக்கு மகிமை ஆகிறது. இருப்பினும் சக்தியை காண்பதற்காக ப்ருகு முனிவர் இங்கே தவம் புரிந்ததால் சக்தியின் வலிமை ஓங்கி நிற்கும். அதனால் இங்கு சக்திகள் பெண் தெய்வங்களுக்கு பெருத்த அளவில் மதிப்பு, ஆண் தெய்ங்ளுக்கு சற்று குறைவாகவும் இருப்பதை நாம் இன்றும் இங்கு காணலாம். சிவனை தாழவைத்துவிட்டு பார்வதியை மேலே வைத்து பூஜிக்கிறார்கள், அப்படி பார்க்கும் பொழுது சக்தியே இங்கு ஓங்கி நிற்கிறாள் என்பது ஸ்த்திரமாகிறது.

ப்ருகு மகா முனிவர் பலகாலம் இங்கே தவம் புரிந்தார். இவ்விடங்கள் அனைத்திலும் தான் அன்றாடம் நடந்தும் வாழ்ந்தும் வந்தார்.பலசீடர்கள் அவருக்கு சேர்ந்தனர். பலசீடர்களுடன் தனது தவத்தையும் மேற் கொண்டு இங்கே இருந்தார். தவவலிமையால் தான் தேவியை கண்டார். தேவியின் ஒளிப்பிழம்பு கிரணங்கள் இங்கு வந்து செல்கிறன என்பதை பூரனமாக்கினார். பூமியிலும் தேவியின் ஒளிபிழம்பு வந்து செல்கின்றன தேவியை அங்கு காணலாம் என்று அவர் நிர்ணயித்தார். இதுதான் நாம் இன்றும் சித்திரை மாதத்தில் பௌர்னமி முன்றாம் நாள் அன்று தேவியை தரிசிக்கிறோம் இதற்கு மூல கர்த்தாவாக விளங்குபவர் ப்ருகுமுனிவர். இவரது தவவலிமையால் இங்கு அனைத்தும் நன்றாகவும், சிறப்பாகவும், அமைந்திருந்தன. ப்ருகு முனிவர் தனது சீடர்களை எல்லாம் அழைத்து நான் இங்கு வந்த காரியம் இனி நிறைவு பெறபோகிறது,நான் இவ்விடத்தை விட்டுசெல்ல போகிறேன்,எனது உபதேசத்தின் படி நீங்கள்

உலகம் பூராவும் சஞ்சரித்து இவ்வுலகை நல்ல முறையில் சீராக்குங்கள் என்று கூறினார்.

சீடர்களும் குருவே தாங்கள் இவ்விடத்தை விட்டு செல்கிறீர்களா இது என்ன? நாங்கள் எங்கு செல்வோம்? எங்களுக்கு யார் உள்ளார்கள் என்று சீடர்கள் கேட்டனர்.

அப்பொழுது ப்ருகு முனிவர் எல்லாவற்றிற்கும் நேரம் காலம் உள்ளன,அதேபோன்று நானும் வந்த காரியம் முடிந்து விட்டன இனி நான் இங்கிருப்பது முறையல்ல ஆதலால் இவ்விடத்தை விட்டு நான் செல்லப் போகிறேன் என்றார்.

அப்பொழுது சீடர்களும் சரி தாங்கள் எப்பொழுதும் உறுதுணையாக எங்களுக்கு இருக்க வேண்டும் என்றார்கள்.

பிருகுருவும் என்றும் உங்களுடன் இருப்பேன் கவலை வேண்டாம் என்றார் .ஞானியர்கள் வசிப்பதால் இது ஞானபீடமாகும் என்று ப்ருகு அருளினார்.இங்கே பொருளுக்காக நாம் வருவது சரியல்ல ஞானத்திற்காக வரவேண்டும் என்றார் மஹரிஷி. சீடர்களும் ஓ மகரிஷி எங்களுக்கு விளக்கமாக எல்லாம் கூறுங்கள் தாங்கள் சாக்ஷாத் காரமான அந்த தேவியை பார்த்திருக்கிரீர்கள். எங்களுக்கும் அவளைப் பற்றியும்,அவளது செயல்களைப் பற்றியும் கூறுங்கள் என்று கேட்டனர். எப்படியாவது ப்ருகுவை இன்னும் சிறிதுகாலம் இங்கு தங்கவைத்து விடலாம் என்ற முறையில் இவர்கள் தேவியை பற்றி அதிகமக கூறுங்கள் என்று கூறினார்கள்.

ப்ருகு மகரிஷியும் இது ஞானபீடமானதால் நான் தேவியை பற்றி கூறுகிறேன் என்று தேவி பாகவதத்தை இங்கே உபதேசித்தார். இம்மண்ணை மிதித்தவன் தேவியின் முழுஅருளை பெறுகிறான் என்று பொருளாகிறது, சுலபத்தில் இவ்விடத்திற்கு வருவது இயலாததது இங்கு உணவுக்கும், மற்றவைக்கும் அர்த்தமில்லை, த்யானமும், ஞானமும், ஜபமும் இங்கு முக்கியமானவை. ஜபத்தை

செய்கிறவன் முக்தி அடைகிறான், ஞானத்தால் உயர்கிறான் என்று கூறினார் ப்ருகு மஹரிக்ஷி.

சீடர் ஒருவர் குருநாதரே கங்கையில் குளித்தால் நமக்கு புண்ணியம் என்று நீங்கள் சொல்ல நாங்கள் கேட்டிருக்கிறோம்.அப்படியென்றால் இந்த நதி எப்படி பொருளாகிறது?.

ப்ருகு மஹரிக்ஷியும் கங்கை, யமுனை, சரஸ்வதி போன்ற நதிகளில் நீராடுபவர்கள் தங்கள் பாவங்களை போக்குகிறார்கள் அதேபோன்று தக்ஷினத்தில் கோதாவரி, காவேரி, தாமரபரணி ஆகிய நதிகளில் நீராடுபவர்களும் தங்கள் பாவங்களை போக்குகிறார்கள்,ஆனால் இவர்கள் கர்மவசத்தால் வருகின்ற கர்மத்திற்காக பிறப்புகளை எடுப்பார்கள், பாவத்தை கழித்து புண்ணியபலத்தால் பிறப்பை ஏற்படுத்திக் கொள்வார்கள்.

குருநாதரே! இன்னும் கொஞ்சம் விளக்கமாக கூறுங்களேன்.

இந்நதிகளில் நீராடுபவர்கள் தங்கள் பாவங்களை தீர்த்துக் கொள்கிறார்கள். அதாவது பல புண்ணிய மஹரிஷிகளால் நீராடி இந்நதி வெளிசெல்வதால் அதே இடத்தில் மக்களும் அந்நதியில் நீராடியதால் இவர்கள் கர்மவசத்தால் விளைந்த பாவங்கள் தொலை கின்றன. இங்கு நீராடியவர்கள் மேலும் பாவங்களை செய்யாமலிருக்க வேண்டும் என்பது நிச்சயமாகிறது.

குருநாதரே! ஒரு கேள்வி அப்படியென்றால் இவர்கள் நீராடிவிட்டு சென்று விட்டால் பாவங்கள் தொலைந்து விட்டது என்று பொருளாகிறது அல்லவா? பிறகு பிறப்பும், இறப்பும் எப்படி உண்டாகிறது?.
இந்நதிக்கள் மஹா புண்ணியம் வாய்ந்தவை தபஸ்விகள் நீராடுவதால் இதில் நாமும் நீராடினால் நம் மனமும் தவத்தில் லயிக்கும், அப்படி தவத்தில் லயிப்பவன் தவம் செய்து முக்தி வழியை நாடி செல்கிறான். இது எல்லோருக்கும்

லயித்துவிடுமா? இராதல்லவா. எவன் பக்தி மார்கத்தில் சிறந்து விளங்குகின்றானோ அவனுக்கு இவை லயித்து விடும். பற்றுகளும், ஆசைகளும் வைத்திருப்ப வனுக்கு இவை வழி காட்டாது ஆதலால் இவர்கள் நீராடுவதால் பாவங்களை கழிக்கின்றார்கள்.

குருநாதரே! பாவங்கள் கழிக்கின்றோம் என்றால் எப்படி பொருள் என்று சற்று விளக்கமாக கூறுகிரீர்களா?.

விளக்கமாக கூறுகிறேன் கேளுங்கள், நாம் தெரிந்தும், அறிந்தும்,அறியாமலும் பல பாவங்களை செய்து பிறப்புக்களை மேற்கொள்கிறோம். இப்பிறப்புக்கள் மேற்கொள்ளும் பொழுது கர்ம வசத்தால் நமக்கு மீண்டும் பாவங்களும், புண்ணியங்களும் ஏற்படுகின்றன . ஜென்மங்கள் இதிலிருந்து தொடங்குகின்றன. ஆத்மா விற்கோ எதுவுமில்லை.பாவமுமில்லை,புண்ணியமுமில்லை ஆனால் அவை பிறப்புக்கள் எடுக்க காரணமாகின்றது, இந்த பாவமும், புண்ணியமும். அதன்படி கர்ம வசத்தால் இவை பிறப்புக்களை எடுக்கின்றன. இந்நதிகளில் நீராடினால் ரிஷிகளின் ஆதரவும் அனுக்கிரஹமும் பெருகிறார்கள்.. அப்படி பெறும் பொழுது மேற் கொண்டு பாபங்கள் செய்யாமல் நின்று விடுகிறார்கள், நின்று விட வேண்டும். ஆனால் செய்த பாபத்தின் பலனை அனுபவிக்கிறார்கள். எப்படியென்றால் பெரிதளவு வருவதை சிறிதளவாக மாறுகின்றன, இப்படி இவர்கள் பாபவத்தை கழிக்கிறார்கள்.

குருநாதரே! பாபத்தை கழித்த பிறகு எதற்காக இவர்களுக்கு ஜென்மம் மீண்டும் எடுக்கிறார்கள்,பாவமும் இவர்கள் செய்வதில்லை புண்ணிய நதிகளில் நீராடிவிட்டு எவ்விதபாவமும் செய்யாமல் புண்ணியமும், தர்ம காரியங்களையும் செய்துவரும் பொழுது இவர்களுக்கு பிறப்பு உண்டா என்று கேள்வி எழுப்புகிறார் ஒரு சீடர்.. சீடனே! ஆசைகளையும் பற்றுகளையும் அவன் விடவில்லையே, உலக பற்றும், பொருள் பற்றும், பாசமும் அவன் இடத்தில் இருக்கின்றன அல்லவா? இதை அவன்

விட்டாலொழிய அவன் ஜென்மத்தை விடுவ தில்லையே.

மஹரிஷியே !சற்று இன்னும் விளக்கமாக கூறுங்களேன்.

சீடனே! கர்மவசத்தால் பாவங்களை செய்தவன், ஈனஜெனமங்களை எடுத்து பாவங்களை அனுபவிக்கிறான். புண்யவசத்தால் புண்யங்களை செய்தவன் ராஜாக்களாகவும், மற்றும் நல்ல அந்தஸ்துடையவனாகவும், பொருட்களை எய்தியவனாகவும் அமருகிறான், பிறப்பெடுக்கிறான், அப்படி நாம் பார்க்கும் பொழுது பாவம் செய்தவனும், புண்ணியம் செய்தவனும் இருவருமே பிறப்புக்களை எடுக்கிறார்கள். இவ்விரண்டு பிறப்புக்களும் சமபங்காக உலகில் அமைகின்றன.

புண்ணியம் செய்தவனுக்கும் இப்படியென்றால் பிறகு எப்படி முக்தியை அடைவது? என்றார் ஒரு சீடர்.

சீடனே! முக்தியை அடைய பாச, பற்றை விடவேண்டும். ருசிப்பற்றை விட வேண்டும், உலக பற்றை விடவேண்டும், இவன் போகத்தை விரும்பினால் புண்ணியத்தால் போகம் கிடைக்கும், இவன் ருசி பற்றை விரும்பினால் புண்ணியத்தால் அவை உயருகின்றது அதன் பிறப்பை எடுக்கிறான், இவன் எவ்வாறு எண்ணுகிறானோ ,எவ்வாறு அனுபவிக்க வேண்டும் என்று நினைக்கிறானோ இவன் செய்த புண்ணிய வசத்தால் அவைகளை அடுத்த பிறவியில் அனுபவிக்கிறான். அதனால் தான் நான் கூறுகிறேன் நாம் முக்தி வழியை நாட அந்த பரம் பொருளைத் தான் எண்ணவேண்டும். நீ மனதில் பரம்பொருளை எண்ணினால் உன் பிறப்பும் இராமல் உன் ஆத்மா அவனிடத்தில் லயித்துவிடும் அல்லவா?.

குருநாதரே! புண்ணியங்கள் செய்தவன் கர்ம வசத்தால் பிறப்பை அடைகிறான் என்று தாங்கள் கூறினீர்கள், அப்படி பிறப்பை அடைந்தவன் முக்தியை எய்த மாட்டானா?.

சீடனே! நிச்சயம் எய்துவான், ஆனால் அவன் அப்பிறப்பில்

இறைவனை நாடி வாழவேண்டும்.அவன் சிந்தனை,செயல் அனைத்தும் இறைவனுக்கு அர்பணிக்க வேண்டும், புண்ணிய வசத்தால் அவன் பெரும்பொருளை அடைந்திருந்தாலும், பேரருள் மிக்க அந்த ஆண்டவனை நாடவேண்டும். பொருள் மீது பற்றில்லாமல் இருக்க வேண்டும். இவை அனைத்தும் நமக்கு புண்ணியவசத்தால் வந்தவை என்று அவன் எண்ண வேண்டும். இந்த புண்ணியவசத்தால் வந்தவை நமக்கு தேவையில்லை என்று அவன் கருத வேண்டும்.

குருநாதரே! எப்படி அவன் கருதுவான்? அவன் போகத்தில் இருக்கும்பொழுது அவனுக்கு எப்படித் தோன்றும்?.

சீடனே! கேளுங்கள் நாம் சுகத்தில் இருக்கும் பொழுது மனப்பூர்வமாக இறைவனை நினைக்க வேண்டும். இந்த சுகம் எப்படி வந்தது என்று அவன் ஒரு நிமிடம் சிந்தித்தால் அதற்கு பலனை எட்டி விடுவான்.

குருநாதரே !சற்று விளக்கமாக கூறுகிறீர்களா?.

கேளுங்கள் கூறுகிறேன். சீடர்களே! பொருள் வந்ததை, தான் போகத்தில் வாழ்வதை நினைத்தவுடன் மற்றவர்களுக்கு இவை இல்லையே எனக்கு மட்டும் ஏன் கிடைத்தன என்பதை அவன் சிந்திக்க வேண்டும், அவன் எப்போது சிந்திக்க தொடங்குகிறானோ அப்பொழுதே இவை கர்மவசத்தால் வந்த மாயை என்பதனை உணருவான். இந்த மாயை நமக்கு தேவைதானா? நாம் எதிலும் தர்மங்களையும், நேர்மைகளையும் கையான்டால், மீண்டும் நமக்கு நல்ல விதமாக ஒரு பிறப்பைத் தான் அடைவோம் என்பதனை உணருகிறான், அதனால் இனி நாம் இந்த கர்வசத்தால் ஆன இந்த பிறப்பை எடுக்க கூடாது இதற்கு என்ன வழி இருக்கிறது என்பதனை சிந்திக்கிறான். சிந்திக்கும்பொழுது இந்த கர்மவசத்தை ஆட்டி வைப்பவன் யார் என்பதை உணரத்தேடுகிறான். அப்படித் தேடுபவன் எங்கிருக்கிறான், எப்படி இருக்கிறான், அவனை எப்படி அழைப்பது என்ற மூன்று கேள்விகளை எழுப்புகிறான். எழுப்புகிறவன்

அனைத்தையும் விட்டு இறைவனை தேட செல்கிறான். உன் பக்கத்தில் இருக்கிறான் அல்லவா!. இவன் தேடி சென்ற பொழுது இயற்கையை நோக்குகிறான், இயற்கையிடம் கேள்வியை எழுப்புகிறான். யார் உங்களை எல்லாம் படைத்தனர்?, யார் எங்களை எல்லாம் படைத்தனர்?, இவை அனைத்தும் எப்படி வந்தது? என்ற கேள்வியை எழுப்புகிறான்.அப்படி பலகாலம் எழுப்புவதால் அந்த பரம்பொருளின் ஓம்காரத்தை உணருகிறான். ஓம்கார சப்தம் எழுப்ப அந்த சப்தத்தை தன் மனதுள் ஐக்கியப்படுத்திக் கொள்கிறான். மனதுள் ஐக்கியப் படுத்தியவன் தன் ஆத்மாவில் ஏதோ ஒரு எழுச்சி எழுவதை காண்கிறான், தன்னை அறியாமல் தன்னுல் ஏதோ பிரவேசிக்கின்றன என்பதை உணருகிறான். தனக்கு எங்கிருந்தோ வலிமை வருவதை உணர்கி'யீ8ான். தனது உடல் தேஜஸ் அடைகிறதை காண்கிறான். தான் வலிமையாக இருப்பதை உணருகிறான். அவன் அந்த ஓங்காரத்தை நன்கு உச்சரிக்கும் பொழுது இவை அனைத்திற்கும் படைத்த அந்த ஆன்டவனை காண்கின்றான். ஆன்டவனை கண்டவனுக்கு பிறப்புதான் வேண்டுமா? இல்லை பிறக்கத்தான் விரும்புவானா?. கண்டவன் கேட்கிறான் கர்மவசத்தால் என் பிறப்பினை அடைந்தேன். இனி இதற்கு ஒரு முற்றுப் புள்ளி இல்லையா. நான் பரம் பொருளை கண்டேன், கண்டுகொண்டு இருக்கிறேன், எனக்கு இன்னும் பிறப்பு இருக்கிறதா? என்று கேட்கிறான். அப்படி இருக்கிறது என்றால் இன்று உம்மை என் ஆன்மாவில் நிலைநாட்டியது எப்பிறவியிலும் அழியாமல் இருக்கட்டும் என்கிறான். அப்படி பிறப்பு இல்லை என்றால் நான் உங்கள் திருவடியில் வந்து சேரவேண்டும் என்கிறான். இப்படியாக அவன் மாயையிலிருந்து விடுபட்டு இறைவனிடம் அடைகிறான்.

குருவே! மாயைக்குள் நம்மை சிக்க வைத்து மீண்டும் நாமே அதிலிருந்து மீள வேண்டும் என்று கூறுகிறீர்களே, இது எப்படி?.

சீடர்களே! கண்ணெதிரில் அனைத்தும் காண்கிறீர்.

அனைத்தும் பொருள் என்றும் உணறுகிறீர், உணர்ந்தவர் ஏன் அழியும் பொருள் மீது ஆசை கொள்ள வேண்டும் என்று எண்ணுவதில்லையே?. கண்ணெதிரில் அனைத்தையும் காண்கிறீர்கள் அனைத்து பொருளும் அழிகின்றன, அப்படி இருந்தும் நாம் இதன் மேல் பற்றும், பாசமும் வைக்கிறோம். அழிகிறது என்று தெரிந்தும் நாம் வைக்கவேண்டுமா? அழிவில்லாத நிலையானதை தேடு என்பதற்காகத்தான் அழியும் பொருளகளை இங்கே வைத்திருக்கிறான். அழிவில்லாத நிலையான பொருளை தேடுவதற்காகத்தான் அழியும் பொருளை உன கண் முன்னில் வைத்திருக்கிறான். கண்ணெதிரில் காணும் அழியும் பொருளை பொருள்களின் மீது பற்றுவைக்காதே,பாசம் வைக்காதே அழியா பொருள் எது? என்று தேடு,அதை அறிந்துக்கொள், அப்படி அறிந்துக்கொண்டவன் மாயையிலிருந்து விடுபடுகிறான், இப்படி அழியும் பொருளை படைக்கா விட்டால் எப்படி நீ அழியா பொருளை தேடுவாய்?. அதன் மகிமையையும், மகத்துவத்தையும் நீ எப்படி அடைய முடியம்?, அதனால்தான் ஜகத் ஜனனி த்ரிபுரசுந்தரி நமது தேவியானவள் அழியும் பொருள்களை வைத்து அழியாப் பொருளை தேடும் வண்ணம் நம்மை எல்லாம் இவ்விடத்தில் படைத்துள்ளார். அவையும் யோக மாயா தேவி அதாவது மாயைகளை படைத்தவளும் அவள்தான் அதிலிருந்து நம்மை விளக்கி வெளியில் எடுப்பவளும் அவள்தான். யோக மாயாதேவி மாயைகளை படைத்து அதிலிருந்து நம்மை வெளியேற்றுகிறாள், நீ அவளை புரிந்து கொண்டால் தானே,இந்த மாயையிலிந்து நாம் வெளியேறமுடியும்?. சுற்றியுள்ளன அனைத்தும் மாயை என்று நீ எப்பொழுது உணருகிறாயோ அப்பொழுது அந்த தேவியானவள் உன்னை நோக்கி வருகிறாள். மாயையிலேயே நீ இருந்துவிட்டால் அதில் உனக்கு என்ன வேண்டு வனவோ அதையே தந்துவிடுகிறாள். அதனால் தான் சொல்லு கிறேன் கேளுங்கள் சீடர்களே யோக மாயாதேவி மாயையை படைத்து நம்மை வேடிக்கையாக பார்க்கிறாள். நீ இதற்கு அப்பாற் பட்டதை தேடுகிறாயா என்று அவள் பார்கிறாள். நாம் தேடத்தொடங்கினால் அவள் உடனே நமக்கு ஓடி வந்து அருள் தருகிறாள்.

இவ்வாறு ப்ருகு மஹரிஷி தன் சீடர்களுக்கு யோக மாயா சக்தியாகிய நமது ஸ்ரீ ஓம் ஆதிசக்தி தேவியை பற்றி விளக்ககமாக கூறுகிறார். மேலும் தேவி பாகவதம்,தேவி மஹாத்மியம் ஆகியவற்றையும் இவர்களுக்கு போதிக்கிறார்.

குருநாதரே! இவ்வாறு நதிகளைப்பற்றிக் கூறினீர்கள் இது போன்ற நதிகள் உள்ளன, இவற்றிலெல்லாம் நீராடி புண்ணியங்கள் அடைகிறோம் என்றெல்லாம கூறினீர்கள் ஆனால் பிறப்பே இல்லாமல் நாம் அடையும் நதி எது? என்று தாங்கள் கூறவில்லையே.

சீடர்களே! இந்த ப்ருகு நதி, இந்நதி புண்ய நதியாக விளங்குகிறது பாவங்களை கழிக்கும் பக்தர்கள் பல நதிகளில் நீராடுகிறார்கள். அந்திகளின் தேவதைகள் தங்கள் பாவங்களை கழிக்க இந்த நர்மதைக்கு வருகின்றார்கள் அதனால் இது புண்ய நதியாக விளங்குகிறது. அந்த தேவதைகள் இந்தியில் நீராடி தங்கள் பாவங்களை கழித்துக் கொள்கின்றன. இந்த நதியை கண்டால் நமக்கு பாவங்கள் தீரும், கண்களால் பார்தாலே நம் பாவங்கள் தீர்ந்து விடும், நீராடினால் ஞானம் பிறக்கும் ,தவ வலிமைமிக்க இடமாகும்.

அப்பொழுது சரஸ்வதின் வாக்கு அங்கே வெளியாகிறது. மகாசரஸ்வதி தேவியானவள் கூறுகிறாள் ப்ருகு முனிவரே தாங்கள் இங்கிருந்து தவம்புரிந்து தேவியைக் கண்டீர்கள். இது ஸ்தலம் முக்கிய ஸ்தலமாக விளங்கட்டும். விந்தியம் மலை என்றும் உயர்ந்து இருக்கட்டும். தபஸ்விகளுக்கு இவை சிறந்து இருக்கும்,இவ்விடம் தவவலிமை ஓங்கும், எதை நினைத்து நாம் தவம் புரிகிறோமோ அவை இங்கே கிடைக்கும். பொருள் அல்ல, நம் த்யானத்தின் மூலம் பிறையின் காட்சியும் இங்கே கிடைக்கும். இந்நதி போகும் இடமெல்லாம் செழிப்பாகவும், மக்கள் ஞானிகளாகவும் விளங்கட்டும். இங்கு தபஸ்விக்கள் எல்லாம் வந்து தவம் மேற்கொள்ளட்டும். மஹாமேரு வின் தேவியை இங்கு காண்பார்கள். இவ்விடம் ஞான பீடமாக அமையும். ஞானபீடமாக இருப்பதால் என்று

கர்வமும் மற்றும் தீயகுணங்களும் மேலோங்குகிறதோ அன்று இவ்விடங்களெல்லாம் புண்ணியத்தால் வலிமையை இழக்கிறது.

தாயே! ஞானாம்பிகையே இப்படி கூறினால் இங்கே பிறகு ஞானிகள் வந்தால் என்ன நேரும்? என்று கேட்கிறார் மஹாமுனி.

நல்ல ஞான மார்கத்தை மேற்க்கொண்டு வருபவர்கள் நிச்சயம் ஞானத்தை பெறுவார்கள். அஹங்காரமும், அஹந்தையும் மேலோங்கி நின்றால் அவை அழிந்துவிடும். இதுவே சரியான ஞானபீடம் என்று கூறலாம் அல்லவா!

தாயே! தங்கள் விருப்பபடியே இவ்விடம் அமையட்டும். இனி நான் புறப்படட்டுமா?என்று ப்ருகு மஹரிஷி கேட்கிறார்.

மஹா சரஸ்வதியும் இவ்விடம் சிறப்பாக அமையட்டும், மாசிமாதத்தில் இவ்விடம் சிவராத்ரியில் மிகவும் சிறப்பாக இருக்கும். அதுமட்டு மல்லாது இவை அனைத்துமே ஞானபீடமாகுவதால் இங்கே முக்கியத்துவம் சரஸ்வதிக்கே அன்றி பொருள்களான லக்ஷ்மிக்கோ, வீர்யமான தைரியத்திற்கோ இல்லாமல் ஞானமார்கத்தில் சிறந்து இருக்கும் இடமாக இருக்கும் என்று கூறிய மஹாசரஸ்வதியும் ப்ருகுவே தாங்களும் இனி செல்லலாம் நானும் செல்கிறேன் என்று சென்றாள்.
சீடர்கள அனைவரும் ப்ருகுவை நோக்கி மஹாதபஸ்வியே தாங்கள் இனி எங்களைவிட்டு பிரியப்போகிறீர்கள், நாங்களும் எங்கள் செயல்களில் ஈடுபடுகிறோம். இவ்வளவு புண்ணியம் வாய்ந்த நதியில் நாங்கள் தவமும்,ஜபமும் செய்கிறோம் அதே போன்று இங்கு சில நதிகளை உற்பத்தி செய்து கொள்ளாலாமா? என்று கேட்கிறார்கள். இந்த நதியின் தூய்மை மாறாமலிருக்க நாங்கள் அவ்விதம் செய்து கொள்கிறோம் என்றார்கள்.

அவ்வாறே தாங்கள் செய்து கொள்ளலாம் நதியின்

தூய்மையை பாழாக்காமல் நதியின் வல்லமையை புரிந்து கொள்ளுங்கள் என்று கூறி சீடரகளை தனித்தனியாக பிரசாரத்திற்கு அனுப்பிவிட்டு தேவியைப் பற்றியும் நதியின் மகத்துவத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ளுங்கள் என்று கூறினார். அவரின் மூத்தசீடரை பார்த்து நீ இவ்விடத்திலேயே இருந்து அனைத்து நன்மைகளையம் செய்து வருவாய் என்று கூறி சென்றார். இவ்வாறு இம்மலையில் பல இடங்களில் நதிகள் உற்பத்தி ஆகின்றன. இருப்பினும் இம்மலையில் பல இடங்களில் மஹாதபஸ் விகள் தவம்புரிந்து தங்கள் ஆத்மாவை இவ்விடத்திலிருந்து முக்தி அடைந்திருக்கிறார்கள்.அதனால் இவ்விடத்தில் சப்தரிக்ஷிகள் நித்தமும் வந்து செல்லும் ஒலிகள் நமக்கு கேட்கும், சப்தரிக்ஷிகள் இங்கே இவ்வழியாக செல்லும் பொழுது வாழ்த்துவார்கள் என்பது நிச்சய மாகிறது. இவ்விடம் அனைத்தும் தவவலிமைமிக்கது இங்கு பொருளுக்கு அதிகம் வலுவில்லை ஆனால் ஆத்ம போதனையும் ஞானமும் இங்கு அதிகரிக்கறது. நாம் பொருளும் ,பாசமும் சிந்தனை இல்லாமல் இங்கு தேவியை வழிபட்டால் நமக்கு அவளின் திருக்காட்சியும் நல்விதமான முக்தியும் கிடைக்குமென்பது நிச்சயமாகிறது. அதே நேரத்தில் இவ்விடத்தில் நீராடிவிட்டு நாம் நம் இருப்பிடத்தில் சென்றாலும் தியானமும், ஜபமும் மேற்கொண்டு ஞானமார்கத்தை அடைய வேண்டுமே அன்றி பொருள்பற்றிலோ, பாசப்பற்றிலோ ஈடுபடாமல் நாம் ஞான மார்கத்தை அடைவதற்கு இவ்விடம் முக்கியமானதாகும் .இப்படிப்பட்ட மஹாபுண்ணிய இடத்தில் ப்ருகுவின் தவத்தால் ஏற்பட்ட நதியினிடத்தில் நாம் இங்கு வந்திருக்கிறோம் மேற்படி நமது கதை அதாவது இந்த பிரிவின் கதையை காண்போம்.

ப்ருகு நதி பிரவாகம் எடுத்து ஒடியது. ஒடிய திசை எல்லாம் பாண்டித்யங்கள் மேலோங்கின, கலாசாரங்களும், பண்பாடுகளும் வளர்ந்து வந்தன. மிகவும் புகழ் மிக்கதாக விளங்கிற்று.

அத்தியாயம்: 2

ஒரு கிராமம் அக்கிராமத்தில் பாண்டித்யம் இருந்து வந்தது. அங்கு அந்தணர்கள் வாழ்ந்து வந்தனர். அதில் ஒருவர் சிவ பூஜையை மேற்கொண்டு தினமும் சிவனுக்கு பூஜை செய்து வந்தார் அவருக்கு கல்யாணம் ஆகியிருந்தது, குழைந்தைகள் ஏதும் பிறக்கவில்லை. அந்தணரின் மனைவி பூஜையிலும், பக்தியிலும் சிரத்தை யுடையவளாக இருந்தாள். கணவன் சொல் மீறாதவளாகவும் இருந்தாள். பிள்ளைகளே இல்லை என்பதால் அதாவது குழந்தைகள் ஏதும் இல்லை என்பதால் இவர்களை ஊரில் உள்ளவர்கள் பாவம் செய்தவர்கள் என்று கூறினார்கள். இருப்பினும் இவற்றை இவர்கள் பொருட் படுத்தாமல் அங்கு வசித்து வந்தனர்.

அந்தணர் தினமும் சிவனுக்கு பூஜை செய்யும் பொழுது ஈஸ்வரா உலகை காப்பவனே, நான் என்னய்யா பாவம் செய்தேன்?. எனக்கு ஏன் புத்ர பாக்கியத்தை தராமல் இருக்கிறாய்?. எனக்கு உன் அருள் இல்லையா?, எல்லாம் தருகிற நீ என்னை மட்டும் சோதிக்கலாகுமா? ஐயா பிரபு தயாளனே கருணை கூர்ந்து எனக்கு ஒரு மகப் பேறு அளிக்க மாட்டாயா? உன்னை அன்றி நான் யாரிடம் முறையிடுவேன்?, எங்கே அழுவேன்?. என் கருனை நாதனே! உன் கண்திறந்து பார் ஐயா என்று மனம் கலங்கி சிவனுக்கு பூஜை செய்து வந்தார்.

வீட்டிற்கு வந்தவர்க்கு மனைவியின் அழுகுரல் கேட்டது. தெய்வமே, இறைவா! நாங்கள் என்ன பாவம் செய்தோம், ஒன்று புத்திர பாக்யம் கொடு அல்லது எங்களை உன் பாதங்களில் ஏற்றுச் செல், இப்படி ஒரு பாப வாழ்க்கை நாங்கள் வாழத்தான் வேண்டுமா? எங்கள் மீது கருணை உங்களுக்கு இல்லையா? .இறைவா! ஏதாவது ஒரு வழி செய் என்று பிராத்தித்தாள். அழுது கொண்டே திரும்பியவள் கணவன் வருவதை உணர்ந்தாள்.

என்னம்மா அழுகிறாய் எதற்காக வருத்தபடுகிறாய்? அந்த ஈசனை நாம் குழந்தையாக எண்ணி பாவிப்போம்,

அப்படி பாவிப்பதற்கு மனபக்குவம் இருந்தால் போதும் , நீ பக்குவத்துடன் வாழக்கற்றுக் கொள்.

ஸ்வாமி! நான் எண்ணியது தவறாக இருந்தால் என்னை மன்னியுங்கள். இறைவனை குழந்தையாக ஏற்கும் பக்குவம் இன்னும் எனக்கு வரவில்லை. அதுமட்டுமல்ல தினமும் மக்களிடையே நான் நொந்து போகிறேன். அவர்கள் கூறும் வார்த்தைகள் என்னை வேதனைக் குள்ளாக்குகிறது. நான் ஒரு மானிட பிறவி அல்லவா? உங்களை போன்று என்னால் இருக்க முடியவில்லையே? என் அன்பு நாதரே எனக்கு நல்ல போதனைகளையும், ஈசனின் திருவிளை யாடல்களையும் சொல்லி தாருங்கள். எவ்வளவு தான் கேட்டாலும் என் மனதின் கலக்கம் நீங்குமா என்பது சந்தேகம் ஆகிறதே. சொந்தங்களும், பந்தங்களும், நம்மை விலக்குகிறதே ஏன் கடந்தவாரம் என் வீட்டில் திருமணம் பேசுவதற்கு நிச்சயித்தார்கள், எனது அன்பு தங்கைக்கு அவர்கள் நிச்சயித்தார்கள். நிச்சயத்தன்று நம்மை அழைக்கவில்லையே. நம்மை அழைத்தால் அவள் வாழ்க்கை வீணாகிவிடும் என்று கூறுகி றார்களே. நாம் மனதளவிலும் யாருக்கும் கேடு நினைக்கவில்லையே. யாரும் நாசம் ஆக வேண்டும் என்ற எண்ணமும் நமக்கில்லையே? உங்கள் கரங்களும்,உள்ளமும் சதா அந்த சிவனையே துதிக்கின்றனவே. அப்படி இருக்க அவர்கள் நம்மை ஒதுக்க காரணம் புத்திர பாக்கியம் இல்லை என்ற ஒரே காரணம் தானே?. ஸ்வாமி.கூடப் பிறந்தவள் நிச்சயத்திற்கும் நம்மை அழைக்காமல் இருக்கிறதே இந்த உலகம், இப்படிப்பட்ட உலகத்தில் வாழத்தான் வேண்டுமா ஸ்வாமி?.

என்னுரியவளே! அழைப்பு விடவில்லை என்ற கவலை எதற்கு? நாம் இங்கிருந்து வாழ்த்தி விடலாமே?. எல்லோரும் எங்கிருந்தாலும் நன்றாக இருக்கட்டும். அழைத்தால் தான் வாழ்த்த வேண்டும் என்பது இல்லை அல்லவா?. உனக்கு ஒன்று தெரியுமா? இவர்கள் நன்றாக இருக்கட்டும் என்று அன்று சிவனுக்கு ‘ப்ரியமான ருத்ரா அபிஷேகம் செய்வித்தேன். என்னுடையாளே அவர்கள் நம்மை அழைத்திருந்தால் நம்மால் அந்த ருத்ரா அபிஷேகம்

செய்திருக்க முடியுமா? இறைவன் அவர்களுக்கு நல்லது செய்வதற்காகவே இப்படி நாடகம் ஆடியிருக்கிறான். இதை நாம் நல்லவிதமாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பு: தன் மனதில் வேதனை இருந்தும் மனைவிக்கு காட்டிக் கொள்ளாமல் இறைவனையே தியானித்திருந்தார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

ஸ்வாமி! இது மட்டும் அல்ல பண்டங்கள் எதுவாக இருந்தாலும் சரி பால்,தயிர்,மோர்,வெண்ணெய் ஆகியவைகளாக இருந்தாலும் சரி, நம் வீட்டிற்கு யாரும் முதலில் கொடுப்பதில்லை. பிள்ளை இல்லாதவர் வீட்டில் கொடுத்தால் மாடுக்கு கேடுவிளைவிக்கும், நிலங்கள் சீர்கெட்டு விடும், வீடு பாழாகிவிடும் என்றெல்லாம் கூறுகிறார்களே இது நியாயமாகுமா ஸ்வாமி?. எந்த தர்மத்தில் இவை உள்ளன?.

என் இனியவளே! பெரியவர்கள் இருக்கும் போது நாம் இவற்றை கூறலாகாது, அவர்கள் எதை கூறுகிறார்களோ அதை நாம் கடைபிடிக்கத்தான் வேண்டும். எப்படியோ பண்டங்களும், மற்றவை களும் நம்மை வந்து சேர்கிறதல்லவா? அந்த இறைவனின் கருனை கடலை பார்த்தாயா? நமக்கு வேண்டாம் என்று எதுவும் ஒதுக்காமல் தந்துவிடுகிறான் பார்த்தாயா? நம்மிடம் பொருள் ஏதோ வந்து விடுகிறதல்லவா? அதனால் நாம் பொருட்படுத்தக் கூடாது. உன் சிந்தனையை அலை பாயவிடாதே, பலர் சொல்லும் சொற்கள் காதில் விழுந்தால் ஈஸ்வரா என்று அவனை நினைத்து சென்று விடு. மனதில் இட்டு வேதனை அடையாதே. அவை நமக்கு பலன் தராது. வேதனையால் உடல் பாதிப்பே ஏற்படும். நீ இவற்றையெல்லாம் மனதில் எண்ணி வருந்தாதே. அந்த சர்வேஸ்வரனை மனதில் எண்ணிக்கொள். ஏனோ அவன் நம்மிடம் விளையாடுகிறான்.

ஸ்வாமி! சதா சர்வகாலமும் அவனை நினைத்தும், அவனை பூஜித்தும் வருகிறீர்கள் உங்களிடமா அவன் இப்படி

விளையாட வேண்டும்?
என் இனியவளே! ஒருவர் நம் மேல் கோபப்படுவதும், நம்மிடம் விளையாடுவதும், ஏன் நம்மை சோதிப்பதும், நம் மேல் அவர்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கிறது என்பதை இவை தெளிவாக்குகிறது. அந்த ஈசன் நம் மேல் வைத்திருக்கும் பாசத்தையும், அன்பையும் பார்த்தாயா!. அதனால் தான் நாம் இன்னும் ஜீவித்து கொண்டிருக் கிறோம். நாம் அவனுடைய உரிமையாளர்கள். அதனால் அவனுக்கு நம் மேல் முழுஉரிமை உள்ளன. அவன் எதை செய்தாலும் நாம் சந்தோஷமாக ஏற்கலாம். ஏனெனில் அவனது அருளும் பிரியமும் என்றும் நம்மிடம் இருக்கிறது என்பது நிச்சயமாகிறது.

ஸ்வாமி! தாங்கள் கூறும் அறிவுரைகளை நான் ஏற்கிறேன். தங்கள் விருப்பப்படி நடக்க முயற்சிக்கிறேன். வாருங்கள் அமர்ந்து உணவருந்துங்கள் என்று பிரியமாக அழைத்தாள்.

ஈஸ்வரா! ஏதோ இன்றைய பொழுது உன் பெயரால் இவளை சமாளித்து விட்டேன். ஐயா இன்னும் எத்தனை காலம் ஐயா நான் சமாளிப்பது? இதற்கு ஏதாவது ஒரு வழி வகுக்க மாட்டாயா? இறைவா! நான் சுயநலக்காரன் என்று நினைக்காதே, நான் எனக்காகவோ அல்லது பழி நீங்குவதற்காகவோ ஒரு மகப்பேறை கேட்க வில்லை. என் மூலம் உன்னை ஜபித்து, அபிஷேகமும், திரிகால பூஜையும் நடத்த ஒரு மகவு அளிக்க வேண்டுமென்று தான் கேட்கிறேன். ஐயா!. கொடுப்பதை உன்னிடத்திலேயே தந்து விடுகிறேன். ஐயா! ஏதோ மனது பித்து பிடித்தது போல் கூறுகிறது. தவறாக இருந்தால் எல்லாம் வல்ல இறைவனே மன்னித்துவிடு. நான் அவளுக்கு சஞ் சலமில்லாமல் இரு என்று உபதேசிக்கிறேன், உபதேசிக்க எனக்கு என்னய்யா தகுதி?. என் வேதனையை மறைத்து கொள்ள சமாதானமா செய்து கொள்கிறேன்?. இறைவா அனைத்தும் உன் பாத கமலங்களில் சமர்ப்பிக்கிறேன். எனக்கு உன்னையன்றி யாரய்யா தெரியும்?. நான் கண்விழித்தது முதல் உன்னைதானே முதலில் பார்த்தேன்.

தனது பழைய நினைவுகளில் ஆழ்ந்தார்.

இங்கே முக்கியமான குறிப்பு என்னவென்றால் இந்த அந்தணர் பிறந்தவுடன் தந்தை மரணமடைந்தார்.தந்தை மரண மடைந்ததைக் கேட்டத் தாய் அதே நேரத்தில் மரணமடைந்து விட்டாள். தந்தையின் தம்பியின் மனைவியாகியவர் இவரை வளர்த்தனர். அதிர்ஷ்ட மில்லாதவன் பிறந்தவுடன் இரு வரையும் கொன்றவன் என்று இவரை திட்டுவார்கள். இவரை வீட்டில் ஒரு மூலையில் வைத்து உணவிடுவார்கள், படுக்கவும் இடம் கொடுப்பார்கள். காலை நான்கு மணி அளவில் சாணி இவர் மீது தெளித்து கதவை தாளிட்டு உள் இருந்து குரல் கொடுப்பார். வேகமாக நதியை நோக்கி ஓடிச்செல் நதியில் யார் கண்ணிலும் படாமல் தொலை தூரத்தில் சென்று நீராடு,நீராடி அப்படியே கோவிலுக்கு சென்று விடு. கோவிலில் அனைத்து வேலைகளும் செய்து விட்டு மதியம் அங்கேயே உணவருந்திக்கொள். மாலை நன்கு இருட்டிய பின் யார் கண்ணிலும் படாமல் நீ வெளியில் வந்து அமரு தட்டில் உனக்கு வேண்டியவை வைத்திருக்கிறோம். தின்றுவிட்டு அங்கேயே உறங்கு. உள்ளெல்லாம் நீ வரக்கூடாது. மாற்றுத் துணி வெளியில் போட்டிருக்கிறோம் மாற்றிக் கொள். நீ எங்கள் பிள்ளைகளுடன் உரையாடக் கூடாது, விளையாடவும் கூடாது, இவர்களை நீ சந்திக்கவே கூடாது என்று இவரது சிறியதந்தை அதாவது தந்தையின் தம்பி கூறிவிட்டான். இப்படி இவர் வளர்ந்தார்.
தினமும் குளித்து கோவிலுக்கு செல்வார். கோவிலில் சுத்தங்கள் செய்து பூக்களை பறித்து கொடுத்து பூஜைக்கு வேண்டியவைகள் அனைத்து செயலையும் செய்து வந்தார். அச்சிவ கோவிலை பூஜிக்கும் அர்ச்சகர் இந்த சிறியவனை பார்த்து வேதனை பட்டார். இவனை அன்பாகவும், பரிவாகவும் பார்த்துக்கொண்டிருந்தார். இவனுக்கு பூஜை விதிமுறைகளை சொல்லி கொடுத்தும் வந்தார். சிவ ஜபத்தையும் எடுத்து கொடுத்தார். பூணூல் இடும் காலத்தில் இவனுக்கு பூணூல் இட வேண்டுமென்று தீர்மானித்தார்.

மனைவியும், ஊரில் உள்ளவர்களும் தாய், தந்தை இல்லாதவன் இவனுக்கு என்ன பூணூல் இடுவது, யார் அமருவார்கள் அமர்ந்து ஒருவேளை அவர்களும் மரணமடைந்து விட்டால் பலர் பலவாராக பேச குருக்களின் மனைவி ஒப்பு கொள்ளவில்லை. நான் இதற்கு சம்மதிக்க மாட்டேன் என்று எதிர்ப்பு தெரிவித்தாள்.

குருக்கள் எத்தனையோ பேர்களை,பாண்டிதர்களையும் கேட்டார், கெஞ்சினார் ஐயா இது என்ன அக்கரமம்,அவன் தந்தையும்,தாயும் நல்ல குலத்தை சேர்ந்தவர்கள். முறையாக அவர்கள் இந்தசிவ பூஜை, இக்கோவிலில் உள்ள சிவனை பூஜிப்பவர்கள். அவனை அதாவது இந்த சிவனை அர்ச்சிப்பவர்கள், ஆதிகாலத்தில் இவர்கள் பரம்பரைதான் இந்தகோவிலை கட்டியது. சிவபூஜையை இவர்கள் தான் செய்து வந்தார்கள். காலவசத்தால் செல்வாக்கு மேலோங்க, பாண்டித்யங்கள் மேல் ஒங்க இவர்கள் இக்கோவிலுக்கு பூஜைசெய்ய ஆட்களை நியமித்தார்கள். அதன் பாபமோ என்னமோ இன்று இக்குழந்தை இப்படி தனியாக நிற்கிறது. செல்வாக்கால் நாம் இறைவனை மறக்கலாமா? அல்லது இறைதொண்டை நாம் கைவிடலாமா? ஏதோ பெரியவர்கள் செய்த தவறு நீங்கள் எல்லாம் பெரிய மனது பண்ணி இக்குழந்தைக்கு உபகர்மத்தை செய்விப்பீர்கள் என்றார்.

ஆனால் அந்தனர் கூட்டத்தில் யாவரும் மௌனமாக இருந்தனர்.

சிறுவனின் சிற்றப்பன் சிறிய தந்தை எழுந்து நின்று கூறினார்.ஐயா குருக்களே! உங்களுக்கு பூஜை செய்வது தானே தொழில். எங்கள் பரம்பரையை வம்புக்கு இழுக்க வேண்டிய அவசியம் இல்லையே. முடிந்தால் நீங்கள் பூஜை செய்யுங்கள் இல்லையேல் நாங்கள் வேறு ஆளை நியமித்துக் கொள்கிறோம். இந்த அனாதை பயலுக்கு வக்காலத்து வாங்க வந்து விட்டீரா. இவன் செய்த பாவம் இவன் தந்தையும்,தாயும் இறந்து விட்டனர். எதற்காக ஐயா! எங்கள் குலதர்மத்தை இழுக்கிறீகள். இந்த பாப ஆத்மா இந்த ஊரில் இருப்பதை விட விரட்டியே விடலாம். அதை

விட்டு விட்டு உபகர்மமாம் உபகர்மம் . பேசாமல் போய் பூஜையை பாரும். அடேய் நீ எங்காவது ஆத்தில் போய் விழு. உன்னால் எங்கள் குலத்திற்கே அவமானமாகிறது. எதற்கடா உனக்கு இப்படி ஒரு ஜென்மம். நீ வாழ வந்தாயா அல்லது எங்கள் குலத்தை அழிக்க வந்தாயா? ச்சே இப்படி ஒரு கூட்டம் இங்கே தேவையா? எல்லோரும் கலையுங்கள் போய் அவரவர் வேலைகளை பாருங்கள். இன்று உபகர்மம் நாளை திருமணம் என்று பேசுவார்கள். வெட்டி பயலுக்கு இவையெல்லாம் தேவையில்லை. ஏதோ அவனுக்குரிய பாகத்தில் ஒரு சிறிதளவு நிலத்தை தருகிறேன். ஆனால் அவன் நிலத்திற்கு வர கூடாது. அப்பாகத்தில் வரும் பயிரை அவனுக்கு தந்து விடுகிறேன்.அதுவும் நான் கையில் கொடுக்க மாட்டேன், சிவன் முன்பு வைத்து விடுகிறேன். எடுத்து சென்று போகட்டும். யாரும் நடமாடாத இடத்தில் ஒரு சிறிய வீட்டினை அவனுக்காக கட்டி தருகிறோம். பாவபட்ட ஜன்மம் அங்கே வாழ்ந்து எக்காடாவது கெட்டு போகட்டும் .பாரும் குருக்களய்யா இதற்கு மேல் எங்களால் எதுவும் செய்விக்க முடியாது. இனி நீராயிற்று அவனாயிற்று அவனை பற்றி ஏதாவது பேசவோ, கேட்கவோ வந்தீர்களானால் உங்கள் வேலையும் போய் விடும் ஜாக்கிரதை. சரி கூட்டம் கலையட்டும் என்று கூறி தனது கூந்தலை உதறி முடித்துக் கொண்டார்,விட்டது சனியன் என்று கூறிக்கொண்டே சென்றார்.

குழந்தையும் குருக்களும் மட்டும் தனியாக நின்றனர்.
என்ன மாமா எனக்கு பூணூல் போடுவார்களாமா? என்று கேட்டான்.

அவனை வாரி அணைத்துக் கொண்டுக் கூறினார். இல்லை கண்ணா நான் அதற்கு வழி செய்கிறேன் வா, இறைவா பாவம் பிஞ்சு உள்ளம் அழுகிறதே, இன்னும் அவனுக்கு எதுவும் புரியவில்லையே, அவன் பூணூலுக்காக ஏங்குகிறான்,ஆனால் அவன் வாழ்க்கையே இன்று ஒரு கேள்வி குறியாக நிற்கிறதே. ஈசனே! என்ன செய்வது ஒன்றும் புரியவில்லையே, நீ தானப்பா இக்குழந்தைக்கு வழி காட்ட வேண்டும். தாயும்

நீயே தந்தையும் நீயே என்ற முறையில் நான் இக்குழந்தையை உன்னிடம் ஒப்படைக்கிறேன். நீ ஏதாவது ஒரு முடிவை இக்குழந்தைக்கு செய்வாய் என்று சிவனிடம் பிரார்த்தித்து கொண்டு இவர்கள் சென்றனர்.

நாட்கள் கடந்தன சிறுவனும் இப்போது நன்றாக கேட்க ஆரம்பித்தான்.எல்லோரும் பூணூல் இட்டுக்கொண்டிருக்கிறார்களே தனக்கு ஏன் இன்னும் போடவில்லை தனக்கு யார் போடுவார்கள் என்று தினமும் குருக்களை வற்புருத்தினான்.

## அத்தியாயம்: 3

ஒரு நாள் பூஜைகளை முடித்து விட்டு ஒய்வாக அமர்ந்த குருக்கள் சிவனை குறித்து ஜபம் செய்து கொண்டிருந்தார்.

சிறுவனுக்கு பன்னிரெண்டு வயது இருக்கும். இவன் இவர் ஜபம் செய்துகொண்டிருக்கிறார் என்பதை பார்க்காமல். பின்னிருந்தபடி கூச்சலிட்டான். எனக்கு பூணூல் போடுவீர்களா இல்லையா? நான் புத்தி தெரிந்த நாள் முதல் இங்குதானே இருக்கிறேன். எனக்கு பூணூல் போட வேண்டியது உங்கள் பொறுப்பல்லவா இல்லையேல் நான் போய் நதியில் விழுந்து விடுவேன் என்று இரண்டு மூன்று முறை கூச்சல் இட்டான்.

பெரியவர் ஆழ்நிலை ஜபத்தில் இருந்தார்.

பதில் வராததை கண்ட அவன் இதோ இப்பொழுதே போய் விடுகிறேன் என்று கூச்சல் இட்டான். அப்பொழுது ஒரு குரல் வந்தது. அது பெரியவரிடமிருந்துதான் வந்தது. ஏய் சிவனின் மேல் இட்டிருக்கும் பூணூலை எடுத்து போட்டுக்கொள் .

உடனே இறங்கி ஓடி வந்தான்.பெரியவரை நமஸ்கரித்தான்,ஆனால் அவர் ஆழ்நிலை ஜபத்தில்

இருந்தார்.அவனுக்கு அவை புரியவில்லை, இருப்பினும் நேராக உள்ளே சன்னதிக்குள் ஓடினான் , பூணூலை எடுத்து தன்மேலிட்டுக்கொண்டான்.

ஜபத்தை முடித்து கண்திறந்தவர் பார்க்கும் பொழுது இவன் சிவன் சந்நிதியில் பூணூலுடன் நின்று கொண்டிருந்தான்.

என்னடா நீ ஏன் அங்கு சென்றாய்?. ஊரில் உள்ளவர்கள் இதை பார்த்தால் என் வேலை போய்விடுமே. அதுவுமில்லாது பூணூல் வேறு போட்டுக் கொண்டிருக்கிறாய், எங்கிருந்தடா பூணூல் வந்தது.

ஐயா! நீங்கள் தானே கூறினீர்கள், சிவனிடத்திலிருந்து பூணூலை எடுத்து போட்டுக்கொள் என்று கூறினீர்களே! மறந்தாவிட்டீர்கள்?

என்னடா சொல்கிறாய்? அபச்சாரம் பேசாதே வா வெளியில்.

பயந்து நடுங்கியவன்னம் வெளியில் வந்தான். இல்லை ஐயா நீங்கள் கூறியதை தான் நான் செய்தேன் என்று அழுத வன்னம் கூறினான்.

நானாடா கூறினேன்?

ஆமாம் ஐயா நீங்கள்தான் கூறினீர்கள்.
ஈஸ்வரா !குழந்தை அபச்சாரம் செய்துவிட்டானே என்ன செய்யட்டும்?. ஊரில் உள்ளவர்கள் பார்த்தால் என்ன சொல்வார்களோ? இறைவா ஒன்றும் புரியவில்லையே? என்னையும் காப்பாற்றுங்கள், இச் சிறுவனையும் காப்பாற்றுங்கள் என்று கதறினார்.

அந்நேரத்தில் ஒரு முனிவர் அங்கு வந்தார். என்ன இங்கு ஒரே பதற்றமாக இருக்கிறீர்கள் என்றார். நடந்தவைகளை குருக்கள் அவரிடம் கூறினார்.

அவ்வளவுதானே ஈசனே குரல் கொடுத்திருக்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.எதற்காக சஞ்சலப்படுகிரீர்கள்.

ஐயா! இவ்வூரை பற்றி தங்களுக்குத் தெரியுமா? பிரசினைகள் பல உருவாகுமே.

ஒன்றும் கவலை வேண்டாம் நான் ஒரு பூணூலை தருகிறேன் அதை ஈசன் மேல் இட்டுவிடுங்கள். எப்படியும் ஊரில் இவனை ஒதுக்கி விட்டார்கள், அதனால் இவனை பற்றிய பேச்சுக்களை நீங்கள் தவிர்த்து விடலாம்.

ஐயா! தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?

நான் விந்திய மலையிலிருத்து தவம் முடித்துக்கொண்டு வருகிறேன், இந்நதி எங்கெங்கெல்லாம் செல்கிறதோ அங்கெல்லாம் நான் பிரயாணம் மேற் கொண்டிருக்கிறேன். நான் வருகிறேன் என்று சொல்லி அவர் விடை பெற்றுக்கொண்டார்.

அடேய்! நீ அதிர்ஷ்டகாரனடா ஈசனின் பூணூலையே நீ போட்டுக் கொண்டாயென்றால் இந்த பாக்கியத்தை விட வேறு என்னடா வேண்டும்?. மனதில் நிம்மதியாகவும்,சஞ் சலமின்றியும் இருந்தார்.

ஆனால் ஊரில் பெரிய ரகளை உண்டாயிற்று. சிறுவனுக்கு யார் பூணூல் இட்டது, உபதேசம் யார் செய்தார் என்ற கேள்வி வந்தது.

சிறுவனுக்கு பூணூல் இட்டது அந்த ஈஸ்வரன் தான் என்றார் குருக்கள்.

என்ன விளையாடுகிறீர்களா?,புதிய நாடகத்தை தொடக்குகிறீர்களா?.

உண்மையைத்தான் கூறுகிறேன் என்றார் .

ஒரே நாளில் இவை நடந்து விட்டனவா? அப்படி என்றால் அவனுக்கு மந்திர உபதேசம் செய்தது யார்?.

ஈஸ்வரா! இந்த கேள்வியை நான் எதிர்பார்க்கவில்லையே, இவனுக்கு மந்திர உபதேசம் செய்யவில்லையே,என்று மௌனமாக இருந்தார்.

பார்த்தீர்களா! ஏதோ ஒரு கயிற்றை போட்டு விட்டு,இவனுக்கு பூணூல் முடிந்து விட்டது என்றும், சிவன் வந்து இட்டான் என்றும் நாடக மாடுகிறார்கள்.

இல்லை உண்மையில் நடந்தது இவைதான்.

சரி அப்படியானால் அவன் மந்திரத்தை சொல்லட்டுமே.

மந்திரம் காதுகளில் தான் சொல்லவேண்டும். இவை இரகசியமானவை அல்லவா?.

இருக்கட்டும் முறையில் நான் சிற்றபன் தானே என் காதில் வந்து சொல்லட்டும் என்றார்.

ஈஸ்வரா! இனி இவனுக்கு நீதான் உபதேசிக்க வேண்டும், போடா போய் மந்திரத்தை அவர் காதில் சொல்லிவிட்டு வா,என்றார்.
சிறுவன் முழித்துக்கொண்டிருந்தான். நமக்கு எதுவும் தெரியாது என்ன சொல்ல சொல்கிறார்கள்,ஒன்றும் புரியவில்லையே? என்று நின்று கொண்டிருந்தான்.

உடனே குருக்கள் ஆவேசம் வந்தவர் போல் அப்படி அவன் மந்திரத்தை சொல்லி விட்டால், இனி அவன் இக்கோவிலில் குருக்களாக நியமிக்கப்பட வேண்டும் என்றார்.

ம், ம் சொல்லட்டும் பார்க்கலாம் எல்லாம் நியமித்து விடுகிறோம் என்றார்.

குருக்களும் சிறுவனை பார்த்து போடா, போய் மந்திரத்தை சொல்லேண்டா என்றார்.

சிறுவன் ஒரு முறை ஈசனையும், மறுமுறை விந்திய மலையிலிருந்து வந்த ரிக்ஷியையும் மனதில் எண்ணிக் கொண்டான்.ஐயா எனக்கு ஒன்றும் தெரியவில்லை, இவர்கள் மந்திரத்தை சொல் என்கிறார்கள். நீங்கள் தான் இதற்கு அருள் புரிய வேண்டும் என்று கூறி நேராக சிற்றப்பன் காதின் அருகில் சென்று மந்திரத்தை முறையாக கூறினான். என்ன ஆச்சர்யம் சரியாக அவன் கூறியிருந்தான்.

ஆங், ஆங் ஏதோ கூறினான் என்றார்.

ஆனால் நீங்கள் வார்த்தையை மீறக்கூடாது அவனுக்கு கோயில் கைங்கர்யத்தை கொடுத்து விட வேண்டும் என்றார் குருக்கள்.

ம் ஆகட்டுமய்யா அவன் அங்கே செய்யட்டும், நாங்கள் எல்லாம் எங்கள் பரம்பரையில் யாரும் அங்கு வர மாட்டோம். அந்த ஈசனுக்கு இந்த பாபி கையால் செய்ய வேண்டுமென்று விருப்பம் இருக்கிறது போலிருக்கிறது நடக்கட்டும் என்று மீண்டும் கூந்தலை உதறிமுடிந்து கொண்டு சென்றார்.

இவ்வாறு சிவனுக்கு பூஜையும் இவன் செய்ய தொடங்கினான், சிவஜபத்தையும் குருக்கள் எடுத்துக்கொடுத்தார். ருத்ரம், சமகம் போன்ற மந்திரங்களை இவனுக்கு முறையாக கற்றுத்தந்தார். ஏனெனில் அக்காலத்தில் பூணூல் இட்ட பிறகுதான் மந்திரங்களை கற்றுத்தர வேண்டும். அதனால் இவைகளை கற்றுத்தந்தார். தொலைதூரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் ஒரு ஏழை அந்தணரின் மூத்த மகளை பார்த்து, இவனுக்கு மணமும் முடித்து வைத்தார்.

என்ன இன்னும் நீங்கள் உணவருந்த வரவில்லையே என்றாள்

மனைவி. சட்டென்று தனது கடந்த காலத்தை மறந்து இதோ வருகிறேன் என்று எழுந்தார். தன் சிந்தனையிலிருந்து மீண்டு மனைவி கூப்பிட சாப்பிட செல்கிறார்.

சாப்பிட அமர்ந்தவரை பார்த்த மனைவி ஸ்வாமி! என்ன ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறீர்கள் என்று கேட்டாள்.

ஒன்றுமல்லை ப்ரியே, நான் பிறந்தது முதல் உன்னை மணந்தது வரையில் ஒருமுறை யோசித்துப் பார்த்தேன்.

ஏன் ஸ்வாமி இதையெல்லாம் எதற்காக யோசிக்கவேண்டும். தாங்கள் கூறியிருக்கிறீர்களே எதுவும் நாம் யோசியாமல் சிவனை பூஜிக்க வேண்டும் என்று பிறகு நீங்கள் ஏன் யோசிக்கிறீர்கள்.

ப்ரியே! நான் யோசிப்பது தவறுதான் இருப்பினும் ஒரு முறை நடந்தவைகளை திரும்பி பார்த்தேன்.
ஸ்வாமி! நடந்தவைகள் போகட்டும். நாம் இனி நடப்பவைகளை பார்ப்போம். நீங்கள் சாப்பிடுங்கள் என்று கூறினாள்.

இவரும் உணவு அருந்திவிட்டு வெளியில் வந்தார். என்னை மணந்ததால் நீயும் துன்ப படுகிறாய் என்றார்.
ஸ்வாமி! அப்படியெல்லாம் கூறாதீர்கள். நான் பெரும்பாக்கியசாலி ஒரு சிவனடியாரை நான் மணந்திருக்கிறேனே இதை விட வேறு என்ன எனக்கு வேண்டும். உங்களது தூயபக்தியும், தூய சிந்தனையும், நல்ல எண்ணமும், நம் வாழ்க்கையை சீராக்கும். உங்களை கரம் பிடித்ததால் நான் என்றும் மனவேதனை அடையவில்லை. அதற்கு பதிலாக நான் சந்தோஷம் அடைகிறேன். நான் எத்தனையோ ஜன்மங்களில் செய்த புண்யம் உங்களிடம் வந்து சேர்ந்துள்ளேன்.

ப்ரியே! எனக்கு உலகில் மூவரை தவிர வேறு எதுவும் இல்லை, முதலில் சிவன்,இரண்டாவதாக குருக்கள் அவரும் நமக்கு

உதவ இப்போது இல்லை , மூன்றாவதாக என்னுடையவளே நீதான்,இதிலும் இப்பொழுது சிவனும்,நீயும் மட்டும் தான் இருக்கிறாய். எனக்கு ஆறுதல் கூற நீ இருக்கிறாய், என்றும் பக்க பலமாக எப்பொழுதும் என்னுடன் அந்த ஈசன் துனைகொண்டு இருக்கிறான். இதை விட வேறு என்னதான் எனக்கு வேண்டும். அந்த ஈசன் மனமுவந்து நமக்கு ஒரு செல்வபாக்கியத்தை கொடுத்து விட்டால், நம் கவலைகள் அனைத்தும் போய்விடும்.

இவ்வாறு இவர்களின் அன்றாட வாழ்க்கை நடந்துக் கொண்டுவந்தன. ஒருவருக்கொருவர் ஆறுதலாக, இருவரும் பரிபூரணமாக சிவனை சரணடைந்து, சிவனிடம் தனக்கு ஒரு மகப்பேறு வேண்டுமென்று பிரார்த்திது , இவர்கள் கோரிவந்தனர்.

## அத்தியாயம்: 4

ஒரு நாள் அதிகாலையில் நதியில் நீராடி விட்டு சிவ பூஜைக்காக சென்று கொண்டிருந்தார், கோவில் நுழைவாயினுள் சென்றவுடன், ஈஸ்வரா என்னை காக்கும் பரம்பொருளே ஏனய்யா இன்னும் உனக்கு கருணை வரவில்லை எப்படியோ போ, உன் விருப்பபடி செய் என்றவாறு அவர் ஈசனுக்கு பூஜை செய்வித்தார். செய்து முடித்தவருக்கு ஒரு அதிர்ச்சி! சிற்றப்பன் அதாவது இவரது சிறிய தந்தை ஒரு செய்தியை ஒருவரிடம் சொல்லி அனுப்பினார். அந்த செய்தியாவது, நீயே பாவப்பட்ட ஜன்மம், அந்த ஈசனுக்கே நீ செய்யும் பூஜை பொறுக்கவில்லை பார்த்தாயா? நீ செய்யும் பூஜையை அவன் மனம் கூர்ந்து ஏற்றிருந்தால் உனக்கு ஒரு மகப்பேறு கிடைத்திருக்கும் அல்லவா, தரித்திரனே, பாவ ஜன்மாவே இப்பொழுதாவது நன்றாக புரிந்து கொள், இம்மாதம் முதல் உன் நிலத்தில் வரும் பங்கை தர முடியாது. கோவிலுக்கு என்று ஒதுக்குகிறோமே அதுவே உன் குடும்பம் நடத்த போதுமானது. எதற்காக உனக்கு அதிகம் வேண்டும். அதனால் இனி அதுவும் கொடுக்கப்படாது,

என்று  சிற்றப்பன் கூறியதாக ஒருவன் கூறினான்.

ஈஸ்வரா !பிள்ளை இல்லா சொத்து கொள்ளை போகிறது என்பார்களே  அதன் அர்த்தம் இதுதானோ என்னவோ என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டு  வந்தவரிடம் சரி அப்படியே ஆகட்டும் ஐயா. ஈஸ்வரனின் விருப்பம் அதுவானால் அப்படியே நடக்கட்டும் என்று கூறினார். மௌனமாக ஈசனை வேண்டிக்கொண்டே வீட்டிற்குள் புகுந்தார்.

மனைவியும் இவரை  அன்பாக வரவேற்று,வாருங்கள் உள்ளே,என்ன இன்று பூஜை எல்லாம் சிறப்பாக நடந்ததா? என்றாள்.

அவர் மௌனமாக தலையசைத்தார்.

என்ன உங்கள் முகத்தில் ஒரு விதமான சோக ரேகை தெரிகிறதே?.

ஒன்றும் இல்லை ஏதோ  மனசஞ்சலம் அவ்வளவுதான்.

அவள் புன்னகைத்தவாறு,ஸ்வாமி எனக்கு தெரியும் உங்கள் மன வேதனை என்றாள்.

என்ன இவளும் இதை தெரிந்துக்கொண்டு விட்டாளா? நம்மால் இவளுக்கும் வேதனைதானே மௌனமாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

ஸ்வாமி! காலை நீங்கள் இங்கிருந்து ஸ்நானத்திற்கு சென்றவுடன் என்ன நடந்தது தெரியுமா? வழமையாக பால் கொடுப்பவர்கள் இன்று முதல் குறைத்துக்கொடுத்திருக்கிறார். ஏனம்மா இப்படி குறைத்துக் கொடுத் திருக்கிறாய் என்று கேட்டேன்?

அதிகம் பாலையும், வெண்ணையையும் குடித்து கொழுத்து

போகாதே, ஒரு புழுவும் உற்பத்தி ஆகவில்லை, கொழுப்பு தான் உனக்கு உற்பத்தி ஆகிறது. அதனால் குறைத்து கொடுக்கும் படி எங்களுக்கு உத்தரவு என்றாள். நான் அப்போதே புரிந்து கொண்டேன் நம்மவர்கள் செய்த வேலை தான் இது என்று. அடுத்தபடி வரும் பொருள்கள் எல்லாமே குறைந்தே வந்தன. அதை வைத்தே நான் புரிந்து கொண்டேன், நமக்கு வருவது அனைத்தும் இனி குறைத்து தான் வரும் என்று.

இவை எல்லாம் பரவாயில்லை என் நிலத்தில் வருவபவையும் நிறுத்தி விட்டார்களே. இது எந்த விதத்தில் நியாயமம்மா?

ஸ்வாமி! என்னை மன்னிக்கவும் நான், எனது என்று எப்பொழுதும் பேசக்கூடாது எல்லாம் சர்வேஸ்வரனின் இச்சையென்று கூறுவீர்களே! இப்போது எதற்காக வருத்தபட வேண்டும்.

ப்ரியே! நல்ல சமயத்தில் எனக்கு அறிவு புகட்டினாய். ஒரு நல்ல மனைவியின் அழகு, கணவன் சஞ்சலபடும் பொழுது அவனை தைரியப்படுத்துவது,எனக்கு நல்போதனையும் செய்திருக்கிறாய். என்னால் நீ அதிகம் இங்கே துன்ப பட்டுவருகிறாய்.

ஸ்வாமி! பெரிய வார்த்தைகள் பேசாதீர்கள். அக்னி சாட்சியாக கரம் பிடித்தவள் இன்பம், துன்பம், இரண்டிற்கும் சரிசமமாக நடந்து கொள்ளத்தானே வேண்டும். நான் அதை தான் செய்து வருகிறேன். எனக்கு எல்லா பாடமும் சொல்லித் தந்தவர் நீர்தானே? எதை பற்றியும் கவலையில்லாமல் நாம் ஈசனை பிரார்த்திப்போம் வாருங்கள் நம் கடமைகளை தொடருவோம் என்றாள்.

சிலகாலம் சென்றன. காலம் செல்ல செல்ல இவர்களுக்கு வரும் உணவு குறைந்து கொண்டே வந்தது. மனைவி தான் உண்ணாமல் கணவனுக்கு காட்டி கொள்ளாமல், வந்த உணவை கணவனுக்கு மட்டும் கொடுத்து வந்தாள். எல்லாம்

ஈசனின் செயல் என்று அவள் கருதி மௌனமாக இருந்தாள்.

ஒரு நாள் வழமைபோல் சிவபூஜையை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு அந்தனர், அங்கு வந்து இன்று மதியம் நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு கூட்டம் நடத்தப் போகிறோம் நீ அதில் அவசியம் வந்து கலந்து கொள்ள வேண்டும் என்ன புரிகிறதா? கூட்டம் உம்மை பற்றி தான் நினைவு இருக்கட்டும்.

ஐயா! நான் நிச்சயம் மதியம் வருகிறேன், நான் மட்டும் வரவேண்டுமா அல்லது என் மனைவியையும் அழைத்து வரவேண்டுமா?

ஹூம் உம்மை யாரும் விருந்திற்கு அழைக்கவில்லை, வருகிறாராம் மனைவி சமதேராக!. அந்த மூதேவி வேறு எதற்கு. இந்த பாவபட்ட ஆத்மாவை பார்ப்பதற்கே நாங்கள் எத்தனை தீர்தங்களில் தீர்த்தமாட வேண்டுமோ என்னமோ? இன்னும் அது வேறு வர வேண்டுமா? ஈஸ்வரா ஈஸ்வரா என்று கூறிய வன்னம் சென்றார்.

இவர் ஈசனிடம் வந்து ஈஸ்வரா! இன்னும் என்ன நடக்க போகிறதோ தெரியவில்லையே. இவர்கள் என்ன சூழ்ச்சி செய்வார்களோ? பரமேஸ்வரா உண்மையில் நான் பாவியாப்பா? இந்த ஆத்மா பாவபட்டதா எல்லோரும் கூறுவதை பார்த்தால் அப்படி தான் எனக்கு தோன்றுகிறது. ஐயா! நான் யாரிடம் போவேன். நான் ஒரு அனாதை ஐயா. உன் பாதமே கதியென வீழ்ந்திருக்கும் பாவி ஐயா! என்னை காப்பற்றய்யா. ஐயா! உண்மையில் நீ இருக்கிறாயா, என் மனம் சஞ்சலமும் வேதனையும் அடைகிறதே. கூட்டத்தில் என்ன பேசுவார்களோ என்னை இன்னும் என்ன சொல்வார்களோ என்ற பயம் ஏற்படுகிறது. ஈஸ்வரா! எல்லாம் நீ என விட்டாலும் மனித ஜன்மமய்யா இது சஞ்சல படுகிறது. என் தெய்வமே இதற்கெல்லாம் ஒரு வழி சொல்லேன், அபயம் என்று உன் பாதங்களில் விழுந்திருக்கும் என்னை காப்பாற்று. உன் தயவும, கருணையும் இல்லையெனில்

நான் வாழதான் முடியுமா? ஐயா! என் மனது பித்து பிடித்ததுபோல் ஆகிறதே, எனக்கு அங்கு பேசவும் தைரியம் இல்லையே, எனக்கு பேச தைரியத்தையாவது கொடு ஐயா, என்னை காப்பாற்றய்யா. நான் ஏதோ உளருகிறேன் உனக்கு தெரியாததா! உன்னையன்றி என்னை வேறு யார் காப்பார்? நிச்சயம் நீ காப்பாற்றுவாய் அல்லவா? காப்பற்றினால் காப்பாற்று இல்லையேல் விட்டுவிடு எப்படி உன் மனவிருப்பமோ அப்படி நடந்துகொள் . மதியம் பூஜை முடித்து கூட்டத்திற்கு சென்றார்.

எல்லோரும் ஒதுங்கி ஒரமாக நின்றார்கள் அதில் ஒருவர் பாவபட்ட ஜன்மம் வருது பார், இது காற்று பட்டாலும் நமக்கு பாவம்தான்.
மற்றொருவர் பாவம் அந்த ஈஸ்வரன் இந்த பாவபட்ட ஜன்மம் அவனை பூஜிக்க வைக்கிறது.

ஆமாம் அது புரியவில்லையா? அதனால் தான் சந்தான பாக்கியமே இல்லை.

இந்த ஜனமத்திற்கு அது ஒன்றுதான் கேடு, இது பிறந்ததே தன்டம், யாரையா இவர்கள் தீரவிசாரிக்காமல் இவனுக்கு பெண்ணை கொடுத்த்து.

ஐயோ உனக்கு தெரியாதா? பெண்ணுக்கு ஏதோ தோஷமாம் இருக்கவேயிருக்கிறது இந்த தரித்திரன் இவனிடம் கட்டிவிட்டார்கள்.

அது சரி இரண்டு தரித்திரமும் ஒன்று சேர்ந்து நம் ஊரை அல்லவா பாழாக்குகிறது.

ஆமாமாம் அடிக்கடி நம் பிள்ளைகளுக்கு உபாதை வருவது இதனால் தான். இதுகள் எங்காவது தொலைந்து போகலாம். அப்படி இதுகள் தொலைந்து போனால் அந்த சிவனுக்கு நான் 108 நாட்கள் பாலால்108 குடம் ஒரு நாள் வீதம் ருத்ரா அபிஷேகம் செய்வேன்.

ஆமாம் நீர் வேறு சிவனுக்கு மட்டும் அல்ல இவ்வூரையே பாலால் அபிஷேகம் செய்து சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். ஏதோ பேச வந்து விட்டீர்.

சரி சரி மௌனமாக இருங்கள், பெரியவர் வந்துவிட்டார்.

சிற்றப்பர் வந்து தமது இருக்கையில் அமர்ந்தார். எல்லோரும் அமர்ந்து கொண்டனர். பாவம் இவர் மட்டும் நின்று கொண்டு இருந்தார் .

ஒரு குற்றவாளி கூன்டில் நிற்பது போல் தலைகுனிந்து கூனி நின்று கொண்டிருந்தார். மனதிற்குள் ஈஸ்வரா !எல்லாம் நல்ல விதமாக முடிய வேண்டுமே.

ஹூம்! இந்த பாவபட்டதை இங்கு நிறுத்தி விட்டீர்களா? நான் எத்தனை நீராட வேண்டுமோ தெரியவில்லை சரி என்ன கூற போகிறீர்களோ கூறுங்கள் எல்லோரும் என்றார்.

மக்களிடையே புரசல்கள், நீரே எழுந்துசொல்லேன், நீர் சொல்லும் அவர் சொன்னால் கேட்பார், அவரே எழுந்து சொல்லட்டும் என்று ஒருவர் பின் ஒருவராக காட்டிக்கொண்டு சொல்லும் சொல்லும் என்று காட்டிக்கொண்டிருந்தனர்.

என்ன!!! என்ன சொல்ல வேண்டுமோ அதை எழுந்து சொல்லுங்களேன்.

ஒன்றுமில்லை ஓர் அபிப்பிராயம் எங்களுக்கு அதை உம்மிடம் பகிர்ந்து கொள்ளலாம் என்று தான்.

எந்த அபிப்பிராயம் எதுவாகயிருந்தாலும் சொல்லுங்களேன் நாம் அதற்கொரு தீர்ப்வைக் காணலாம்.

இதோ நிற்கிறதே இந்த ஆன்மா, பாவபட்ட ஜன்மம் சிவனை பூஜிக்க தான் வேண்டுமா?

ஏன்! என்னவாயிற்று என்று கேட்டார்.

ஆவதற்கு என்ன இருக்கிறது பிள்ளை இல்லை ஒன்றும் இல்லை, இதுவே பாவபட்ட ஜன்மம். இதுவந்து சிவனுக்கு பூஜை செய்வது அவ்வளவு உசித்தமாக படவில்லை. அதுமட்டுமல்ல நம் குழந்தைகள் யாரும் முன்னுக்கு வரமுடியாமல் போகிறது. கோவிலுக்கே குழந்தைகள் செல்ல முடியாததால் எங்கே பக்தி குறைந்துவிடுமோ என்ற பயம் வேறு. இவ்வளவு ஏன் அந்த ஈசனுக்கே பிடிக்கவில்லை, நான் சொல்கிறேன் கேளுங்கள், அதனால் தான் அவனுக்கு புத்திர பாக்கியம் கொடுக்கவில்லை.
சரி, சரி நீங்கள் சொல்வதெல்லாம் உண்மை தான், பிராமணன் வாக்கை மீறுவது சரியாகுமா? அன்று நான் கொடுத்த வாக்கு இவனே பூஜை செய்யட்டும் என்றேனே இப்பொழுது அதை திருப்பி பெற்றால் தர்மம் ஆகாதே.

என்னகானும் சொல்கிறீர்? அன்று சிறுவனாக இருந்தான் அப்பொழுது உபதேசத்தை கேட்டீர்கள் அது சரியாக இருந்ததால் இந்தவாக்கை அளித்தீர்கள், இன்று மட்டும் என்ன இன்னும் ஒரு வருடகாலத்திறகுள் அவனுக்கு புத்திர பாக்கியம் வரவில்லை எனில் கோவிலின் பூஜையை நிறுத்தி கொள்ளத்தான் வேண்டும். இன்னும் எத்தனை காலம் அந்த சிவன் இவன் கையில் பாடுபடுவான்.

ஆமாம் ஒரு வருடகாலம் அவன் பூஜையை விட்டு வெளியேறிய பிறகு இவ்வூரில் மட்டும் என்ன வேலை? வெளியில் அனுப்பி தொலைக்கலாம். நம் ஊரும் சுத்தமாகும் என்றார் ஒருவர்.

சரி தீர்ப்பளிக்கிறேன் அடேய் பாவபட்ட ஜன்மமே இன்னும் ஒரு வருட காலத்தில் உனக்கு புத்திர பாக்கியம் இல்லையெனில் நீ கோவிலை விட்டு வெளியேற வேண்டும்.

ஏன் அத்துடன் நிறுத்திவிட்டீர்கள் அடுத்ததையும்

சொல்லுங்களேன்.

அவனுக்கு சிற்றப்பனாகினும் தயக்கமாக இருந்தார், இவனை ஊரைவிட்டே அனுப்புவதா என்று ஒரு நிமிடம் யோசித்தார். வேறு வழியில்லை அனைவரும் சொல்வதை கேட்கத்தானே வேண்டும். சரி ஊரைவிட்டும் வெளியேற வேண்டும் தெரிந்ததா, என்ன அனைவருக்கும் சந்தோஷமா தீர்ப்பு? என்று வளமைபோல் தன் கூந்தலை உதறி முடித்துக்கொண்டே போ போ தரித்ரனே போய் எப்படியாவது ஒரு மகப்பேறை பார் உன் பாவத்தை கழித்துக் கொள். சந்தான பாக்யத்திற்காக ப்ரார்த்தனை செய் தரித்ரமே என்று கூறிய வண்ணம் விருட்டென்று எழுந்து சென்று விட்டார். செல்லும் பொழுது ஓர் சொட்டு கண்ணீர் அவர் கண்களில் தளும்பியது. என்னதான் இருந்தாலும் சொந்தமல்லவா என்பதை இங்கே காண்பிக்கிறது, மனசாட்சியை திடப்படுத்திக் கொண்டு இவர்கள் செய்யும் செயல்கள் இவை.

இவர் மௌனமாக தலையசைத்துக்கொண்டு கோவிலை நோக்கி சென்றார். ஈஸ்வரா ! திருப்தி தானே உனக்கு, இந்த பாவபட்ட ஜன்மம் கையால் அபிஷேகம் வேண்டாம் என்று சொல்லி விட்டாய், அதை ஏனய்யா இவர்கள் வாயால் சொன்னாய்? நீயே நேராக வந்து ஏய் பாவ ஆத்மாவே! எனக்கு செய்யாதே என்று கழுத்தை பிடித்து வெளியில் தள்ளுவதுதானே? அன்று என்னவோ பெருசா மந்திரத்தைக் கொடுத்து என்னை உள்ளே அழைத்துக் கொண்டாய், இன்று என்னை வெளியேற்ற பார்க்கிறாய், என்னய்யா நாடகம் இது? உனக்கென்ன இரக்கமே இல்லையா?. ஒரு வருடமாம் ஒரு வருடம் அவன் யாரைய்யா எனக்கு காலத்தை வகுக்க? நீயல்லவா கூறி இருக்க வேண்டும்?. நீ மனிதனாக பிறந்திருந்தால் உனக்கிவை தெரிந்து இருக்கும், என் துன்பம் புரிந்திருக்கும், நீ தெய்வமய்யா. நாங்கள் அழுவதை பார்த்து ரசிப்பவன். கருணை கடல் என்று எல்லாம் சொல்கிறார்களே அதெல்லாம் வெறும் சொல். பக்தர்களின் துன்பத்தில் நீ மகிழ்பவன் என் கண்ணீர் உனக்கென்ன பஞ்சாமிர்தமா?

ஐயா !என்னய்யா நியாயம்? சதாசர்வகாலமும் பூஜிப்பவன் பாவியா? உன்னை பூஜிக்காமல், பூஜையை கைவிட்டுவிட்டு செல்வ செழிப்பு ,திமிரில் வாழ்பவர்கள் புண்ணியசாலிகளா எதய்யா இதில் நியாயம்? உனக்கு நியாயம் என்று எது படுகிறதோ அதை நீ செய்கிறாய், உண்மையான நியாயத்தையா நீ பார்க்கிறாய்?.

இந்த ஏழை பிராமணன் சென்று விட்டால் பத்து விரல் மோதிரம் இட்டு உனக்கு அபிஷேகம் செய்வார்கள். செல்வந்தரெல்லாம் செல்வத்தை அள்ளி தருவார்கள். அதனால்தான் என்னை விரட்ட பார்க்கிறாயா? ஐயா! நான் பாவிதான், ஏழைதான் இந்த மனதில் உனக்கு இடத்தை தந்திருக்கிறேன். ஐயா! இன்னும் ஒரு வருட காலநேரம் இருக்கிறது என்று சொல்கிறாயா, சரி ஐயா நான் பொருத்திருந்து பார்க்கிறேன், மன சஞ்சலத்தால் உன்னை தவறாக பேசிவிட்டேன். என்னை மன்னித்துவிடு பரம்பொருளே நீயில்லையேல் இந்த ஜீவன் இல்லை. வீட்டை நோக்கி புறப்பட்டார். செய்தி மனைவிக்கு கூறினார்.

ஸ்வாமி !எல்லாம் சர்வேஸ்வரன் செயல் எப்படி நடக்க வேண்டுமோ அதன்படி நடக்கட்டும் என்று ஒரே வார்த்தையில் முடித்துக் கொண்டாள். மனதில் ஈஸ்வரா! எனக்கு அழவும், துன்பப்படவும் உடம்பில் சக்தி இல்லை நான் ஏதோ கால்வயிறு, அரை வயிறு கரைத்து குடித்து காலத்தை தள்ளுகிறேன். எங்களுக்கு நீ என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கிறாயோ அதையே செய் என்று விரக்தியாக உள்ளே சென்றாள்.

## அத்தியாயம்: 5

நாட்கள் நகர்ந்து கொண்டே வந்தன.

சந்தான பாக்கியத்திற்கான அறிகுறி எதுவும் இல்லாமல் இருந்தன. இருவரும் வேதனைக்கு மேல் வேதனையாக இறைவனை பிரார்த்தித்துக் கொண்டு வந்தனர். தினமும்

வேதனை அதிகரித்துக் கொண்டே வந்தது. நாட்களும் நெருங்கி கொண்டே வந்தன.

காலக்கெடு முடிவதற்கு இன்னும் இரண்டு நாட்கள் இருந்தன. ஈஸ்வரனிடம் அழுதார், ஈஸ்வரா உன்னை பூஜித்தகரம் இனி பூஜையில்லாமல் நிற்குமே, நான் அபிஷேகம் செய்வது உனக்கு பிடிக்க வில்லையா? சரி அப்படியே வைத்துக்கொள். நான் இனி யாருக்கு அபிஷேகம் செய்வேன், ஐயா! நான் என்ன செய்வேனய்யா? என்னை ஊரைவிட்டும் விரட்டி விடுவார்களே? எனக்கு இடம் எதுவும் தெரியவில்லையே? ஐயா! உன்னை தானே சுற்றி வந்தேன் வேறு எதைய்யா கண்டிருக்கிறேன்? சரி போ என்று சொல்லிவிட்டாய் பெற்றவர்கள் பிறந்தவுடன் விட்டார்கள் ஆனால் நீ இவ்வளவு காலம் என்னை பார்த்துக் கொண்டாய், நீ நல்லவனய்யா நன்றாக இரு. நான் எங்கோ அனாதை போல் திரிகிறேன். என்னை இத்தனை காலம் பார்த்துக் கொண்டதற்கு மிக்க நன்றி ஐயா. உனக்கு இந்த ஏழையால் எந்தவித கைமாறும் செய்ய முடியாது, நன்றி என்ற ஒரு வார்த்தை தான் இந்த ஏழையால் கூற முடியுமய்யா.

ஒரு பாவ ஆத்மாவிற்கு இத்தனை காலம் ஆதரவு காட்டினாய் என்னே உன் பெருந்தன்மை வருகிறேன் ஐயா வருகிறேன். ஆனால் நான் எங்கு போகட்டும் என்றுதான் எனக்கு தெரியவில்லை ஐயா. இந்த அனாதைக்கு வழியாவது காட்டுவாயா? நான் ஒரு மூடன் இவ்வளவு காலம் நீ செய்த உதவிக்குகே நன்றி செலுத்த முடியவில்லை, இதில் வழி வேறு உன்னை காட்ட சொல்கிறேன். முட்டாளய்யா முட்டாள் நான். உன் விருப்பப்படியே எல்லாம் நடக்கட்டும், இன்னும் இரண்டு நாட்களே உனக்கு நான் செய்யப்போகிறேன், இந்த இரண்டு நாட்களாவது நல்ல திருப்தியாக ஏற்றுக்கொள்ளய்யா. நான் இத்தனை காலம் புஜைகளில் தவறு செய்திருந்தால் என்னை மன்னித்து விடய்யா,உனக்கு இனி எல்லோரும் நன்றாக கவனிப்பார்கள், என்னால் பலர் உன்னை தரிசிக்காமல் இருந்து விட்டனர். அவர்களுக்கும் நீ தரிசனம் தர வேண்டும் அல்லவா?

அதனால்தான் என்னை நீ வெளியேற்றுகிறாயா? அதுவும் ஒரு விதத்தில் நியாயம்த ான். எல்லாம் உன் செயல், எல்லாம் உன் செயல், எல்லாம் உன் செயல் என்று முனுமுனுத்தவாறே தன் வீட்டை நோக்கி சென்று கொண்டிருந்தார்.

வீட்டினுள் வருகிறார். வழக்கம் போல் மனைவியும் ஸ்வாமி வாருங்கள் என்றாள்.

என்ன செய்யப்போகிறேனோ ஒன்றும் புரியவில்லையே.

நானும் இதை தான் நினைத்துக் கொண்டிருந்தேன் ஸவாமி, நம் கதி என்னவாகப்போகிறது? எங்கு ஸ்வாமி நாம் செல்லட்டும்?.

ப்ரியே! எனக்கும் ஒன்றும் புரியவில்லை, நாம் எங்கு செல்லலாம் என்று தெரிய வில்லையே?. ஒன்றை வேண்டுமானால் சொல்லட்டுமா?

ஸ்வாமி! தாங்கள் எதை சொல்கிறீர்களோ சொல்லுங்களேன்?.

சற்று தயக்கத்துடன் நீ வேண்டுமானால் உன் தாய்,தந்தையர் வீட்டிற்கு போய் விடேன்.

கண்ணீர் மல்க அவள் கதறுகிறாள். ஸ்வாமி! என்ன வார்த்தை சொல்கிறீர்கள்? நீங்கள் துன்பப்படும் பொழுது நான் அங்கு செல்வதா? உங்கள் கரத்தைவிட்டு நான் என் பிறப்பிடம் செல்வதா? ஒரு பெண்ணிற்கு அழகு தன் கணவனுடன் வாழ்வது தான். பிறந்த வீட்டிற்கு கணவனுடன் செல்வது தான் நல்லது. உங்களை இதுவரையில் அவர்கள் மதித்ததில்லை. அதேபோன்று நம்மை எதற்க்கும் அவர்கள் அழைத்ததும் இல்லை. அப்படி இருக்க நான் அங்கு போய் வாழலாமா?. இது பெரிய பாவமாயிற்றே ஸ்வாமி.! உங்களை துன்பத்தில் ஆழ்த்திவிட்டு நான் சுகிப்பதா? ஸ்வாமி உங்களுக்கு எப்படி மனம் வந்தது? என்னை பார்த்து இப்படி சொல்லி விட்டீர்களே? உங்கள் வாயால் இந்த

வார்த்தை வரலாமா? உங்களுக்கு சேவை செய்யவே நான் உங்களை மணந்துள்ளேன். அப்படியிருக்க உங்களை விட்டு நான் பிரிவதா? ஸ்வாமி தயவு செய்து மனதாலும் இதை எண்ணாதீர்கள். என் மனது தாங்கவில்லை. உங்களை விட வேறு என்ன எனக்கு வேண்டும். ஸ்வாமி தயவு கூர்ந்து இவ்விதமாக பேசாதீர்கள். நீங்கள் எங்கு செல்கிறீர்களோ அங்கே உங்களுடன் பின் தொடருகிறேன். என் மரணத்தை அன்றி வேறு ஏதாலும் உங்களை பிரிந்து இருக்க மாட்டேன்.

ப்ரியே! நான் உன்னை வேதனைப்படுத்தியதற்கு மன்னித்துக் கொள். என்னால் நீ துன்பப்படுகிறாயே என்ற ஆதங்கத்தில் தான் கூறினேன். உன்னை விட்டு விட வேண்டுமென்பது என் நோக்கம் அல்ல. நீயாவது சௌக்கியமாக இருக்க வேண்டுமென்பது தான். ஏதோ மன வேதனையில் நான் கூறி விட்டேன்.

ஸ்வாமி! மன்னிப்பு என்றெல்லாம் கூறாதீர்கள் மன்னிப்பு என்ற வார்த்தைக்கு இங்கு இடமில்லை. உங்கள் ஆதங்கத்தை நான் புரிந்து கொண்டேன். நீங்கள் எங்கு சென்றாலும் நான் உங்ளுடன் வருவேன்.

ப்ரியே! எங்கு செல்வது? என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை. அந்த ஈசன் நம்மை இப்படி பாடுபடுத்துகிறானே.

ஸ்வாமி! ஈசனை ஏன் குறை கூறுகிறீர்கள்?. நம் பாவத்தின் வினையை அனுபவிக்கிறோம். நமக்கு ஒரு நல்ல வழிகாட்டமலா போய்விடுவான்.

ப்ரியே! இதுவரை அப்படி தான் நினைத்து வந்தேன், என் மனம் ஏனோ மிகவும் சஞ்சலப்படுகிறது, எங்கே எனது பக்தி குறைந்து விடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. சோதனைக்கும் ஒரு எல்லை உண்டு அல்லவா, எல்லையை மீறி நம்மை சோதிக்கிறானே என்று தோன்றுகிறது.

ஸ்வாமி! எல்லை எது என்பது நமக்கா தெரியும். எல்லாம் அவனுக்கு தெரிந்தவை. அவன் இன்னும் நம்மை என்ன செய்ய வேண்டும் என்று நினைத்து இருக்கிறானோ தெரியவில்லை, அதன் படியே நடக்கட்டும் வாருங்கள் ஏதாவது உணவருந்துங்கள். கடந்த ஒரு வாரமாக எதையுமே அருந்தாமல் இருக்கிறீர்கள், இதுவரையில் நீங்கள் எதையும் உண்ணவில்லை, நான் செய்து வைத்திருந்த பண்டங்களையும் வெளியார் யாரும் வந்து வாங்குவதும் இல்லை, எல்லாம் வீணாகிறதே.

நம் நிலமையே தெரியவில்லையே, நீ ஏன் இவை வீணாவதை பற்றி கவலைப்படுகிறாய்?. இருவரும் இப்படியே உரையாடி கொண்டு அமர்ந்து கொண்டிருந்தனர். இரவு நேரம் வந்தது நன்றாக இருட்டியும்விட்டது.

சரி கதவை தாளிட்டு படு, இன்னும் நமக்கு இரு நாட்களே உள்ளன என்றார் கணவன். அதே போல் தாளிட்டு வந்தாள் மனைவி, இவர்கள் இருவரும் வேதனையில் எப்பொழுது உறங்கினார்கள் என்றே தெரியவில்லை.

அடேய்! சிவகுருவே வாடா வெளியே என்றது ஒரு குரல்.

நம் பெயரை இதுவரையில் யாரும் கூப்பிட்டதும் இல்லை, நமக்கு இப்படி பெயர் வைத்தவர்களே இன்றுவரை கூப்பிடவில்லை. அப்படியிருக்க இன்று ஒரு குரல் வருகிறதே, ஒரு வேளை பிரம்மையோ பொருத்து இருந்து பார்ப்போம் ஒரு குரல் தானே வந்தது.

அடேய்! சிவகுருவே வாடா வெளியே எனக்கு நேரமாகிறது என்றது குரல்.

மனைவி சட்டென்று எழுந்து என்ன ஏதோ குரல் கேட்கிறதே என்றாள்?

ஆமாம் இது இரண்டாவது முறை கேட்கிறது.

அடேய்! எவ்வளவு நேரமடா எழுந்து வா, என்று மூன்றாவது முறை குரல் வந்தது.

ஸ்வாமி! தாங்கள் ஒய்வு எடுங்கள் யாரென்று நான் போய் பார்த்து வருகிறேன் என்று மனைவி எழுந்தாள். கதவை திறந்தவளுக்கு ஜடா முடியுடன் கூடிய ஒரு ரிஷி அங்கு நின்று இருந்தார். நிலவொளியில் அவர் முகம் பள பளவென்று,தேஜஸாக இருந்தது, பார்த்தவுடன் அவரை வணங்க வேண்டும் போல் இருந்தது. அவரை வணங்கினாள். மகாதபஸ்வியே தாங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? இந்த ஏழையின் இல்லத்தை தேடி வர காரணம்தான் என்ன? பாவாத்மா என்று எங்களை ஒதுக்கி விட்டார்களே அப்படியிருக்க மாபெரும் தபஸ்வியான தாங்கள் எங்களை தேடி வந்த நோக்கம்?.

வந்தவர் ஹ்ஹஹா என்று சிரித்தார். எங்கே அந்த முடவன்?என்றார்.

ஸ்வாமி! அவர் உள்ளே ஒய்வு பெற்று கொண்டிருக்கிறார். தங்களுக்கு என்ன சேவை செய்ய வேண்டுமோ?நான் காத்திருக்கிறேன், நான் செய்கிறேன், உள்ளே வாருங்கள்.

உள்ளே வர எல்லாம் நேரமில்லை, அந்த பித்தனை வரச்சொல்.

இருங்கள் ஸ்வாமி இதோ ஒரு நொடியில் அவரை அழைத்து வருகிறேன், கோப்படாதீர்கள் என்று உள்ளே சென்றாள். ஸ்வாமி! உங்களை தேடி யாரோ வந்து இருக்கிறார்கள் என்றாள்.

ஆச்சர்யமாக மனைவியை பார்த்தார், என்னை தேடி ஒருவரா? ஒருவேளை காலி செய்யும்படி சிற்றப்பன் அனுப்பிவிட்டானா?.

இல்லை ஸ்வாமி இவரை பார்த்தால் பெரிய ஞானியை போன்று தோன்றுகிறார்.

என்னை தேடிக் கொண்டு ஒரு ஞானியா என்று விழுந்தடித்துக்கொண்டு வெளியில் வந்தார், வந்தவன் எதிரில் இருக்கும் ஞானியை கண்டு ஸ்வாமி என்று பாதங்களை பற்றி அழுதான்.

அடேய் புத்தி அற்றவனே எழுந்திரு.

ஸ்வாமி! இந்த பாவ ஆத்மாவை தாங்கள் தேடி வந்ததின் காரணம்.
ஆகட்டும் அதெல்லாம் அப்புறம் சொல்கிறேன், புறப்படு என்னுடன் என்றார்.

இன்னும் இரண்டு தினங்கள் நான் சிவனுக்கு பூஜை செய்ய வேண்டும் ஸ்வாமி.

அதெல்லாம் எனக்கு தெரியும் நீ முதலில் புறப்படு என்றார்.

ஸ்வாமி! என் மனைவியை விட்டு நான் மட்டும் வருவது சரியல்லவே?. அவளையும் அழைத்து வரட்டுமா?.

அடேய்! விட்டு வரவா சொன்னேன் புறப்படுங்கள் நேரமாகிறது, விடிவதற்குள் இந்த எல்லையை தாண்ட வேண்டும்.

ஸ்வாமி! கோழை இவன் ஓடி விட்டான் பார்த்தாயா என்று இந்த ஊர் என்னை பேசாதா?.

ஆமாம் நீ பெரிய தைரியசாலி ஏனடா அன்று கூட்டத்தில் பேசியிருக்க வேண்டியதுதானே?. ஸ்வாமி அதுவேறு, இன்று நான் ஓடி விட்டால் என் சிவனுக்கும் பங்கம் ஆகும் அல்லவா. அடேய் இவற்றையெல்லாம் பார்த்தவன் தான்டா அவன். எல்லாம் அவனுக்கு தெரிந்தது தான் புறப்படு என்னோடு.

உடனே மனைவியை நோக்கி சைகை காட்டுகிறான்.

மனைவி வீட்டிற்கு வந்தவரை நாம் உபசரிக்கவில்லையே என்ற வேதனையில் ஏதாவது உட்கொள்கிறீர்களா என்று மெல்லிய குரலில் பயந்தவாறு கேட்டாள்.

நான் நிறைய உன்டிருக்கிறேன் புறப்படு மணியாகிறது.

வீட்டை தாளிட வேண்டுமா? என்ன செய்ய வேண்டும் என்ற பதட்டத்தில் நின்று கொண்டு இருந்தாள்.
என்ன பற்று விட வில்லையோ என்றார்.

இல்லை இதோ வந்து விடுகிறேன் என்று இருவரும் புறப்பட்டனர்.

## அத்தியாயம்: 6

முனிவரும் நதிக்கரை ஒரம் நடக்க தொடங்கினார். இருவரும் அவரை பின் தொடர்ந்தே நடக்க தொடங்கினர்.

ஸ்வாமி! மன்னியுங்கள் தாங்கள் எங்களை எங்கே அழைத்து செல்கிறீர்கள்?.

ஆமாம் உனக்கு இருக்கும் இடமே பறிபோகப்போகிறது என்னுடன் எங்கு வந்தால் உனக்கென்ன?.

தவறுதான் ஏதோ ஒரு ஆர்வத்தில் கேட்டேன், உங்களுடன் வருவது மனதிற்கு நிம்மதியை தருகிறது.

மன நிம்மதி உள்ளதல்லவா பிறகு எதற்கு கேள்வி கேட்கிறாய்?.

அபச்சாரம், அபசாரம் என்னை மன்னித்துவிடுங்கள்.

அடேய் இதை தவிர உனக்கு வேறு ஒன்றும் தெரியாது.

ஸ்வாமி! ஒரு கேள்வியை கேட்கட்டுமா?
ம்...ம் கேள்.

தாங்கள் வந்தவுடன் முடவனை அழை என்றீர்களே? எனக்கு கை, கால் எல்லாம் நன்றாகதானே இருக்கிறது.

அஹ்ஹா, அஹ்ஹா என்று பெரியதாக சிரித்தார் முனிவர். இன்றுதானடா உனக்கு கேள்வி கேட்கும் தைரியம் வந்திருக்கிறது என்று சிரித்தவாறே சொன்னார். கை,கால்கள் ஊனமுற்றால் அது பெரிய ஊனம் அல்லடா, ஒரு கை இல்லாதவன், மற்றெரு கையினால் அனைத்தையும் செய்துகொள்வான், அதேபோன்று தான் உடலில் எந்த உறுப்பு இல்லையென்றாலும் எப்படியாவது வாழ நினைப் பவன் வாழ்ந்து விடுவான் ஆனால் உன்மையில் ஊனமுற்றது எது தெரியுமா வைராக்கியம் இல்லாதவன். நீ வைராக்கியம் இல்லாதவன். இதைவிட வேறு எந்த ஊனம் வேண்டும், எங்கு செல்லட்டும் என்று யோசித்துக் கொண்டு இருந்தால் முடிவு எப்படியடா வரும் அந்த இறைவன் வழி காட்டட்டும் என்று நீ வைராக்கியத்தில் இறங்க வேண்டுமே, அவன் மேல் பரிபூரண நம்பிக்கை வரவேண்டுமடா, வைராக்கியம் இல்லாதவனுக்கு நம்பிக்கை வராது.

ஸ்வாமி! என்னை பார்த்து என்ன கூறிவிட்டீர்கள்? எனக்கா ஈசனிடத்தில் நம்பிக்கை இல்லை? இத்தனை காலமும் அவனை தவிற வேறு எதையும் கண்டதில்லையே.

பூஜைகள் செய்தால் மட்டும் போதாதடா? இறைவன் நிச்சயம் வருவான், நம்மை காப்பாற்றுவான் என்ற வைராக்கியம் வேண்டுமடா, அதில் சஞ்சலம் இருந்தால் நம்பிக்கை போய்விடுமடா, உனக்கு சஞ்சலம் இல்லை என்று சொல்!.

ஸ்வாமி! நான் சொல்கிறேன் என்று தவறாக நினைக்க வேண்டாம், நான் என்ன உங்களை போன்ற பெரிய

ஞானியா? சாதாரனமான மனித ஆன்மா, இந்த ஜன்மம் பிறந்தது முதல் துயரத்தையே பார்த்து வந்ததால்...
மனம் சஞ்சலம் அடைகிறதாடா?. நீ துயரத்தை பார்த்தேன் என்று எப்படியடா சொல்கிறாய் என்று குறுக்கில் பேசினார்.

ஸ்வாமி! வேறு என்ன தான் சொல்லட்டும்.

அடேய்! அந்த ஈசனுக்கு பூஜை செய்வது துயரமாடா?.

அபச்சாரம், அபச்சாரம் நான் அதை கூறவில்லையே.
பின் என்னடா நல்லதை கிடைத்ததை பற்றி நாம் சந்தோஷம் கொள்ளவேண்டும் அதில் மனம் லயிக்காமல் நீ ஏதேதோ சொல் கிறாயே.

இல்லை ஸ்வாமி என் பிறப்பைதான் கூறினேன்.

உன் பிறப்பு நீ செய்த கர்மவினை எல்லாம் எனக்கு தெரியும். அதிலும் ஒரு புண்ணியம் இருப்பதால் தானே உன்னால் ஈசனை வழிப்பட முடிந்தது கிடைத்ததைக்கண்டு சந்தோஷப்படுடா யாருக்கும் கிடைக்காத ஒரு பாக்கியம் உனக்கு கிடைத்திருக்கிறதல்லவா அதை கண்டு நீ சந்தோஷித்திருக்க வேண்டும். அதை விட்டு விட்டு சஞ் சல படுகிறாயே, அந்த ஈசன் தன்னையே உனக்கு கொடுத் திருக்கிறான், மற்றவைகளை நீ பொருட்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பது தான் இங்கே முக்கியம் ஆனால் நீயோ அந்த ஈசன் கிடைத்ததே பாவமாக கருதுகிறாயே.

ஸ்வாமி! என்ன பெரிய வார்த்தை கூறிவிட்டீர்கள் அந்த ஈசன் கிடைத்ததே என் பாக்கியபாக தான் கருதுகிறேன்.

அப்படி கருதியவன் எதற்கடா சஞ்சலப்பட வேண்டும்?. நமக்கு எவ்வளவு தீமைகள் நடந்தாலும் ஒரு நல்லவை நமக்கு கிடைத்து விட்டால் அது நாம் செய்த பெரிய புண்ணியமாகும் இந்த புண்ணியம் இருக்கும் போது மற்றதை எல்லாம் நாம் பொருட்படுத்த கூடாது. இது தானடா உண்மையான மனித

வாழ்க்கை.
ஸ்வாமி! புரிந்து கொண்டு தான் வருகிறேன்.

இதுமட்டுமல்ல இன்னும் எவ்வளவோ நீ புரிந்து கொள்ள போகிறாய் என்பதை பார், நீ இத்தனை காலம் அந்த ஈசனுக்கு செய்த தொண்டினை ஈசன் மனப்பூர்வமாக ஏற்று உனக்கு நற்கதியை தரத்தான் போகிறான்.

ஸ்வாமி! உண்மையில் ஈசன் என் பூஜையை ஏற்று கொண்டானா?.
இங்கேயும் பெரியதாக சிரித்தார். ஏற்றுக் கொண்டதனால் தானே வந்து இருக்கிறோம் என்றார்.

என்ன ஸ்வாமி சொல்கிறீர் என்று சற்று அதிர்ச்சியாக கேட்டார்.

ஏற்றுக் கொண்டதால் தான் என்னை அனுப்பியிருக்கிறான் என்று சொன்னேன்.

ஈசன் எங்கள் தொண்டை ஏற்கவில்லை, நான் பாவபட்ட ஜன்மா, அதனால் தான் எனக்கு சந்தான பாக்கியம் இல்லை என்றெல்லாம் அவர்கள் கூறுகிறார்களே?.

அடேய்! பாபத்தையும், புண்ணியத்தையும் பிரித்து கூறும் அளவிற்கு அவர்களுக்கு யோக்யதை இல்லையடா? பாபம் எது? புண்ணியம் எது என்றே அவர்களுக்கு தெரியாதடா.

ஸ்வாமி! அவர்கள் எல்லாம் நன்றாக வேதத்தை கற்றறிந்தவர்கள். பெரிய பெரிய பண்டிதர்கள் ஊரில் செல்வாக்கு மிகுந்தவர்கள் அவர்களை போய் நீங்கள் அப்படி பேசலாமா?.

மீண்டும் ஒரு பெரிய சிரிப்பு சிரித்தார்.

அடேய்! அந்த சிவனை விடவா இவர்கள் பெரியவர்கள்?.

ஸ்வாமி1 நான்  அப்படி கூறவில்லை.

அவர்கள் பெரியவர்கள் என்று சிவனாடா பேரை சூட்டினான்.

ஸ்வாமி! கற்றவர்கள் எல்லோரும் பெரியவர்கள் என்று தானே தர்மத்தில் கூறியிருக்கின்றன.

எதிலடா கூறியிருக்கிறது?.

ஸ்வாமி! ஏதோ எனக்கு தெரிந்த மட்டில்  தர்மத்தில் கூறியிருக்கிறது என்று சொல்வார்கள்.

தர்மம், நீதி,நெறி,பக்தி இவை எல்லாமிருக்க வேண்டும், உணர வேண்டும். அதில் கூறியிருக்கிறது என்று சொன்னால் மட்டும் போதாதடா அதன் படியும் நடந்து கொள்ள வேண்டுமடா. மந்திரம் சொன்னால் போதாது அந்த இறைவனின் மேல் பற்று, பரிவு, பாசம் ஏற்பட வேண்டுமடா இதைவிட முக்கியம் நன்கு கற்று உனர்ந்தவன் எல்லோரிடத்திலும் இறைவனை பார்ப்பானடா இவர்கள் எல்லாம் வேறும் பண்டிதர்கள் தான், வித்யாபியாசத்தில் சிறந்தவர்கள் ஆனால் பக்தியில் பூச்சியம் ஆனானவர்கள

ஸ்வாமி! உங்களுடன் வந்தால் நிறைய கற்று கொள்ளலாம் போல் இருக்கிறதே.

மௌனமாக சிரித்தார் முனிவர்.

இவ்வுரையாடல்களை கேட்டுக்கொண்டே வந்தாள் மனைவி. ஸ்வாமி எனக்கு ஒரு கேள்வி எழுகிறது நான் கேட்கலாமா என்றாள்.

கேள் பெண்ணே நான் பதில் அளிக்கிறேன் என்றார்.

நன்கு கற்று அறிந்தவர்கள், எல்லோரிடத்திலும் கடவுளை காண வேண்டும் என்று கூறினீர்கள் இதை எனக்கு சற்று

விளக்கமாக கூறுவீர்களா?.

பெண்ணே! கடவுள் எல்லோரிடத்திலும் இருக்கிறான் என்பதனை நாம் உணர வேண்டும். உணர்ந்தவன் தான் நன்கு கற்று கறிந்தவன். அவனை தான் குரு என்று அழைப்பார்கள். அப்படி குரு என்ற ஸ்தானத்தை அடைபவன், மக்கள் செய்யும் பாவங்களை சுட்டிக் காட்டி மேலும் பாவம் செய்யாமலிருக்க அவர்களுக்கு அறிவு போதனை செலுத்தி அவர்கள் தங்கள் உள் இருக்கும் இறைவனை உணரும்படி செய்கிறான். இதை பற்றி கூறவேண்டுமானால் நிறைய கூறலாம். பெண்ணே. ஒரு குரு என்ற ஸ்தானத்தை அடைந்தவனுக்கு தான் அனைத்து மரியாதைகளும்.

ஸ்வாமி! எங்களுக்கும் குரு இருக்கிறார்களா? என்று கேட்டான்.

ஏண்டா முட்டாளே ஆதியில் உனக்கு உபதேசம் செய்தது யார்?.

எனக்கு யாரும் உபதேசம் செய்யவில்லையே ஸ்வாமி? என்றான்.

ஏய் நன்றாக யோசித்து பார், நீ சிறியவனாக இருக்கும்பொழுது.

ஆம் ஸ்வாமி இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது உங்களைப் போல் ஒருவர் வந்திருந்தார் என்று இவன் பூனுல் இட்டு கொண்டதையும், நடந்த சம்பவத்தையும், கூறினான்.

ஆம் அன்று உபதேசம் எப்படியடா வந்தது.

ஸ்வாமி1 என் காதில் யாரோ மந்திரம் சொல்லிக் கொண்டு வந்தார்கள் அதை அப்படியே சிற்றப்பன் காதில் சொன்னேன் ஆனால் அன்று முதல் அந்த மந்திரம் என் மனதில் நன்றாக லயித்துவிட்டது.

இப்பொது புரிந்து கொண்டாயா உனக்கு குரு இருக்கிறார் என்பதை.

கணவனும் ,மனைவியும் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து ஆச்சர்யக் குறியாக அவரை நோக்கி ஒரே குரலில் இருவரும் எங்களுக்கு குருவா! எங்கிருக்கிறார்?.

விந்திய மலையில் உனக்காக காத்து கொண்டு இருக்கிறார்.

என்ன எங்களுக்காகவா, எங்காக குரு காத்துக் கொண்டு இருக்கிறாரா? மேலும் அச்சிரியத்தில் கேட்டார்கள்.

ஆமாம் ஆமாம்.

ஸ்வாமி! நீங்கள் எங்களை அங்கு கொண்டு சேர்ப்பீர்களா.

அதெல்லாம் எனக்கு முடியாது வேண்டுமானால் வழி சொல்கிறேன் அதன்படி இருவரும் செல்லுங்கள் அடந்த காடும் மலையுமாக உள்ளது ஜக்கிரதையாக பார்த்து செல்ல வேண்டும் என்ன தெரியுமா.

ஸ்வாமி! சர்வேஸ்வரன் இருக்கிறான் அவன் நிச்சயம் எங்களை குருவிடம் சேர்ப்பான்.

என்னடா வைராக்கியத்துடன் சொல்கிறாயா அல்லது வழியில் எளியோர்கள் வந்தால் அழுது கொண்டே நின்றுவிடுவாயா.

ஸ்வாமி! நிச்சயம் அப்படி செய்ய மாட்டோம். நாங்கள் எங்கள் குருவை அடைவோம் எவ்வித துயரம் வந்தாலும் எங்களுக்கு இனி கவலையில்லை.

சரி நீண்ட துரம் நாம் வந்துவிட்டோம் சற்று ஓய்வெடுக்கலாம் என்று படுத்தார் முனிவர். என்ன இருவரும் பார்த்து கொண்டு இருக்கிறீர்கள் சற்று ஓய்வெடுத்து கொள்ளுங்கள்.

பிறகு புறப்படலாம் என்னை பற்றி சிந்திக்க வேண்டாம் சிறிது நேரம் ஒய்வெடுத்து கொண்டு பிரயாணத்தை தொடங்குங்கள். பாதங்கள் வலியாக இருக்கின்றது சற்று நேரம் என் பாதத்தை பிடித்து விடுங்கள்.

ஸ்வாமி! நாங்களும் இதற்காக தான் தயங்கிக் கொண்டே நின்றோம் எங்கள் மனதை நன்றாக புரிந்து கொண்டீரே!. எல்லாவற்றையும் புரிந்து கொண்டவன் தான், ஊம் ஊம் நடக்கட்டும் என்று முனிவர் கண்ணை மூடிக்கொண்டார். இருவரும் அவர் பாதங்களை பிடித்து கொண்டு தங்களுக்கு குரு கிடைக்க போகிறார் தாங்கள் புண்ணிய ஆத்மாதான் அல்லது பாவ ஆத்மாவா என்பதை பார்த்து விடலாம் தங்கள் கர்மவினை தெரிந்துவிடும் என்றெல்லாம் யோசித்தவண்ணம் அவர் பாதத்தை பிடித்துக் கொண்டே தாங்களும் தங்ளை அறியாமல் அவ்விடத்தில் உறங்கிவிட்டனர்.

## அத்தியாயம்: 7

முதலில் கண்விழித்தான் விழித்தவன் மனைவியையும் எழுப்பினான்

ஸ்வாமி! வந்தவர் எங்கே காணவில்லையே.

அதை தான் நானும் பார்த்துக் கொண்டு இருக்கிறேன் என்றான்.

ஸ்வாமி! இங்கு பாருங்கள் அவர் தலை வைத்து படுத்து இருந்த இடத்தில் கனிகள் இருக்கின்றனவே.

ப்ரியே நாம் கலைப்பாக இருக்கிறேம் நாம் எழுந்தவுடன் பசியும் எற்படும் என்பதற்காக அவர் கனிகளை பறித்து போட்டு இருக்கிறார் போல் இருக்கிறது, அப்படி என்றால் அவர் இங்கெங்காவது தான் இருக்க வேண்டும் வா நாம் க னிகளை உண்ணலாம்.

ஸ்வாமி! அவரை காணவில்லையே.

அவர் இங்கெங்காவது தான் இருப்பார் அவர் பங்கை எடுத்து வைத்து விட்டு நாம் இருவரும் உன்னலாம் வா. சற்று ஏதாவது வயிற்றில் போனால் தான் தெம்பு உன்டாகும் இல்லையில் எனக்கு மயக்கம் வருவது போல் இருக்கிறது. வாருங்கள் ஸ்வாமி போகலாம் கனிகளை உண்ணலாம்.

கனிகளை ஐந்து பங்காக பிரித்தான்.

ஸ்வாமி! என்ன செய்கிறீர்கள்! நாம் முவர் தானே ஆனால் ஐந்து பங்காக பிரிக்கிறீர்களே.

ப்ரியே1 நாம் என்று ஈசனை விட்டு உண்டிருக்கிறோம் அதனால் ஒரு பங்கு ஈசனுக்கு வைத்து விட்டேன், மறுபங்கை இந்த பாவாத்துமாக்காக நம்மை கரை சேர்க்க நமக்காக காத்துக் கொண்டு இருக்கும் நமது குருவிற்காக ஒரு பங்கை வைத்துள்ளேன். இத்தனை காலம் நமக்கு தெரியாததால் நாம் இதை செய்யவில்லை இன்று நமக்கு புரிந்ததால் நாம் இதை செய்ய தான் வேண்டும். மற்றொரு பங்கு நம்மை அழைத்து வந்தவர்க்கு தானே என்றாள்.

ஆமாம் ப்ரியே சரியாக சொல்லிவிட்டாய். ப்ரியே இதில் பார்த்தாயா இதில் அந்த மகேஷ்வரனின் பஞ்சாட்ஷரம் இருக்கிறது. பஞ்சாட்ஷரம் என்பது முதலாவதாக நாம் பிறப்பிற்கு காரணமாக தாய் தந்தையர் இரண்டாவதாக நம்மை வழிசெலுத்தி நடத்தும் குருவாகும் முன்றாவதாக நம்மை ஆட்கொள்ளும் இறைவனாகும்.

ஸ்வாமி! அப்படி என்றால் கணவன், மனைவி என்று இருவர் இருக்கிறோம்.

பொறு ப்ரியே கூறுகிறேன் கேள் கணவன், மனைவி என்பது ஒருவரை ஒருவர் பிரியாமல் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு நியாயம், நேர்மை, தர்மங்களை கடைப்க்பிடித்து

இருவரில் யார் தவறு செய்தாலும் நடந்தவைகளை சுட்டி காட்டி(அதாவது நடந்த தவற்றினை சுட்டி காட்டி ) திருத்திக் கொள்வது, இது எதற்க்கு ஒப்பாகும் தெரியுமா, சரீரமும், ஆன்மாவும் ஆகும். இதை தான் நான்கு ஐந்து என்று கூறினேன். ஆன்மா இருக்கிறது இந்த ஆன்மாவிற்கு பஞ் சபூதத்தால் ஆன தேகம் சேருகிறது இதை சேர்த்துவிக்க பெற்றோர் தேவை அதாவது சேர்த்து வைப்பவர் தேவை, சேர்த்து விட்டவரின் கடமை முடிந்து விடுகிறது. சரீரம் உலக மாயையில் இடப்படுகிறது ஆன்மா மௌனித்து பார்க்கிறது அவ்வேலையில் குரு என்பவர் வந்து ஆன்மாவை எழுப்புகிறார் எழுப்புபவரின் கடமையும் அங்கே முடிந்து விடுகிறது எழுந்த ஆன்மா சரீரத்தை கட்டுப் படுத்தி அந்த சரீரத்திற்கு உள்ள மோக, தாபங்களை அகற்றி சரீரத்தை சுத்திகரித்து ஆன்மாவுடன் ஒன்று கலக்கிறது. சரீரமும், ஆன்மாவும் இப்போது பிரகாசிக்கிறது. இறைவனை அறிந்து புரிந்து கொண்டு த்யானிக்கிறது இறைவனை தன் உள் ஐக்கியபடுத்திக் கொள்கிறது. அப்படி ஐக்கியப்படுத்தி கொள்ளும் பொழுது இந்த சரீரமும் தேவையில்லை என்று நிர்ணயிக்கிறது. ஆன்மாவும் இறைவனிடத்தில் லயித்து மறைகிறது. இப்படியாக மறைந்து விடுகிறது இதுவே பஞ் சாட்ச்சரமாகிய ஓம் நம சிவாய. சிவனை தியானிப்பவன் சித்தி பெருகிறான் சிவம் என்பது ஜடமான பொருள். அந்த ஜடத்திற்கு ஓம் என்னும் உயிரை தர வேண்டும். அப்படி தந்த பிறகு நம: என்று சரணடைய வேண்டும். குருவை சரணடைய வேண்டும், சரண் அடைந்தவன் எல்லாம் உணருகிறான், உணர்த்தவன் மீண்டும் ஜடமாகிறான். ஜடமகியதும் அந்த ஓம் என்னும் உயிருனுல் தன் உயிரை கலக்கிறான் எங்கிருந்து வந்ததோ அந்த ஆன்மா மீண்டும் அவ்விடத்தையே சேர்ந்து விடுகிறது. அதை நமக: என்று குறிப்பிடுகிறோம்.

இங்கே ஒரு சிறிய குறிப்பு:- நாம் ஒவ்வொரும் நன்றாக இதை தான் தெரிந்து கொள்ள வேண்டும் ஒவ்வொருமுறையும் அர்ச்சனை செய்யும் பொழுதும், சகஸ்ரதாமம் கூறும் பொழுதும் பொருள் இவையே ஆகும் என்பதை மறக்கக் கூடாது. அதே போன்று ஆதி சக்தி என்றால் அதுவும்

ஐந்து எழுத்தில் முடியும். மூலமும், ஆதியும் அனைத்துமாக நிற்கிறாள் தேவி என்பதும் இங்கே குறிப்பிடதக்கது, அத்த ஓமின் அரம்பம் அவள் என்பது இங்கே நிரூபணமாகிறது. நாம் இனி கதையை தொடருவோம்:-

இப்படியாக இவன் கூறினான்

கையில் கனிகளை வைத்துக் கொண்டு கணவனை ஆச்சர்யமாக பார்த்துக் கொண்டாள். தன்னையே மறந்து விட்டாள் என்ன இவர் ஈசனை தவிர எதை பற்றியும் போசாதவர் இன்று ஏதோ ஆத்ம போதனைகளெல்லாம் செய்கிறாரே. இவர் கூறுவது நன்றாக இருக்கிறது, கேட்க அருமையாக இருக்கிறது, இன்னும் இவர் பேச, பேச கேட்க வேண்டும் போல் ஆசையாக உள்ளது. ஆனால் நம் புத்திக்கு இவை எட்டுமா என்பது சந்தேகம் தான் பெரிய பெரிய ஞான வார்த்தைகள் எல்லாம் கூறினால் நம்மால் அதை புரிந்து கொள்ள முடியுமா?. ஊம், ஊம் நிச்சயம் முடியாது.

ப்ரியே! என்ன யோசித்துக் கொண்டே பார்க்கிறாய்?..

ஸ்வாமி! நீங்கள் ஏதோ கூறினீர்கள் நன்றாக இருந்தது ஆனால் என்னை மன்னியுங்கள் என் புத்திக்கு அதுவும் சரியாக எட்டவில்லை.

ப்ரியே! என்ன சொல்கிறாய்? எனக்கு என்ன சொல்ல தெரியும்? எல்லாம் அந்த ஈசனின் மகிமையம்மா, நமது குருவின் கடாக்ஷ்யமும் இவ்விடத்தின் மகிமையும் தான் என்னை அப்படி பேச வைக்கிறது.
ஸ்வாமி! எனக்கு கடாக்ஷ்யம் இல்லையோ ஏனெனில் தாங்கள் கூறியது ஒன்றும் என் மூளைக்கு ஏறினால் போல் இல்லை.

தெய்வீகமாக புன்னகைத்து கூறினான். எல்லாம் கால போக்கில் சரியாகும் வா கனிகளை உண்டு நாம் பிரயாணத்தை தொடங்குவோம். இருவரும் கனிகளை

உன்டனர் அதாவது இவர்களுக்கு உரிய பங்கை உண்டு பிரயாணத்தை தொடங்கினர்.

ஸ்வாமி! இப்பாதைகள் எல்லாம் கரடு, முரடாக இருக்கின்றதே.
ப்ரியே! ஞானமார்கத்தில் செல்பவர்களுக்கு பாதைகள் கரடு,முரடு தான் இது சோதனையம்மா சோதனை. ஞானியாக வேண்டும் என்பது அவ்வளவு எளிதல்லம்மா அதில் வரும் துன்பங்கள் எல்லாம் துட்சமாக மதித்து நாம் ஞானத்தை தேடி செல்ல வேண்டுமம்மா.

இவர் சொல்லியதைக் கேட்டு மனைவி சற்று யோசித்தாள். அன்று அங்கு வீட்டில் இருந்த பொழுது பேசியதற்கும் அதாவது வீட்டில் பழமைகளை நினைத்து பார்த்தாள். நான் எங்கு செல்வேன், யார் என்றெல்லாம் உள்ளதல்லவா அதை எல்லாவற்றையும் நினைத்து பார்த்தாள் பிறகு இப்பொழுது இங்கு பேசுவதையும் பார்த்தாள். ஒரு மனிதனுக்கு எவ்வளவு சீக்கிரம் மாற்றங்கள் ஏற்ப்படுகின்றன என்று ஆச்சரியமாக பார்த்தாள் பார்த்து அவ்விடத்தில் நின்றுவிட்டாள்.

ப்ரியே, ப்ரியே என்ன நின்றுவிட்டாய்.

ஸ்வாமி! ஒன்றை யோசித்தேன் அப்படியே நின்றுவிட்டேன்.

என்னம்மா அப்படி யோசித்தாய்.

ஸ்வாமி! அன்று நீங்கள் பேசியதற்க்கும், இன்று நீங்கள் பேசுவதற்கும் வித்தியாசத்தை காண்கிறேன், எப்படி ஸ்வாமி அவ்வளவு விரைவில் உங்களுக்கு மாற்றம் ஏற்ப்பட்டது?. எனக்கு ஏற்படவில்லையே என்ற பொறாமையில் கேட்கவில்லை ஆச்சிரியத்தில் கேட்கிறேன்.

ப்ரியே! நீ கேட்பது நியாயம் தான் அன்று அறியாமையில் இருந்துவிட்டேன் இன்று அறியவந்துள்ளேன்.

ஸ்வாமி! இவ்விதமாக பேசினால் எனக்கு மண்டையில் ஒன்றும் ஏறாது, அறியாமை எது, அறிந்தவை எது என்று கொஞ்சம் தெளிவாக சொல்லுங்களேன்.

மெல்லிதாக புன்னகைத்து அவள் கரத்தை பிடித்து மேலே நடக்க தொடங்கினான். ப்ரியே சொல்கிறேன் கேள் அன்று நான் ஈசனுக்கு பனிவிடைகள் எல்லாம் செய்தேன் அதாவது பூஜைகள் போன்று நித்திய கால அனுஷ்டானங்கள் அனைத்தும் செய்தேன் ஆனால் அதில் ஒரு தெளிவு இல்லை, செய்யுமாறு சொல்லி இருக்கிறார்கள், அதனை அப்படியே செய்கிறோம், இதை நன்கு பார்த்தாயானால் நாம் கடமைக்காகவும், அதில் பிரதி பலனை எதிர்பார்த்தும் வாழ்ந்திருக்கிறோம்.

ஸ்வாமி! நீங்கள் அவ்வளவு பிரியமாக முக்காலமும் ஈசனை பூஜித்து வந்தீர்கள். நீங்களா இப்படி சொல்வது.

ப்ரியே! நீ நன்றாக பார்த்தாயா? அந்த ஈசனை புரிந்து கொண்டா நான் பூஜித்தேன்.

ஸ்வாமி! அவன் பெருமைகள் எல்லாம் கூறினீர்களே.

அவனின் திருவிளையாடலை கூறியவனுக்கு தன்னுடனும் அவன் இருக்கிறான் என்று உணரவில்லையே. அவன் பெருமைகளை பாடினால் மட்டும் போதாது அவனை அடையும் வழியை நான் தேடவில்லையே. என்னை மூன்று முறை அழைத்தான் அப்பொழுதும் நான் அவனை புரிந்து கொள்ளவில்லையே.

ஸ்வாமி! மீண்டும் கேட்கிறேன் சற்று தெளிவாக கூறுங்கள், மூன்று முறை அழைத்தானா?.

ஆமாம் ப்ரியே கேள் பிறந்ததும் தாய், தந்தை என்ற பந்தத்தை எனக்கு விடிவித்து அவனை அறிய முதல் வாய்ப்பை தந்தான். அறியா பருவம் ஆதலால் ஒரு தாய்,

தந்தையர் இல்லையே என்று வருத்தம் இருந்ததே அன்றி அவன் தான் எல்லாம் அவனை நாடி நாம் செல்ல வேண்டும், அவனை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை நான் மேற்க்கொள்ளவில்லையே, எல்லோருக்கும் போல் எனக்கும் தாய், தந்தையர் இல்லையே என்று வருந்தி அழுது இருக்கிறேன் ஆனால் உன்மையில் அதிர்ஷ்டகாரன் நான் தான். பிறந்தவுடன் பந்தம் துன்டிக்கப்பட்டது ஞானியாவதற்கு வழி வகுக்கப்பட்டது ஆனால் இப்பாவி அதை உணரவில்லையே, இரண்டாவது முறையாக பொறுத்து இருத்து பார்த்த ஈசன் பூணூல் என்ற பந்தத்தை ஏற்ப்படுத்தி அதில் இருந்து விடுவிக்கிறேனா என்று பார்த்தான். உலக குழத்தைகளை போல் எனக்கும் பூணூல் வேண்டும் என்று அழுதேன் பந்தமில்லையடா எதற்காக பந்தத்தை ஏற்ப்படுத்திக் கொள்கிறாய் என்று அவன் உனர்த்துகிறான் ஆனால் அதை அறிந்து கொள்ளாத இப்பாவி பந்தம் வேண்டும் என்று அழுது அடம்பிடித்தேன் அதன் விளைவை பார்த்தாயா?. பந்தத்தை ஏற்ப் படுத்தி உன்னையும் மணந்து கொண்டேன். மூன்றாவது குரலாக சரி பந்தம் தான் ஆனது ஆகட்டும் மேற் படி பந்தம் தொடராமல் இருக்க புத்திர பாக்கியத்தை தராமல் இருந்தான், இப்பொழுதாவது புரிந்து கொண்டு வந்துவிடு என்று அழைத்திருக்கிறான், ஆனால் நாமோ அப்பொழுதும் வர தயாராக இல்லை, எப்படியாவது எனக்கு புத்திர பாக்கியத்தை கொடு என்று தான் மன்றாடினோம் எவ்வளவு மூட தனமாக இருக்கின்றது அதை நினைக்கவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. சரி இவ்வளவு நடந்தும் நான் திருந்துவேனா என்று எதிர்பார்த்தான் உணவு எல்லாவற்றையும் குறைத்தும் பார்த்தான், அப்பொழுதும் நாம் திருத்துவதாக தெரியவில்லை. இவ்வளவு காலம் பொறுத்து இருந்த அவன் நம்மை எப்படியாவது வெளியேற்ற வேண்டும் என்று எண்ணி அவ்விடத்தை விட்டே வெளியேற்றி விட்டான். ப்ரியே! நான் மகா பாவி அந்த ஈசன் எனக்காக எவ்வளவு சிரமபட்டிருக்கிறான் பார்த்தாயா? எப்படியாவது இவைகளை எல்லாம் விட்டு வெளியில் வருவேனா என்று எதிர்பார்த்திருக்கிறான். ஆனால் நானோ எனக்கு இதில்லை

அது இல்லை என்று குறைகளையே அவனிடம் சொல்லி இருக்கிறேன். அவன் ஏன் இக்குறைகளை வைத்திருக்கிறான் என்று ஒரு நாளும் நான் சிந்திக்கவில்லை. இக்குறை நமக்கு நல்லது தான் என்று நான் உணரவில்லையே இது தானம்மா நான் அறியாத பாவி என்றேன். நான் அவனை அறியவில்லை பார்த்தாயா. உலகில் எல்லோரும் பந்தங்களை விடுவிக்க சிரமப்படுவார்கள் எப்படியாவது முட்டி மோதிக்கொண்டு வெளியில் வர பார்ப்பார்கள், வெளியில் வந்த நானே அதில் வேண்டுமேன்றே விழுந்து என்னை காப்பாற்று, என்ன காப்பாற்று என்று கதறி இருக்கிறேன் பார் இது. அறியாமை இல்லாமல் வேறு என்னவாம் இவ்வறியாமையை அறிய வைக்க யாரோ ஈசனை போல் வந்து நம்மை வெளியேற்றினார். இவ்வளவு தூரம் நம்மை கொண்டு வந்து நாம் பசியாற உணவும் கொடுத்தார். பிறகு அறிவதற்காக குருவை நாடி செல் என்று வழியும் காட்டி இருக்கிறார் இதுவும் அந்த ஈசனின் செயல் அல்லவா.

ஸ்வாமி! இது எல்லோருக்கும் நடக்குமா?.

நிச்சயம் நடக்கும். கர்மவசத்தால் அவர்கள் அறியாமல் போவார்கள். புண்ணியவசத்தால் அறியும் வாய்ப்பை பெறுவார்கள் அப்படி பெறும் பொழுது அதனை பயன் படுத்திக் கொள்ளவில்லை என்றால் அது வீனாகி விடும்.

எப்படி ஸ்வாமி சொல்கிறீர்?.

நம் வழிலில் வந்து முனிவர் நம்மை அழைத்தார் அந்நேரத்தில் நான் வரமுடியாது என்று கூறியிருந்தால் மீண்டும் இவ்வாய்ப்பை பெற எத்தனை நாட்கள் ஆகுமோ.

ஸ்வாமி! அப்படி என்றால் நாம் செய்த பாவத்தை தான் அங்கு அனுபவித்திருந்தோமா.
இதில் சந்தேகம் என்ன? உண்மையும் அதுதான்.

ஸ்வாமி! நாம் நதி அருகிள் வந்திருக்கிறோம் சற்று

இளைப்பாறிவிட்டு செல்லலாமா.

வா ப்ரியே! நதியில் நீராதிவிட்டு நீரை பருகி சற்று நேரம் நாம் இங்கு ஒய்வெடுக்கலாம்.
ஸ்வாமி! நம்மை அழைத்து வந்தவரை கானவேயில்லையே. அவரை பற்றிய சிந்தனையும் உமக்கு இல்லையா?.

ப்ரியே! நம்மை அழைத்து வந்தவர் பெரிய ஞானி, அவர் எங்கும் எப்பொழுதும் இருப்பார். நமக்கு உதவிவேண்டும் பொழுது நம்மை காக்க வருவார். ஞானிகள் எல்லாம் உலவிக் கொண்டே இருப்பார்கள் அவர்களை நாம் தொல்லை படுத்தக் கூடாது அது பாவமாகும்.

இருவரும் நதியில் நீராடினார்கள்.

ஸ்வாமி! இந்நதியை பார்த்தீர்களா ஒரு தாயை போன்றது தன்னலம் அற்று மக்கள் எல்லோருக்காகவும் வாழ்கிறது. எல்லோர்களின் தாகங்களை சாந்தி செய்கிறது. எல்லோருக்கும் உணவளிக்கிறது. எல்லோரின் மோகங்களை தீர்க்கிறது தான் ஒய்வெடுக்காமல் சதா சர்வகாலமும் ஒடிக்கொண்டே இருக்கிறது. உதவ வேண்டும், உதவ வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி ஒடுகிறது. ஆனால் நம்மிடம் எதையும் அது எதிர்பார்க்கவில்லை, என்ன ஸ்வாமி என்ன அப்படியே பார்க்கிறீர்கள் நான் சொல்வதில் தவறு இருக்கிறதா.
ப்ரியே! நிச்சயம் இல்லை. நீ சொல்வது முற்றிலும் சரியானது தான். இந்நதியை நான் குருவிற்கு ஒப்பிட்டு கூறுகிறேன் கேள். தண்ணலம அற்றவர் குரு, தன்னை பற்றி கருதாமல் கரடு முரடு பாதைகளில் தெய்வமாக வந்து சீடனுக்கு உதவுகிறார் மந்திர உபதேசம் என்னும் தாகத்தை தீர்க்கிறார் நல்ல போதனைகள், நன்நெறிகள், நல்ல பக்தி, நம் தவறை திருத்துதல் போன்ற வகை வகையான் உணவுகளை வயிறார தருகிறார். நீராடுவதால் பாவங்கள் போகிறது குருவின் சரணத்தால் பாவங்கள் துள்துளாகிறது. எப்பொழுதும் எந்நேரமும் கண் அயராமல் சீடர்களின் நலத்திற்காக

பாடுபடுகிறார். ஆன்டவன் என்னும் சமுத்திரத்தை தான் அடைவதும் அல்லாது நம்மை இருந்த இடத்தில் இருந்தே அடையவும் செய்கிறார். அப்படி பட்ட தூய குருவின் கோவம் ஏற்றப்படி செய்தால் நதி உக்கிரகம் எடுத்து பிரவாகமாக, பிரளையமாக ஒடுவது போல் நம்மை சபித்தும் கோவித்தும் கொள்கிறார், இது எனக்கு தெரிந்த அறிகுறி. தாயும், குருவும் போல் இருக்கிறது அல்லவா அதனால் தான் நதியை பெண் ருபத்தில் பார்க்கிறார்கள் அதே பேன்று தான் குருவை முதலில் தாயாகவும், பிறகு தந்தையாகவும் நன்பனாகவும், தெய்வமாகவும் கருதுகிறோம் தாயாக பறிவுடன் இருக்கிறார் தந்தையாக உணவு அளிக்கிறார் நண்பனாக துன்பங்களை ஏற்கொள்கிறார், தெய்வமாக நம்முடன் இருக்கிறார், நதியும், குருவும் ஒருவிதத்தில் ஒன்று தான்.

ஸ்வாமி! இக்கருத்தும் நன்றாக இருக்கிறது.
ஏன் நீ கூறியதும் நன்றாக தான் இருக்கிறது இரண்டுமே ஒரே பொருள் தானே.

ஸ்வாமி! உங்களுடன் நான் வந்ததால் பெரும் பாக்கியத்தை அடைகிறேன்.

எனக்கு துனையாக நீ இருந்து நல்ல அறிவுரைகள் தேவைப்படும் போது கூறியிருக்கிறாய், உன்னை நான் அடையவும் பாக்கியம் பெற்றிருக்கிறேன்.

ஸ்வாமி! நீண்ட நாளாகவே எனக்கு ஒரு சந்தேகம் அதை தீர்த்து வைக்கிறீர்களா.

சொல் நான் முடிந்தால் தீர்த்து வைக்கிறேன்.

நான் சிறிய வயது முதல் பார்க்கிறேன் ஸ்வாமி! நதியின் பெயரை யாரும் சொல்ல மாட்டேன் என்கிறார்கள். உண்மையில் இந்நதியின் பெயர் என்ன? நாம் ஏன் பெயரை உச்சரிக்க கூடாது?.

நல்ல சந்தேகம் தான் ப்ரியே கூறுகிறேன் கேள் நதிகளில் பல மகான்களும், ரிஷிகளும் தவம் புரிகின்றனர், நீராடுகிறார்கள் அதனால் பெரியோர்கள் நதியை தெய்வமாக கருதுகிறார்கள் ரிஷிகள் மூலம் வந்ததால் அதன் பெயரை உச்சரிப்பது பாவ செயலாகும். நாம் வீட்டில் ஒரு பெரியவர் இருந்தால் அவர் பெயரை உச்சரிப்பது சரியாகுமா? அதுவும் இது தெய்வீக பெரியவர் அதனால் நாம் உச்சரிப்பது தவறானது. முறையாக நதியை தொட்டு நமஸ்கரித்து பிறகு தான் நீராடவேண்டும். நதியில் அசுத்தம் செய்வது பாவமாகும் அதை தெய்வீகமாகவே கருத வேண்டும் ஒரு முறை ஸ்தானம் செய்தாலும் புண்ணியங்களை ஏற்க்கிறோம். மகத்தானது நதி. நம்மை எல்லாம் வாழ வைக்கும் தெய்வம் நதி. சூரியனும், நதியும் இல்லை எனில் நாம் இல்லை. அதனால் தான் நதியின் பெயரை உச்சாடனம் செய்வது பாவமாகும்மா. ஆனால் பெயரை மனதில் ஜபம் செய்து கொள்ளலாம் உரக்க கூப்பிடுவது தவறானது இந்நதிக்கு நர்மதா என்று பெயர் வைத்திருந்தனர் அதற்கு முன்னால் ப்ருகு தீர்த்தம் என்று கூறுவர். சப்தரிஷிகளில் ஒருவரான ப்ருகுவால் உற்பத்தி ஆனதால் இங்கே நதியின் பெயரை உரக்கச் சொன்னால் சப்தரிஷியில் ஒருவரான ப்ருகுவை அவமதிப்பது போல் ஆகும் அல்லவா அதனால் பெயரை சொல்ல மாட்டார்கள் , அதற்கு பதில் மனதில் ஜபித்து கொள்வர். நீராடும் பொழுது ப்ருகு முனிவரையும், இந்த நர்மதையையும் த்யானித்து விட்டு பிறகு தான் நீராட வேண்டும் இது தான் முறையம்மா, பெயர் வந்ததின் காரணம் எனக்கும் சரியாக தெரியாது. நம் குருநாதரை சந்தித்தால் ஒருவேளை அவர் நமக்கு சொல்லுவார். சற்று இங்கே ஓய்வெடுத்து கொள்வோம் பிறகு நாம் புறப்படலாம்.

## அத்தியாயம்: 8

ஸ்வாமி! அங்கு பார்த்தீர்களா? தொலை தூரத்தில் யாரோ வருகிறார் போல் தோன்றுகிறது.

ஆமாம் ப்ரியே சற்று பொருத்திருந்து பார்ப்போம் யார்

என்று தெரியும்.

ஒருவர் வேகமாக நடந்து கொண்டு வந்திருந்தார்.

நம்மை நோக்கி தான் வருகிறார் போல் தெரிகிறது ஸ்வாமி.

வரட்டுமே நாம் யார் என்பதை பார்க்கலாம். இவர்கள் பேசி முடிவதற்குள், அவர் வரும் வேகத்தில் இவர்களை நெருங்கி விட்டார். ஓ---ஓ--- நம் குருநாதர் சொல்லிய தம்பதிகள் நீங்கள் தானோ வாருங்கள் நான் குருநாதர் இடம் அழைத்து சொல்கிறேன்.

என்ன சொல்கிறீர்கள் ஐயா குருநாதர் அனுப்பினாரா? ஒன்றுமே எங்களுக்கு புரியவில்லையே.

கவலை வேண்டாம் குருநாதர் தான் அனுப்பினார் நாம் உரையாடிக் கொண்டே போகலாம் இருவரும எழுந்து அவர் பின் தொடர்ந்தனர்.

ஸ்வாமி! குருநாதர் அனுப்பினார் என்று சொல்கிறீர்களே எங்களுக்கு சற்று விளக்கமாக கூறுங்களேன் என்றான்.

கூறுகிறேன் கேளுங்கள் சில நாட்களுக்கு முன்பு நம் குருநாதருக்கு கனிகளை பறித்து வந்துகொடுத்தேன். தினமும் நான் தான் அவருக்கு உணவுகளை கொடுப்பேன் சற்று பெருமையாக கூறினான் ஆனால் அன்றைய தினம் கனிகளை கொடுத்தவுடன் குருநாதர் சீடனே! நான் சற்று முன்பே உண்டுவிட்டேன் என்றார்.

ஸ்வாமி! கனிகளை வேறு சீடர்கள் யாராவது பறித்து வந்து தந்துவிட்டார்களா என்று பதட்டத்தில் கேட்டேன், நான் காலதாமதமாகி விட்டேன் என்னால் உங்களுக்கு பங்கம் எற்ப்பட்டதா நான் தவறு செய்திருந்தால் மன்னியுங்கள்.

என்ன சீடனே நீ அடிக்கிகொண்டே போகிறாயே எதிலும்

அவசரப்படுவது நல்லதல்ல சற்று பொறுமையாக சிந்தித்து செயல்பட வேண்டும்.

ஸ்வாமி! மன்னியுங்கள் உங்களுக்கு பசி ஆற்றியது யார்.
புன்னகைத்த வண்ணம் குரு கூறினார், ஒரு புதிய சீடன் எனக்கு ஒரு பங்கு கனியை கொடுத்திருக்கிறானப்பா அவன் என்னை பார்க்காமலே எனக்கு பங்கை கொடுத்து விட்டான் குரு பக்தி என்பது இதுவாகும்.

ஸ்வாமி! யார் அவர்? எங்கே நான் பார்க்க வேண்டுமே.
அசரப்படாதே அவர்கள் இப்பொழுது தான் நம்மை நோக்கி வருகிறார்கள்.

ஸ்வாமி! சீடன் என்றீர்கள் கனிகளை கொடுத்தான் என்றீர்கள் பிறகு இப்பொழுது தான் நம்மை நோக்கி அவர்கள் வருகிறார்கள் என்கிறீர்கள் ஒன்றும் புரியவில்லையே.

அடேய்! என் ஆத்ம சிஷ்யனே ஒரு தம்பதிகள் இருவரும் வருகிறார்கள், அவர்களுக்கு கிடைக்கும் உணவில் ஒரு பங்கை எனக்கு வைத்துவிட்டு அவர்கள் என்ன காண வந்து கொண்டு இருக்கிறார்கள். ஆத்மார்த்தமாக வைக்கும் பொருள் எவையாயினும் எம்மை வந்து சேருமடா ஒருவர் மனதார குருவை நினைத்தாலே போதும் அவை குருவுக்கு வந்து சேர்ந்துவிடுமடா குரு என்பவர் ஒரு இடத்தில் தான் இருக்கிறார் என்று நினைப்பது தவறாகும். உடல் ஒரு இடமும், ஆன்மா ஒரு இடமும் சஞ்சரிக்கும். ஆத்மார்த்தமாக எவன் அழைக்கிறானோ அவன் இடத்தில் அவர் வருகிறார் நீ போய் அவர்கள் இருவரையும அழைத்துவா பாவம் அவர்களுக்கு வழிதெரியாது

குருவை நமஸ்கரித்து விட்டு இவன் புறப்பட்டான் நடந்தவைகளை அப்படியே இத்தம்பதிகளிடம் கூறினான்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டு கண்ணீர் மல்க ஸ்வாமி என்று வந்தவர் காலில் விழுந்தார்கள்.

எழுந்திருங்கள் எதற்காக என் காலில் விழ வேண்டும் நம் குருநாதரின் காலில் விழுங்கள்.
உங்கள் பாதங்களில் நாங்கள் விழுவதால் எந்த தவறுமில்லை. குருவிடம் இருந்து ஒரு நற்செய்தியை எடுத்து வந்தீருக்கிறீர்கள் நீங்களே எங்களுக்கு தெய்வம் போல் ஆவீர்கள். அனுமன் கண்டேன் சீதையை என்று ராமனுக்கு சொன்னது போல் எங்களுக்கு நீங்களும் நற்செய்தியை தந்திருக்கிறீர்கள் இதில் இருந்தே நாங்கள் புரிந்து கொள்கிறோம் எங்கோ நாங்கள் புண்ணியம் செய்திருக்கிறோம் என்று.

பரவாயில்லையே இராமயானம் எல்லாம் சொல்கிறீர்களே.

ஏதோ பெரியவர்கள் அக்காலத்தில் நான் சிறிய வயது இருக்கும் போது கூறியது எங்கோ ஒரமாக நின்று நான் ஒன்று இரண்டு விழயங்களை காதில் போட்டு கொண்டு உள்ளேன். பெரிதாக எனக்கு ஒன்றும் தெரியது ஸ்வாமி என்றான்.

சரி உங்கள் ஊர் எது, எங்கிருந்து வருகிறீர்கள் நீங்கள்.

எங்கள் ஊர் இங்கிருந்து தொலை தூரத்தில் உள்ளது சில நாட்கள் ஆகும் அங்கு செல்ல. எங்கள் ஊரில் சிவன் கோவில் இருக்கிறது. இந்த நதியின் மத்தியபாகத்தில் உள்ளது என்று பெரியவர்கள் சொல்வார்கள். எங்கள் சிவனுக்கு மத்தீஸ்வரன், மகேஸ்வரன் என்று எல்லாம் கூறுவார்கள். மகேஸ்வரம் என்றும் ஊரை கூப்பிடுவார்கள் ஆனால் மற்றவை எனக்கு சரியாக தெரியாது ஸ்வாமி.
ஒஹோ! அந்த ஊரா இந்த பண்டிதங்கள் எல்லாம் அதிகம் வாழும் ஊர் தானே.

ஆம். ஆம் ஸ்வாமி அதே தான் எங்கள் ஊரில் மிக பெரிய,பெரிய வித்துதாம்சங்கள் இருக்கிறார்கள் மகா பண்டிதர்கள் எல்லாம் இருக்கிறார்கள் ஏன் எங்கள் ஊரில் இருந்து தான் பண்டிதர்களை வெவ்வேறு திசைகளுக்கு

அழைத்து செல்வார்கள். நல்ல தல்ல பண்டிதர்கள் இருக்கிறார்கள் நிறையவும் படித்திருக்கிறார்கள்.
ஆஹா போதும் நிறுத்தும் உங்கள் ஊரை பற்றி நன்றாக தெரியும், கர்விகளும், அகங்காரிகளும் கொண்டது உங்கள் ஊர்.

ஸ்வாமி! படித்தவர்களை அப்படி நாம் குறை கூறக் கூடாது.

என்ன படித்தவர், பன்பற்றவன் ஒரு படித்தவனா? வித்தைகள் தெரிந்தால் போதாது பன்பு வேண்டும். வித்தைகளில் இறைவனை கட்டிவிட முடியாதய்யா.

என்ன ஸ்வாமி சொல்கிறீர்கள்?.

ஒரு சிறிய கதையை சொல்கிறேன் கேள் ஒரு பெரிய ராஜ்ஜியம் அதில் அரசன், இளவரசி இருக்கிறார், அரசியும் இருக்கிறாள் தர்ப்பாரும் இருக்கிறது, மந்திரிகளும் பண்டிதர்களும் சபையில் இருகின்றனர், நன்றாக கேட்டுக் கொள், பல வித்தைகாரார் அதாவது பல திறமைசாலிகள் அவன் சபையில் இருகின்றனர் சேவகர்களும், பணிபுரிபவர்களும் நிறைய இருகின்றனர். புரிந்ததா.

சொல்லுங்கள் ஸ்வாமி புரிந்து கொண்டு வருகிறோம்.

இப்படி பலர் இருகின்றனர். சாமரம் வீசவும் பணி ஆள்கள் இருக்கின்றன. இத்தனை பேர்கள் நிறைந்தது தான் சபை இந்த சபையில் யாருக்கு அதிக மதிப்பு இருக்கும் ?சொல்.

கணவனும், மனைவியும் சற்று நிதானித்து ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

மனைவி அரசிக்கு தான் இருக்கும் ஸ்வாமி என்றாள்.

இல்லை. இல்லை மந்திரிகளுக்கும், மகாபண்டிதர்களுக்கும் தான் இருக்கும் என்றான்.

நன்றாக யோசித்து சொல்கிறீர்களா?.
ஆமாம் ஸ்வாமி படித்தவரும், பண்டிதர்களும் தானே அங்கு அதிகம் மறியாதை செலுத்த வேண்டும் அதனால் அவர்களை தான் நாம் உயர்வாக நினைக்க வேண்டும், அவர்களுக்கு தான் முதன்மையிடம்.

ஆஹாஹா என்று கைதட்டி சிரித்தார். இது சின்ன விசயம் இதில் பதில் கூற முடியவில்லையே என்று விழுந்து விழுந்து சிரித்தார் இவ்விருவரும் பயந்தே விட்டனர்.

ஸ்வாமி! நாங்கள் எதாவது தவறாக கூறிவிட்டோமா.

மீண்டும் சிரித்தார் இல்லை, இல்லை, இல்லை, இல்லை நீங்கள் தவறாக கூறவில்லை பாவம் உங்களுக்கு தெரியாது.

பின் எதற்க்காக சிரிக்கிறீர்கள்.

நான் விடை சொன்னால் நீங்களும் சிரித்துக் கொண்டு தான் இருப்பீர்கள்.

என்ன ஸ்வாமி சொல்கிறீர்!.

சொல்கிறேன் கேளுங்கள் இதில் முக்கியமானவர்கள் யார் தெரியுமா சேவர்களும், பணிப் பெண்களும் தான்.

என்ன ஸ்வாமி சொல்கிறீர்கள்!? இத்தனை பெரியவர்கள் இருக்கும் சபையில் அரசனுக்கு முக்கியமானவர்கள் சேவகர்கள் தானா!.

ஆமாம் சேவகர்கள் தான் விளக்கமாக கூறுகிறேன் கேளுங்கள். ( இது முக்கிய குறிப்பு இந்த விளக்கம் அனைவருக்கும் எக்காலத்திலும் ஏற்றவிளக்கமாக திகழ்கிறது.) சபையில் மந்திரிகளும், பண்டிதர்களும் மகா மேதைகள் அரசர் வரவுக்காக காத்து கொண்டு இருக்கிறார்கள் மகா வீர

தீர பராக்கிரம தர்ம, நீதி நெறி தவறாத செங்கோல் ஆட்சி உடைய நமது மாபெரும் மன்னர் வருகிறார் பராக் பராக்ர்என்று அறிவிக்கிறான் ஒரு சேவகன் அவன் அறிவிக்கவில்லையேல் அரசன் வருவதே இவர்களுக்கு தெரியாது அதனால் அவன் இங்கே முக்கியத்துவம் அடைகிறான். தர்பார் நடக்கிறது ஆனால் அரசனுக்கு வியர்வை ஏற்ப்படும் என்று தர்பாரில் உள்ளவர்களா சிந்திக்கிறார்கள் ஆனால் அந்த பணிப்பெண்கள் இருவரும் வீசத்தொடங்குகிறார்கள் சாமரத்தை .ஏன் இங்கே பண்டிதர்கள் வீசக்கூடாதா, அல்லது அரசியும், இளவரசியும் வீசக்கூடாதா? ஆனால் பணிப்பெண்கள் வீசுகிறார்கள். அவர்களுக்கு இங்கே முக்கியத்துவம் அடைகிறது. தர்பாரில் அமர்ந்த அரசன் சேவகனை இன்று என்ன சர்ச்சைகள் என்று கேட்கிறான் இத்தனை பெரியோர்கள் மிகுந்த சபையில் ஒரு சேவகனை தான் அழைத்து கேட்கிறான். இங்கே அவனுக்கு முக்கியத்துவமாகிறது சேவகன் அனைத்தையும் படிக்கிறான்.

சரி குற்றவாளியாக நிற்ப்பவனை அழைத்து வாருங்கள் என்று மீண்டும் சேவகனை அனுப்புகிறான் இதுவரையில் தர்பாரில் மகா மேதைகளும் பண்டிதர்களும் அனைவருமே சும்மா தானய்யா உட்கார்ந்து இருக்கிறார்கள் இந்த கைங்கரியங்களை செய்ய அவர்களுக்கு வாய்ப்பு இல்லை பார்த்தாயா?. அழைத்து வந்து குற்றவாளியை அரசன் முன் நிறுத்துகிறான்.

சேவகனே! இவன் செய்ய குற்றம் என்ன?. அப்பொழுதும் ஒரு சேவகனை தான் கேட்கிறான் இவன் இத்தகைய குற்றங்கள் செய்திருக்கிறான் மகாபிரபு என்கிறான் சேவகன்.
சரி இவன் செய்த குற்றத்திற்க்காக இவனுக்கு இந்த தண்டனைகளை தருகிறோம் என்ன சபையோர்களே சரியா அனைவரும் சரி என்று ஒப்புகொள்கின்றனர். பார்த்தாயா ஒவ்வொன்றிர்க்கும் ஒரு சேவகனை அழைக்கும் அரசன் தீர்ப்பை அளித்து விட்டு தலையை அசைக்க மட்டும் இத்தனை பெரியோர்களை வைத்திருக்கிறான் இது சிரிப்பு வராமல் என்ன செய்யும்?. பிறகு சபையில் உள்ளவர்கள்

அவர் அவர்கள் எதை செய்தார்கள் என்று சொல்கிறார்கள். பாராட்டும் படி இருந்தால் சேவகனே தட்டு தங்க நானயத்தை எடுத்து வா இதை பரிசாக இந்த பண்டிதருக்கு கொடுத்து விடு என்று வாங்கி அரசன் பரிசாக கொடுக்கிறான் இங்கும் பார்த்தாயா எடுத்து வருபவன் சேவகன் தான் அரசன் கொடுத்து விடுகிறான். சரி சபை கலையட்டும் நான் புறப்படுகிறேன் என்கிறான் எல்லோரும் அரசனை வாழ்த்து கிறாார்கள். மகா மேதைகளும், பண்டிதர்களும் அரசனின் பராக்கிரம த்தை எல்லாம் சொல்கிறார்கள். நின்று வணங்குகிறார்கள் ஆனால் சேவகர்களோ முன்னால் இருவர் கம்பீரமாகவும் பின்னால் இருவர் கம்பீரமாகவும் அரசனை பாதுகாத்து அழைத்து செல்கிறார்கள். இங்கும் பார்த்தாயா என்ன மந்திரியா அழைத்து சென்றார்? அல்லது போர் படை தலைவனா வந்தான்? யாரும் இல்லை. இங்கும் நான்கு சேவர்கள் தான் என்று மீண்டும் சிரித்தார்.

அரசனை கொண்டு அவன் அறையில் விடுகிறார்கள் . பிறகு இருவர் வெளியில் நிற்கின்றனர் காவலாக, இருவர் அரசனுக்கு வேண்டிய மற்ற வேலைகளை கவனிப்பதற்காக செல்கிறார்கள். மந்திரி ஏதோ அவசரம் அரசனை பார்க்க வேண்டும் என்று வருகிறார். உமக்கு ஒரு விந்தை தெரியுமா?. மத்திரியால் நேரே உள்ளே போக முடியாதே காவலாலியிடம் சொல்கிறான் . நான் அரசனை பார்க்க வேண்டும் என்று வந்திருக்கிறேன். அரசனிடம் போய் சொல்கிறாயா?. காவலாளி நேராக உள்ளே செல்கிறான்.. பெரிய பதவியில் இருப்பவனுக்கு உள்ளே அனுமதியில்லை ஆனால் காவலாளியாக இருப்பவன் எப்பொழுது வேண்டுமானாலும் உள்ளே செல்லலாம் இந்த விந்தையை பார்த்தாயா, அரசே என்றான். என்னப்பா என்றார் அரசனும். மந்திரி உங்களை காண வேண்டுமென்று வந்திருக்கிறார்.

ஏதாவது முக்கியமாக இருந்தால் உள்ளே வரச்சொல் இல்லையேல் பிறகு அவர்களை பார்க்கிறோம் என்று சொல்லி விடு . இங்கு ஒரு விந்தையை பார்த்தாயா? மந்திரியையே பார்க்க முடியாது என்று சொல்கிற அரசன்

காவலாளியை பார்க்கிறான் அல்லவா ஏன் சொல்? காவலாளி தன்னலமற்றவன். தனக்கென்று எதையும் அவன் கேட்கபோவதில்லை அவனுக்கு தெரிந்தது எல்லாம் அரசனுக்கு செய்ய வேண்டிய சேவைகள் தான். அவை சரியாகவும், சீராகவும் நடக்க வேண்டும் அரசன் சுகித்திருக்க வேண்டும். நாடை பற்றியோ, மக்களை பற்றியோ, தன்னை பற்றியோ அவன் சிந்திப்பதில்லை. அவன் சிந்தனை முழுவதும் அரசனின்மேல் தான் இருக்கின்றது.

காவலாளி மந்திரியிடம் கூறுகிறான் முக்கியமென்றால் உள்ளே வரலாம் இல்லையேல் பிறகு பார்க்கலாம் என்று அரசர் சொல்லி விட்டார். மந்திரி யோசிக்கிறார் நம் சொந்த விவகாரத்தை தான் பேச வேண்டும். சரி நாம் பிறகு பார்த்து பேசிகொள்ளலாம் என்று சென்றுவிடுகிறார். அரசி வருகிறாள். மந்திரி அவ்விடத்தை விட்டு போவதை பார்த்தவள்,என்ன அரசன் ஓய்வில் இருக்கிறாரா நான் உள்ளே வரட்டுமா என்று கேட்டு பார். அரசியாரே நீங்கள் அரசனின் துனைவியார் எப்பொழுது வேண்டுமானாலும் உள்ளே செல்லலாம். இல்லையப்பா, இல்லை நல்ல பண்பும், நல்ல அறிவாற்றல் படைத்த அரசி அரசனை தொந்தரவு செய்ய மாட்டாள். அவர் ஓய்வில் இருந்தால் பிறகு நான் வந்து சந்திகிறேன் என்று அரசி சென்று விடுகிறாள். இங்கு பார்த்தாயா அரசி உள்ளேயே செல்லவில்லை. எப்படி பார்த்தாலும் சேவகர்களுக்கு தானே அங்கே மதிப்பு அதிகமாக இருக்கிறது.. அரசியே சேவகனை கேட்கும் நிலைமை வருகிறது பார்த்தாயா என்று நன்றாக சிரிக்கிறார்.

இவர்கள் இருவரும் வந்தவரை பார்த்துக் கொண்டே நடக்கிறார்கள். நாம் ஏதோ கொஞ்சம் ஞானம் வந்தது என்று நினைத்தோமே இவர் சொல்வது ஒன்றுமே நமக்கு புரியவில்லையே? என்று ஒரே சமயத்தில் இருவரும் இதையே யோசித்தனர்.

என்ன யோசிக்கிறீர்கள். விளக்கம் தானே வேண்டும். இது சுலபமான விளக்கம்.

ஸ்வாமி! இதுவா சுலபமான விளக்கம் என்று கூறுகிறீர்கள்.

என்ன உனக்கு தெளிவாக தெரியவில்லையா? வித்யைகளும், பாண்டித்தங்களும் இறைவனின் தர்பாரில் இருக்கும். ஆனால் அவை நினைத்த நேரத்தில் இறைவனை காண முடியாது. பக்தி என்ற ஒன்று இருந்தால் நாம் எப்பொழுதுமே அவனிடத்தில் இருப்போம். ஆத்மார்த்த பக்திக்கு இறைவன் துணை இருக்கிறான். பாண்டியத்தை களையும், வித்யைகளையும் கேட்டு மகழ்கிறானே அன்றி அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை ஐயா முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ருத்ரத்தையும் ஜபித்து நீராட்டினாால் அதாவது இங்கே ஈசனுக்கு நீராடினால் அதில் ஈசன் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறான். ஆனால் வெறும் நீரை கையில் எடுத்து இவ்விடமெல்லாம் அசுத்தமாக இருக்கிறதே இறைவா இவ்விடத்தை யெல்லாம் சுத்தம் செய்து விட்டு உன்னை நீராட்டுகிறேன் என்று கூறி ஒரு சேவகனை போல் இடத்தை சுத்தம் செய்து ஈசனுக்கு நீரை விட்டு ஒரு குழந்தையை குளிப்பாட்டுவது போல் குளிப்பாட்டுகிறான். இப்போதாவது சொல் எதில் ஐயா அந்த ஈசன் இருப்பானென்று .எதை அவன் மகிழ்வாக ஏற்று கொள்கிறான்? .பாண்டியத்தை அல்ல, ஆத்மார்த்த பக்தியை ஏற்று கொள்கிறான்.

ஸ்வாமி! ஒரு கேள்வி பாண்டியத்தர்களுக்கு ஆத்மார்த்த பக்தி இல்லை என்றா கூறுகிறீர்கள்!.

நீ சொல்வதை பார்த்தால் சேவகன் படிக்காதவன் போல் சொல்கிறாயே? பாண்டித்யம் முக்கியமானது, அதைவிட முக்கிய மானது தூய பக்தி ஐயா, தூய பக்தி உள்ளவன் சேவகனை போல் இருக்க வேண்டும். அவன் இறைவனிடத்தில் நிலைத்து நின்று விடுகிறான். பாண்டித்யம் மட்டும் வைத்திருப்பவன் தர்பாரில் மட்டும் தான் இருப்பான். பாண்டியத்திற்கு ஏற்ப அவனுக்கு அங்கே சன்மானங்கள் கிடைக்கபடுகின்றன. ஆனால் சேவகனுக்கு ஒன்றும் கொடுக்கப்படுவதில்லை. அவனும் ஒன்றும் கேட்பதில்லை. அவன் ஏன் கேட்பதில்லை தெரியுமா? இத்தனை பெரிய

அரசர் பாண்டியத்தர்களுக்கு வெகுமதி அளிக்கிறார். நீதி நேர்மை தவறாமல் நல்ல தீர்ப்பை அளிக்கிறார். யாருக்கு எது தேவை? அதை எப்படி செய்யவேண்டும்? என்று உணர்ந்து செய்கிறார். அப்படி பட்டவரிடம் நாம் நெருக்கத்தில் இருக்கிறோமே யாரும் அவரை சட்டென்று அண்ட முடியாத இடத்தில் நாம் இருக்கிறாமே நாம் பெரும் பாக்கியசாலி அல்லவா. நம்மை பற்றி என்ன அவருக்கு தெரியாமலா போகும்? நம்மை அவர் பார்த்து கொள்வார். இவ்வளவு பெரிய செயல்களை செய்பவர் இந்த ஒரு சிறிய சேவகனையா கவனியாமலா போக போகிறார் நிச்சயம் இது நடவாது அவர் நம்மை பார்த்து கொள்வார். நாம் நம்மை பற்றி யோசித்தால் அவர் சேவைக்கு கால தாமதமாகும் எல்லாம் அவரிடம் விட்டுவிட்டு நாம் சேவை புரிவோம் என்று அவன் சேவை செய்கிறான். அரசனும் என்ன நினைக்கிறார் தெரியுமா பண்டிதர்களும், வித்துதாம்சங்ளும் அனைவரும் புகழ்ச்சிகாகவும், வெகுமதிக்காகவும் வாழ்கிறார்கள். அதை அவர்களுக்கு நாம் கொடுத்து விடலாம். இந்த சேவகர்கள் நமக்காகவே வாழ்கிறார்கள். இவர்களுக்கு நம்மை தவிர வேறு எதை கொடுத்தாலும் இவர்கள் சேவைக்கு ஈடாகாது இங்கே சிரித்தவர் சற்று கண்ணீ வடித்தார் ஐயா! இறைவனை பர்த்தாயா தனக்கு சேவை புரிபவனுக்கு தன்னையே தருகிறான், மற்றவர்களுக்கு வெகுமதியை தருகிறான் இப்பொழுது சொல் வெகுமதி முக்கியமா அந்த சர்வேஸ்வரன் முக்கியமா.

ஸ்வாமி! அந்த சர்வேஸ்வரன் இருத்தால் எல்லா வெகுமதியும் கிடைத்தது போல் தானே.

கிடைத்தது போல் என்ன, கிடைத்தது போல். எல்லாம் கிடைத்துவிடுகிறது உன் ஊரில் உள்ளவர்கள் வெகுமதிக்காக வாழ்கிறார்கள் அதனால் செல்வந்தர்களாகவும், வித்துதாம்சிகளாக ஒங்கி இருக்கிறார்கள் ஆனால் பாவம் நீ சேவகனை போல் வாழ்த்தாய் வாழ்ந்தது தவறில்லை ஆனால் அரசன் மேல் சத்தேகம் ஏற்ப்படுவது தான் தவறு என்று கூறுகிறேன்.

ஸ்வாமி !உங்களுக்கு எப்படி என்னை பற்றி இவ்வளவு தெளிவாக தெரிகிறது.

எல்லாம் நம் குருநாதர் சொன்னவைதான். நான் சொன்ன கருத்து இருவருக்கு ஒப்பாகும் ஒன்று தெய்வம் இரண்டாவது குரு இவ்விருவருக்குமே இந்த கருத்து ஒன்றாகும் அதாவது ஒத்து போகும் அரசனிடத்தில் குருவை வைத்து நீ மற்றவர்களை பார் அப்பொழுது அவருக்கும் இது ஒப்புமையாகும் பார்த்தாயா வேடிக்கையை மாபெரும் சபையில் பண்டிதர்களும் வீர தீர பராக்கிரம சாலிகளும் நிறைந்து இருக்க சேவகர்களுக்கு தான் அதிகம் அரசன் பதவி அளித்திருகிறான் என்பதை மீண்டும் சிரிக்கிறார். இப்பொழுது இவர்களும் உணர்ந்து சிரிக்கிறார்கள் .

ஸ்வாமி! நீங்கள் வேடிக்கையாக பேசினாலும் நல்ல கருத்தை சொல்லிதருகிறீர்கள்

எல்லாம் நம் குருநாதர் எனக்கு கொடுத்த அறிவுரையப்பா. ஞானம் அவரிடம் இருந்து வந்தது.

ஸ்வாமி! ஒரு கேள்வி கேட்கட்டுமா நீர் எப்பொழுது அவரிடம் சேர்ந்தீர்கள்?.

மீண்டும் சிரிக்கிறார், நல்ல கேள்வி கேட்டாய் சொல்கிறேன் கேள். நான் ஒரு எட்டு வயது இருக்ககும் என் தாய் தந்தையர் குருநாதரை காண என்னையும் அழைத்து வந்திருந்தார்கள் நாங்கள் உயர்ந்த குலத்தவர்கள் அல்ல மலைவாசிகள் நாங்கள் மூவரும் வந்தோம் குருவை கண்டு வணங்கினோம் குருவும் எங்களை ஆசிர்வதித்தார். என்னை பார்த்த குரு என்னடா என்னுடன் இருக்கிறாயா என்று விளையாட்டாக கேட்டார். எங்கள் மலைவாசிகளில் ஒரு பழக்கம் இருந்தது யாராவது பெரியவர்கள் முக்கியஸ்தர்கள் எங்களிடையே உள்ள எதை பார்த்து கேட்டாலும் உடனே கொடுத்துவிட வேண்டும். குருநாதர் என்னை பார்த்து இந்த கேள்வியை

கேட்டார் என் தாய் தந்தையும் என்னை தனியாக அழைத்து பார் நமது குரு அவர். ஏனோ தெரியவில்லை உன் மேல் அவர் பிரியம் வைத்திருக்கிறார் குருவின் பிரியம் தெய்வத்தின் பிரியம் போன்றது. தெய்வமே உன்னை அழைக்கிறதடா நீ மகாபுண்ணிய சாலி எங்களை பற்றி எல்லாம் இனிமேல் யோசிக்க கூடாது உனக்கு தாய் தந்தை தெய்வம் எல்லாம் இந்த குருதான் உன்னை இங்கு விட்டு செல்ல போகிறேம் நீ குருவுடன் இரு.

நானும் சற்று அழுது அடம்பிடித்தேன் என் பெற்றவர்களிடம் கூடவருவேன் என்று ஆனால் அவர்கள் தீர்மானமாக என்னை குருவிடம் விட்டுவிட்டு, ஸ்வாமி! எங்கள் குலதெய்வமே எங்கள் மகனை தாங்கள் கேட்டதற்காக நாங்கள் மிகவும் பெறுமை அடைகிறோம் எந்த ஜன்மத்தில் நாங்கள் செய்த புண்ணியமோ எங்கள் மகனை தாங்கள் கேட்டிருக்கிறீர்கள் அவன் இங்கேயே உங்களுக்கு பணிவிடை செய்து கொண்டு இருக்கட்டும். ஸ்வாமி! குருநாதரே அவன் எதாவது தவறு செய்தால் அவனை கண்டித்து சீராக்கி உங்களுக்கு நல்ல சீடனாக வைத்து கொள்ளுங்கள் இனி அவன் உங்ளுடையவன் நாங்கள் அவனை இனிமேல் இங்கு வந்து பார்க்க மாட்டோம் அப்படியே வந்தாலும் உங்களை தரிசித்து விட்டு செல்லுவோமே அன்றி அவனை பார்த்தோ, பேசவோ மாட்டோம். அவன் அருகிலும் நாங்கள் நிற்க்க மாட்டோம். அவன் தாய் தந்தை என்ற உரிமையை எடுத்து கொள்ள மாட்டோம், உங்களுக்கு அவனை எங்கள் மனப்பூர்வமாக கொடுத்துவிடுகிறோம்

ஒரு முக்கிய குறிப்பு: இதுவே பிற்காலத்தில் சன்னியாசம் மேற் கொள்ளும்  ஒவ்வொரு சன்னியாசிக்கும் விதிக்கும் நியமங்களாக மாறிற்று.

என்றவாறு என்னை குருவிடம் விட்டு விட்டு ஏன் அழ, அழ விட்டு விட்டு சென்று விட்டார்கள் இரண்டு நாட்கள் அழுதே தீர்த்து விட்டேன். ஆனால் பிறகு குருவின் பணிவும், பாசத்தையும் கண்டு நான் மாற தொடங்கினேன் எல்லா

சீடர்களும் குருவை கேள்விகள் கேட்பார்கள் அவர்களும் ஏதேதோ பதில் சொல்வார்கள் எனக்கு ஒன்றுமே புரியாது. நான் இதில் கலந்து கொள்ளவும் மாட்டேன் ஒரு நாள் என்னை குரு கூப்பிட்டு அழைத்தார் என்னடா எதுவும் கற்றுக் கொள்ள மாட்டேன் என்கிறாயே.

குருநாதரே நான் ஒன்றை சொல்லட்டுமா.

சொல்லடா

நான் உங்களுக்கு எல்லாவிதமான பணிவிடைகளையும் செய்கிறேன் நீங்கள் எதை சொன்னாலும் செய்கிறேன் ஆனால் எனக்கு இந்த ஞானமார்கம் எல்லாம் வேண்டாம் நான் எப்பொழுதும் உங்ளுடன் இருக்கவேண்டும்.

சரி ஞானமார்க்கத்தை வேண்டாம் என்று சொல்கிறாய் .எப்போதும் என்னுடன் இருக்கவேண்டும் என்றும் சொல்கிறாய். என்னுடன் இருந்தால் ஞானம் அவசியம் தானே?.

குருநாதரே! உங்களுடன் இருந்தால் ஞானம் தானாக வருமே அன்றி கற்று தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை ஞானத்தை கற்று கொண்டால் நீங்கள் என்னை வெளியில் அனுப்பி பிரச்சாரம் செய் என்று சொல்வீர்கள் பிறகு நானும் உங்களை பிரிந்து இருக்கவேண்டும் அல்லவா?.

சிறுவனே ருகுபக்தி உள்ளவனுக்கு குரு எல்லா இடத்திலும் இருக்கிறார் அல்லவா?.

ஸ்வாமி! குரு பக்தி இருப்பவன் குருவினுடனே வாழக் கூடாது என்று ஏதாவது இருக்கிறதா?

அவர் புன்னகைத்த வன்னம் அப்படி எதுவும் இல்லையடா. பிறகு நான் உங்களுடன் இருந்து விட்டு போகிறேனே. எங்கோ சென்று சதா குருவை மனதில் நினைப்பதை

விட குருவின் அருகிலேயே இருந்து அவருக்கு வேண்டிய சேவைகளை காலதாமதம் இல்லாமல் நான் செய்யலாம் அல்லவா?.

குருவின் விருப்பம் உன்னை வெளியேற்ற வேண்டும் என்று இருந்தால் நீ என்ன செய்வாய்?.

குருநாதரின் பாதங்களை பற்றி அழுதான் ஸ்வாமி! என் தெய்வமே அப்படி என்றும் கருதாதீர் இவை ஞானமார்கத்தை எடுத்து செல்ல பல சீடர்கள் உள்ளனர் ஆனால் உங்களுக்கு சேவை செய்ய இந்த ஒரு சிருவனை ஏற்றுக் கொள்ள கூடாதா?.

ஞானம் அழியாதது அது மூடிவைத்தாலும் பிறகு உலகம் பூராாவும் பரவும் என்று நீங்களே ஒரு நாள் சொல்லி இருக்கிறீர்கள் அதனால் நான் உங்களுங்கு சேவையே செய்கிறேன் இப்படியாக நான் அவருக்கு சீடன் ஆனேன்.

ஒரு நாள் சீடர்கள் மத்தியில் ஒரு சர்ச்சை நடந்தது, என்ன எல்லாம் ஒன்றும் தெரியாதவன் மக்கு எதையும் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறதே என்று எல்லாம் பேசினார்கள் இது விளையாட்டாக தான் நடந்தது எனக்கு குரு நாதர் இருக்கிறார் அதை விட வேறு எதுவும் தேவையில்லை என்று நானும் பட்டென்று சொல்லி விட்டேன். அவர்களும் விடவில்லை நீ வெளியில் தனியாக சென்றால் உன்னை கேள்விகள் கேட்டால் என்ன பதில் அளிப்பாய்.

என் குருநாதர் துணை இருப்பார் அவர் அளிப்பார் பதில் என்றேன்.

எல்லோரும் புன்னகைத்தனர் ஆனால் அந்நேரம் அங்கே குருநாதர் வந்தவர் இப்போது நான் சொன்னேனே அந்த கதையை அவர்களிடம் சொன்னார் இப்படி கதையும் சொல்லி என் மதிப்பையும் உயர்த்தினார் அவர் என் மதிப்பை உயர்த்தியதை பார்த்து எனக்கு வெட்கமாக

இருந்தது அவருடன் நாம் இருக்க தகுதிதானா என்று எண்ணினேன் உடனே என்னை குருநாதர் தனியாக அழைத்து அவர்களுக்காக நீ கற்று கொள்ளவும் வேண்டும். எப்பொழுதும் எனக்காக சேவையும் புரியவேண்டும் கற்றதை நாம் வெளியில் காண்பித்து கொள்ள கூடாதுடா ஒன்றும் அறியாதவன் போல் இருந்து சேவை புரிந்து வா. கற்றதை காண்பித்தால் அகங்காரம் மேல் ஒங்கும் கர்வம் தலை துக்கும் அதனால் நீ கற்று அறிந்து கொள் என் துணை என்றும் எப்பொழுதும் இருக்கும்..

ஸ்வாமி! நான் கற்றுக் கொள்கிறேன் ஆனால் ஒரு நிபந்தனை உங்களை விட்டு பிரிய மாட்டேன் கற்றதை விற்க மாட்டேன். தேவைப்பட்டால் சொல்லுவேன் அதுவும் உங்கள் ஆங்ஞைப்படி. இரண்டாவதாக நீங்கள் கற்று தருவதை மட்டும் தான் நான் கற்று கொள்வேன் அதில் ஆராய்ச்சியோ அல்லது வாதங்கலையோ அல்லதுஅதன் மேல் விளக்குவதையோ நான் செய்ய மாட்டேன். உங்கள் வாக்கு தான் எனக்கு தெய்வ வாக்கு மற்ற வேதங்களையோ மற்றவர்கள் சொல்வதையோ நான் எடுத்து கொள்ளமாட்டேன். அவைகளை நான் நினைத்தும் பார்க்க மாட்டேன். உங்கள் வாக்கன்றி எனகது வேறு எதுவும் இல்லை நீங்களே எனக்கு அனைத்தும். உங்களை விட்டு நான் எதையும் பாரேன் இவ்வாறு என் குருவிடம் சத்தியம் செய்துவிட்டு நான் இத்தனை காலம் வாழ்ந்து வந்தேன் அதை தான் சற்று முன் கூறினேனே அரச சபையில் சேவகனாக பனிபுரிபவன் கற்று இருப்பதில் தவறுயி இல்லை என்று. ஆனால் அவன் சேவகனாகவே இருக்க வேண்டும் கற்றதை கை ஆளாமல் இருந்தால் அவனுக்கு சேவகன் பதவி நிச்சயம் அல்லவா?.

ஸ்வாமி! நாங்கள் மிகுந்த பாக்கியசாலிகள் இன்று நாங்கள் பிறந்த பயனை அடைத்துவிட்டோம் இறைவனின் தொன்டை அருமையாக கூறியிருக்கிறீர்கள் இறைவனிடம் அன்பும் பாசமும் தான் தேவை மற்றவை அல்ல என்பதை நன்றாக புரிந்து கொண்டோம்.

சரி சரி என்னை நீங்கள் புகழாதீர்கள் எல்லாம் நம் குருநாதர் தந்த ஞானம்,இவை அவருக்கு போய் சேரும் என்று கூறி மூவருமாக நடந்து கொண்டே சென்றனர்.

அத்தியாயம்: 9

மூவருமாக நடந்து கொண்டே வருகிறார்கள்.

ஆ! குருநாதா என்று மனைவியின் குரல் கேட்டது. சட்டென்று திரும்பி பார்த்தான். என்ன ப்ரியே என்னவாயிற்று?.

கரடு, முரடு பாதையால் காலில் அடிபட்டுள்ளது.
வந்தவரும் திரும்பி பார்த்தார். அம்மா கவலைபடாதீர்கள். இதோ ஒரு நொடியில் வருகிறேன் என்று சென்று சில பச்சிலைகளை பறித்து வந்தார். எங்கம்மா அடிபட்டது என்று கேட்டார்?

ஸ்வாமி! முட்டியில் அடிபட்டுள்ளது.

சரி காட்டுங்கள் காலை என்றார்.

வந்த பெண்மணி தயக்கத்துடன் நின்றாள்.

அம்மா! நீங்கள் எங்கள் தாயை போன்றவர். பாத முட்டியில் தானே வலி. இவ்விடம் அம்மாதிரியான இடம், காலை திருப்பி விட்டு விடும் என்று கூறி கால்கலில் பச்சிலையை வைத்து ஒரு நாரால் இலையை மூடி கட்டினார். குருநாதா உனக்கு வலி போக வேண்டும் என்றார்.

என்ன ஸ்வாமி சொல்கிறீர்? அம்மா நீங்கள்

ஆ! குருநாதா என்றீர், அதனால் அவருக்கு வலி ஏற்பட்டு இருக்கும் அல்லவா? நீங்கள் அளித்த பழத்தை உண்டவருக்கு, இத்துன்பத் தையும் சரிபங்காக ஏற்றுக் கொள்கிறார், அதுதான் அம்மா நமது குருவின் மகிமை. இன்பம், துன்பம்

இரண்டிலும் நம்முடன் அவர் வாழ்கிறார். ஏன் அவரால் தான் அப்படி வாழ முடியும்.

ஸ்வாமி!, குருநாதரை பற்றி நிறைய கூறுங்களேன் கேட்டுக் கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறது என்றான்.

ஒரு நல்ல சீடனுக்கு அறிகுறி அவன் குருநாதரை பற்றி பேசுவது தான். அவரை பற்றி அவன் புகழ்ந்து கொண்டு வந்தால் அவன் ஜன்மம் மோட்சம் அடையும்,ஏன் முக்தியே கிட்டும். எனக்கு தெறிந்தவரையில் நாம் தெய்வங்களை எல்லாம் வழிபட வேண்டிய அவசியமேயில்லை. நல்ல ஒரு குருநாதர் கிடைத்து விட்டால் அவரின் புகழை பாடிக் கொண்டே அவரது நிழலில் வாழ்ந்து விடலாம். இந்த மூடஜனங்கள் இருக்கிறார்களே, அவர்கள் இறைவனிடம் இதை கொடு,அதைகொடு, என்று கேட்கிறார்கள். ஆனால் நல்ல ஒரு சத்குருவை தாருங்கள் என்று வேண்டுவதில்லை. யார் வந்தாலும் எல்லோர் கால்களிலும் விழுகிறார்கள். நல்ல குருவை தேர்ந்தெடுத்து அவரையே தன் தெய்வமாக்கிக் கொள்ள வேண்டும்.

ஸ்வாமி! நல்ல குரு என்று சொன்னீர்கள். எப்படி நாம் அதை கண்டுபிடிக்க வேண்டும்.
எந்த குருவை பார்த்து உன் மனம் லயிக்கிறதோ, அவர் தான் உனக்கு ஏற்ற குரு. ஒரு நல்லவன் அல்லது முன்ஜன்மத்தில் அவன் செய்த புண்ணிய பலத்தால் ஒரு நல்ல குரு அவனுக்கு கிடைக்கிறார், கிடைத்த குருவையே அவன் தன் வாழ்நாள் முழுவதும் அவருக்கு சேவை செய்து தனக்கு முக்தியை வேண்ட வேண்டும். உலகில் நீ எதை வேண்டுமானாலும் பெற்றுவிடலாம், ஆனால் ஒரு நல்ல குருவை பெறுவது மிகவும் கடினம் ஐயா, மிகவும் கடினம். நல்ல குரு கிடைத்தால் மட்டும் போதாது. அவரது சோதனைகளை எல்லாம் நாம் ஜெயிக்க வேண்டும். குருவை ஆராய நமக்கு அருகதை இல்லை, ஆனால் ஒரு சீடனை நன்கு சோதிக்க ஒரு குருவிற்கு பரிபூரண உரிமை உண்டு. குரு சோதிக்கிறார் என்றால் நாம் எல்லாவற்றையும் ஏற்று கொள்ளத்தான் வேண்டும்.

அச்சோதனைகளை ஜெயிக்க, நாம் அவரையே சரணடைய வேண்டும். நல்ல குருவை அடைந்தவனுக்கு உலகில் எவ்வித துன்பமும் இல்லை. தெய்வத்தை நம்மால் பார்க்க முடியாது. ஆனால் நடமாடும் தெய்வமாக திகழ்கிறார் குரு. அவர் சொல்லும் செயலும் தான் நம் வாழ்க்கைக்கு முக்கியம். அவரை விட உயர்ந்தது உலகில் வேறு எதுவும் இல்லை.

ஒரு குருவை அடைந்த சீடன் அவரை பின்பற்றி அவர் சொல்வனவற்றை கேட்டு நடக்க வேண்டும். அவர் புகழை கூற சந்தர்ப்பம் கிடைக்கிறதே அது உலகிலேயே பெரும்பாக்கியம் ஐயா பெரும்பாக்கியம். குருநாதரின் புகழ் கூறாதவன் பாவி ஆகிறான். நம் குருநாதரின் புகழ் அளவுக்கு அடங்காதது அய்யா அடங்காதது. அவர் எத்தனை சீடர்களை உருவாக்கினார் தெரியுமா உமக்கு? நம் குருநாதர் ஞானபீடத்தின் குரு ஆவார். அவருக்கும் மேலே குரு இருக்கிறார், அவரைப் பற்றியும் உங்களுக்கு நான் சொல்கிறேன்.எனக்கு இப்படி ஒரு பட்ட ஒரு சந்தர்ப்பத்தை அளித்த என் குருநாதருக்கு பலகோடி நமஸ்காரங்கள். நான் எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும்; அத்தனை ஜென்மங்களிலும் என் குருநாதரின் புகழையே பாட வேண்டும். இதைத் தான் நான் இறைவனிடம் தினமும் பிரார்த்திப்பேன். நம் குருநாதரை அண்டி வந்தவருக்கு நண்பராக திகழ்கிறார், பணிந்தவரைக் காக்கிறார், தான் என்று நினைப்பவரின் தவற்றை உணரச்செய்கிறார், யாருமில்லை என்று தனியாக கதறுபவருக்கு தெய்வமாகச் சென்று உதவுகிறார், நல்ல சீடனை உருவாக்க பரீட்சித்தும் பார்க்கிறார், ஒரு குழந்தைக்கு தாயைப்போலவும் பக்கத்திலிருந்து அரவணைக்கிறார், கருணையின் பிராவகம்; கருணையின் பிறப்பிடம், அன்பாக பேசுகிறார், நண்பராயும் திகழ்கிறார், நாம் எண்ணுவதை உணர்ந்து செயல்படுகிறார். தெய்வம் என்ற பெயருக்கு அவரைத் தான் குறிப்பிடமுடியும். வித்தைகளில் அவர் வித்யா ஸ்வரூபம்.ஆனால் கர்வம் அற்றவர். வித்தை தெரிந்தவர் போல் காணப்பட மாட்டார். பெரிய ஞானி, அடக்கமாக இருப்பார். அரைகுறை டாம்பீகமாக இருக்காது, தானாக சென்று தன்னை பற்றி

கூறிக்கொள்ளமாட்டார், அவரை பார்த்தவுடன் அவர் பாதங்களில் விழும் மக்கள் அதிகம் ஐயா அதிகம்.

நல்ல ஆத்மாக்கள் அவரை கண்டதும் நம் வாழ்நாட்களை இவருடன் கழிக்க வேண்டுமென்று ஏங்குகின்றன. இயற்கை தாய் ஆகிறது. அவர் கேட்பனவற்றை கொடுக்கிறது. தனக்கென்று எதையும் கேட்டவரல்ல. எல்லாம் தன்னை அண்டியவர்களுக்கே செய்கிறார். ஒரு நொடியும் உறங்காமல், நமக்காக வாழகிறார். ஐயா! நாம் அவருடன் இருப்பது பெரிய பாக்கியம். ஜன்மம் எடுத்ததின் பலன் ஒரு நல்ல குருவை சரண் அடைதல், உலகிலேயே மிக கொடியது எது தெரியுமா? குருவின் கோபத்திற்கு நாம் ஆளாக கூடாது.

ஸ்வாமி! குருவிற்கும் கோபம் வருமா? என்று தயக்கத்துடன் கேட்டான்.

நிச்சயம் வரும் ஐயா நிச்சயம் வரும். பலமுறை உன்னை திருத்த முயல்கிறார். நீ திருந்தவில்லை என்றால் கோபம் வரும் அல்லவா? திருந்த வாய்புகளை அளித்தும் நாம் திருந்தாமல் இருப்பது தவறல்லவா? தேவையில்லாமல் அவருடன் வாதிப்பது தவறு அல்லவா? முக்கிய மானவற்றை நீ வாதிக்கலாம், ஆனால் அன்றாட வாழ்க்கையை நீ அவரிடம் வாதிக்க முடியாது. அது வீணான பிரச்சனையை உருவாக்கும். அவர் சொல்வதை நாம் என்றுமே கேளாமல் இருப்பது, நம் விருப்பப்படி அவர் நடக்க வேண்டும் என்று என்னுவது, தான் எதை செய்தாலும் அது சரியென்று வாதிப்பது இவை ஒரு சீடனுக்கு அழகாகாது. சீடன் மட்டும் அல்ல கேளும் ஐயா ஒரு சந்நியாசியை இகழ்ந்து கூறுவது பாபம் ஆகும் அதை விட கொடிய பாபம் அவரை அவமதிப்பது. சந்நியாசிக்கே இவ்வளவு என்றால் இதை விட பன்மடங்கு அதிகமானது குருவிற்க்கு. இதனால் குரு கோபிக்கிறார் என்று அர்த்தமில்லை. அவருள் இருக்கும் அந்த தெய்வம் கோபிக்கிறது. ஏன் இந்த இயற்கையே கோபிக்கிறது. இதனால் நாம் குருசாபத்திற்கு ஆளாகிறோம். நீ தெய்வத்தை ஏதாவது குறை கூறினாலும் குரு உன்னை

காப்பாற்றி விடுவார். ஆனால் குருவை நீ மீறினால் உன்னை காப்பாற்ற அந்த தெய்வமும் வராதய்யா வராது. குருவையே நாம் தெய்வமாக மதிக்கும் பொழுது எப்படி ஐயா அந்த தெய்வம் வரும்? சொல்லும் பார்க்கலாம்.

குரு துணை இருந்தால் நாம் எல்லாம் வெல்லலாம். அந்த கருணை கடலுக்காக நாம் ஏங்க வேண்டும். நான் அப்படிபட்ட வருடன் இருக்கிறேனே என்று மிகவும் மிகவும் பெருமைப் படுகிறேன் நான் இதை அகங்காரத்தில் கூறவில்லை. என் மன சந்தோஷத்தால் கூறுகிறேன். ஐயா நல்ல குருவை அடைகிறவன் மனம் தெளிவு அடைகிறான். அவன் பேரானந்தத்தை காண்கிறான்

குறிப்பு:- குருவை கண்டதும் இறைவனை கண்ட ஆனந்தம் பெருகிறது. அதை இங்கே பேரானந்தமென்று குறிப்பிட்டு இருக்கிறோம்.

குரு கடினமாக தவம் இருந்து இறைவனை பார்த்து பேரானந்தம் அடைகிறார் ஆனால் நாம் அவரை பார்த்தவுடன் பேரானந்தம் அடைகிறோம். பேரானந்தம் அடைந்தவன் எவ்வித சஞ்சலமில்லாமல் தன் பிரயாணத்தை தொடங்குகிறான். சஞ்சலங்கள் எதுவும் இல்லாமல், நிம்மதியாக செல்கிறான். அவன் எப்பொழுதும் சுகித்து இருக்கிறான். வரும் துன்பங்களை அவன் துச்சமாக மதிக்கிறான். அவன் குருவின் விருப்பப்படி நடத்து கொள்கிறான். அவருக்கு எவ்வித வேதனையும் தராமல் வாழ்கிறான். அவரை தன் ஆன்மாவில் நிலை நிறுத்திக் கொள்கிறான். நிலைநிறுத்திக் கொண்டு ஜபம் செய்கிறான். குரு எங்கும் எப்பொழுதும் இருக்கிறார். ஏன் இப்பொழுது நான் சொல்லி வந்ததையும் கேட்டுக் கொண்டிருப்பார். ஐயா! குருவின் மகிமை அதிகம் ஐயா அதிகம் என்று ஒரு முறை வணக்கத்தை குருவிற்கு செலுத்தி விட்டு மீண்டும் இவர்கள் பிரயாணத்தை தொடங்கினார்கள்.

ஸ்வாமி! குருவிற்கு ஒரு குரு இருக்கிறார் என்று சொன்னீர்களே,

எங்களுக்கு சற்று இவை எல்லாம் விளக்கமாக சொல்வீர்களா?

நிச்சயம் சொல்வேன் இதை விட வேறு என்ன வேலை எனக்கு ?. அதுவும் குருவின் குருவை பற்றி சொல்ல நான் நிறைய புண்ணியம் செய்திருக்கிறேன் ஐயா இப்படி ஒரு சந்தர்பத்தை அளித்த என் குருவிற்கு பல கோடி நமஸ்காரங்கள் ஐயா தொடருகிறேன் கேளுங்கள்:- குருமகாராஜ்கி ஜே, சத்குருமகராஜ்கி ஜே, ஆதிகுரு சந்திரமகராஜ்கி ஜே என்றார். ஈசன் பிறையை சூடியவன் அல்லவா, இந்த பிறை நாம் சந்திரன் என்று சொல்வோம். யோக மார்கத்தில் சந்திரகலை அவசியமானது. சந்திரகலை என்பது மகாவிஷ்ணுவையும், சக்தியையும் குறிப்பிடுகிறது. ஆதிகாலத்தில் இந்த விந்தியமலையில் ஞானபீடம் உருவாயிற்று (எப்படி உருவனது என்று நான் முன்பே கூறிருக்கிறேன் அதனால் இங்கே அவை தேவையில்லை) அந்த பீடத்திற்கு மேற்படி நடத்த யாரை நியமிக்கலாம் என்று அப்பொழுது இருந்த ரிஷி யோசித்து கொண்டிருந்தார் இறைவா நல் ஒரு சீடன் வேண்டுமே? இவ்விடத்தின் மகிமையை பற்றியும், ஞான மார்கத்தை போதிப்பதற்கும் ஒரு நல்ல குரு தேவையாயிற்றே நான் என்ன செய்யட்டும் என்று ஈசனை பிரார்தித்து வந்தார். பலகாலம் பிரார்த்தித்து வந்தவர் முன் ஒரு நாள் ஈசன் தோன்றினார்.

என்ன மகரிஷி உமக்கு என்ன கவலை?.

சர்வேஸ்வரா! உமக்கு தெரியாததா ஐயா நான் கூற போகிறேன் ஐயா சப்த மகாரிஷிகளான ப்ருகுவால் உற்பத்தியான ஸ்தலம் இது. இங்கு இந்த பீடத்தை அடுத்தபடி நடத்த ஒரு நல்ல ஆன்மா தேவை.
கவலை வேண்டாம் முனிவரே. இங்கிருந்து தொலை தூரம் சென்றால் வேடுவர்குலம் இருக்கிறது. வேடுவரின் மனைவி இப்பொழுது நிறைமாத கர்பிணி. நீர் போகும் பொழுது அவள் மிகவும் சிரமப் படுவாள். சந்திரனின் அம்சம் கொண்ட ஒரு மகன் பிறப்பான். அவன் வெண்மையும் நீலமுமான நிறத்தில் கலந்திருப்பான். அவனை உங்கள்

சீடனாக்கி கொள்ளலாம்.

ஸ்வாமி! ஸர்வேஸ்வரா அந்த வேடுவன் யார் என்று தாங்கள் சொல்வீர்களா? அவன் இப்படி ஒரு மகனை உலகிற்கு தர அவனது புண்ணியங்கள் எத்தனை என்பதை கூறுவீர்களா?.

இந்த வேடுவன் முன் ஜன்மத்தில் எனது குமாரன் ஷண்முகனின் மாமியார் ஆவான். தக்ஷிணத்தில் பிறந்து என்னையே வழிபட்டு கொண்டு வந்திருந்தாள். எனது அருளினால் வள்ளியை பெற்றாள், பிறகு ஷண்முகனுக்கு மண முடித்து வைத்தாள். முக்தியை கூறி இந்த ஜன்மத்தில் இங்கே பிறந்திருக்கிறாள் இவர்கள் அதாவது இந்த வேடுவர்கள் என்னை விட ஷண்முகனை அதிகம் பிரார்த்திப்பவர்கள். ஷண்முகனுக்கு முக்கியத்துவம் இங்கே அதிகம் உள்ளது. மகாமுனிவரே! நீங்கள் புறபட்டு சென்று அந்த சந்திர சீடனை கொண்டு வாருங்கள் என்றார்.

நல்ல முழு நிலவு பௌர்ணமி அன்று சந்திரன் அதாவது [சந்திர அம்சம் கொண்ட] குழந்தை பிறந்தது ஈசன் கூறியது போல் வெண்மையும்,நீலமுமாக குழந்தை தெரிந்தது.

வேடுவர்களே உங்கள் குறை நீங்கிற்று ஒரு நல்ல தெய்வீக குழந்தையை தந்திருக்கிறீர்கள் இனி இவனுக்கு சொல்லித்தர வேண்டியவைகளை நானே முன் நின்று சொல்லிதருகிறேன் இவனை நான் ஞனபீடாதிபதி ஆக்குகிறேன். இவனால் உலகம் ஞானத்தை அறியும் என்று முனிவர் குழந்தையை தூக்கச் சென்றார்.

வேடுவத்தி ஐயா! இவ்வளவு நல்ல குழந்தையை நாங்கள் இப்பொழுதே பிரிய வேண்டுமா? கொஞ்ச காலம் எங்களிடம் இருக்கட்டும். அவன் வளர்ந்ததும் உம்மிடம் அனுப்பி விடுகிறோம்.

வேடுவரின் தலைவனும் ஆமாம் ஐயா என் மனைவி சொல்வதும் சரி தான். நாங்கள் கொஞ்ச காலம் அவனை

வளர்த்து பிறகு உங்களிடம் கொடுத்து விடுகிறோம்.

வாக்கு தவறக் கூடாது இவன் நாளை முக்கியமானவன் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

ஐயா! நாங்கள் வணங்கும் எங்கள் தெய்வத்தின் மீது ஆணை. இந்த குழந்தை சற்று வளர்ந்ததும் உம்மிடம் ஒப்படைக்கிறோம்.

சரியென்று அவரும் புறப்பட்டார்.

சிறிது காலம் கழிந்தன. குழந்தைக்கு ஐந்து வயது ஆயிற்று. மீண்டும் மகாரிஷி அங்கே வந்தார். என்ன என்ன வேடுவரே சிறுவனை அனுப்புகிறீர்களா?.

வேடுவன் சற்று தயக்கமாக இருந்தான். ஊம், ஊம் அனுப்பி விடுகிறோம் ஐயா என்று தடுமாறினான். மனைவியை அழைத்தார் ஸ்வாமி வந்திருக்கிறார் எல்லா உபசரனையும் நடக்கட்டும் என்றான்.

அடேய்! உபசரனை இருக்கட்டும் நான் கேட்டதை கொடுத்து விடு என்றார்.

ஐயா! சற்று களைப்பாருகள் நீங்கள் கேட்டது நிச்சயம் தருவோம் என்றான்.

மனைவி வேடுவனை உள்ளே ஆழைத்து பாவம் சிறியவன் அவன் இப்பொழுதேவா அவருடன் போக வேண்டும்.

ஆமாம் அவர் வந்து இருக்கிறார் நாம் அனுப்பவில்லை என்றால் அது முறையல்ல.

ஸ்வாமி1 இன்னும் சற்று அவகாசம் கேளுங்களேன்.

என்ன நீ சொல்கிறாய்? அவர் கோபித்து விடுவார் தெரியுமா.

நம் பிள்ளைதானே ,நாம் தானே அவருக்கு கொடுக்க போகிறோம் அதனால் அவர் கோபித்து கொள்ள மாட்டார் கேட்டு பாருங்கள்.

தயக்கத்துடன் முனிவரிடம் வந்தான் வேடுவனின் தலைவன் ஐயா என் மனைவி இன்னும் சிறிது காலம் ...

நான் அதெல்லாம் பொறுக்கமாட்டேன் நீ குழந்தையை கொடு சட்டேன்று முனிவர் அவன் வார்த்தையை மறித்தார். அப்பொழுது வேடுவனின் மகன் சந்திரன் எங்கிருந்தோ ஒடி வந்தான். கையில் ஒரு தடியை வைத்து ஒடி வந்தான். அப்பா யார் இந்த மகான் என்று கேட்டான்.

முனிவர்! அவனை பார்த்து அப்படியே திகைத்து நின்றார். என்ன இவன் அந்த சாட்சாத் ஷண்முகனே ஆவானா! அல்லது ஈசன் ஆவானா? ஆல்லது நீலமேக கண்ணனாவானா முவருமே ஒன்று சேர்ந்து குழந்தையாக வந்தது போல் உள்ளதோ? ஆஹா !இவனை நாம் சீடனாக அடைய என்ன பாக்கியம். பெற்றோம். சந்திரா நான் ஞன பீடத்தின் குருவய்யா. உன்னை என் சீடனாக்கி கொள்ளவே வந்துள்ளேன் ஐயா என்று முனிவர் பணிவாக கூறினார்.

அப்பா! எனக்கு இவரை ரொம்ப பிடித்திருக்கிறதப்பா. இவருடன் நான் போகிறேன் அப்பா .

என்ன மகனே சொல்கிறாய்? எங்களை பிரிந்து போவாயா என்று கேட்டார் தந்தை வேட அரசன். நல்லவற்றிற்காக உங்களை பிரிந்து இருப்பது தவறில்லை அப்பா. ஒரு பிள்ளை தன் தாய் தந்தையர்க்கு நல்ல பெயர் தர வேண்டும் நான் இந்த குருவிற்கு பணிவிடை செய்து அவர் சொல்வனவற்றை கேட்டு பெரிய ஞானியாக வந்தால் உங்களுக்கும், நம் குலத்தவருக்கும் பெருமை தானே அப்பா. ஒரு ஞானியை பெற்று எடுத்தீர்கள் என்று உலகம் உங்களையும் போற்றும் அல்லவா அப்பா .

முனிவர் ஆச்சரியமாக அவனையே பார்த்தார். இந்த சிறு வயதில் இவ்வளவு ஞானமா?

மகனின் குரல் கேட்ட தாய் ஓடி வந்தாள். மகனே எப்படியடா இருக்கிறாய்?.

என்னம்மா நான் என்ன பல நாட்களா உன்னை பிரிந்து இருக்கிறேன்.

உனக்கு ஒன்றும் ஆக கூடாதடா அது தான் இந்த தாயின் வேதனை.

என் அன்பு தாய் இருக்கும் வரை எனக்கு ஒன்றும் ஆகாது அம்மா

அவள் அவனை சேர்த்து அரவனைத்து கொண்டாள் கண்களில் ஆனந்த கண்ணீர் பெருக்கினாள்.

உடனே வேடுவ அரசன் அதிக சந்தோஷிக்காதே அவன் என்ன சொல்ல போகிறான் என்பதை கேள். நம்மை விட்டு முனிவரிடம் போகப்போகிறானாம்.

என்ன அப்படியாப்பா அப்படியா செய்ய போகிறாய்?. சந்தேகத்தில் கேட்டாள் தாய்.

அம்மா! உன் பிள்ளை நன்றாக இருக்க வேண்டுமல்லவா? நல்லவன் என்று பெயர் எடுக்க வேண்டும் அல்லவா?

ஆமாம் கண்ணா நிச்சயம் வேண்டும். நீ உயர்ந்து இருக்க வேண்டும்.

அதனால் தான் சொல்கிறேன் அம்மா நான் முனிவருடம் போகிறேன் என்று.

எங்கள் மேல் உனக்கு பாசம் இல்லையா என்று கேட்டாள்.

அம்மா1 பாசம் இருக்க கூடாது. அன்பு இருந்தால் போதும். என்னை பெற்று இவ்வுலகிற்கு தந்த நீங்கள் என்றும் என் அன்புக்கு உரியவர்கள் தான்.. நான் என் தாய், தந்தைக்கு நல்ல பெயரை தான் வாங்கி தருகிறேன். தீய செயலை செய்து இவனை பெற்றவள் யார் அந்த பாவியார் என்ற சொல்லை உங்களுக்கு வாங்கி தரமாட்டேன். இவனை பெற்ற புண்ணியவதி யார் இவளை வணங்க வேண்டும் என்ற சொல்லையே உங்களுக்கு தருவேன்.

அழுது கொண்டே கூறினாள் தாய். நான் பாவி ஆனேனடா நான் பாவி ஆனேன்.

உடனே முனிவர் அம்மா இவ்வார்த்தைகளை நீங்கள் பிரயோகிக்க கூடாது. நல்ல குழந்தையை பெற்றவர்கள் பாவி என்று சொன்னால் அது பன்மடங்கு பாபத்தை சுமப்பது போல் ஆகும் அம்மா மீண்டும் பல பிறப்புகள் எடுக்க இதுவே காரணமாக அமைந்துவிடும். அதுவும் நீங்கள் ஒரு தெய்வீக குழந்தையை பெற்று எடுத்திருக்கிறீர்கள். அப்படியிருக்க பாபம் என்ற சொல்லுக்கே இடமில்ல ஜன்ம ஜன்மங்கலாக நீங்கள் செய்து வந்த பூஜையின் பலனை இப்பொழுது அடைந்திருக்கிறீர்கள். அது வீணாக கூடாதம்மா வீணாக கூடாது. இத்தனை ஜன்மங்களாக நீங்கள் பூஜித்து வந்த அந்த இறைவனையே பழிப்பது போல் ஆகும். இதன் காரணமாகவும் பல பிறப்புகள் எடுக்க நேரிடும் அம்மா. அதனால் இனி இவ்வார்த்தையை தாங்கள் கூறக்கூடாது. நீங்கள் என்ன எவருமே இதை கூறக்கூடாது என்று நான் சொல்கிறேன் என்று கூறினார் ரிஷி.
ஐயா! குழந்தையை பிரிந்த வேதனையில், பிரிய போகிறோமே என்று கருதி நான் வாயில் வந்ததை சொல்லிவிட்டேன். எங்களை மன்னித்து விடுங்கள். இனி ஒரு போதும் நான் இவ்வாறு நடந்து கொள்ள மட்டேன். நான் இவன் என் மகன் என்றும் நினைக்க வில்லை. இவனை உங்கள் மகனாக கொடுத்து விட்டு எனக்கு தெய்வமாக கருதுகிறேன் ஐயா.

இவன் எனக்கு தெய்வம் எங்கள் குலத்தை காக்க வந்த தெய்வம் எங்கள் தெய்வமய்யா எங்கள் தெய்வம் என்று முனிவரின் காலில் விழுந்து அழுதார்கள்.

வேடனும் ஆமாம் ஐயா நாங்கள் பெரும் பாக்கியசாலி ஆனோம். இவனை நாங்கள் பெற வில்லை இந்த தெய்வம் பிறக்க நாங்கள் காரணம் ஆனோம். எங்கள் பாபங்களை கழுவ வந்த தேவகுமாரனைய்யா, தேவகுமாரன். எங்கள் மேல் கருணை கூர்ந்து எங்களை இவன் பிறப்பதற்கு ஒரு கருவாக்கி கொண்டானைய்யா. இவனை நாங்கள் பெறவில்லை இவன்தான் எங்களை பெற்றான். இவனால் எங்கள் குலம் ஓங்குகிறதய்யா இந்த குலத்தை வாழவைக்க வந்த தெய்வம் இவன் பலகாலம் வாழ்ந்து நல்ல சேவைகளை புரியட்டும். இந்ததெய்வத்தை இத்தனை காலம் நாங்கள் வளர்ததற்கு பெருமை அடைகிறோம் என்று அழுது கொண்டே இவனும் முனிவரின் காலில் விழுந்தனர்.

எழுந்திருங்கள் இருவரும்.

இருவர்களும் எழுந்து ஒரே குரலில் கூறினர் ஐயா! இத்தனை காலம் இந்த தெய்வத்தை நாங்கள் வளர்த்தோம் எங்களை அறியாமல் தவறுகள் நாங்கள் செய்து இருக்கலாம் எங்களை மன்னித்து விடுங்களய்யா. நீங்கள் இவனை அழைத்து செல்லுங்கள்.

தாயே1. தந்தையே !என்னை இத்தனை காலம் காப்பாற்றியதற்கு மிக்க நன்றி அதற்கு கைமாறாக நானும் உங்கள் பெயரை காப்பாற்றுவேன். நான் புறப்படுவதற்கு முன் ஒரே ஒரு வேண்டுகோளை விடுவிக்கிறேன் இதை நம் குலத்தவர் அனைவருக்கும் அப்பா சொல்லிவிடு.

சொல் தெய்வமே சொல் தாங்கள் எதை சொன்னாலும் நாங்கள் நிறைவேற்ற தயாராக இருக்கிறோம்.

அப்பா! பெரியவர்கள் பெரிய ரிஷிகள்,பெரிய முனிவர்கள்

இவர்கள் அல்லாது புதியதாக வருபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் எதை கேட்டாலும் மறுக்காமல் கொடுத்துவிட வேண்டும் தயங்கக்கூடாது.

சரி குமரா இதை இன்றே நம் குலத்தவர் எல்லோரிடமும் பறைசாற்றி விடுகிறேன்.

அப்படி தவறினால் இக்குலமே அழியும் அப்பா.

கவலைப்படாதே நான் என் உயிர் உள்ளவரை இவைகளை பாது காக்கிறேன் நீ சொன்ன சொற்படி நடக்கிறேன்.

முனிவரும் சந்திரனை பார்த்து போகலாமா என்றார்.

வாருங்கள் முனிவரே நாம் போகலாம் என்று இருவரும் அவ்விடத்தை விட்டு புறப்பட்டனர். அங்கிருந்து மலை, காடுகள், ஏரி எல்லாம் கடந்து கொண்டு ஞானபீடத்திற்க்கு வந்தார்கள். வரும் பொழுதே வழியில் ப்ருகு பற்றியும், நதிதோன்றியதை பற்றி எல்லாம் சிறுவனுக்கு கதையாக சொல்லிக்கொண்டே வந்தார்.. சிறுவனும் இக்கதையை நன்றாக கேட்டுக் கொண்டு வந்தார். பிறகு ஞானபீடத்தை ஏற்றுக் கொண்டார். ஞானபீடத்தை நன்றாக பரிபாலித்தும் வந்தார். அவரது குரு மறைந்தார் அவருக்கு பின் இவர் சந்திர மகாராஜி என்ற பெயரில் பல சீடர்களை வைத்துக்கொண்டு உபதேசங்களையும், ஞான போதனைகளையும் செய்து கொண்டு வந்தார். பிறகு பல சீடர்கள் பீடம் ஏற்றனர் இப்பொழுது நமது குருபீடத்தை ஏற்றி நடத்தி வருகிறார்.

## அத்தியாயம்: 10

ஸ்வாமி! நாங்கள் இதை கேட்டு மிக்க தன்யன் ஆனோம். நாங்கள் எவ்வளவு புண்ணியம் செய்து இருந்தால் இவையெல்லாம் கேட்க எங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு அமைத்திருக்கிறான் இறைவன். அந்த இறைவனுக்கு முதலில்

நன்றி செலுத்த வேண்டும். ஸ்வாமி ஒரு சிறிய சந்தேகம் இதில் ஆதிகுருவான அந்தசந்திரமகாராஜ் என்னவானார் என்றே சொல்லவில்லையே.

அவர் இப்படியே மலைமேல் எங்கோ சென்று மறைந்ததாக கூறுகிறார்கள். சில பெரிய மகான்களின் குறிப்புகளில் அவர் இங்கு எப்போழுதும் நடமாடிக் கொண்டிருக்கிறார் என்று சொல்கிறார்கள். அவரை மனதார நினைத்தால் யார் வேண்டுமானாலும் பார்க்கலாம் என்கிறார்கள். கலியுகம் உள்ளவரையில் அதாவது இந்த குருவின் காலம் முடியும் வரையில் அவர் இங்கு சஞ்சரித்துக் கொண்டிருப்பார் என்றும் கூறுகிறார்கள்.

ஸ்வாமி! தாங்கள் அவரை பார்த்ததுண்டா?

நான் அந்த முயற்சியே செய்யவில்லை ஏனென்றால் இதெல்லாம் நம் குருநாதர் வாக்கு. அதை நாம் ஆராயக்கூடாது. இதைவிட முக்கிய காரணம் எனக்கு குருநாதரே அந்த சந்திர மகாராஜியாக காட்சி தந்து இருக்கிறார். எனக்கு அவரே எல்லாம் அதற்காக நான் சந்திர மகாராஜியை மதிக்கவில்லை என்ற அர்த்தம் இல்லை அவரை நான் இவர் ரூபத்திலேயே பார்த்து மகிழ்கிறேன். அவர் ஒரு கௌபீணம் கட்டிக் கொண்டு இந்த விந்தியா மலை பூராவும் சுற்றி வருகிறாராம். அவரின் ஞபகர்த்தமாகத்தான் ஒரு முழு பௌர்ணமியை குரு பூர்ணிமா என்று குருவாக வணங்குகிறார்கள் அந்த மக்கள் ஆதி குருவின் கதையை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இந்த குருவின் கதையை கேட்டால் மகாபுண்ணியம், ஞானம் மேலோங்கும் ,நல்ல குரு கிடைக்காதவர்களுக்கு குரு கிடைப்பார், நல்ல குருவிடம் இருப்பவர் மேலும் பக்தி சித்தையுடன் இருக்க உதவும். இந்த குருவின் கதையை கேட்டால் நம் ஜன்மங்களில் செய்த பாபங்கள் நீங்கும் அதுவும் குருபௌர்ணமி அன்று இதை கேட்டால் மிகவும் புண்ணிய மானவர்கள் ஆவார்கள். இந்த குருவின் கதையை எல்லோராலும் எளிதில் கேட்டுவிட முடியாது. இது அப்படி சிறப்பு வாய்ந்த வரலாறு ஆகும். ஈசனின் அருளும்,

திருமாலின் அருளும், அந்த ஷண்முகனின் கடாச்சமும் நிச்சயம் இங்கே கிடைக்கும்.. அதுவும் இந்த குரு சரித்திரத்தை கேட்டாள் மூவரின் அனுகிரகமும் நிச்சயம் உண்டு. இது ஒரு குருவின் வாயிலாக இவ்விடத்தில் கேட்டால் ஞானம் பெருகும், குருவுக்கும், நமக்கும் ஏற்படும் இந்த சிஷ்ய பந்தம் விடாமல் தொடரும். அதாவது மிக வலிமையானது.

குறிப்பு:- அப்படிபட்ட சரித்திரத்தை குருமூலம் நீங்கள் கேட்டால் இவ்வளவு புண்ணியங்கள் என்றால் என் மூலம் [ஜகதாத்ரி]கேட்க நீங்கள் எவ்வளவு பாக்கியசாலிகள் என்பதை நீங்களே தீர்மானித்து கொள்வீர்கள்.

நாம் ஞான பீடத்தை அடைந்து விட்டோம். வாருங்கள் நாம் போய் குருவை சந்திக்கலாம்.

ஸ்வாமி! நாம் இப்பொழுது போவது அவருக்கு தொந்திரவு கொடுத்தது போல் இருக்காதல்லவா?.

நிச்சயம் இல்லை கவலைப்பட வேண்டாம் வாருங்கள்.

மூவரும் குருவின் இடத்திற்கு சென்றார்கள்.

என்ன சீடா அழைத்து வந்து விட்டாயா இவர்களை என்றார் குரு..

ஆமாம் குரு மகராஜ், இவர்களை தங்களின் தயவால் அழைத்து வந்து விட்டேன்.

வார்த்தையில் கூட விட்டு கொடுக்க மாட்டாயே.

மகராஜ் !நீங்கள் இன்றி நான் ஏது?.

சரி, சரி என்ன உங்கள் பிரயாணங்கள் எல்லாம் சௌகரியமாக இருந்ததா என்று தம்பதியர்களை பார்த்து கேட்டார் குரு .

குருமகராஜ் என்று அவர் பாதங்களில் வீழ்ந்து இருவரும் கண்ணீர் வடித்தனர். தாங்கள் இருக்கும் வரையில் எங்களுக்கு எவ்வித குறையுமில்லை ஸ்வாமி என்றார்கள்.

நன்றாக களைத்து போய் இருப்பீர்கள் போல் காண்கிறீர்களே இன்று நன்றாக முழுவதும் ஒய்வு எடுத்துக் கொள்ளுங்கள் நாளை நாம் பேசலாம் . என்னம்மா காலில் அடி ஏதாவது பட்டதா என்றார் குரு மகராஜ் .
ஆமாம் ஸ்வாமி .

வலி ஏதும் இல்லையே?..

இல்லை ஸ்வாமி தங்களின் கருணையால் வலி அப்பொழுதே போய் விட்டது. ஸ்வாமி உங்களின் பெருமைகளை கேட்டுக் கொண்டு வந்ததில் இந்த வலியை நான் நினைக்கக் கூட இல்லை ஸ்வாமி.

அம்மா! இங்கு வருவது அவ்வளவு சுலபமல்ல இமயமலைக்கு கூட போய் விடமுடியும். ஆனால் இங்கு வருவது சிரமமாகும் அம்மா பசி, தாகம், வலி, துக்கம் இவையெல்லாம் நாம் மறந்து தான் இவ்விடம் வர வேண்டும். ஒரு குருவை நாடி வருவதால் எவ்வித துயரங்கள் ஏற்ப் பட்டலும் நாம் அதை பற்றி சிந்தியாமல் வர வேண்டும். ஒரு நல்லதிற்காக சிலவற்றை நாம் அனுபவிக்கத்தான் வேண்டும். அவைகளை நாம் பொருட் படுத்தக் கூடாது. நாம் நம் எண்ணைத்தை குருவிடம் ஒப்படைக்க வேண்டும். எல்லாம் அவர் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். அதுவும் இது ஞானபீடம் அம்மா. உடலுக்கோ, பொருளுக்கோ இங்கே முக்கியத்துவமில்லை. ஆத்ம ஞானம் ஒன்றிற்குதான் இங்கே முக்கியத்துவம். நாம் மனதை திட படுத்திக் கொண்டு தான் இங்கே வர வேண்டும். சாதனைக்காக மட்டுமே இங்கு வர வேண்டும் அல்லது குருசேவை செய்ய இங்கு வரலாம். பொருளை நாடியோ, புகழை நாடியோ இங்கு வருவது சரியில்லை. அம்மா பெரிய, பெரிய ரிஷிகளெல்லாம் தாங்கள் பூரணத்துவம் அடைவதற்காக இவ்விடம் வந்திருக்கிறார்கள்.

அதுமட்டும் அல்ல அம்மா அவதார புருஷர்களும் இவ்விடத்தில் தோன்றியிருக்கிறார்கள்.

ஸ்வாமி! எங்களுக்கு எல்லாம் தெளிவாக கூறுகிறீர்களா என்று கூறி இருவரும் குருநாதர் அருகில் அமர்த்தனர்.

என்ன நீங்கள் களைப்பாற போகவில்லையா! சற்று ஒய்வு எடுங்களேன்.

ஸ்வாமி! நல்லதை கேட்பதற்காக ஒய்வு எதற்கு இப்பொழுது தானே தாங்கள் கூறினீர்கள். உடலை பற்றி கவலை இருக்க கூடாது என்று அதனால் ஸ்வாமி நாங்கள் கேட்கிறோம். தாங்கள் தயை கூர்ந்து மொழிந்து அருள வேண்டும் .

சரி கூறுகிறேன் கேளுங்கள். ஜமதாக்னி மகரிஷி இருந்தார். அவரது மகன் பரசுராமன். அவரது துணைவியார் ரேணுகா தேவி. அவர் ரேணுகா தேவியின் தலையை வெட்டுமாறு கூறியது எல்லாம் உங்களுக்கு தெரியும் என்று நினைக்கிறேன் அதற்கு பிறகு நடப்பதை சொல்கிறேன் கேளுங்கள்:- இந்த ஜமதாக்னி முனிவரிடம் காம தேனுவின் மகள் நந்தினி இருந்தாள் கேட்டதெல்லாம் கொடுக்கும் நந்தினியை வைத்துக் கொண்டு அங்கு வருபவரின் பசியை ஆற்றினார் ஜமதாக்னி. ஒரு தினம் அரசர் ஒருவர் இந்த ஆஸ்ரமத்திற்கு வந்தார். அன்று பரசுராமர் அங்கு இல்லை. ஜமத்தாக்னியை வற்புருத்தி நந்தினியை கொடுக்குமாறு கேட்டார். முனிவர் கொடுக்க மறுத்து விட்டார். கோபமுற்ற அரசன் முனிவரின் தலையை வெட்டினான். இந்த முனிவரின் தலை பூமியில் விழுந்தால் பூமியே பிரளயத்திற்கு ஆளாகிவிடும். அதனால் பதற்றத்துடன் ஒடி வந்த ரேணுகா தேவி தன் கணவரின் தலையை தன் மடி மீது வைத்துக் கொண்டு ஆழ்நிலை தியானத்தில் அமர்ந்தாள். இதை கண்ட அரசனும் பயந்து ஒடி விட்டான்.

பரசுராமர் அங்கே வந்தார் தந்தை அமர்ந்திருக்க தலையில்லாமல் முண்டமாக இருந்தார். தந்தையே

உனக்கேன் இந்த நிலைமை என்று கூச்சலிட்டு அழுதார். பிறகு நடந்தவைகளை அறிந்து கொண்டார். எல்லா அரசர்களையும் கொன்று பழிவாங்குவேன் என்று சபதம் மேற் கொண்டார். தாயை நோக்கி ஒடி வந்தார். தாயும் ஆழ்நிலை தியானத்தில் இருந்தாள். மடியில் தந்தையின் தலை இருந்தது. என்ன செய்வது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்தார் பரசுரமர். அப்பொழுது, தாயிடம் இருந்து ஒரு குரல் வந்தது. ஒரு மூங்கிலால் ஆன தராசை செய்வாய் ஒரு புறத்தில் உன் தந்தையை அமர்த்தி, மறுபுறத்தில் என்னை அமர்த்த வேண்டும்.(அதாவது ஒரு தட்டில் தந்தையையும், மறு தட்டில் தாயையும்) பிறகு உன் தோளில் சுமந்து கொண்டு விந்தைக்கு சொல்.

தாயின் ஆக்ஜையை கேட்டு அதன்படி அனைத்தையும் தயார் செய்து கொண்டு இவர்களை எடுத்து சென்றார் பரசுராமர். இத்தனை தூரம் சுமந்து கொண்டே வந்தார். வித்தையை நெருங்கினார். இந்த அகண்ட காட்டிற்குள் புகுந்து கொண்டு நடந்து வந்தார். இன்னும் எத்தனை தூரம் செல்ல வேண்டும்? எங்கு நாம் செல்ல வேண்டும் ஒன்றும் புரியவில்லையே என்று எண்ணிக் கொண்டு நடந்து வந்தார். தொலை தூரத்தில் ஒரு பர்ணசாலை இருப்பதை கண்டார் சரி அங்கு செல்லலாம் என்று அப்பர்ணசாலையை நோக்கி சென்றார்.

பர்ணசாலையிலிருந்து ஒருவர் வெளியில் வந்தார். இவர் வருவதை கண்டு வாருங்கள் பரசுராமரே என்றார்.

ஆ என்ன ஆச்சரியம் எண் பெயரை கூப்பிடுகிறீர்களே.

இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது நாம் எல்லாம் ஒரே அம்சத்தினர் தான்.

என்ன சொல்கிறீர்! நீர் யார்? என்று கேட்டார் பரசுராமர்.

இவர்களை இப்படி இங்கு வைத்து விட்டு களைப்பாருங்கள்.

நான் விவரத்தை சொல்கிறேன் என்றார்.

ஊகும் இவர்களை நான் இங்கு வைக்க மாட்டேன் இதுவரை நான் இவர்களை எங்கும் வைக்க வில்லை.

சரி அப்படியானால் நீங்கள் சுமந்து கொண்டே இருங்கள். நான் கூறுவதை நன்றாக கேளுங்கள். நான் தத்தாத்ரேயர்,அத்ரிமகரிஷியின் தவத்தினால் உருவானவன் இந்த விந்திய மலையில் தவத்தை முடித்துக் கொண்டு இப்படியே இந்த நதி போகும் இடத்திற்கு போகப் போகிறேன். அதாவது நதி உற்பத்தியாகும் இடத்திற்க்கு அல்ல, நதி கலக்கும் இடத்திற்கு போக போகிறேன். எனது தவமும் முடிந்து விட்டது. அது சரி நீங்கள் இவ்விருவரையும் அழைத்துக் கொண்டு எங்கு செல்கிறீர்கள்.

என் தந்தை ஜமதாக்னி முனிவர், என் தாய் ரேணுகா தேவி . இவர்கள் அரச குலத்தானால் வஞ்சிக்க பட்டவர்கள். எனது தாயின் ஆத்ம குரலிருந்து இவர்களை இப்படி அழைத்து வரவேண்டுமென்று கூறியது. அதன்படி இவ்வளவு தூரம் இவர்களை எடுத்து வந்து விட்டேன். என்ன செய்ய வேண்டும் என்று ஒன்றும் புரியவில்லை.

தத்தாரேயர் தந்தையையும், தாயையும் ஒரு முறை பார்த்தார், சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து விட்டு, ஐயா பரசுராமரே! இவ்விரு வர்களும் யார் தெரியுமா? சாட்சாத் அந்த காயத்ரி அம்சம் ஐயா. ஞானபீடம் இங்கே இருப்பதால் இங்கே அழைத்து வர சொல்லி யிருக்கிறார்கள். கருணா தேவி,லோகமாதா, இருபத்து நான்கு ரிஷிகளால் உற்பத்தி ஆனவளே விச்வாமித்தரால் பூஜிக்க பட்டவளே எல்லோரிடத்திலும் தேஜோ ஒளியாய் நிற்பவளே, சூரிய ஒளியாக திகழ்பவளே, பஞ்சபூதங்களை ஐந்து முகங்களாக கொண்டவளே, ஞானியர்களின் ஞானத்தை தரும் ஞானம்பிகையே, காலத்தை சரியாக நிர்ணயிப்பவளே (குறிப்பு:- காலம் என்பது:- மழைக்காலம், கோடைக்காலம், என்று எல்லாம சொல்லுவோம் அல்லவா அப்படி

பூமியின்காலம் குறிப்பிடுகிறார்).

ஞானத்தை வாரி வழங்குபவளே, சித்தர்களின் சக்தியாக விளங்குபவளே, முதலில் உன்னை பூஜித்து விட்டு தான் பிறகு மற்றதெய்வங்களை பூஜிக்க வேண்டும் அம்மா. எவ்விதஜபம் செய்தாலும் ஒரே ஒரு முறை உன் ஜபத்தை முதலில் முடித்து விட்டு தான் மற்ற ஜபங்களை செய்ய வேண்டும் அம்மா. பஞ்சமுகியே பஞ்ச இந்திரியங்களை அடக்குபவர்க்கு காட்சி தருகிறாயே பெண்களிடத்தில் அக்னிரூபமாக வசிப்பவளே, தாயே பத்மாஸனத்தில் அமர்பவளே, சங்கம், சக்ரம், கதை, ஜபமாலை, அபயம்,கமண்டலம் உடையவளே ( குறிப்பு: இங்கே கதை என்றும் குறிப்பிடலாம் யோகதாண்டம் என்றும் குறிப்பிடலாம் ) தண்டத்தை உடையவளே, இச்சா, ஞான, க்ரியா சக்தியானவளே உனக்கேன் அம்மா இந்நிலை. போதும் நீ பிரத்யக்ஷமாகு என்று கூறி தத்தாரேயர் தன் கமண்டலத்திலிருந்து நீரை எடுத்து ஜபித்து இவ்விருவர் மீதும் தெளித்தார். இவ்விருவரும் ஒர் உடல் ஆயினர், பெரிய மின்னல் ஏற்பட்டது. ஆகாய மார்கத்தில் பெரிய நெருப்பு பிழம்பு தெரிந்தது. தேவி காயத்ரி அந்த நெருப்பு பிழம்பிலிருந்து தேஜோ ரூபியாக பஞ்சமுகங்களை கொண்டு காட்சி அளித்தாள்.

பரசுராமர் ஆச்சரியத்தில் பார்த்தார். இருவரும் காயத்ரி தேவியை வணங்கினர்.

உங்கள் இருவருக்கும் நலம் உண்டாகட்டும் பரசுராமா இங்கே ஞானபீடம் இருப்பதால் உன்னை இவ்வளவு தூரம் அழைத்து வந்தோம் நீ எங்களை சுமந்து வந்ததில் மிக்க மகிழ்ச்சி.

தாயே!, தயாபரி, சூரிய தேஜோரூபினி நான் என்ன பாக்கியம் செய்தேன். உன்னை இப்படி சுமந்து வந்ததிற்கு அதுமட்டும் அல்ல எங்களுக்கு தாயாகவும், தந்தையாகவும் இருந்தாயே உன் கருணை எல்லை அற்றதம்மா எல்லை அற்றது.

பரசுராமரே !நீ போட்ட சபதத்தின் படி அரசர்களை எல்லாம் வெட்டி குவித்துவிடு. பிறகு இதற்கு பரிகாரமாக இங்கு நீராடி மந்திர உபதேசத்தை என்னிடம் பெற்று நீ தக்ஷிணத்தில் தவம் புரிய செல்வாய். நீ வந்த வேலை இப்படியாக பூர்த்திஅடையும். மகனே தத்தாரேயா இக்கரை பூராகவும் நீ இருந்து கொண்டு ஞானமார்கத்தை பரப்ப வேண்டும். ஞானியர்களும் அதிகம் சஞ்சரிக்க வேண்டும். நாளை அது கலியுகத்திற்கு உதவும்.

தாயே, காயத்ரி தேவியே உன் விருப்பப்படியே செய்கிறேன் அம்மா என்று கூறினார் தத்தாரேயர்.

இவ்விடம் ஞானம் பெற எதுவாக இருக்கும் எனது பரிபூரண கடாக்ஷியும் இவ்விடத்தில் உள்ளது. இந்த சரித்திரத்தை கேட்பவருக்கு எனது பரிபூரண அனுக்கிரஹம் கிடைக்கிறது. இந்த சரித்திரம் பரம்பரை பரப்பரையாக குருவின் மூலம் இவ்விடத்தின் பிரசாரம் செய்ய படும் முக்கிய ஞானமார்க்க பாதையாகும், ஐயா இவ்விடம். இனி நீங்கள் உங்கள் பணிகளை தொடருங்கள் என்று கூறி காயத்திரி தேவியானவள் மறைந்தாள்.

இவ்விருவர்களும் தங்கள் பணிகளை நோக்கி பிரிந்தனர்.

நான் எதற்கு இந்த கதையை சொல்கிறேன் என்றால் பார்த்தீர்களா அந்த தெய்வாம்சம் பொருந்திய பரசுராமரையே இவ்வளவு தூரம் சுமக்கும் படி வைத்து விட்டாள் ஆனால் அவரும் பாரத்தை பொருட்படுத்தவில்லை மலைகளிலும், காடுகளிரும், முட்களிலும், கற்களிலும் சிரமபட்டு நடந்தார் வந்தார். தன் உடல் வருத்தியும் தான் பொருட்படுத்தாமல் வந்த நோக்கத்தை ஜயம் ஆக்க வேண்டுமென்று ஒரே முடிவில் வந்தார். கிடைத்தது அவருக்கு பலன். இது மட்டும் அல்ல காயத்ரி தேவியை தான் சுமந்து வந்ததால் சூரிய வம்சத்தில் ராமனாக பிறந்தார். புகழை அடைந்தார், பார்த்தீர்களா. இவ்விடத்தின் மகிமையை நாம் எதையும் பொருட் படுத்தாமல் வந்தால் நமக்கு எல்லா விதத்திலும்

இங்கே அனுக்கிரஹம் கிடைக்கும். அந்த மகா தேவதையை இங்கு நினைத்து தியானம் செய்தால் அவள் நமக்கு பிரத்யட்சமாவாள். அதை போன்று தத்தாரேயரும் ஞான மார்கத்தை மேலோங்க செய்து இந்த வித்திய மலையையும் இந்த நதியையும் சுற்றிக் கொண்டே வந்திருந்தார். பல ஞானிகள் அவரை கண்டு இருக்கிறார்கள். ஆனால் இந்த தத்தாத்ரேயர் மிகுந்த வித்தைகாரர். எந்த ரூபத்தில் எங்கு, எப்படி வருவார் என்றே நம்மால் நிரூபிக்க முடியாது. அவரை நினைத்தும் நாம் பிரார்தித்தால் அனைத்தும் நமக்கு நலமாகும். சரி நீங்கள் இன்று கொஞ்சம் ஒய்வு எடுத்து கொள்ளுங்கள் நானும் எனது ஜபங்களை எல்லாம் முடித்துக் கொண்டு நாளை உங்களை சந்திக்கிறேன் என்று எழுந்து கொண்டார் குருமகராஜ்.

கணவன் மனைவியும் அவர் கால்களில் விழுந்தனர். ஸ்வாமி! கருணா முர்த்தியே, எங்கள் குருவே எங்களை உங்கள் சீடனாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

கவலை வேண்டாம் நீங்கள் எங்களுடன் இங்கேயே தங்கி இருக்கலாம்.

தன்யனானோம், ஐயா தன்யமானோம் இருவரும் வணங்கினார்கள். அவரும் இவர்களை ஆசிர்வதித்து விட்டு தன் குகையை நோக்கி சென்றார்.

ஒரு பர்ணசாலை இருவருக்கும் கொடுக்கப்பட்டு இருந்தது. இருவரையும் அங்கே தங்க வைத்துவிட்டு வந்த சீடன் சென்றான்.

ஸ்வாமி! குருவை பார்த்தீர்களா எவ்வளவு தேஜசாக இருக்கிறார்!.

அது மட்டும் அல்ல ப்ரியே எவ்வளவு அடக்கத்துடனும் இருக்கிறார்.

ஸ்வாமி! நம்முடன் எத்தனை அன்பாக பேசினார். அத்தனை பெரிய மகான் என்னை பார்த்து அம்மா! உனக்கு கால் வலிக்கிறதா என்று கேட்டாரே ஒரு பிள்ளை எனக்கு இருந்தாலும் இப்படி கேட்டிருக்குமா என்பது சந்தேகம் தான் ஸ்வாமி.

ப்ரியே! நீ நல்ல அதிர்ஷ்டசாலி உன்னை பார்த்து குரு நாநர் கேட்டார் எனக்கும் அடிபட்டிருந்தால் என்னையும் கேட்டிருப்பார் அல்லவா.

என்ன ஸ்வாமி சிறு பிள்ளையை போல் பேசுகிறீர்கள்.

ப்ரியே! நம் குருநாரை பார்க்கும் போது எனக்கு ஏனோ குழந்தையை போல் தோன்றுகிறது. [நான் அவர் குழந்தை போல் தோன்றுகிறது] நான் சிறுவயது முதல் தாய் தந்தையை பார்த்ததில்லை எனக்கு பாசத்தை கொடுக்க யாரும் இல்லை. குருக்கள் ஒருவரே இருந்தார். அவரும் பயந்து, பயந்து தான் எனக்கு செய்தார். ஆனால் இங்கே வந்தவுடன் குருமகாராஜ் நம்மை அன்பாக பேசுவதை பார்த்து நான் அவர் மடியில் குழந்தையாக வாழலாமா என்ற எண்ணம் வந்துவிட்டது. ப்ரியே நான் என் தாயின் மடியில் படுத்ததில்லை எனக்கு அவர் மடியில் படுக்க வேண்டும் போல் ஆசை உள்ளது நம் பாப ஆத்மா அல்ல ப்ரியே! உண்மையில் நாம் புண்ணிய சாலிகள்தான்.

ஸ்வாமி! உங்களால்தான் எனக்கும் புண்ணியம் ஏற்பட்டது

அதற்க்குள் ஒரு சீடன் கனிகளை கொண்டுவந்து இவர்களிடம் கொடுத்தான். தாங்கள் இதை பசியாற வேண்டும் என்றான்.

ப்ரியே! பார்த்தாயா ஒரு தாயை போன்று நமக்கு பசியெடுக்கும் என்று தெரிந்து பழங்களை கொடுத்தனுப்பி இருக்கிறார் குரு குருமகராஜ். இவர்கருனை அபராம். ப்ரியே இவருடனே நாம் காலமுழுவதும் வாழ்ந்து விடலாம் என்று நான் என் மனதில் தீர்மானித்து விட்டேன்.

ஸ்வாமி! நீங்கள் எங்கு இருக்கிறீர்களோ அவ்விடமே நானும் இருப்பேன் என்னால் எவ்விதத்திலும் உங்களுக்கு பாதகம் ஏற்படாது இனி நீங்கள் என்னை பற்றிய கவலை வேண்டாம் நானும் உங்களை பற்றி கவலைப்பட போவதில்லை. நாம் இருவருமே நம் குருவிற்க்கு வாழ் நாள் முழுவதும் தொண்டு செய்வோம். நாம் நம் குருவை அன்றி வேறு எதை பற்றியும் பேசவோ, நினைக்கவோ கூடாது. நமக்கு இனி இந்த உலகபந்தங்கள் எதுவும் இருக்க கூடாது ஸ்வாமி. நாம் நம் பஞ்சேந்திரியங்களை அடக்கி குருவிற்கு சேவை புரிந்து முக்தியை கேட்கலாம் ஸ்வாமி. இத்தனை காலம் நாம் அறியமல் இருந்து விட்டோம் இனி கிடைத்த சந்தர்பத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் ஸ்வாமி.

ஆகட்டும் ப்ரியே நானும் இனி உன்னை ப்ரியே என்று கூப்பிடமட்டேன். ஒரு கணவனுக்கு உறுதுனையாக இருந்து நல்ல யோசனைகளை கொடுத்து அவனுடன் துணையாக இருப்பதால் தான் துணைவி என்று பெயர். அவன் செய்யும் நல்ல காரியங்களுக்கு என்றுமே ஒரு மனைவி இடையூராக இருக்கக்கூடாது. அது மகாபாபம், கணவன் நல் வழியில் சென்றால், அதனை ஊக்குவித்து அவனை மேலேற்ற வேண்டும் கணவன் உயர ,உயர மனைவிக்கு தான் பெருமை. அதனால் எனக்கு இப்பொழுது நல்ல அறிவை தந்த நீ என் தாயை போன்றவள். இன்று முதல் உன்னை நான் அம்மா என்றே கூப்பிடுவேன்.

ஸ்வாமி! என்று கண்ணீர் மல்க வணங்கினாள் உங்கள் கரம் பிடித்ததால் எல்லா பாக்கியமும் எனக்கு கிடைத்தன. தாங்கள் என்னை அம்மா என்று அழைத்தாலும், நான் உங்களை என் வழி காட்டியாகவே நினைக்கிறேன். நாம் இருவரும் இந்த நதியில் நீராடி சத்தியம் செய்து குருவிற்கு சேவை செய்வதே எங்களின் கடமை, அவர் சொல்லும் வாக்கை எங்கள் வாழ் நாள் முழுவதும் கடைபிடித்து ஞானமார்கத்தை மேற்கொள்வோம் என்று சத்தியம் செய்து விடலாம்.

சரியம்மா நாளை அப்படியே செய்து விட்டு நாம் புது வாழ்க்கை தொடருவோம் .

## அத்தியாயம்: 11

மறுநாள் இவர்கள் சொன்னது போல் நதியில் நீராடி விட்டு சத்தியம் செய்து கொண்டு குருவை வணங்க வந்தார்கள்.

என்ன நன்றாக ஓய்வெடுத்து கொண்டு விட்டீர்களா? என்று கேட்டார் குரு.

குருமகராஜ்! மனதில் சஞ்சலம் இல்லை இனி எதை பற்றியும் சிந்திக்க வாய்பில்லை. எங்களை பரிபூரணமாக உங்களுக்கு சமர்ப்பித்து விட்டோம். அதனால் எவ்வித கலக்கமும் இல்லை. நாங்கள் அப்படியே நிம்மதியாக உறங்கி விட்டோம்.

நல்லது சீடர்களே இவ்விடம் அப்படிபட்டது. அதுவும் நாம் குருவை தேர்தெடுத்து விட்டு அவரிடம் நம்மை ஒப்படைத்து விட்டால் பிறகு சஞ்சலமும், குழப்பங்ளும் இருப்பது சரியல்ல. அதனால் நீங்கள் பரிபூரணமாக சரண் அடைந்து நல்ல ஞானத்தை பெறுவீர்கள். இவர் கூறி கொண்டிருக்கையில் சீடர்களில் ஒருவர் பின் ஒருவராக எல்லோரும் அங்கே வந்து சேர்ந்தனர்.
என்ன குழந்தைகளே எல்லோரும் உங்கள் கடமைகளை முடித்து விட்டீர்களா?.

ஆமாம் மகராஜ் என்று ஒரே குரலில் சீடர்கள் அனைவரும் கூறினார்கள்.

சரி இன்றைய வகுப்பை தொடங்கலாம் என்று குரு அமர்தார். எல்லா சீடர்களும் வணங்கி அமர்ந்து கொண்டனர் .

சீடர்களே! இன்று உங்களுக்கு சந்யாசத்தை பற்றி கூறப் போகிறேன்.

சீடர்கள் எல்லோரும் மௌனமாக குரு சொல்வதை கவனிக்க தொடங்கினார்.

குறிப்பு: இத்தம்பதியர்களும் இதில் கலந்து விட்டனர் அதனால் நாம் சீடர்கள் என்று தான் இனி கூறுவோம்

சந்நியாசம் என்பது அவ்வளவு எளிதான கரியம் அல்ல. முதலில் நாம் சந்யாசம் எப்படி உருவானது என்பதை பார்ப்போம். ஒரு நாள் பிரம்ம லோகத்தில் நாரதர் சரஸ்வதியை சந்தித்தார். அம்மா சரஸ்வதி! ஞானம் என்றால் என்ன அதை எனக்கு சொல்லி தர வேண்டும்.

நாரதா! பஞ்சேந்திரியங்களை அடக்கி நம் இஷ்டதெய்வத்தை புருவங்கள் இரண்டிற்கும் மத்தியில் வைத்து தியானிக்க வேண்டும். அப்படி தியானிக்கும் பொழுது நம் குண்டலினி சக்தி மேல் எழும். அந்த குண்டலினி சக்தி சகஸ்ர ஆரத்தில் நிலை நிறுத்தப்படவேண்டும் பிறகு அதன் துணை கொண்டு நமது கண்களுக்கு ஞான கண் ஏற்படுகிறது. அந்த ஞான கண்ணின் படி நாம் இறைவனை பார்க்க முடியும். இறைவனை பார்பதற்காக தான் இந்த ஞானக்கண் கொடுக்கப்படுகிறது.

தாயே !வித்தையின் நாயகியே கொஞ்சம் தெளிவாக கூறேன். குண்டலினி சக்தி என்பது நம் உடலில் இருக்கும் அக்னியை ஓர் இடத்தில் நிலை நிறுத்த வேண்டும். உற்பத்தி ஸ்தலமான மூலாதாரத்தில் நிலை நிறுத்தப்பட வேண்டும். மூலாதார கமலங்கள் விரியும். இது 108 தளங்களை கொண்டது அப்படி விரியும் பொழுது இந்த அக்னியானது இடாபிங்களா என்ற இரு நாடியின் மூலம் மேல் நோக்கி செல்கிறது. அவை மேல் நோக்கி செல்லும் ஒவ்வொரு அசைவிலும் ஒவ்வொரு மாற்றங்கள் உடம்பிற்கு ஏபடுகின்றன. தியானத்தில் அமர்ந்தவன் முதலாவதாக பல வர்ணங்களை காண்கிறன. பிறகு ஏதே சூழல் சூழ்வது போல் காண்கிறான். ஆதன் பிறகு பல விதமான மலர்களை காண்கிறான். அதன் பிறகு

தனது இஷ்ட தெய்வத்தை காண்கிறான். இதை கண்டதும் அனைத்தும் சூன்யமாகி விடும். அவனால் ஒன்றுமே காண முடியாமல் போகும். பிறகு அவன் சூன்யத்தையே காண்பான். அதிலிருந்து பல வண்ண நக்ஷத்திரங்களை காண்கிறான். பிறகு கிரகங்களை காண்கிறான். தன் இஷ்ட தெய்வத்தின் ஒளி கிரணங்களை பிறகு காண்கிறான். இந்த ஒளி கிரணத்தின் மூலம் தனக்கும் இஷ்ட தெய்வத்திற்கும் தொடர்பை எற்படுத்திக் கொள்கிறான் பிறகு தன் ஆத்மாவை அந்த இஷ்ட தெய்வத்திடம் பிரியானிக்கச் செய்கிறான். இந்த இஷ்ட தெய்வத்தின் தொடர்பு அதிகரிக்க அதிகரிக்க இவனுக்கு தேஜஸும், சாந்தமும் ஏற்படுகிறது. இவன் அதை தொடர்ந்து கொண்டே தியானித்து வருவதால் பரவச நிலையை அடைகிறான்.

பரவசம் என்பது இறைவன் தன்னிடத்திலிருந்து இவனை ஆட்டி விக்கிறான். இவனது உடலும் அப்படி ஆடுகிறது. தான் என்பதே இல்லாமல் இறைவனுடன் இருக்கிறான். இப்படி பரவசநிலை ஏற்பட்ட பிறகு தன்னை முழுமையாக தெய்வத்திடம் ஒப்படைத்து விடுகிறான். இங்கே தன்னிலை அற்று சமாதி நிலையை எய்துகிறான். இப்படி சிறிது காலம் வாழ்ந்த பிறகு இந்த பஞ்ச பூதத்தால் ஆன தேகம் நமக்கு தேவை இல்லை. இவை பூமிக்கு சொந்தமானது. இவை நாம் விட்டு விட வேண்டுடியது தான் இறைவனை ஆன்மா உணர்ந்து விட்டது அதனால் ஆன்மா அந்த இறைவனை போய் அடைகிறது, ஆன்மாவும், இறைவனும் ஒன்றாக கலக்கின்றன இதை தான் முக்தி என்று கூறுவார்கள்.

தாயே !வீணா வாணி, வேணுகான ப்ரிய லோலினி, கதம்ப வனவாசினி நீ மொழிந்ததை கேட்டு நான் பெரும் பாக்கியம் அடைந்தேன் அம்மா.

நாரதா! உபதேசத்தை கேட்க நன்றாக தான் இருக்கும் அதை செயல் படுத்துவது கஷ்டமாகும்.

தாயே! இதை பார்த்தால் அப்படி ஒன்றும் கஷ்டமாக தெரிய

வில்லையே .

நன்றாக யோசித்து தான் சொல்கிறாயா.

ஆமாம் தாயே இவை கஷ்டமாக எனக்கு படவில்லை.

அப்படியா! நாரதா பார் உன்னை பூலோகத்தில் ஓர் இடத்திற்கு அழைத்து போகிறேன் வா என்று நாரதரை சரஸ்வதி அழைத்து வந்தாள். நாரதா இதோ தெரிகிறது பார் இந்த தடாகம் இதில் நீராடி விட்டு வா.

நாரதர் நீராட சென்றதும் சரஸ்வதி மறைந்தாள். நாரதர் தடாகத்தில் நன்றாக நீராடினார். முழுக்குகளையும் போட்டு எழுந்தார். தான் யார் என்பதையெல்லாம் இப்பொழுது மறந்துவிட்டார். மற்றொரு முழுக்கு போட்டு எழுந்த அவர் நல்ல அழகிய பெண் வடிவத்தை பெற்றார். அத்தாடகத்தின் அருகில் உள்ள வனத்திலேயே வாழ்ந்து கொண்டு வந்தார். ஓர் அரசன் வந்தான் பெண்ணே நீ யார்? நீ மிகவும் அழகாக இருக்கிறாய்!.

ஐயா! நான் யார் என்று எனக்கு தெரியவில்லை. நான் புத்தி தெரிந்த நாள் முதல் இந்த வனத்தில் வாழ்ந்து வருகிறேன்.

பெண்ணே! உன் பெற்றோர்களை பற்றி தெரியாதா?

எனக்கு யாரை பற்றியும் தெரியாது. தாங்கள் யார்?

நான் ஓர் அரசன் அம்மா உன்னை பார்த்தவுடன் என் மனம் பறி போயிற்று. அம்மா அழகிய பெண்ணே உன்னை பார்த்து கொண்டே இருக்க வேண்டும் போல் உள்ளது. என் மனதை கொள்ளை கொண்டாயே அற்புத சுந்தரியே1 இது வரையில் நான் இப்படி ஒரு அழகிய பெண்ணை கண்டதே இல்லை. உன் அழகில் நான் மயங்குகிறேன் என்னுடன் நீ வந்து விடு உனக்கு என்ன வேண்டுமோ எல்லாவற்றையும் செய்து தருகிறேன். அழகிய பெண்ணே என்னை ஏற்கொள்வாயாக,

இந்த அரசனுக்கு ஏற்ற அரசி நீ. என்னை மணந்து கொள்.

அரசே! நானும் உங்கள் அழகில் மயங்கினேன் . எனக்கு தாய், தந்தையரை பற்றி எல்லாம் தெரியாது பராவாயில்லையா என்னை ஏற்று கொள்வீரா?.

அழகிய பெண்ணே நீ கிடைத்தால் எனக்கு போதாதா?. உன் பெற்றோர்களை பற்றி கவலை நமக்கு எதற்கு?. நான் உன்னை நன்றாக வாழ வைப்பேன். இதோ இப்பொழுதே உன்னை காந்தர்வ விவாகம் செய்து கொள்கிறேன். இருவரும் காந்தர்வ விவாகம் செய்து கொண்டனர். இருவரும் அரச சபைக்கு வந்தனர். அரச சபையில் மீண்டும் முறையான குதுகலமான கொண்டாடத்துடன் திருமணம் நடந்தது.

அரசனும், அரசியும் நல்ல ஆட்சியை புரிந்து வந்தனர். இவர்களுக்கு குழந்தைகளும் பிறந்தன. பிறகு துயரங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டே இருந்தது. அரசன் மாண்டான். எதிரிகளின் பிடியில் நாடுகள் சிக்கின. எல்லோரும் ஒவ்வொரு திக்காக பிரிந்தனர். அரசி மட்டும் தப்பித்து அதே வனத்திற்கு வந்து விட்டாள். தினமும் அழது கொண்டே இருந்தாள். என் அரசன் போனான், ராஜ்யம் போயிற்று, பிள்ளைகள் எல்லாம் பல திக்காகின. ஐயோ நான் தனித்து இருக்கிறேனே என்று கதறி கதறி அழுது கொண்டே இருந்தாள். நடந்தவைகளை பற்றியே எண்ணி எண்ணி வருந்தினாள். இத்தனை நாட்கள் அந்த தடாகத்தில் குளிக்க வேண்டும் என்ற எண்ணமும் அவளுக்கு ஏற்படவில்ல. இப்பொழுது தடாகத்தில் குளிக்கலாம் என்று சென்றாள். நன்றாக முழுக்கு போட்டு தடாகத்திலிருந்து எழுந்து வந்தாள். என்ன ஆச்சரியம். நாரதராக திரும்பி வந்தார். சரஸ்வதியும் அங்கு நின்று கொண்டிருந்தாள்.

தாயே!, வித்யா ஸ்வரூபினி, ஜபதாரினி உன்பாத கமலங்களை வணங்குகிறேன் அம்மா என்று வணங்கினார். தாயே இது என்ன கணவா, நனவா, நான் ஒருபெண் ஆனது குழந்தைகளை பெற்றது பிறகு எல்லாம் பிரிந்தது , பிறகு

நான் அழுது கொண்டு இங்கே வந்தது என்னம்மா இதெல்லாம் விந்தை.

நாரதரே! பார்த்தீர்களா, நீங்கள் பெண்ணாக இருந்த சமயம் சந்யாசம் மேற்க்கொள்ள தோன்றிற்றா, அல்லது எல்லாம் கிடைத்ததும் தோன்றிற்றா அல்லது எல்லாம் பிரிந்த பிறகு தோன்றிற்றா.

தாயே! இல்லையே அதில் தோன்றவே இல்லையே.

இதை தான் மாயா சக்தி என்று சொல்கிறோம் நாரதரே மாயையில் நீ முழுகுகிறாய். முழுகியவன் மேலே மேலே ஆசைகளை வளர்த்து கொண்டே போகிறார் வளர்த்து கொண்டே போகிறவன் அனைத்தையும் இழக்க நேரிட்டால் துயரத்தில் அழுகிறான். தானே வேண்டுமென்று வாங்கிக் கொள்கிறான். வாங்கி கொண்டது களவு உற்றவுடன், களவு போனதை எண்ணி அழுகிறானே அன்றி தான் யார் என்பதை எண்ணி அவன் அழுவதில்லை. தானே வாங்கிக் கொண்டது தானே இது?. களவு போனதால் நமக்கு நிம்மதி தரவேண்டும் என்று அவன் எண்ணுவதில்லை. பார்த்தாயா! நாரதாரே? மாயையின் வலிமை அதிகம். அதை வெல்வது சுலபமல்ல மனதிடத்துடன், தெய்வத்தின் மேல் நம்பிக்கை, பற்று, பாசமும் வைத்து. அது தான் முக்கியமான ஆனந்தம் மற்றதெல்லாம் ஆனந்தமல்ல வெறும் மாயை என்று அவன் நினைக்க வேண்டும். எதிலும் பற்று இல்லாமல் இருக்க வேண்டும். நல்ல குருவை சந்தித்து தன் வாழ்க்கையின் பாதையை அமைத்து கொள்ள வேண்டும் பின் அதில் பிரயாணம் செய்ய வேண்டும். அப்படி இல்லாமல் இருப்பவன் மாயையில் சிக்கிக் கொண்டவன் ஆவான். மாயைலிலிருந்து மீண்டு வருவது தான் ஞானமார்கமாகும். இப்பொழுது சொல் நாரதரே ஞானம் அடைவது அவ்வளவு சுலபமா. நல்ல குருவும், பின் அவரது உபதேசங்களை பின் பற்றுபவன் நிச்சயம் மாயையிலிருந்து விடு படுவான்.

தாயே! வெண்ணிற ஆடை அனிந்தவளே வெண் தாமரையில் அமர்ந்தவளே, வெண்மை பூக்களில் மகிழ்பவளே, ஞானம்

தெளிவானது என்பதை உணர்ந்து கொண்டேன். இனி நான் பிரம்மச்சர்யத்தை கடை பிடித்து நான் ஞானி ஆவேமம்மா. அப்படியே ஆகட்டும் நாரதரே என்று கூறி சரஸ்வதி மறைந்தாள்.

நாரதரும் முறையே சரஸ்வதியை குருவாக்கிக் கொண்டு, இந்த நர்மதை நதிக் கரையில் தவம் புரிந்தார். தவத்தில் சித்தியும் பெற்றார். சித்தி பெற்றவர் சும்மா இருந்தாரா, இல்லைவே இல்லை, ஒவ்வொரு ஊராக சென்று மக்களையும், அரசர்களையும் பார்த்து மணந்து கொள்ளாதீர்கள் சந்யாசம் மேற்க் கொள்ளுங்கள். இது தான் உண்மை வாழ்க்கை. மீதம் எல்லாம் போலியானது என்று மக்களிடம் உபதேசித்து வந்தார். இவரது உபதேசம் வலிமையாயிற்று. சில நாட்களில் திருமண சடங்குகள் எல்லாம் நின்று விட்டன. யாருமே திருமணம் செய்து கொள்ளவில்லை. பிறப்புக்களும் நின்று விட்டன. உலகம் முழுவதும் ஞானிகளாகவே இருந்தனர். தேவாதி தேவர்கள், மும்மூர்த்திகள் சரஸ்வதியை சந்தித்தனர்.

தாயே! என்ன காரியம் செய்து விட்டீர்?. ஞான உபதேசத்தை நாரதருக்கு தந்து அருளினீர். தங்கள் மூலம் உபதேசம் பெற்றதால் இப்பொழுது அவருக்கு வலிமை அதிகமாயிற்று. நாரதர் உபதேசிப்பதால் இது இரட்டடிப்பு வலிமை ஆகிறது. தாயே! உங்கள் வாக்கின் மகிமையை கண்டோம். ஞான மார்கத்தை நன்கு புரிந்துள்ளோம். உலகில் பிறப்புக்கள் நின்று விட்டால் மீண்டும் அனைத்தும் ஜடமாகி விடுமே எந்த செயலும் செய்ய முடியாமல் நின்று விடுமே, இப்பொழுது தானே உலகம் தொடங்கிற்று. தொடங்கிய உலகம் இப்பொழுதே நின்று விடப் போகிறதம்மா. வேதவஹியே, வேதத்தில் உள்ளவை எல்லாம் நிரூபணம் ஆகாமல் போய்விடும் அம்மா. நீ ஏதாவது ஒரு வழி செய் என்று அனைவரும் வணங்கினர்.

சரஸ்வதியும் கவலைப்படாதீர்கள் இதோ இப்பொழுதே போகிறேன். தானும் ஒரு ரிஷியை போன்று பூலோகத்திற்கு வந்தாள். நாரதர் உபதேசத்திற்கு மாற்று உபதேசத்தை செய்து

வந்தாள். ஆனால் என்ன வேடிக்கை யாரும் மாற தயாராக இல்லை. சரஸ்வதி எவ்வளவு முயன்றும் இது நடக்கவில்லை.

முக்கிய குறிப்பு:- ஞானியார்களுக்கு வைராக்கியம் தேவை. வைராக்கியம் இல்லையேல் அவர்களால் எதுவும் கடைபிடிக்க முடியாது.

சரஸ்வதி பார்த்தாள். ஊம், ஊம், இனி இப்படி போனால் நடவாது காரியம், நாரதரை அழைத்தாள் நாரதா! என்ன செய்து கொண்டிருக்கிறாய் நீ?

.

தாயே வாக்வாசினி, வாக்குகளில் நின்று காப்பளே, எனது வாக்கில் நின்று நீ அனைவருக்கும் ஞானத்தை போதித்திருக்கிறாயே.

சரி போதும் நிருத்து. நாரதா! இனிமேல் நீ ஞானத்தை பிரசாரம் செய்யாதே.

ஆ! தாயே அது எப்படி?. அப்படி விட்டு விட முடியாது எல்லோரும் ஞானி ஆகட்டுமே.

வேண்டாம் நாரதா வேண்டாம் நிறுத்திக் கொள்.

பாவம் மக்கள் ஏன் குடும்ப சூழலில் சிக்கிக் கொள்ள வேண்டும். மாயையில் அவர்கள் ஏன் சிக்க வேண்டும் தாயே?.

நாரதா! கடைசி முறையாக சொல்கிறேன் கேள் உன் பிரசாரத்தை நிருத்திக் கொள். படைப்புக்கள் அனைத்தும் நிற்கின்றன.

பரவாயில்லை தாயே அனைவரும் ஞானிகளாகட்டும். உன்னை போற்றி புகழட்டும். நாம் ஞான உலகத்தை படைப்போம் என்று பிடிவாதமாக நாரதரும் கூறினார்.

ஏய்1 நாரதா போதும் உன் பிடிவாதம், சரி, நீ பிசாரம் செய் ஆனால் நூறில் ஒருவர் தான் ஞானமார்கத்தை மேற் கொண்டு நல்லவிதமாக செல்வர். இதுவும் காலம் போக, போக குறைந்து கொண்டே வரும் .

குறிப்பு நூறில் ஒன்று என்பது பிறகு ஆயிரத்தில் ஒன்று, லக்ஷத்தில் ஒன்றாக மாறுகிறது.

நாரதா போ உன்னால் முயன்ற ஞானிகளை உருவாக்கு என்று சரஸ்வதி சாபம் இட்டு சென்றாள்.

நாரதரும் நன்றாக புன்னகைத்தார். அப்பா வந்த வேலை முடிந்து விட்டது எங்கே ஞான மார்க்கத்தை தெரிந்து கொண்டு எல்லோரும் ஞானியாகி விடுவார்களோ என்று பயந்தேன் உபதேசத்தை கொடுத்தவர் தான் அதற்க்கு மாற்று உபதேசம் தர வேண்டும். அதனால் சரஸ்வதியின் வாயிலாகவே இப்போது இதையும் பெற்று விட்டேன். இனி நம்மை போன்று யாரும் இம்முயற்சியில் கையாள மாட்டார்கள். அப்படியே கையாண்டாலும் வெற்றிபெற மட்டார்கள். ஞானத்திற்கும் ஒரு எல்லை வைத்து விட்டோம் என்று புண்ணகைத்தவாரே நாரயனணா, நாரயணா என்று சென்றார்.
சீடர்களா! இவ்வாறு சரஸ்வதியின் சாபம் உலகிற்க்கு வந்தது அதனால் தான் சொல்கிறேன் சந்யாசம் ஆவது அவ்வளவு சுலபமல்ல அதனால் தான் மக்கள் சந்யாசிகளுக்கு மதிப்பு, மரியாதை தருகிறார்கள். தங்களால் முடியாததை ஒருவன் முயன்று ஜெயித்திருக்கிறார். அவர் பாதங்களை சரண் அடைந்தால் இந்த ஜன்மம் இல்லை. நாமும் எந்த ஜன்மத்திலாவது மாயையிலிருந்து விடுபட்டு விடலாம் என்று அவர் பாதங்களில் விழுந்து வணங்குகிறார்கள். நீங்கள் ஒரு கேள்வி கேட்கலாம். ரிஷிகள் பெண்களிடம் மயங்கி இருக்கிறார்கள் என்று. இதற்க்கும் காரணம் உன்டு ஒரு காரண காரியத்திற்காக அவர்கள் அப்படி நடத்து கொண்டார்கள். இருப்பினும் இந்த மார்கம் இரண்டாக பிரிகிறது ஒன்று பிரம்மசர்யம், சந்யாசம்,

மற்றொன்று கிரகசாஸ்திர சந்யாசம். அது இந்த யுகத்தில் ஒவ்வாதது. அதாவது கலியுகத்திலும் ஒவ்வாதது. அதை மேற் கொள்வதும் சிரமம் ஆகும். ஆதிகாலத்தில் ரிஷிகள் இதை மேற்கொண்டனர். அவர்கள் தபசிகலாகவும் இருந்தார்கள் அவர்களுக்கு மனைவி என்பது அவரது நித்ய அனுஷ்டானம், கைங்கர்யத்திற்கு வேண்டியவற்றை எடுத்து வைப்பதாகும். அவரது சிஷ்யர்களுக்கு உணவு அளிப்பதாகும். அவளும் ஞான மார்க்கத்தை கடை பிடிப்பவள் ஆவாள். இவர்கள் உடலால் உறவு கொள்ளாதவர்கள் ஆவார்கள். ஆனால் இன்றைய கால கட்டத்தில் பிரம்மச்சரியம் மேற்கொண்டு வரும் சந்யாசம் ஒன்று. திருமணம் செய்து கொண்டு பிறகு விட்டு வரும் சந்யாசம் ஒன்று

ஒரு முக்கிய குறிப்பு:- இவ்விரண்டும் நமது ஆஸ்ரமத்திற்கு ஏதுவானதாகும்

பிரம்மச்சாரிகளாய் வரும் சந்யாசம் மிக கடினமானது இருப்பினும் அதை மேற்க் கொண்டு மேலே வருபவர்கள் ஞானியாகிறார்கள். திருமணம் ஆனவர் ஞானியாக மாட்டார்கள் என்பதில்லை. இந்த சந்யாச வழிகள் உலகில் முக்கியமானது. ஒன்று அழைக்கப்படும் சந்யாசி, இரண்டாவது தானாகவே மேற்கொள்ளும் சந்யாசி. இதில் மிகவும் சிறப்பு மிக்கவர் அழைக்கபடும் சந்யாசி ஆவார். தெய்வத்தினாலோ அல்லது குருவினாலோ ஒருவரை பார்த்து நீ சந்யாசம் மேற்கொள்ள வேண்டும் என்று கூறினால் உடனே அக்ஷணமே அவர்கள் வாழ்வை துறந்து குருவோ அல்லது தெய்வத்தின் சரணத்திலோ வந்து விடவேண்டும் ஆன்மா இருக்கிறதே அது என்று அழைப்பு வரும் என்று ஏங்கிக் கொண்டே இருக்கும் .அதை உனர்ந்த குரு தக்க தருணத்தில் அதை அழைத்துக் கொள்கிறார். தெய்வத்தால் அழைக்கும் சந்யாசி தெய்வாம்சம் பொருந்தியவர். தெய்வ காரியத்திற்காக ( குறிப்பு ஒரு நல்ல பிரசாரத்திற்காக ) தெய்வ காரியத்திற்காக இவரை தெய்வமே தேர்ந்தெடுத்து அந்த தெய்வமே முன் நின்று சொல்லையும் தந்து,தாங்கள் என்ன பரப்ப வேண்டுமோ உலகில் அதை பரப்ப இவர்களை

பயன்படுத்தி கொள்கின்றன அத்தெய்வங்கள். அதனால் இவர்களுக்கு அதிகசக்தியும், அதிக பெருமையும் உள்ளன.

சிஷ்யர்களே! கேளுங்கள். ஒரு சாதாரண சந்யாசியை நாம் அவமதிப்பது பாவம் ஆகும். அவனை பற்றி குறை கூறுவது மிக கொடிய செயலாகும். ஒரு சந்யாசியை குறை கூற யாருக்கும் அருகதை இல்லை. இங்கே சந்யாசி என்று குறிப்பிடுவது நல்ல சந்யாசிகளாகும், போலியான வர்கள் அல்ல, அவர்கள் நல்லவர்களாக இருந்தால் என்ன போலியாக இருந்தால் என்ன நாம் அவர்களைபற்றி பேசுவது சரி அல்ல. சித்துகள் செய்பவன் அவன் சந்யாச தர்மத்தில் வரமாட்டான் சித்துகளை செய்து தன்னை உயர்ந்தவன் என்று மக்களுக்கு காண்பித்து மக்களை தன் வயம் ஈர்க்கிறான் . இது உண்மையான மார்க்கம் அல்ல. சந்யாசியை பார்த்து தெய்வத்தன்மைஹ இருப்பதை உனர்ந்து ஆன்மாக்கள் தானாகவே அவர் காலில் விழுந்துவிடும் இதுதான் உண்மையான ஈர்ப்பு சக்தியுள்ள சந்யாசம் என்பதாகும். அதனால் நாம் சாதாரண சந்யாசிகளையே அவமதிப்பது குற்றம் என்று கூறினேன். அதிலும் ஒரு குருவாக திகழ்பவரை அவமதிப்பதோ அவர் சொல்மீறி நடப்பதோ, அவரை வேதனை அடைய செய்வதோ, அவரை பற்றிகுறை கூறுவதோ அவரை பற்றி நன்கு புரியாமல் இருப்பதோ, அவர் புகழை கூறாமல் இருப்பதோ, இவை அனைத்தும் பெரும் பாவம் ஆகும். ஒருவன் இதை செய்தால் பல ஜென்மங்களுக்கு இந்த குரு தோஷம் ஏற்படுகிறது. அவன் செயல்கள் அனைத்தும் சீர்குலையும். அதனால் சொல்கிறேன் கேளுங்கள்.

சந்யாசி ஆவதே கடினம் அதிலும் ஒரு குருஸ்தானத்தை அடைவது மிக்க கடினம். இது எல்லா சந்யாசிகளுக்கும் கிட்டி விடாது. யாருக்கு குரு பதவியை குடுக்க வேண்டும் என்று தெய்வமோ அல்லது அப்பீடத்தின் குருவோ நிர்ணயிக்கிறாரோ அவருக்குத்தான் கிட்டும். இதை பற்றி அலசி ஆராய எந்த சீடர்களுகளுக்கும் அருகதை இல்லை. ஏன் எந்த சந்நியாசிகளுக்கும் கூட அருகதை இல்லை. இதிலும் ஆதி குருவாக வருகிறார்களே இறைவனை குருவாக

ஞானபீடத்தை ஏற்று  அதாவது இங்கே ஞானபீடம் எனபது ஒவ்வொரு பீடத்தையும் குறிப்பிடுகிறது. குரு இருப்பது எப்பீடமாக இருந்தாலும் அது ஞானபீடம் என்று குறிப்பிடுவார்கள். பிறகு அப்பீடத்தின் உபாசனை தெய்வங்களை மேற் கொண்டு பீடத்திற்கு பெயரை இடுவார்கள். இந்த ஞான பிடத்தை மேற்கொள்கிறார்கள். இவர்கள் தெய்வாம்சம் பொருந்தி யவர்கள் ஆதி குருவானவர் தெய்வாம்சம் பொருந்தியவர்கள். இவர்களுக்கு எதையும் சொல்லி தர வேண்டிய அவசியமில்லை. இது தானாகவே அவர்களிடத்தில் இருந்து சுரக்கும். ஞானத்தை எடுக்க எடுக்க அது சுரந்து கொண்டேவரும். வற்றா ஜீவ நதியை போன்றது .

இந்த ஆதி குருவே நமக்கு குருவாக கிடைக்க நாம் பெற்ற பாக்கியங்கள் தான் எத்தனை, எத்தனையோ !எங்கோ ஒரு ஜன்மத்தில் நாம் செய்த புண்ணியத்தின் பலன் நமக்கு இப்படி ஒரு சந்தர்பத்தை அந்த தெய்வம் அளித்திருக்கிறார். இதைநாம் கைவிடாமல் பார்த்து கொள்வது நமது கடமையாகும். சீடர்களே! ஒரு விந்தையை பாருங்கள். பிள்ளைகள் நன்றாக முன்னேறி  நல்லவர்கள் என்ற பெயரை பெற்றால் தாய், தந்தையர் பெயர் சொல்லி இவர்கள் பிள்ளை இவன், இந்த குலத்தில் பிறந்தவன்  அதனால் தான் இவன் இவ்வளவு நல்லவனாக திகழ்கிறான், நன்னெறிகளை கடைபிடிக்கிறான் என்று உலகம் கூறும். ஆனால் ஒரு சந்யாசியை பார்த்த மக்கள் இவரை பெற்றவர் யார்! நல்ல புண்ணியசாலிகள், அவர்கள் குலம் வாழட்டும் என்று மக்கள் போற்றுவார். சந்யாசி ஒருவனை வைத்து அவன் பெற்றவர்களுக்கும், குலத்திற்கும் மரியாதை. அதையே நல்லொழுக்கனாக இருப்பவனை பார்த்தால் குலத்தையும், பெற்றோர்களையும் கூறி  இதனால் இவன் உயர்ந்தான் என்று இவனை கடைசியாக கூறுவர் இது தான் சீடர்களே சந்யாசத்தின் சிறப்பு.

குலம் சரியாக இல்லாமலும் இருக்கலாம், பெற்றவர்கள் அறியாமலும் இருக்கலாம் ஆனால் ஒரு சந்யாசம் மேற்

கொண்டால் எல்லோருக்கும் நல்ல பெயர் கிடைக்கிறது பார்த்தீர்களா. சந்யாச தர்மத்தை நாம் எடுத்து கொண்டபின் அதன்படி நாம் செயல்பட வேண்டும். ஒவ்வொரு சந்யாசியும் சாதனை புரிய வேண்டும். சாதனை புரியாமல் இருக்கும் சந்யாசி வீணாகிறான். ஏதாவது ஒரு சாதனையை அவன் புரியத்தான் வேண்டும். அப்படி எதுவும் முடியாவிட்டாலும் தன் குருவின் புகழையும்,பெருமையுமாவது அவன் கூறவேண்டும் இது தான் அவன எடுத்த மார்கத்திற்க்கு நல்ல வழியாகும் அதுவும் மக்களிடையே இருந்து, அவர்களுக்கு சேவை செய்து பின் சாதனை படைக்கிறான் என்றால் இவன் நிச்சயம தர்மத்தில் முன்னேறுகிறான். இவனுக்கு மீண்டும் பிறப்பு இல்லை. மற்றவர்கள் பிறப்பை எடுக்கின்றனர். பொருளுக்காகவும், புகழுக்காகவும் சந்யாசம் மேற்க்கொள்வது சரியானதல்ல அது முறையும் அல்ல.

சீடர்களே! இன்றைய வகுப்பில் சந்யாச தர்மத்தை பற்றி எல்லாம் நீங்கள் நன்றாக தெரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். நீங்கள் சிலகாலமாக என்னை கேட்டு வந்த கேள்விக்கு நான் பதில் அளிக்காமல் இருந்தேன் ஏனெனில் அதற்கு அப்பொழுது சொல்ல வேண்டிய அவசியம் வரவில்லை. இனி அதை இப்பொழுது சொல்ல தான் வேண்டும். நேரம் வந்து விட்டது.

சீடர்கள்! எல்லோரும் ஒருவரை ஒருவர் ஆச்சரியத்துல் பார்த்து கொண்டிருந்தனர் சிலர் முனுமுனுத்துக் கொண்டனர், என்ன கேள்வி? என்ன அது? நாம் மறந்து விட்டோமே என்று .

இந்த நர்மதை என்ற பெயர் எப்படி வந்தது? இதை பற்றிய முக்கியமான ஒரு புராணத்தை உங்களிடம் கூறப்போகிறேன். வந்திருந்த தம்பதிகளை பார்த்து நீங்களும் முக்கியமாக இதை கேட்க வேண்டும். உங்களுக்காக தான் இவ்வளவு காலமும் நான் கூறாமல் இருந்தேன். இன்று நடத்திய பாடத்தை நீங்கள் எல்லோரும் ஒரு முறை நன்றாக அலசி உங்கள் மனதில் தெளிவு படுத்தி கொள்ளுங்கள் இதில் ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் மாலை என்னை கேளுங்கள். நாளை

முதல் நான் முக்கிய கதையை ஆரம்பிக்க போகிறேன் அதை நீங்கள் நன்றாக கேட்டு வரவேண்டும் எல்லோருமே சென்று உணவருந்தி உங்கள் பணிகளை கவனிக்கவும் குருமகராஜீக்கி ஜே குருமகாராஜீக்கி ஜே நர்மதா தேவிக்கு ஜே என்று கூறி விட்டு எழுந்தார்.

## அத்தியாயம்: 12

மறு நாள் சீடர்கள் எல்லோரும் இந்த தம்பதியர்கள் உட்பட வந்து சேர்ந்தனர் குருவும், வந்து உட்கார்ந்தார் அவரை எல்லோரும் வணங்கி உட்கார்ந்தனர்

சிஷ்யர்களே! கேளுங்கள் ஒரு மகத்தான புராணத்தை கூறப்போகிறேன் இன்று முக்கிய திதி ஏகாதசி ஆகும் ( குறிப்பு நமக்கும் இன்று ஏகாதசியாகும் ) இந்த தினத்தகிறு இந்த புராணத்தை நாம் தொடங்க வேண்டும். இந்த மகத்தான புராணத்தை நாம் இன்று தொடங்கினால் நல்ல ஞானமும், நல்ல பண்பாடும் தெய்வத்தின் கடாக்ஷமும் நமக்கு இருக்கும். சீடர்களே இதை பாராயணம் செய்தால் நல்ல பலன் உண்டாகும். இந்த மகத்தான புராணத்தை உங்களுக்கு நான் சொல்கின்ற வாய்ப்பினை தந்த நமது குரு சந்திர மகராஜிக்கும் நர்மதா தேவிக்கும் எல்லாவற்றிற்கும் மூலபொருளான லோக ஜனனி, ஜகத்தை காக்கும், ஜகத்ரக்ஷகியான அந்த ஜகதாம்பிகையின் அருளால் இன்று நான் தொடங்குகிறேன்.

ஆதியில் சப்தரிஷிகளில் ஒருவரான நமது ப்ருகு மகரிஷி இத்தீர்த்தத்தை உண்டாக்கினார். இது எல்லோருக்கும் தெரிந்தவை. சிவனை இங்கே பூஜித்து வந்திருந்தார். அவரது காரியம் முடிந்து சென்ற பின் ( மீண்டும் நான் கதையை இங்கே உங்களுக்கு கூறவில்லை ஏனெனில் நாம் முன்பே ஆரம்பத்தில் கூறி இருப்பதால் அந்த ஆரம்பத்தில் வருவதை இங்கே நாம் குரு சொன்னதாக போட்டுக்கொள்ளலாம் ஏன் என்றால். சரியான ஏகாதசி அன்று புராணத்தை ஆரம்பிக்க நமக்கு சரியாக இருக்கும்) அவருக்கு பிறகு சந்திரமகராஜ்

இருந்தார்.அதுவும் உங்களுக்கு தெரிந்தவை தான். அதற்கு பிறகு  இந்த ஞானபீடத்தை ஏற்று பரிபாலித்தும் வந்தனர்.

ஆதியில் ப்ருகு முனிவர் இந்த தீர்த்தத்திற்கு நர்மதா என்று பெயர் வைத்தார். எதற்காக,ஏன் என்று தெரியாது. அவர் சென்றபிறகு அவர் பெயரில் தான் இத்தீர்த்தம் அழைக்கப்பட்டது. அதாவது புண்ணிய நதிகளை தீர்த்தம் என்று சொல்வார்கள். நர்மதா என்ற பெயர் இருப்பினும் யாரும் குறிப்பிட்டதில்லை. அதனால் முனிவரின் பெயரிலேயே வழங்கி வந்தது. சந்திரமகராஜியும் நர்மதா என்று இத்தீர்த்தத்தை .குறிப்பிட்டு இருக்கிறார். அதன் பெயரின் பொருளும் விளக்கமும் பிற்பாடு உங்களுக்கு தெரிய வரும் என்று கூறியிருக்கிறார். மகான்கள் செய்யும் செயல்களுக்கு  அப்பொழுதே நாம் எதற்கு ஏன் என்று கேட்க்க கூடாது. அது மகாபாபமாகும். அந்த செயலின் காரியம் பிற்பாடு புரியும் என்பது தான் இங்கே முக்கிய கருத்து. அவர்கள் செய்யும் செயலை பார்த்தால்  நமக்கு அந்நேரத்தில் அது சரியாக தோன்றாது .ஆனால் நாம் பொறுமையாக இருந்து நோக்கினால்  அதன் விளக்கங்கள் பிறகு புரியும்‘ அதனால்தான் நேற்றே சொன்னேன். மகான்களின் செயல்களை எல்லாம் ஒரு சாதரண மனிதனால் நிர்ணயிக்க முடியாது. அவரது செயலும், மகிமையும் அபாரம். பொறுத்திருந்தால் தான் நாம் விடை காணமுடியும். சந்திரமகராஜ் பிறகு அடுத்த அடுத்து ஞானபீடாதிபதிகள் வந்து கொண்டிருந்தார்கள்.

இங்கே எல்லாம் வேடுவர் குலம் அதிகம் என்று கூறியிருக்கிறேன் அல்லவா. அதே போல்...

முதல் நர்மதா சரித்திரம் ஆரம்பம்:

முன்பு ஒரு சமயம் வேடுவர் குலம் நன்றாக செழித்து ஓங்கி இருந்தது. ஒவ்வொரு காடுகளையும் ஒவ்வொரு பிரிவாக வேடுவர்கள் தங்களுக்கு சொந்தம் ஆக்கிக்கொண்டு. அவரவர்கள் ஒவ்வொரு பிரிவாக எடுத்துக் கொண்டார்கள்.

பிறகு அவர்களுக்குள் ஒருவரைத் தேர்ந்தேடுத்து, வீரதீரபராக்கிரமசாலியை தேர்ந்தேடுத்து அவனை குலத்தின் தலைவராக வைத்தனர். எல்லோரும் நண்பர்களாக தான் பழகினார்கள். இப்படி இவர்கள் நல்லவிதமாகவும், நெறி தவறாமலும் வாழ்ந்து வந்தனர். இதில் முக்கியமாக ஆதிவேடுவர் குலம் (அதாவது நம் சந்திரமகராஜ் குலமே பெரிய குலமாக திகழ்கிறது.) எல்லா நியாய, நியம தர்மங்களும் இங்கே வகுத்து வந்தனர். இந்தவேடுவர் குலத்தில் ஒரு நல்ல கணவனும், மனைவியும் வாழ்ந்து வந்தனர். தங்களுக்கு என்று வாழாமல் தங்களுக்கு கிடைத்ததை எல்லாம் எல்லோருக்கும் கொடுத்து வந்தனர். நல்ல புண்ணியசாலிகளாக இருந்தார்கள். இவர்களை பாராட்டாத மக்களே இல்லை. இவர்கள் குலத்தவருக்கு ஒரு தீங்கும் செய்தவரில்லை. அதே போன்று அக்கம் பக்கத்திலிருந்து வருபவர்களுக்கும் எவ்வித குறையுமின்றி உபசரித்து வந்தார்கள். இவர்கள் நல்ல செயல்களை எல்லாம் வேடுவத்தலைவன் பாராட்டி வந்தான். இப்படி நல்ல விதமாக இவர்கள் வாழ்க்கை சென்று கொண்டு இருந்தது இவர்களுக்கு குழந்தை இல்லை. குழந்தை பற்றியும் இல்லை என்பது பற்றியும் இவர்கள் கவலைப்படவில்லை .

ஒரு நாள் வேடுவரும் அவரது துனைவியாரும் வேட்டையாடச் சென்றனர். அக்காலத்தில் இருவரும் செல்வது முறையாக இருந்தது. இவர்கள் வேட்டையாடிக் கொண்டிருந்தார்கள். காற்று பலமாக வீசிற்று.

வேடுவத்தி கணவனைப் பார்த்துக் கூறுகிறாள். என்ன போய் விடலாமா.

அதோ அங்கே தொலை தூரத்தில் ஒரு மான் சென்று கொண்டிருக்கிறது.அதை அடித்து விட்டு வந்துவிடுகிறேன்.

வேண்டாம் போய்விடலாம் வாருங்கள். வானம் இருட்டிக் கொண்டே வருகிறது. நாம் சென்றுவிடலாம்.

ஏன் நீ பயப்படுகிறாய் நான் இருக்கிறேன் அல்லவா.

இல்லை எனக்கு என்னவோ பயமாக தோன்றுகிறது வாருங்கள் நாம் போய் விடலாம்.

இதோ பார் நான் குறிவைத்ததை என்றும் விட்டு விட்டு வந்தில்லை அல்லவா? அது நம் குலத்திற்கும் நல்லதல்ல. நாம் போகக் கூடாது. அதை அடித்து எடுத்து செல்ல வேண்டும் என்று பிடி வாதமாக கூறினான்.

அதை பற்றி எல்லாம் யோசிக்காதீர்கள் மேகம் கருத்துக் கோண்டே வருகிறது. பலத்த மழை பெய்ய தொடங்கினால் நம்மால் நம் இருப்பிடத்திற்கு போக முடியாது. தயவு செய்து வாருங்கள் போய் விடலாம்.

நீ வேண்டுமானால் போய்க் கொண்டே இரு. நான் அதை அடித்து விட்டு வருகிறேன் .
தனியாகவா, இருட்டிலா?.

நமக்கு இருட்டேது, வெளிச்சம் ஏது எல்லாம் நாம் பார்த்து கொள்ள வேண்டியது தானே நீ போய் கொண்டே இரு.

இல்லை நான் தனியாக போக மாட்டேன். நீகளும் வாருங்கள் இருவரும் போய் விடலாம்.

நீ அடம் பிடிக்காதே இங்கு இருந்தால் இரு போனால் போ நான் இனி அந்த மானை தொடர்ந்து செல்லப் போகிறேன்

அவள் தனியாக நின்றாள். என்ன செய்வது என்று புரியவில்லை. சரி நாம் நம் இடத்தை விட்டு வந்ததே தப்பு. இந்த காட்டில் நாம் வந்திருக்கக் கூடாது. சரி வந்து விட்டோம். இனி இவரை நம்பி பிரயோசனம் இல்லை. நாம் வந்த வழியாகவே பின் தொடர்ந்து செல்லலாம். எப்பொழுதும் வேடுவர்கள் கூட்டமாக தான் செல்வார்கள். இவருக்கு என்னவோ தனியாக சென்று அடிக்க வேண்டும்

என்று ஒரு ஆர்வம் இப்படி சில நாட்கள் தனியாகவும் வருவார். தனியாக போகிராரே என்று இவருடன் நாமும் வந்தோம். கடைசியில் இவர் நம்மை விட்டு விட்டு போய் விட்டாரே. சரி நாம் வந்த வழியை பார்த்துக்கொண்டு எப்படியாவது திரும்பி விட வேண்டும் என்று தன் மனதிற்குள் பேசி கொண்டே நடந்து வந்தாள்.

காற்று மிகவும் பலமாக வீசிற்று. கூச்சலிட்டது. அதாவது காற்றின் சப்தம் கணீரென்று மிகுந்த ஒலியை உண்டாக்கியது. இவள் வாழ் நாளிலேயே இப்படிபட்ட காற்றை கண்டதில்லை. முதன் முறையாக கண்டதும் பயம் ஏற்பட்டது. அவள் வாழ்வில் முதன் முறையாக பயம் ஏற்ப்பட்டது பயத்தில் தான் எவ்வழி செல்கிறோம் என்று தெரியாமல் வழி தப்பி சென்றாம்.

வேடன் மானை அடித்தான். பரவாயில்லை இன்று நல்ல விருந்து தான்.நம் தலைவருக்கும் இன்று நல்ல விருந்து தான் நம் செய்ததை அவரும் சந்தோஷப்படுவார் . எங்கே இவளை காணோம் சரி அவள் போய் இருப்பாள். நாம் அவளை பற்றி இனி யோசிக்க வேண்டாம். அவள் நமக்காக காத்து கொண்டிருப்பாள். நாம் இன்று தனியாக வந்து மானை அடித்த பராக்கிரமத்தை எல்லோருக்கும் சொல்ல வேண்டும். குதூகலத்துடனும், சந்தோஷத்துடனும் இவன் சிரித்து ஆடிக் கொன்டே வந்தான். காற்றையும், மழையையும் பொருட்படுத்த வில்லை தன் இருப்பிடத்திர்க்கு வந்தான்

எல்லோரும் அவரவர் அடித்து வந்ததை தலைவர் முன் வைத்தனர். தலைவரும் தலைவியும் அவரவர்களுக்கு இது, இது என்று பிரித்து பங்குகளை கொடுத்து கொண்டு இருந்தனர் . அவரவர் பங்கை எடுத்து கொண்டனர். ஆனால் ஒரு பங்கு அப்படியே நின்றது. ஒய் எங்கே உன் துனைவி என்று வேடுவதலைவி கேட்டாள்.

ஏதோ அவள் அப்பவே வந்து விட்டாள்.

வந்துவிட்டாளா? சரிபோய் தேடு, எங்காவது இருப்பாள்.

எல்லா இடங்களிலும் தேடினான் அவள் வளமையாக போகும் எல்லா இடங்களில் தேடினான். அவளை கானவில்லை. வேடுவதலைவனிடம் பதற்றத்துடன் ஒடி வந்தான். தலைகுனிந்து கொண்டு அவள் காணமுங்க.

அரசி அதாவது வேடுவ தலைவி கேட்கிறாள் நீ தானே அழைத்து போனாய்.

ஆமாமுங்க.

பின எங்க விட்டாய்?.

நான் விடலீங்க அவளே இங்கு வந்துடறேனு சொன்னாலுங்க பதற்றத்தில் உளருகிறான்.

சரி உளறாதே .

ஆம் எல்லா ஆட்களும் இங்கே வாருங்கள். இவனது மனைவியை காணோம் எல்லோரும் தேடி வாருங்கள் என்று தலைவி கட்டளை இட்டாள். எல்லோரும் எல்லா இடங்களிலும் தேடினார்கள். அவள் கிடைக்கவில்லை.

கிடைக்கலீங்க என்று எல்லோரும் ஒரே குரலில் கூறினர்.

கிடைக்கலையா!.

இல்லைங்க.

சரிடா நாம் விடிந்ததும் பார்க்கலாம். இல்லையேல் ஏதாவது மிருகம் அடித்து விட்டதா என்பதை பார்த்து தெரிந்து கொள்ளலாம், என்று அன்றேக்குரிய தானத்தை முடித்துக் கொண்டனர் எல்லோரும் சோகமாக இருந்தனர்.

வேடுவத்தி நிலைதடுமாறி இடம் மாறி சென்றாள். ஒருகுகை இருந்தது. நல்ல மழை வேறு சரி இன்று இங்கு தங்க வேண்டியது தான் வேறு வழியில்லையே என்று உள்ளே சென்றாள். குகையின் உள் மிகவும் இருட்டாக இருந்தது. அவளுக்கு பயமாகவும் இருந்தது. என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை அங்கேயே பயந்து கொண்டே உட்கார்ந்தாள். தன்னையறியாமல் உறங்கியும்விட்டாள்.

## அத்தியாயம்: 13

பொழுது விடிந்தது இவள் மேல் வேறு யாரே தண்ணீர் தெளித்தனர். சட்டென்று விழித்து பார்த்தாள். ஒரு முனிவர் அங்கே நின்று கொண்டிருந்தார்.

என்னம்மா! நீ எப்படி இங்கு வந்தாய்? , நீ எங்கு செல்ல வேண்டும்?.

இவள் நடந்தவைகளை அனைத்தும் சொன்னாள்.

அம்மா1 நீ ரொம்ப தூரம் வந்து விட்டாயம்மா. நீ சொல்வதை பார்த்தால் உன் குலத்தவர் இருக்கும் திசையே வேறு அம்மா. இது வேறு குலத்தவர் வாழும் திசை அம்மா.

ஐயா! இதில் எங்களுக்கு தெரிந்தவர் யாராவது இருக்கிறார்களா என்று பார்க்கலாமே.

இது வேறு திசை அம்மா. நீ இப்பொழுது மலையின் வேறு புறத்தில் இருக்கிறாய். இவர்கள் முறைகள் எல்லாம் வேறு. உங்கள் முறையை போல் அல்ல அவர்கள் பேசும் பாஷையும் வேறு. அதனால் நீ இப்படியே செல்.

ஐயா ! எனக்கு வழி தெரியாது.

சரி அம்மா நீ என்னுடன் இங்கு இரு. எனது நித்ய அனுஷ்டானங்கலை முடித்துக் கொண்டு உன்னை அழைத்து

போய் அங்கேவிடுகிறேன்.

அங்கே...

வேடுவனின் தலைவனும், தலைவியும் குழப்பத்தில் இருந்தனர். என்ன செய்வது இந்த பெண்ணை காணோமே! அவள் எங்கு சென்றாள் என்று தெரியவில்லை. அவளை மிருகம் அடித்திருக்குமோ இறைவா! அப்படியெல்லாம் ஆகக்கூடாது. அவள் நல்ல விதமாக எங்களிடம் வந்து விடவேண்டும். அவள் எங்கு இருக்கிறாள் என்று நமது ஆட்களை விட்டு தேட சொல்வோம்.

ஆட்களுக்கு கட்டளை இட்டனர். எங்கிருக்கிறாள் என்று தேடி வாருங்கள், இன்று மாலைக்குள் தகவல் எடுத்து வரவேண்டும் இல்லையேல் உங்களை தண்டிப்போம் என்று கடுமையான குரலில் வேடுவர் கூறினார்

தண்டிப்போம் என்றதும் வேடுவர்களுக்கு பயம் வந்தது. ஐயோ நம் அரசர் கோபிக்கிறார் நாம் எப்படியாவது தேடிவந்து விட வேண்டும், இல்லையேல் நமக்கு ஆபத்தாகும் என்று எல்லோரும் தேட புறப்பட்டனர்.

நித்யகர்மாக்களை முடித்து கொண்டு வருவார் என்று காத்து கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

ரிஷி ஆழ் நிலை தியானத்தில் அமர்ந்து இருந்தார்.

இவள் பார்த்தால் ஐயோ நேரமாகியதே இவர் இன்னும் எழுந்திருக்கவில்லையே சரி இவர் எழிந்திரிக்கட்டும் நாம் எப்படியாவது சென்று அதோ தெரியும் நதியில் நீராடி விட்டு வரலாம் . இது தான் இவள் செய்த பெரிய குற்றம். அருவியை நோக்கி குளிக்கச் சென்றாள். குளித்து முடித்து விட்டு திரும்பி பார்த்தாள் அங்கே ஒரு புலி இவளை குறிவைத்து கொண்டிருந்தது. இவள் வந்த திசையில் அந்த புலி நின்று கொண்டு இருந்தது. ஆ! ஆ வந்த திசையில்

போக முடியாதே. அருவியின் மறுபக்கம் வந்தாள். புலி போகிறதா என்று பார்த்துக் கொண்டு இருந்தாள் ஆனால் புலி இவள் வருகைக்காக காத்து கொண்டிருந்தது. பயந்தாள். என்ன செய்யலாம்! என்று யோசித்தவள் சற்று பின் நோக்கி நடந்தாள். வேறு திசையை நோக்கி இவள் நடக்க தொடங்கினாள். அப்படியே போனவள், இருட்டியும் விட்டது என்ன செய்வது என்று ஒன்று புரியாமல் அந்த காட்டிலேயே இருந்தாள்.

இங்கு வேடுவரின் தலைவன் கேட்கிறான். எங்கே அவள்?.

எல்லோரும் தலைகுனிந்து மௌனமாக இருக்கிறார்கள் .கிடைக்கவில்லை என்று ஒருவர் மெதுவாக கூறினார். மிருகங்கள் தின்ற அடையாளமோ, அறிகுறியோ எதுவுமில்லை .

சரி எங்கு சென்று இருப்பாள் என்னவாயிற்று அவளுக்கு? எல்லோருமே அன்று வருத்ததில் ஒன்றுமே உன்னாமல் அழுதுகொண்டு இருந்தார்கள்.

மறுநாள் விடிந்தது இவள் கண் திறந்து பார்த்தாள்.

இரு வேடுவர்கள் நின்று இருந்தனர். பார்த்தால் புதிய முகம் போல் தெரிகிறது. இவள் பயத்துடன் கையை உயர்த்தித் கும்பிடுகிறாள்.

அவர்கள் யார் நீ? என்று ஒரு பாஷையில் இவளை கேட்டார்கள். இவளுக்கு அது புரியவில்லை.

அவர்கள் எங்கிருந்து வந்திருக்கிறாய் என்று அவர்கள் பாஷையில் கேட்டார்கள்.

இவளும் ஜாடைமாடைகள் ஏதோ செய்தாள். அவர்கள் சொல்வது இவளுக்கு விளங்கவில்லை. இவள் சொல்வது

அவர்களுக்கு விளங்கவில்லை. இவளை இவர்களது தலைவர் இடத்திற்க்கு அழைத்துச்சென்றனர்.

இவள் யார் என்று தெரியவில்லை. இவளை யார் இங்கு கொண்டுவிட்டார்கள் என்றும் தெரியவில்லை. காட்டில் கிடத்தாள் நாங்கள் அழைத்து வந்திருக்கிறோம்.

வேடுவரின் தலைவர் இவளை நன்கு ஆராய்ந்து பார்த்தார். ஒரு விதமாக யூகித்தார். வேறொரு இடத்தைச் சேர்ந்தவள் இவள், பாவம் எப்படியோ வழி தெரியாமல் இங்கே வந்துவிட்டாள். நாம் இவளை அவ்விடத்திற்கே அழைத்துச் செல்லவேண்டும். இவள் சொல்வது நமக்கு புரியாது. நாம் சொல்வது இவளுக்கு புரியாது. இவளுக்கு வழியும் தெரியாது. இவளை எப்படி கொன்டு அங்கே விடுவது. சரி இவள் இங்கே தங்கட்டும் என்று தனது துனைவியை பார்த்து இவளை நீ பார்த்துக் காப்பாக வைத்து கொள் என்று கூறினான் வேடுவனின் தலைவன் .
இவளை அவளும் அழைத்துச்சென்றாள்.

இங்கே..

கணவன் மனைவி இல்லாததை கண்டு அழுகிறான் இவர்கள் யாவருக்கும் என்ன செய்வது என்று புரியாமல் தவித்தனர். இப்படியே நாட்கள் செல்கின்றனர்.

இவளாலும் திரும்பி வர முடியாமலும், அதே போல் அவர்களும் இவளைக் கண்டு பிடிக்க முடியாமலும் இருந்தது. இவள் எப்படியோ ஒருவிதமாக அந்த மகரிஷியின் குகையைக் பற்றி இவர்களுக்கு எடுத்துரைத்தால் சைகைகாட்டியோ எப்படியோ நன்னால் முடிந்த அளவிற்க்கு அவர்களுக்கு புரியும் படி சொன்னாள்.

வேடுவரின் தலைவன் இருவரை அழைத்து இவளை அந்த குகை வரையில் பத்திரமாக கொண்டு சேர்த்து விடுங்கள், முடிந்தால் இவளது இடத்திற்கே கொண்டு செல்லுங்கள்

என்று இருவரை அனுப்புகிறார்.

அதேபோல் இவ்விடத்தில்... எல்லோம் இவள் காணாததை மறந்து அவரவர்கள் நித்யவேலைகளில் ஈடுபட்டனர். இவள் இல்லையே என்று கணவன் மட்டும் வருந்தி அழுது கொண்டே இருந்தான்.

இவள் இந்த வேடுவர்களுடன் தனக்கு தெரிந்தபாஷையில் அவர்களிடம் பேச அவர்களும் அவர்களுக்குத் தெரிந்த பாஷையில் ஏதோ பேசிவந்தனர். மனதில் இவளுக்கு ஒரு தைரியம் எப்படியாவது இவர்கள் நம்மை நம் கணவரிடத்தில் சேர்த்து விடுவர்கள் என்று மனதில் ஒருவித சந்தோஷம் ஏற்பட்டது. இப்படி குகையை தேடி நடந்து கொண்டு வந்திருந்தார்கள்.

குகையின் அருகில் வந்ததும் இவள் மயக்க முற்று கீழே விழந்தாள். இவ்விருவரும் பயந்தனர். இவர்களுக்கு மருந்துவம் தெரியாது.

குகையினுள் வந்து பார்த்தார் ஒரு வேடன், வந்தவர்களில் ஒரு வேடன் வந்து பார்த்தான் ரிஷி அமர்ந்து கொண்டிருந்தார். அவன் பாஷையில் பேசினான்.

என்னப்பா இவ்வழிந்திருக்கிறாய்?.

அவன் நடந்தவைகள் அனைத்தையும் கூறினான்.

ஒ--ஒ அந்த பெண் அங்கு தான் வந்து இருக்கிறாளா பரவாயில்லை நல்ல இடத்தில் தான் சேர்ந்திருக்கிறாள் .

ஐயா! அவள் அங்கே வீழ்ந்து இருக்கிறாள்.

ப்படியா இதை ஏன் முதலில் சொல்லவில்லை எனக்கு. வா வா வா போய் பார்ப்போம்.

போய் பார்க்கிறார். அவள் மயங்கி வீழ்ந்து கிடக்கிறாள்.

ஒரு வேடனை பார்த்து நீ நீர் எடுத்துக் கொண்டு வா. அவனும் நீரை எடுத்து கொண்டு வந்தான். அதற்க்குள் முனிவர் இவள் நாடியை பார்த்தார். இவள் கருத்தரித்திருக்கிறாளே, ஆயிற்று கருதரித்து அறுபது நாட்கள் இவள் இவ்வழிவந்தது எல்லாம் கணக்கு பார்த்தால் இருபத்தைந்து நாட்கள் தான் இருக்கும் அப்படி பார்த்தால் இவள் தவறானவள் அல்ல. எந்த தவறும் நடந்து விடவில்லை என்று இவர் தீர்மானித்து நீரை அவள் மேல் தெளித்தார்.

அவள் பதற்றத்துடன் எழுந்தாள்.ஐயா என்ன என்று கேட்டாள்.

ஒன்றுமில்லை அம்மா கவலை வேண்டாம்.

இவளை அவள் இடத்திற்கு கொண்டுவிட்டு விடுங்கள் நான் வழி சொல்கிறேன் என்று அவர்கள் பாஷையில் கூறினார். இது ரிஷி செய்தது ஒரு தவறு. இவள் இருக்கும் வழியையும் இவர் சொல்லி அனுப்பினார். இவ்விருவர்கள் இவளை அழைத்து வந்தனர். வழக்கம் போல் இவர்களுடன் இவள் பாஷையில் இவள் பேச அவர்கள் பாஷையில் அவர்கள் பேசிக் கொண்டுவந்தனர். இவளுக்கு கனிகளை எல்லாம் பறித்து தந்தனர். அதை இவள் தின்று கொண்டே சிரித்து கொண்டே வந்தாள். தான் தன் ஊருக்கு வர போகிறோமென்ற மகிழ்ச்சி.

இவர்கள் குலவேடர்கள் சிலர் மறைந்திருந்து பார்த்தனர். ஏய்! அதோ பார் அவள் நம்மை எல்லாம் எத்தனை தினம் தவிக்கவிட்டு விட்டு யாரோ இருவருடன் சிரித்து பேசிக் கொண்டு வருகிறாள் பார்.ச்ச ச்ச இவள் மோசமானவள் போல் இருக்கிறதே அந்த இருவர்களை பார்த்தால் நம் குலத்தவர் போல் தெரியவில்லையே. அவர்களை ஏதோ வேறு பாஷை பேசுகிறார்கள் இவள் பாரேன் அந்த பாஷையும் பேசுகிறாள். இது இவர்களாக ஊகித்துக்

கொண்டனர். வா, வா உடனே போய் நம் தலைவரிடம் கூறவோம் என்று அவர்கள் தலைவரை நோக்கி ஒடினார்.

இவள் இடம் தெரியும் என்ற அளவிற்கு வந்தவுடன் எனக்கு இனி இங்கிருந்து போக வழி தெரியும் நீங்கள் கவலைப்படவேண்டாம் நீங்கள் போகலாம் என்று ஜாடைமாடையாக அவர்களுக்கு காண்பித்தாள்.

ஆமாம் நாமும் நம்மிடம் போக ஐந்து, ஆறு சூரியன் பிடிக்கும் ( இங்கு சூரியன் என்பது தினங்கள் குறிப்பிடுகிறார்கள் ) அதனால் நாம் போகலாம் வா. இவளை அங்கே விட்டு விட்டு அவர்கள் சென்றனர். இது மற்று ஒரு தவறாகும்.

இவள் தன்னிடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தாள். கணவனும் இவளை பார்த்து வா வா என்று சந்தோஷமாக அழைத்தான். இவள் நடந்த வற்றை எல்லாம் ஒன்று விடாமல் அப்படியே கூறினாள்.

சரி கவலையை விடு எப்படியோ நீ வந்துவிட்டாய் அது போதும் .

அதற்குள் தலைவரிடத்தில் நடந்தவைகளை வேறு இருவர் கூறினார்கள் அதாவது பார்த்த இருவர்கள் கூறுகிறார்கள். யாரே இருவருடன் அவள் பேசி சிரித்து கொண்டு வந்தாள். இனி இவளை நாம் இங்கு வைத்திருக்கக்கூடாது. இவளால் நமக்கு ஆபத்து. இவளை பற்றி தவறானதையெல்லாம் இவர்கள் கூறினார்.

வேடுவ தலைவன் இதை யெல்லாம் பொருட்படுத்தவில்லை சரி சரி நீங்கள் போய் உங்கள் வேலைகளை கவனியுங்கள் . பின் இவ்விருவர்களும் கணவனும் மனைவியும் வேடுவ தலைவனை சந்தித்தனர். மனைவி கூறியதை எல்லாம் கணவன் வேடுவ தலைவனுக்கு கூறினான்.

ஒ ! அப்படியா எப்படியோ அவள் வந்து விட்டாள் எல்லாம்

நல்ல படியாக இருக்கட்டும். இனி மேல் நீயும் தனியாக வேட்டையாட எல்லாம் செல்ல வேண்டாம். இதனால் வந்த வினைகளை பார்த்தாயா என்று கூறினார். இன்று இவள் கிடைத்திருக்கிறாள். நீங்கள் எல்லோரும் சென்று எதையாவது வேட்டையாடி வாருங்கள். நாம் குதூகுலமாக கொண்டாடலாம்.

எல்லோரும் சென்றனர். எல்லோருடன் இவளது கணவன் சென்றார். வேடுவர்கள் சிலர் அதாவது வேடுவ பெண்மனிகள் சிலர் வேடுவ தலைவியுடன் கொண்டாட்டத்திற்க்கான எற்பாடுகளை செய்து வந்தனர் அதில் இப்பெண்மனியும் கலந்து கொண்டாள். கொண்டாட் டத்திற்கான எல்லா ஏற்பாடுகளும் சிறப்பாக நடந்தது. மிருகங்களை எல்லாம் அடித்து எடுத்து வந்திருந்திருந்தனர். எல்லா வேடுவர்களும் ஒன்று கூடினர்.
அச்சமயத்தில் இவர்களுடன் அதிக வேலை செய்ததால். அப்பெண்மணி மீண்டும் மயங்கி விழுந்தாள்.

வேடுவ குலத்தின் வைத்தியர் என்று சொல்லும் ஒருவர் இவளை பரிசோதித்தார். இவர்களுக்கு சரியான கணக்கு வழக்குகள் தெரியாது. இவள் கர்பமுற்றிருக்கிறாள் என்று கூறினர்.

உடனே அந்த இருவரும் தலைவரை நோக்கி கூறினர் பார்த்தீர்களா நாங்கள் தான் அப்பொழுதே சொன்னோமே கேட்டீர்களா நீங்கள். உங்களுக்கும் இந்த வேடுவருக்கும் ஒரே நாளில் தான் திருமணம் நடந்தது. உங்களுக்கு இப்பொழுது மகன் இருக்கிறான். அவர்களது கணக்கு படி 6 வயது. இத்தனை காலம் இல்லாது இவள் எப்படி திடீரென்று கர்பமுற்று இருப்பாள் என்று இவர்கள் பலவாறாக பேச எல்லோருமே பலவாறாக பேச தொடங்கினர். இந்த வேடுவ குலத்திற்கே அநீதி செய்து விட்டாள். இவளை கொன்று விடுங்கள் என்று மக்கள் கூறினார்கள்.

இவள் அப்படி பட்டவள் அல்ல. ஆனால் வேடுவர்கள்

எல்லோரும் சேர்ந்து சொல்கிறார்களே என்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லையே என்று தரைவன் குழம்பினான்..

தலைவரே! ஏதாவது ஒன்றை செய்யுங்கள் என்று மக்கள் வற்புருத்தினர். வேடுவனை பார்த்தார் தலைவர்.

அவன் ஐயோ பாவமாக உட்கார்ந்திருந்தான். நம் மனைவி அப்படிபட்டவள் அல்ல. ஆனால் கர்ப்பமுற்றிருக்கிறாளே ஒன்றுமே புரியவில்லையே என்ன நடக்கிறது என்று வேதனையில் அமர்ந்து இருந்தான்.

வேடுவரின் தலைவர் உடனே எல்லோரும் அமைதியாக இருங்கள். இவளை நாம் ஒதுக்கி விடலாம். நம் எல்லையை தாண்டி எங்கு வேண்டுமானாலும் இருக்கட்டும். இவள் கணவனும் இவளை போய் பார்க்கக் கூடாது. இதுமட்டும் அல்ல மேலும் அனைத்து பெண்களும் கேளுங்கள் இக்குல பெண்கள் இரவில் இங்கு வரவில்லை என்றாள் அவர்கள் வரவே கூடாது. அப்படி வந்ததால் நம் குலத்திற்கே கேடு விளைவிக்கின்றன. அதனால் இன்று முதல் கட்டளையாக இடுகிறேன்.

குறிப்பு:- அதனால் தான் வேடுபெண்மணிகள் இரவுக்குள் தங்களது கணவன் இடத்தில் போய் சேர்ந்து விடுவார்கள்).

இவள் கண் விழித்து பார்க்கிறாள். எல்லோரும் இவளை குற்றவாளி போல் பார்க்கிறார்கள். கணவன் அழுது கொண்டே நடந்தவற்றை எல்லாம் கூறுகிறான்.

அவள் எழுந்து உடனே அழுகிறாள் தலைவரின் கால்களை பற்றுகிறாள். ஐயா! நான் எவ்வித தவறும் செய்யவில்லை. நான் என் கணவரை தவிர யாரையும் மனதாலும் நினைக்கவில்லை. ஏன் ஐயா எனக்கு இந்த கொடுமை? நான் எங்கு சொல்வேன்? ஐயா என் மீது கருணை காட்டுங்கள். அம்மா நீங்களும் என்னை போன்ற பெண் தானே? என்னை பற்றி அவர்கள் இடத்தில் சொல்லுங்கள். நான் உத்தமி என்று

சொல்லுங்கள். ஐயோ என்னை காப்பாற்றுங்களேன் ஏன் இருவரும் மௌனமாக இருக்கிறீர்கள்.

மகளே! தலைவர் ஒரு கட்டளை பிறப்பித்தார் என்றால் அதை மாற்ற முடியாதம்மா.

அம்மா! அப்படி எல்லாம் சொல்லாதீர்கள். நான் நல்லவள், தூய்மையானவள் என்னை காப்பாற்றுங்கள் நான் இங்கேயே எங்காவது ஒரு மூலையில் இருந்து விடுகிறேன். நான் யார் கண்ணிலும் படாமல் வேண்டுமானாலும் வாழ்கிறேன். என்னை என் கணவரிடமிருந்து பிரிக்காதீர்கள் என்று கதறி, கதறி அழுகிறாள். ஒவ்வோரு வேடுவத்தியிடமும், வேடுவனிடமும் அழுகிறாள், கெஞ்சுகிறாள், என்னை தயவு செய்து காப்பாற்றுங்கள். நான் எவ்வித தவறும் செய்யவில்லை. நான் இருவருடன் வந்தது உண்மை அவர்கள் எனக்கு வழி காட்டி இங்கே அழைத்து வந்து விட்டார்கள். நான் வேண்டுமென்று இவ்விடத்தை விட்டு போகவில்லை வழி தெரியாமல் போய் விட்டேன் என்னை காப்பாற்றுங்கள். என்னை உங்களிடமிருந்து தள்ளிவிடாதீர்கள் என்று கதறி, கதறி அழுதாள்.

நன்றாக இடியும் மழையும் பெய்ய தொடங்கின. எல்லோரும் அவரவர்கள் குகைக்குள் புகுந்து கொண்டனர். இவள் மட்டும் தனியாக மழையில் நின்று கொண்டு கதறி, கதறி அழுதாள். ஆனால் ஒன்றும் பலன் தரவில்லை.

அத்தியாயம்: 14

மறு நாள் காலை இவளை கொண்டு அவ்விடத்தின் எல்லையை விட்டு அனுப்பினர். இவள் அழுது கொண்டே வந்தாள் அவள் பல தூரம் நடந்ததில் மீண்டும் ரிஷியின் குகைகயை அடைந்தாள். அவள் அவர் கால்களை பற்றி அழுதாள்.நடந்தறவற்றை கூறினாள்.

என்னம்மா உன்னை பார்த்தா அப்படி சொன்னார்கள்?.

மிருகங்களை தின்பதால் இவர்களுக்கு புத்தி பேதலித்து விட்டதம்மா. வா நான் உன்னை அழைத்து போகிறேன். அவர்களிடம் விடுகிறேன் வா.

ஐயா! வேண்டாம் ஐயா வேண்டாம். உங்களுக்கு அவர்களை பற்றி தெரியாது. என் வயிற்றில் கரு இருப்பதால் என்னை வெளியில் அனுப்பினார்கள். இல்லையேல் என்னை கொன்றே இருப்பார்கள்.

நான் சொல்கிறேன் வா. அம்மா என் வாக்கிற்கு அவர்கள் மதிப்பு தர வேண்டுமே .

ஐயா! வேண்டாம். தயவு செய்து அப்படி வேண்டாம். என்னால் உங்களுக்கும் கெட்ட பெயர் உண்டாகும். நீங்கள் சொல்லி அவர்கள் கேட்கவில்லை என்றால் எங்கள் குலமே நாசமாகும். ஐயா! எங்கள் குலம் நாசம் ஆவதற்கு நான் காரணமாக இருக்கக் கூடாது.

அம்மா! நீ நல்ல உயர்ந்த எண்ணத்தை உடையவள். உனக்கு எவ்வித குறையும் வராது. நீ என்னுடன் இங்கேயே இருந்து விடு. பழங்களையும், நல்ல இலைகளையும் பறித்து உட்கொள். மிருகமாமிசத்தை உண்பதை இன்றே நிறுத்தி விடு. நான் உனக்கு தினமும் நம்மை எல்லாம் ரஷித்து காத்து வரும் அந்த ஜகன்மாதாவின் கதையை கூறுகிறேன் கேள் என்று கூறி ஒரு தாய்க்கு பணிவிடை செய்வது போல் மகரிஷி அவளுக்கு பணிவிடையும் செய்து, தேவி பாகவத்திலிருந்து சில முக்கிய கதைகள், தேவியின் பராக்கிரமத்தை பற்றியும் தேவியை பற்றியும் கூறிக்கொண்டு வந்தார். இந்த நிலையில் கணவன் மட்டும் அடிக்கடி வந்து பார்த்து விட்டு செல்வான். மனைவி தவறானவள் அல்ல என்பதை நன்கு உணர்ந்தான்.

நாட்கள் நகர்ந்து கொண்டே சென்றன.

அன்று மகா சிவராத்ரி. அன்றைய தினத்தில் இரவு இவளுக்கு நன்றாக வலி எடுத்தது. நீ கவலைப்பட வேண்டாம். அம்மா

நீ அப்படியே படுத்து இரு . நான் அந்த ஈசனை குறித்து தியானம் செய்கிறேன். இன்று சிவராத்ரி அதனால் ஈசன் நமக்கு துணையிருப்பான் கவலைவேண்டாம்.

இடியும் மின்னலும் மழையுமாக இருந்தது. ஈசனின் கண்டத்திலிருந்து ஓர் ஒளி அப்பெண்மணி வயிற்றில் புகுந்தது. குழந்தை அழகான பெண் குழந்தை பிறந்தது. பெற்ற தாய் சிசுவை பார்க்காமல் மரணம் அடைந்தாள்.

இந்த பெண் குழந்தையை மகரிஷி தன்கையில் எடுத்துக் கொண்டார். ஈசனே, சர்வேஸ்வரா எனக்கு ஒரு கடமையை கொடுத்திருக்கிறாயா? சரி பரவாயில்லை. நான் உன் விருப்பபடியே இக்கடமையை நிறைவேற்றுவேன். யாரும் இல்லாத இக்குழந்தைக்கு நானே தாயாகவும், தந்தையாகவும், குருவாகவும், இருக்கிறேன். இந்த தாய் துய்மையானவள் என்று வேடுவடுவ குலத்திர்க்கு குழந்தையின் மூலமே தெரியப்படுத்துகிறேன், எல்லா நதிகளின் தேவதைகள் இன்று இங்கு நீராடுகிறார்கள். இன்று இந்த தேவதை பிறந்ததால் இதற்கு நர்மதா என்ற பெயரை சூட்டுகிறேன். நதிகளின் தேவதைகளே இவளும் பிற்காலத்தில் சிறந்த தேவதையாக விளங்குவாள் இவ்வாறு நர்மதா பிறந்தாள்.

இப்பொழுது நர்மதாவிற்கு ஆறு வயது நிரம்பியுள்ளது.

ஈஸ்வரா! இவளை ஒருவன் கையில் கொடுத்து விட்டால். பிறகு நமக்கு கவலை இல்லை அல்லவா. நாம் நம் பணியில் ஈடுபட்டு கொண்டிருக்கலாம். மகேஸ்வரா! எனக்கென்று ஒரு பொருப்பை கொடுத்திருக்கிறாய். அந்த பொருப்பை நான் நல்ல படியாக முடித்திட வேண்டும் நீ தானப்பா அருள் புரிய வேண்டும். விரைவில் இந்த பெண்ணிற்க்கு நல்ல கணவனை தேர்ந்தெடுக்க வேண்டும். இவளை சாத்வீகமாகவும், நல்ல தெய்வீகதன்மையுடனும் வளர்த்திருக்கிறேன். நீ தான் முன் நின்று காப்பாற்ற வேண்டும். என்று ஈசனை பிரார்தித்தார் மகாரிஷி.

அப்பா! என்ன செய்கிறீர்கள் என்று குரல் கொடுத்துக் கொண்டே வந்தாள் நர்மதா .

அம்மா நான் என்ன செய்வேன். எல்லாம் உன்னை பற்றிய கவலை தான்.

என்னை பற்றி கவலை எதற்கு? நான் உங்களுடன் இருக்கிறேன் அல்லவா பிறகு எதற்கு கவலை!.

அம்மா உன்னை ஒருவன் கையில் கொடுத்துவிட்டாள். பிறகு என் கவலை தீர்த்து விடும் அம்மா.

அது என்னப்பா அப்படி சொல்கிறீர் ?.

பெண் என்று பிறந்து விட்டால் திருமணம் செய்து கொள்ள வேண்டும் அம்மா. கணவனுக்கும், அவனை சார்ந்தவனுக்கும் நல்ல பணிவிடை செய்து நல்ல பேரும், புகழையும் அடைய வேண்டும் அம்மா. அப்பொழுது தான் பிறந்த வீட்டாருக்கு மதிப்பு என்று பெண்ணின் பெருமையும், கணவனுடன் வாழ்வது பற்றி எல்லாம் கூறினார்.

அப்பா! இவை எல்லாம் கூறாதீர்கள். நான் உங்களை விட்டு பிரியமாட்டேன்.
அப்படி நீயும் கூறக்கூடாது. உன் கணவனிடம் போகத்தான் வேண்டும்.

சரி போகட்டும் அப்பா அதைவிடுங்கள். எனக்கு இன்று ஏதாவது ஒரு கதை சொல்லுங்கள் .

என்னம்மா நிறைய கதைகள் சொல்லியிருக்கிறேனே . தேவியை பற்றியும் பராக்கிரமத்தை பற்றி எல்லாம்

அப்பா! அதேல்லாம் கேட்டாகி விட்டது வேறு ஏதாவது புதிதாக சொல்லுங்களேன்.

வேறு என்னம்மா இருக்கிறது நான் புதிதாக சொல்ல? எனக்கு தெரிந்தவை தான் உனக்கு சொல்லியிருக்கிறேன்.

போங்கப்பா ஏதாவது சொல்லவேண்டும்.

அம்மா! நான் ஒரு கதையை சொல்கிறேன். அதை நீ நன்றாக புரிந்து கொள்ள வேண்டும் தெரிந்ததா பிறகு அதில் சில கேள்விகளை கேட்பேன். நீ எனக்கு பதில் தர வேண்டும்.

சரி சொல்லுங்கள் அப்பா.

இவளின் கதையையே இவளிடம் சொன்னார் இவள் பிறந்தது எப்படி? தாய், தந்தை மற்றும் நடந்தவைகள் அனைத்தையும் கூறினார்.

அப்பா! அந்த வேடுவர் செய்தது அநியாயம் அப்பா.

நான் இன்னும் உன்னை கேள்வி கேட்கவில்லை அதற்குள் நீ பதில் கூறுகிறாயே. சரி கேள்விகளை நான் தொடர்கிறேன். அக்குழந்தையை பெற்று எடுத்த, தாய் பற்றி சொல்கிறேன். அவள் எப்படி பட்டவள்?.

அப்பா! ரொம்ப நல்ல தாய் அப்பா. அவள் எவ்வளவு பெரிய தியாகம் செய்து இருக்கிறாள். தனக்கு கொடுமை செய்தவர்களையும் மன்னித்து இருக்கிறாள். அவள் உத்தமி அப்பா உத்தமி.

சரி பெண்ணே அவளின் கணவரை பற்றி என்ன சொல்கிறாய்?.

ஊம் அவர் பரவாயில்லை இருந்தாலும் கோழை அப்பா. மனைவி தான் முக்கியம் என்று வெளியில் வந்திருக்க வேண்டும் அப்பா மனைவியை நன்கு புரிந்து கொண்டு அவ்வப்போது வருகிறவன் மனைவி தான் நமக்கு எல்லாமே என்று ஏன் வெளியில் வரவில்லை?. ஒருகர்ப்பிணி பெண்ணை தனியாக விட்டு இருக்கிறான் ச்ச! அதுபாவம் அப்பா.

சரி தலைவரை பற்றி என்ன சொல்கிறாய்?.

அப்பா இதில் இரண்டு தலைவர்கள் உள்ளனர். வேறு பாஷையில் உள்ள தல்லைவன் மிகுந்த நல்லவன். ஆனால் இவள் கூட்டத்தின்டலைவன் அன்றாடம் மக்களை பார்த்து கொண்டிருப்பவன் இக்குற்றம் அவர்கள் செய்வாரா, இல்லையா என்று தீர்மானிக்காமல் தான் ஒரு கட்டளை பிறப்பித்தது மிக்க குற்றமாகும் அப்பா. அந்தபெண்மணி மயக்கமுற்று இருக்கிறாள். அவளை எதுவுமே விசாரிக்காமல் நேராக தீர்ப்பு வழங்குவது பெரும் பாவமில்லயா அப்பா?. இரு தரப்பிலும் நன்றாக விசாரித்து தானே தீர்ப்பு வழங்க வேண்டும்?. அதற்குள் எப்படி அவன் தீர்ப்பை வழங்கினான் இது கொடியதனம் அல்லவா. இதை என் மனது ஒப்புகொள்ளாது அப்பா தீர விசாரித்து ஒரு முடிவை எடுப்பது தான் நல்லதாக படுகிறது.

அம்மா! ஒன்றை புரிந்து வைத்துக் கொள். நீயும் பெண் தான். இளம் வயது பெண்கள் மற்ற ஆடவருடன் சிரித்து பழகினால். அதனால் வரும் விபரீதவிளைவு இது தான் அம்மா.
அப்பா! அப்படியானால் யாருடனும் பழக வேண்டாம் என்றா சொல்கிறீர்கள்.

அம்மா! பழகுவது குற்ற மல்ல ,நம்மை சுற்றி உள்ளவர்கள் எப்படி பட்டவர்கள் என்பதை புரிந்து கொண்டு தான் பழக வேண்டும்.

அப்பா! அப்பெண்மணியும் யாரும் இல்லையே. இவர்கள் எப்படியாவது நம்மை நல்ல விதமாக கொண்டு விடுகிறார்கள் இவர்களுடன் நாமும் நன்றாக பழக தானே வேண்டும் என்று எண்ணுவாள் அல்லவா அப்பா.

அம்மா! நீ சொல்வ தெல்லாம் சரி தான். நம்மை சுற்றியுள்ளவர்கவளை அனுசரித்தும் போக வேண்டும்.

தன்னை காத்து கொள்ள அவள் இப்படி செய்தாள் என்று சொல்கிறாய் இதுவே விபரீதமாக இருந்தால் அந்த பெண்ணின் கதி என்னவாகும் அம்மா. அதனால் தான் சொல்கிறேன் எதிலும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று.

அந்த முனிவர் அவளை கொண்டு விட்டிருந்தால் இத்தனை பிரச்சனைகளும் வந்திருக்காது அல்லவா அப்பா.

அதை எண்ணிதான் வேதனை அடைகிறேன் அம்மா. சில நேரம் நாம் அறியாமல் செய்யும் தவறு மற்றவர்களை பாதித்து விடுகிறது. அந்த பாபத்திற்கு பிராயசித்தமாகதான் அந்த பெண்மணிக்கு சேவை செய்து உன்னையும் அன்பாகவும், பாசமாகவும் வளர்த்து வருகிறேன் என்று கண்களில் நீர்தளுப்பினார் .

அப்பா என்ன சொல்கிறீர்கள்!. நீங்கள் வருத்தப்படுகிறீர்களே எனக்கு ஒன்றுமே புரியவில்லை சொல்லுங்கள் அப்பா.

என் அருமை குழந்தை நர்மதா தாயே! அந்த முனிவன் ஆகிய பாவி நான்தானம்மா. அந்த வேடுவத்தி உன் தாய் அம்மா. அந்த மகள் நீ தான் அம்மா, நீ தான்.

இதை எதிர் பார்க்காதவள் முனிவரையே பார்த்து நின்றாள் ஆச்சிரியத்தில். என்னப்பா சொல்கிறீர்! விளையாடதீர்கள் என்றாள்.

இல்லையம்மா இல்லை நான் விளையாடவில்லை. உண்மையை தான் சொல்கிறேன்.

அப்படி யென்றால் நீங்க எனக்கு அப்பா இல்லையா?.

உன்னை வளர்த்தவன் தான் அம்மா வளர்த்தவன் நான்.

அப்பா! நீர் வளர்த்தவராக இருக்கலாம் அன்று முதல் இன்று

வரை உங்களை தான் பார்த்து வருகிறேன். அதனால் நீங்கள் தான் எனக்கு எல்லாம். என் தாயை இப்படி செய்தவர்களை நான் பழிவாங்க வேண்டும். எவ்வளவு துடித்திருப்பாள் என் தாய், எவ்வளவு வேதனையில் அவள் இருந்திருப்பாள். இவர்களை நிச்சயம் நான் விடப்போவதில்லை. தீயவர்களை தேவி சூலம் எடுத்து கொன்றாள் என்று சொன்னீர்களே. அதே போல் தான் நானும் இவர்களையும் கொன்று விடுவேன்.
பொருத்திரு அம்மா பொருத்திரு நாம் அப்படி செய்வது முறையல்லம்மா. நீ சாத்வீகமாக வளர்ந்திருக்கிறாய். உனக்கு இப்படி ஆவேசம் வருவது சரியல்ல. நாம் அவர்கள் செய்யும் தவறை அவர்களுக்கு உணர்த்துவோம். உன்னை அவர்களில் ஒருத்தராக ஏற்றுகொள்ளச் சொல்வோம். ஏற்ற பின் அக்குலத்தில் ஒருவரை பார்த்து நீ மணந்து கொண்டு சுகமாக வாழ்த்திரு . உன் தாய் நிரபராதி என்பதை நீ நீருபித்துவிட்டால் போதும்.

அப்பா! புறப்படுங்கள் இப்பொழுதே போகலாம் .

பொருமையாக இரு அம்மா. நாம் இப்பொழுது போகலாம். ஆனால் நீ என் மகளாக தான் இப்பொழுதுவர வேண்டும். நாம் இப்பொழுது உண்மையை சொல்லக் கூடாது. சொன்னால் உனக்கு ஆபத்து நேர்ந்தாலும் ஆச்சரியபடுவதற்கு இல்லை. அவர்கள் எதை செய்யவும் அஞ்சமாட்டார்கள். அதனால் நீ என் மகளாக வா. நான் உனக்கு அனைவரையும் காட்டி தருகிறேன். நீ உன் தந்தையையும் பார்க்கலாம்.

சரி வருங்கள் அப்பா நாம் போகலாம்.

நீ அங்கு வந்து எதையும் பேச கூடாது தெரிந்ததா.

இல்லை அப்பா நான் ஒன்றும் பேசமாட்டேன்.

இருவரும் வேடுவர் இடம் நோக்கி சென்றனர்.

# பாகம்: 2

ஸ்ரீ ஓம்
அத்தியாயம்: 15

வேடுவர்கள் இருக்கும் இடத்திற்கு வந்தனர்.

வேடுவரின் தலைவன் வாருங்கள் தவ முனிவரே வாருங்கள். ஏதாவது உங்களுக்கு நாங்கள் செய்ய வேண்டுமா?.

ஒன்றுமில்லை இப்படி வந்தோம் அப்படியே உன்னையும் பார்த்து விட்டு போகலாம் என்று.

வாருங்கள் அமருங்கள். யார் இந்த சிறுமி? மிகவும் அழகாக இருக்கிறாளே!.

அயோக்கியன் இவன் கண்ணை பார் மகா மோசக்காரன் . நம் தாயை ஈவு இரக்கமின்றி வெளியில் அனுப்பி இருக்கிறான் ஊம் என்று மனதிற்குள்ளேயே பேசிக் கொண்டு இருந்தாள் நர்மதா. ரிஷி மெதுவாக அவள் கையை அமர்த்தி மௌனமாக இருக்கும் படி சைகை காண்பித்தார்.

இச்சிறுமியை பற்றி பிறகு சொல்கிறேன்.

யாரங்கே கனிகளை எல்லாம் எடுத்து வாருங்கள். நம் முனிவர் வந்திருக்கிறார். அனைவரும் வந்து வணங்குங்கள் என்றான்.

வேடுவரின் தலைவி கனிகளை எடுத்து கொண்டு வந்தாள். முனிவரே இதை ஏற்றுக் கொண்டு என்னை ஆசிர்வதியுங்கள் என்றாள்.

நன்றாக இருங்கள் என்றும் மங்களம் உண்டாகட்டும் என்றார்.

இளைஞன் அழகான ஓர் இளைஞன் முனிவரை வந்து வணங்கினான். அதை பார்த்த முனிவர் அவன் என்று

இழுத்தார்

முனிவரே இவன் எங்கள் மகன் சோனன்.

என்ன திருமணம் எல்லாம் முடித்து விட்டீர்களா?.

இல்லை முனிவரே அக்கம் பக்கம் உள்ள தலைவர்களின் மகளை கேட்டிருக்கிறோம். இன்னும் ஒன்றும் சரியாக அமையவில்லை.

சரி சீக்கிரமே விவாக பிராப்திரஸ்து என்றார் முனிவர்.

முனிவரின் பக்கத்தில் இருக்கும் சிறுமியை அவன் பார்த்தான். ஆஹா, என்ன அழகாக இருக்கிறாள். ஒரு தேவதை போன்று காட்சி தருகிறாளே. மணந்தால் நாம் இவளை தான் மணக்க வேண்டும் என்று அவன் மனதில் எண்ணிக் கொண்டான்.

நர்மதாவும் அவனை பார்த்தாள். இப்படி பட்ட கொடூர அரசனுக்கு ஒரு நல்ல அடக்கமான மகன் இருக்கிறானோ பரவாயில்லை என்று அவளும் யோசித்தாள்.

ஒவ்வொருவர்களாக கணிகளை கொடுத்து முனிவரை வணங்கி வந்தனர்.

நர்மதாவின் தந்தை வந்து வணங்கினார். தன் மனைவி இறந்த பிறகு அவன் முனிவரை சந்தித்ததே இல்லை. குழந்தையை பற்றி அவனுக்கு தெரியவே தெரியாது. அவன் கண் கலங்கி நின்றான்.

எல்லாம் காலத்தின் கோலம் அப்பா காலத்தின் கோலம். எல்லாம் நல்ல படியாக முடியும் கவலைவேண்டாம் என்று அவனை முனிவர் ஆசிர்வதித்தார். முனிவர் ஜாடையாக நர்மதாக்கு நர்மதையின் தந்தையை காண்பித்தார். அவளும், புரிந்தவள் போல் தலையை அசைத்தாள். தலை அசைத்தவள் நிமிர்ந்து பார்த்தாள்

தொலை தூரத்தில் தலைவரின் மகன் நின்று கொண்டு இவளையே பார்த்து கொண்டிருந்தான். அப்பா போகலாம் வருகிறீர்களா என்றாள்.

வாம்மா போகலாம்

யாரது முனிவருடன் இப்பழங்களையும் எடுத்து கொண்டு அவர் இருப்பிடம் வரை சென்று வாருங்கள் இவர்களை ஜாக்கிரதையாக கொண்டு விட்டு விட்டுங்கள் என்றான் தலைவன்.

சோனன் முன் வந்தான். அப்பா நான் இவர்களை விட போகட்டுமா?.

போய் வா மகனே, மகானுக்கு சேவை செய்தாலாவது விரைவில் உனக்கு திருமணம் நடக்கட்டும் என்றான்.

இவன் புண்ணகைத்து கொண்டே இருந்தான்.

இருவரை உன்னுடன் அனுப்புகிறேன்.

வேண்டாம் அப்பா நான் தனியாகவே போய் வருகிறேன். எப்படியாவது இவர்கள் இருக்கும் இடத்தை பார்க்க வேண்டும் தினமும் இவளை சந்திக்க வேண்டும் என்று எண்ணினான்..

இவர்கள் தனியாக செல்கிறார்கள் அல்லவா, பழங்கள் வேறு எடுத்து செல்ல வேண்டும் அதனால் உன்னுடன் இருவரை அழைத்து செல்லப்பா .

சரி அப்பா இருவரை அனுப்புங்கள் என்றான்.

இவர்களை இவர்கள் இடத்தில் கொண்டு விட்டான். ஆனால் அத்துடன் விடவில்லை. சோனன் அடிக்கடி வந்து

நர்மதையை பார்த்து விட்டு சென்றான். வேடுவதலைவர் சோனனுக்கு திருமணம் பேச்சு எடுக்கும் போதெல்லாம் இப்பொழுது வேண்டாம், இப்பொழுது வேண்டாம் என்று தள்ளி போட்டுக் கொண்டே வந்தான்.

ரிஷி ஒருவாரு ஊகித்துக் கொண்டார் இவனுக்கு நர்மதை மேல் பிரியம் உள்ளது அவளுக்கும் இவன் மேல் உள்ளதா என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். என்று யோசித்தார்.

ஒரு தினம் நர்மதையும் சோனனும் சந்திக்கும் பொழுது ரிஷி மறைவில் இருந்து என்ன பேசுகிறார்கள் என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

(குறிப்பு:- இப்பொழுது நர்மதா பருவம் எய்து மிகவும் அழகாக திகழ்ந்தாள்). நர்மதை எனக்கு உன்னை பிடித்திருக்கிறது உனக்கு என்னை பிடித்து இருக்கிறதா என்று இன்று வரையில் நீ சொல்ல வில்லையே.

இதோ பார் சோனன் உன் தந்தை தாய் செய்த கொடுமை அதிகம், என் தாயை இழந்து தந்தையும் இல்லாமல் நான் இருக்கிறேன். என்னை இன்று வரையில் கட்டிக்காத்து வந்தவர் அந்த ரிஷிதான். அவருக்கே பணிவிடை செய்து என் காலம் பூராவும் கழிக்கப் போகிறேன்.

அப்படியென்றால் உனக்கு என் மேல் இஷ்டம் இல்லையா?. உனக்கு என்னை பிடிக்கவில்லையா?.

நீ ஒரு கொடியவரின் மகன் இதனால் என்ன விபரீதம் விளைவிக்குமோ தெரியாது. ஆதலால் விபரீதங்களை சந்திப்பதை விட நீ உன் குலத்தவரில் ஒருவரை மணந்து நிம்மதியாக இரு.

நர்மதா! என்ன சொல்கிறாய். உன்னிடம் என் மனதை பறி கொடுத்து விட்டேனே. இதுவரையில் நான் யாரையும் மணக்காமல் உனக்காகவே காத்து கொண்டு இருக்கிறேனே.

நீ இப்படி சொல்வது நியாயமாகுமா. நன்றாக யோசித்து சொல். தினமும் உன்னை காண இவ்வளவு தூரம் ஒடி வருகிறேனே.

நீ இதற்காக வருகிறாய் என்று தெரிந்து இருந்தால் அன்றே வேண்டாமென்று சொல்லியிருப்பேனே. சோனா ஏதோ நீ மகரிஷியை காண வருகிறாய் என்று தானே நினைத்திருந்தேன்.

இல்லை நர்மதா இல்லை நான் உன்னை தான் காண வந்தேன். என்னை மணந்து கொள் என்னால் எவ்வித்ததிலும் உனக்கு துன்பம் நேராது இது சத்தியம். உன்னை தவிர நான் வேறு யாரையும் மணக்கவும் மாட்டேன். இதையும் உன் மனதில் வைத்து கொள். விரைவில் உன் முடிவை சொல் என்று கூறி சென்றான்.

(குறிப்பு:- இளைஞர்கள் அந்த இளம் வயதில் தாங்கள் என்ன சொல்கிறோம் என்பதையே மறந்து விடுகிறார்கள். இப்படி ஏதாவது உளரி விட்டு பிறகு ஆபத்துகளை சந்திக்க நேருடிகிறது)

சோனன் சென்றான். நர்மதா அவள் வேலையில் இருந்தாள். ரிஷி ஒன்றும் தெரியாதவர் போல் வந்தார்.

என்னம்மா இன்று எப்படி நடக்கிறது என்றார்.

அவளும் எல்லாம் வழக்கம் போல் தான் போய் கொண்டிருக்கிறதப்பா. அப்பா அந்த சோனன் வந்திருந்தான்.

என்னவாம்மா தினமும் அவன் இங்கே வருகிறான் .

அப்பா அவன் தினமும் இங்கு வர ஒரு காரணம் இருக்கிறதப்பா.

இவருக்கு அனைத்தும் தெரிந்து இருந்தாலும் மௌனமாக

இருந்து அவள் என்ன சொல்கிறாள் பார்க்கலாம் என்று இவளை சீண்டினார்.

என்னம்மா காரணம் ?என்னை பார்த்து ஆசிர்வாதம் வங்கலாம் என்று வருகிறான் .

ஐயோ! அப்பா வர வர உங்களுக்கு ஒன்றுமே தெரிய மாட்டேன் என்கிறது. நீங்கள் பெரிய தபஸ்வி இறைவனையே ஜபித்து கொண்டிருந்தால் இங்கு நடப்பது என்ன தான் உங்களுக்கு தெரியும் .

அம்மா! பரதேவதையே நீ சொல்லம்மா. அப்படி என்ன நடக்கிறது என்று, நான் தான் ஞானியாயிற்றே ஒன்றும் தெரியாத மூடன் நீ சொல்லு.

அப்பா! அந்த சோனன் இருக்கிறானே சோனன். அவன் இங்கு எதற்கு வருகிறான் என்று தெரியுமா?

அது தான் தெரியாது என்று செல்லிவிட்டேனே.

பொருமையாக கேளுங்கள் அப்பா.

சொல்லம்மா நான் வாயே திறக்கமாட்டேன், சொல் நீ.

அந்த சோனன் இங்கு எதற்கு வருகிறான் தெரியுமா?.

ஊஊம் என்று தலையாட்டினார்.

என்னை மணக்க வேண்டுமாம்.

ஊம்---- என்றார்.

அப்பா! விளையாடதீர்கள் நான் முக்கியமானதை சொல்கிறேன். இப்பொழுது விளையாடுகிறீர்களே!.
சரிம்மா சொல்லு.

என்ன ஆசை பார்த்தீர்களா அப்பா.

ஏம்மா அவன் என்ன என்னை மாதிரி ரிஷியாம்மா.

ஐயோ! நான் அதை கூறவில்லை. என்னை மணக்க வேண்டுமாம். என் தாயை செய்தது போல் என்னை நடுக்காட்டில் விட வேண்டும் போல் இருக்கிறது.

அப்படி இவனும் செய்வான் என்று எப்படியம்மா சொல்கிறாய்?.

எல்லாம் மிருகம் தின்பவர்கள், அப்படி தான் அப்பா. புத்தி சரியான நிலையில் இருக்காதப்பா.

அப்படி சொல்லக் கூடாது அம்மா. அதில் ஒருவர், இருவர் நல்லவர்களும் இருப்பார்கள் அல்லவா?.

ஏதேது அப்பா நீங்கள் சொல்வதை பார்த்தால் என்னை அவனுக்கு மணம் முடித்து வைத்து விடுவீர்கள் போல் இருக்கிறதே.

அம்மா தாயே நான் அப்படி சொல்லவில்லையே .

சரி இன்று நடந்ததை கேளுங்கள்.

சொல்லும்மா கேட்கிறேன்.

அவன் என்னை இன்று மணந்து கொள்கிறாயா என்று கேட்டான்.

நான் முடியாது என்று சொல்லி விட்டேன். நான் உங்களுக்கு சேவை செய்து என் வாழக்கையை கழித்தாலும் கழிப்பேனே அன்றி உன்னை மணக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டேன். நான் உங்கள் மகள் அல்லவா எப்படி.

ஐயோ! புத்தி கெட்ட பெண்ணே அவன் நல்லவனாக இருந்தால் மணந்து கொள்வதில் என்னம்மா தப்பு.

அப்பா! கண்டதையும் பேசாதீர்கள். எனக்கு அவனை பிடிக்கவில்லை. நான் கூறிவிட்டேன் அவ்வளவு தான்.

அம்மா1 ஒரு வேளை உன் தாயை பற்றி எல்லாம் நான் கூறாதிருந்தால் உனக்கு அவனை பிடித்திருக்கும் அல்லவா.

அதை பற்றி யெல்லாம் நான் யோசிக்கவில்லை அப்பா.

அம்மா! நர்மதா எதற்கும் ஆத்திரப்படாதே. இந்த ஆத்திரம் உனக்கு நல்லதாக அமையாதம்மா, பழிவாங்க வேண்டும் என்ற என்னம் இருக்க கூடாதம்மா, நீ அக்குலத்திற்கு சென்று நல்ல ராஜ்யத்தை நீ ஆளலாம் அல்லவா?. நடந்த தவறை எல்லாம் நீ சுட்டி காட்டி உன் தாயை நிரபராதி ஆக்கலாம் அல்லவா? எதையும் நாம் யோசித்து நல்லவிதமாக நாம் செயல்பட வேண்டும். நாம் பழிவாங்குவது சரியல்ல. தீவிரவாதம் நல்லதல்லம்மா.

அதுசரியப்பா நான் சொல்வதெல்லாம் இந்த சோனன் கேட்பான் என்பது என்ன நிச்சயம்?.

ஆ---இப்பொழுது தான் நீ என் மகள். நான் சொல்வதை நன்றாக கேட்டுக் கொள். நாளை அவன் வந்தனாகில் அவனிடம் நீ கூறு. கனிகளை தான் உண்ண வேண்டும்., மிருகமாமிசங்களை உண்ணக் கூடாது. அப்படி இருந்தால் தான் உன்னை மணப்பேன் என்று கூறு.

இதனால் என்ன பயன் அப்பா?.

பார்த்தாயே அவசரப்படாதே அவன் ஒப்பு கொண்டு அதன் படி நடக்கிறானா என்று பார்ப்போம்.
சரியப்பா இப்பொழுது ஒப்பு கொண்டு நடக்கிறான் , பிறகு

அவன் மாமிசங்களை உண்டால் என்ன செய்வது?.

அது தான் அம்மா ஒரு பெண்ணின் சாமர்த்தியம். அவனை உன் வயப்படுத்திக் கொள்ள வேண்டும். அவன் பெற்றோர்கள் செய்த அநீதிகளை அவனுக்கு நன்றாக நீ உணர்த்த வேண்டும். பிறகு அவன் மூலமாகவே நம் காரியத்தை சாதிக்க வேண்டும்.

இதெல்லாம் நடக்குமா அப்பா?.

அம்மா நாம் நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் பிறகு தெய்வங்களுக்கு வேலையே இல்லையம்மா. காரணம் காரியம் இல்லாமலேயே போய்விடும். அதனால் நாம் முயற்சித்து பார்ப்போம். பிறகு எப்படி போகிறதோ அப்படி விட்டுவிடலாம். எல்லாம் அந்த ஜகன் மாதாவின் செயல்.

சரி அப்பா நீங்கள் சொல்வதை போல் நான் கேட்கிறேன்.

## அத்தியாயம்: 16

மறுதினம் சோனன் வந்தான். அவனிடம் கனிகளை தான் உண்ண வேண்டுமென்று கட்டளை இட்டாள்.

உனக்காக நான் எதையும் செய்வேன் என்று சத்தியம் இட்டான்.

அன்று முதல் கனிகளையே உண்ண தெடங்கினான்.

வேடுவனின் தலைவி தலைவனிடம் கூறினாள். சோனனுக்கு என்ன வாயிற்று என்றே தெரியவில்லை. சில நாட்களாக அவன் கனிகளை தான் உண்கிறான். சிலர் சொல்கிறார்கள் அவன் அடிக்கடி முனிவரை சந்திக்க போகிறான் என்று, எனக்கு பயமாக இருக்கிறது. நமக்கு இருக்கிறதோ ஒரே மகன். விரைவில் பெண்ணை பார்த்து மணம் முடித்து வையுங்கள் என்றாள்.

எங்கே நானும் பார்த்துக் கொண்டு தான் வருகிறேன். நமக்கு தகுந்தார் போல் யாரும் இல்லையே.

தகுதியெல்லாம் இப்போது பார்க்காதீர்கள் நல்ல பெண்ணாக பார்த்து மணமுடித்து வையுங்கள். இதை கேட்டுக் கொண்டே வந்தான் சோனன் என்ன இருவரும் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்

எல்லாம் உன்னை பற்றிய கவலை தான் அப்பா.

என்னை பற்றி கவலையா!.

ஆமாம் அப்பா. உன் திருமணத்தை பற்றி தான். பேசிக் கொண்டு இருக்கிறோம்.

அதை பற்றி கவலை வேண்டாம் உங்களுக்கு எல்லாம் நல்ல விதமாக முடியும். .

என்ன சொல்கிறாய் நீ !என்றாள் தாய்.

நான் நல்லதை தான் சொல்கிறேன் அம்மா . அம்மா, அப்பா உங்கள் இருவரை நான் ஒன்று கேட்க போகிறேன் எனக்கு சரியான பதில் தரவேண்டும் என்று நர்மதாவின் பெறோர்களின் கதையை இவன் ஆரம்பித்தான்.

தந்தை கொதித்து எழுந்தார் இந்த கதையை உனக்கு சொன்னது யார்?. அந்த பெண் நிரபராதி என்று எப்படி கூறுவாய்?. அவள் நல்லவள் அல்ல உனக்கு என்ன தெரியும்?. உனக்கு அப்பொழுது வயது ஆறு தான், அதாவது இங்கே வயது என்று குறிப்பில்லை சிறியவன் என்று தான் குறிப்பாகும் .

அப்பா நான் கேள்விபட்டேன் கேட்கிறேன்.
நீ அவளை தூய்மையானவள் என்று சொல்வதற்க்கு உனக்கு

அருகதை இல்லை. இன்னும் நீ இங்கே தலைவனாகவும் இல்லை. என்று தலைவனாகிறாயோ அன்று உன் இஷ்டப்படி ராஜ்ஜியம் நடத்து, என்றோ நடந்த தீர்ப்பை இன்று நீ எடுத்து வரக் கூடாது. தந்தைக்கு ஒரு மகன் செய்யும் கடமையா இது அல்லது ஒரு தலைவனுக்கு செய்யும் கடமையா இது? என் கட்டளைபடி எது நடந்தாலும் அது சரியானது தான். அதை யார் தவறு என்று கூறினாலும் அவனை வெட்டியும் விடுவேன்.

அதற்குள் தலைவி குறுகிட்டு சோனா உனக்கு என்ன வாயிற்று? இன்று எதற்காக என்றோ நடந்து முடிந்த கதையை பேசுகிறாய்?. அவை எல்லாம் முடிந்து விட்டன. பாவம் கணவனே துயரத்தில் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறான். நீ எப்படி அவ்விதம் சொல்வாய்? தந்தையை எதிர்த்து பேசுவது குற்றமாகும். அதிலும் தலைவரை எதிர்த்து பேசுவது மகா குற்றமாகும். எதற்காகடா இன்று இதை எல்லாம் பேசுகிறாய். அவளை பற்றி உனக்கு என்ன தெரியும். பேசாமல் இடத்தை விட்டு போ மேலும் ஆத்திரத்தை உன்டு செய்யாதே என்று தாய் கத்தினாள்.

இவன் மௌனமாக நர்மதையின் தந்தையிடம் அதாவது வளர்ப்பு தந்தை அல்ல சொந்த தந்தையிடம் சென்றான்.

இன்று என்ன வாயிற்று உன் மகனுக்கு? இவன் புத்தியை யார் மாற்றினார்கள்! ஏன் இப்படி எல்லாம் இவன் உளருகிறான்?.

தலைவரே! எனக்கு அதுதான் ஒன்றும் புரியவில்லை. இவன் போவதோ முனிவரை சந்திக்க. ஆனால் இவன் புத்தி ஏன் இப்படி தாறு மாறாக போகிறது என்று புரியவில்லையே. இதில் ஏதோ ஒரு சூது இருக்கிறது. நாம் இதை கண்டு பிடிக்கத் தான் வேண்டும். இல்லையேல் இவன் நம்மையே எதிர்த்து விடுவான். நீங்கள் எப்படியாவது இதனை கண்டு பிடித்து சீராக்குங்கள் என்றாள்.
அதிகாலையில் மகரிஷி தனது நித்ய அனுஷ்டானங்களை முடித்துவிட்டு தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அப்பொழுது

ஈசனின் அசரீர் வாக்கு தேன்றிர்று. மகரிஷியே நீங்கள் நீண்ட காலம் கங்கையை சந்திக்க வேண்டுமென்று இருந்திருக்கிறீர்களே அதே போன்று இமாலய பர்வதங்களையும் சுற்ற வேண்டுமென்று இருந்தீர்களே. தாங்கள் இப்பொழுது புறப்படலாம் என்று ஈசன் ஆக்ஞை விடுத்தார்.

தியானத்தை முடித்துக் கொண்டு அவர் கவலையாக இருந்தார். இத்தனை காலம் நாம் இங்கு தவம் புரிந்து கொண்டு இருந்தோம். ஈசன் இப்பொழுது நமக்கு இமாலயத்திற்கு போகும் படி உத்தரவு பிறப்பித்து உள்ளார். இந்த நர்மதையை யாரிடம் ஒப்படைத்து செல்வது?. இன்னும் சிறிது காலம் கழித்து உத்தரவு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே, தெய்வ செயலை நாம் ஒன்றும் கூறமுடியாது. அவர் சொன்னால் அதன்படி நாம் செயல் படத்தான் வேண்டும். ஈசனின் வாக்கு படி நாம் நடக்க வேண்டும் யோசித்துக் கொண்டு அமர்ந்திருந்தார்.

அப்பா! என்ன யோசிக்கிறீர்கள்?. உங்களை பார்த்தால் கவலையாக தெரிகிறதே .

பெண்ணே! நர்மதா உன்னை விட்டு பிரிய போகிறோமே என்ற கவலை தான் அம்மா.

இவள் தவறாக புரிந்து கொள்கிறாள் அப்பா நான் திருமணமாகி போய் விடுவேன் என்று நினைக்கிறீர்கள். அதெல்லாம் எனக்கு நடக்காதப்பா நடக்காது.

அம்மா !நர்மதா எதிலும் அவசரபடுகிறாயே சற்று பொறுமையாக தான் கேளேன்.. எதற்கு உன் வாயால் இப்படி அபசகுனமாக பேசுகிறாய்?. எல்லாம் நல்லபடியாக முடிய வேண்டுமென்று தானே நான் பிரார்திக்கிறேன்.

சரி அப்பா தப்பு என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் சொல்ல வந்ததை சொல்லுங்கள்.

சொல்கிறேன் கேள். அம்மா நதிகளின் தேவதைகள் எல்லாம் இங்கு வந்து இந்த ப்ருகு தீர்த்தத்தில் நீராடுகிறது. தங்கள் பாபங்களை மகா சிவராத்ரி அன்று இதில் விட்டு விடுகிறது. நதியும் புண்ணியமாகிறது. இதை உனக்கு அடிக்கடி கூறியிருக்கிறேன் அல்லவா?. எனக்கு நீண்ட நாட்களாக ஒரு ஆசை அம்மா, அந்த கங்கா தேவியை நான் தரிசிக்க வேண்டும், அதில் நான் நீராடி சிலகாலம் அங்கும் ஜபம் மேற் கொள்ள வேண்டும் அம்மா. இந்த ஆசை பல நாட்களாக சிவனிடம் கேட்டு வந்தேன். அப்படி கேட்டு வந்ததில். இன்று எனக்கு உத்தரவை தந்துள்ளான் அம்மா.

அவ்வளவு தானே அப்பா, இதற்கு ஏன் வருத்தப்படுகிறீர்கள். நீங்கள் போய் வாருங்கள்.

அம்மா என் வருத்தமெல்லாம் உன்னை தனியாக விட்டு போகிறேனே என்பது தானம்மா.

தனி ஏது அப்பா? நீங்கள் ஜபத்தை எனக்கு அளித்திருக்கிறீர்கள். நான் ஜபம் செய்து கொண்டு இங்கே இருந்து விடுவேன். இவை எல்லாம் எனக்கு பழகின இடம் தானே, எனக்கு பயம் ஏதும் இல்லை. என்னை பற்றிய சிந்தனையே உங்களுக்கு இருக்கக் கூடாது அப்பா. உங்களது நீண்ட நாள் ஆசையை அந்த ஈசன் நிறைவேற்று கிறான். உங்கள் பிரார்த்தனையும் செவி சாய்க்கப்பட்டு இருக்கிறது அதனால் நீங்கள் போகாமல் இருப்பது தவறப்பா. அதுவும் நானே உங்களுக்கு இடையூராக இருப்பது மாபெரும் தவறு.

அம்மா! உன்னை ஒருவன் கையில் கொடுத்து விட்டு பிறகு நான் செல்வது முறை அல்லவா?. ஏற்கனவே நான் ஒரு தவறை செய்திருக்கிறேன். மீண்டும் மற்றொரு தவறை செய்ய சொல்கிறாயே இது எப்படியம்மா நியாயமாகும்?.

அப்பா! இப்பொழுது நியாயம், தர்மத்தை பற்றி பேசுவது சரியல்ல. ஏனப்பா அந்த ஈசனுக்கு தெரியாமலா உன்னை

அழைத்திருப்பான். எனக்கு எப்படியும் ஒரு வழி வைத்திருப்பான். நீங்கள் கவலைப் படாதீர்கள் என்று ஆறுதல் கூறினாள்.

அவர் மனம் தெளிந்தபாடில்லை.

நர்மதா யோசித்தாள். இவரை நாம் யோசிக்கவிடக் கூடாது. ஏதாவது ஒரு கேள்வியை கேட்க வேண்டும். அப்பா! நதி தேவதை என்று கூறுகிறீர்களே அதன் அர்த்தம் தான் என்னப்பா?.

சொல்கிறேன் கேள் அம்மா. நான் உனக்கு நமது ஜகன் மாதாவின் பராக்கிரமத்தை கூறியிருக்கிறோன் அல்லவா. அந்த ஜகத் ஜனனி, திரிலோக ரக்ஷகி அசுரர்களுடன் யுத்தம் புரிந்தாள். அப்படி பல காலம் யுத்தம் புரிந்ததில் அவளது வேர்வை துளி ஆங்காங்கே வீழ்ந்தது. அது 108 முத்துக்களாக விழுந்தன. அவை ஒவ்வொரு பாகத்திலும் விழுந்தது. அப்படி விழுந்த முத்துக்கள் பூமியில் ஊடுருவி உள்ளே சென்றது. பிறகு இவை 108 இடங்களில் நதிகளாக வந்தது. (முக்கிய குறிப்பு:- நமது சரஸ்வதியின் வகுப்பில் நதிகள் எப்படி தோன்றின என்பது உள்ளன. அதன் படி தான் நதிகள் தோன்றின தேவியிடம் இருந்து வரும் முத்துக்கள் அக்னியால் ஆவியாக வந்து பூமிகளில் வீழ்ந்தது. அது அக்னியாக பூமியில் ஊடுருவி சென்றது. பிறகு அதில் ஆவியாக உற்பத்தியாகி நதியாக வெளி வந்தது). இப்படி 108 திசைகளில் அதாவது எல்லா திசைளிலும் விழுந்து, இந்ந முத்துக்கள் ஆங்காங்கே நதிகளாக உற்பத்தி ஆயின. ரிஷிகள் மகாதபஸ்விகள். அந்த முத்துக்கள் வீழ்ந்த இடத்திற்கு சென்று தவம் புரிந்து அந்த நீரை மேல் எடுத்து நதியாக கொண்டுவருகிறார்கள். இப்படி அங்கங்கே நதிகள் உற்பத்தி ஆயின. இப்படி வீழ்ந்த முத்துக்களில் சில இடங்களில் பலகாலம் கழிந்து ஒர்புண்ணிய ஆத்மா உருவாகிறது அம்மா. அந்த புண்ணிய ஆத்மா தவம் செய்து இறைவனை கண்டு வணங்கி இறை அருள் பெற்று கிராம தேவதை போன்று நதி தேவதையாக வருகிறதம்மா. எல்லோருக்கும் நன்மை செய்வதற்காக அந்த

இறைவன் இவர்களை நதி தேவதைகளாக்குகிறான். பூமியில் புண்ணிய பலம் இருக்க வேண்டும் என்பதற்காக இதை செய்கிறான். அதனால் தான் அம்மா ஒவ்வொரு நதிக்கும் ஒரு நதிதேவதை இருக்கிறாள். அவர்களை தரிசித்தால் புண்யம் அம்மா. அந்த தேவியிடமிருந்து வந்ததால், இதில் நீராடினால் சுத்தமடைகிறோம் என்று கூறுகிறார்கள் அம்மா. நமது பாவங்கள் அதிகரிக்காமல் இருக்க இவ்வித மாக நதிகளில் நீராடி நாம் தேவியின் அருளை பெற வேண்டும் அம்மா.

அப்பா! நீங்கள் சொல்வதை நான் நன்றாக புரிந்து கொண்டேன். அது சரி அப்பா.அந்த நதியின் தேவதை யார்?.

அது காலம் தானம்மா நிர்ணயிக்க வேண்டும் என்றார். மனதில் சிரித்துக் கொண்டே அந்த தேவதை நீதானம்மா நீ தான். இந்த தேவதையை வளர்க்கும் பாக்கியத்தை தந்த அந்த சிவனுக்கு என் அனந்த கோடி நமஸ்காரம் என்று மனதில் பிரார்த்தித்துக் கொண்டார்.

என்னப்பா யோசிக்கிறீர்கள்?.

ஒன்றுமில்லையம்மா, சரி நான் புறப்படுகிறேன்.

அப்பா! மனசஞ்சலம் ஏதும் இல்லையே?. ஒரு செயலுக்காக நாம் செல்லும் பொழுது மனசஞ்சலம் ஏற்படுவது தவறப்பா. நாம் அந்த செயலை வெற்றிகரமாக முடித்து விட்டு வர வேண்டும். நல்ல மாபெரும் செயலுக்காக நீங்கள் செல்கிறீர்கள். அதனால் நீங்கள் சஞ்சலமின்றி செல்லுங்கள். உங்களுக்கு என்னை பற்றிய சிந்தனையே இருக்கக் கூடாது. ஊம்

எனக்கு அறிவுரைகள் கூறுகிறாயா.

மகளின் கடமை தானே அப்பா. நீங்கள் நல்ல படியாக எல்லாம் முடித்து வர வேண்டுமென்று தினமும் அந்த ஈசனை பிரார்த் திப்பேன் அப்பா. நீங்கள் செய்வது

போல் ப்ருகு தீர்த்தமிடம் இருந்து தீர்த்தம் எடுத்து வந்து அந்த சிவனுக்கு அபிஷேகம் செய்து வில்வ இலையால் பூஜிப்பேன் அப்பா. உங்கள் காரியம் சித்தி பெற நான் இப்படி செய்கிறேன் அப்பா.

கண்ணீர் மல்க நர்மதாவை பார்க்கிறார். அம்மா தன்னலம் கருதாமல் எனக்காக பிராத்திக்கிறேன் என்கிறாயே. உன் வாழ்க்கையை நல்லபடியாக அமைத்துக் கொள்ள பிரார்த்திக்காமல் இந்த வளர்ப்பு தந்தைக்காக பிரார்த்திக்கிறேன் என்கிறாயே. நீ பெரிய தியாகி அம்மா. தயாளகுணம் படைத்தவள். தர்ம தேவதை.

அப்பா! ஏன் பெரிய வார்த்தைகள் சொல்கிறீர்கள். நான் ஒன்றும் பெரிதாக செய்யவில்லை. நீங்கள் என் தாய்க்கு அடைக்கலம் தந்து, என்னையும் வளர்த்து பேணிகாத்திருந்தீர்கள். அதைவிட நான் செய்வது ஒன்றும் பெரிதல்ல. அப்பா எனக்கு நீங்கள் தானப்பா எல்லாம். நீங்கள் தான் தெய்வம் என்றாள்.

இவ்வாறு ஒருவரை ஒருவர் புகழ்ந்து பேசி கொண்டிருக்கையில் ஏதோ இரண்டு குரல்கள் தொலைவில் கேட்பது தெரிந்தது.

அம்மா யாரோ வருகிறார்கள் போல் இருக்கிறது.

ஆமாம் அப்பா இந்த குரலை பார்த்தால் சோனன் போல் தெரிகிறது.

பரவாயில்லையம்மா நல்ல சமயத்தில் தான் அவனும் வருகிறான் வரட்டும்.

அப்பா நீங்கள் சஞ்சலப்படாதீர்கள். நான் இங்கு எப்படியும் இருந்து கொள்வேன். என்னை பற்றிய கவலைப்பட வேண்டாம்.

சோனனும் நர்மதையின் தந்தையும் வந்து கொண்டிருந்தார்.

ஈஸ்வரா! நல்ல வழியை காண்பித்து விட்டாய். பெண்ணை எப்படி தனியாக விட்டு செல்ல வேண்டுமென்று யோசித்து கொண்டிருந்தேன். நல்ல வேளையப்பா பெண்ணின் தந்தையும் கணவனையும் இங்கே அழைத்து வந்துவிட்டாய். இனி பெண்ணின் தந்தையிடம் பெண்ணை ஒப்படைத்து விட்டு, நான் இமயத்தை நோக்கி புறப்படுகிறேன் என்று யோசித்து கொண்டு இருந்தார். வா !சோனா வா என்றார் முனிவர்.

பெண்ணின் தந்தை முனிவரின் கால்களை பற்றி அழுதார். ஐயா நான் பெரும் பாவி, ஐயா1 பெரும் பாவி. என் மகளையே எனக்கு அடையாளம் தெரியாமல் வாழ்ந்து வருகிறேன். ஐயா என் மகளை இத்தனை காலம் தாங்கள் வளர்த்ததற்கு நான் என்ன கைமாறு உங்களுக்கு செய்வேன். நான் எத்தனை ஜன்மம் எடுத்தாலும், எவ்வளவு சேவைகள் செய்தாலும். உங்கள் செயலுக்கு ஈடாகுமா?. நான் காலம் பூராவும் உங்கள் பாதங்களில் வீழ்த்து கிடக்கிறேன். ஐயா எனக்கு யாரும் வேண்டாம் என் மகளுடன் நான் வாழ்கிறேன் ஐயா..

எழுந்திருப்பா, எழுந்திரு அழாதே. எல்லாம் அந்த ஈசனின் செயல். எவை எப்படி நடக்குமோ அவை அப்படி தான் அப்பா நடக்கும். இனி கவலைப்பட்டு பிரயோசனம் இல்லை ஆக வேண்டியதை நாம் பார்க்க வேண்டும். இந்த என் மகளை உன்னிடம் ஒப்படைக்கிறேன். பெற்றவன் நீயிருக்க முறையாக உன்னிடம் ஒப்படைத்து விட்டு செல்வது தான் நல்லது அதனால் இவளை உன்னிடத்தில் ஒப்படைத்து விடுகிறேன்.

ஐயா! தாங்கள் எங்களை விட்டு எங்கே போகப்போகிறீர்கள்?. வேண்டாம் ஐயா வேண்டாம். நீங்கள் இங்கேயே இருக்க வேண்டும்.

நான் இங்கு இருந்து விட்டால் பிறகு எதற்கும் அர்த்தமில்லாமல்

போகும். என் பிறப்பின் பயனை அடைய நான் போகிறேன். ஐயா என்னை தடுக்காதீர்கள். கிளம்பியவர்களை தடுப்பது சரியல்ல. நான் எடுத் காரியம் நிறை வேறட்டும். பலகாலமாக நான் காத்து கொண்டிருந்த உத்தரவு இன்று எனக்கு கிடைத்திருக்கிறதப்பா . இனி அதை நான் வீணாக்க விரும்பவில்ல. அந்த இறைவனின் உத்தரவு கிடைத்தவுடன் புறப்படுபவன் புத்திசாலி. இல்லையேல் அவன் இத்தனை காலம் செய்த தவங்களை வீணாக்கி விடுகிறான். மீண்டும் அந்த இறைவனின் உத்தரவு கிடைக்க இன்னும் எத்தனை காலமாகுமோ தெரியாது. அதனால் என்னை தடுக்காதீர்கள் நான் புறப்படுகிறேன்.

சோனனை பார்த்து ரிஷி கூறினார். சோனா நீ மணந்தால் நர்மதாவை தான் மணக்க வேண்டும் இல்லையேல் இல்லை, உனக்கு திருமணமே இல்லை, என்ன தெரிகிறதா?. இவளை நீ கை விடக் கூடாது. இவளை நன்றாக பார்த்துக் கொள். உன் பெற்றவர் செய்த தவறை நீயும் செய்துவிடாதே. அவர்கள் செய்த தவறை புரியும் படி செய். இவர்களுக்கு நல்ல வாழ்வை அளி என்று கூறினார்.

பிறகு நர்மதையை பார்த்தார். அம்மா குழந்தாய் அவசரப்படாதே, எதிலும் அவசரமும், ஆத்திரமும் உனக்கு அதிகம் உள்ளது. அதனால் பல கேடுகள் விளையும் அம்மா. ஆத்திரமும் ,அவசரமும் படுவது பெண்களுக்கு அழகல்ல. சாந்தமும். பொருமையும் தான் பெண்கள் கையாள வேண்டும். ஆத்திரத்தால் நீ சாதிக்க போவது ஒன்றுமில்லை. அடக்கமாக இருந்தால் பலதை நீ சாதிக்கலாம். பொருமையாக இருப்பவள் பெற்றவர்களுக்கு பெருமையை தேடி தருகிறாள். ஆத்திரபட்டு காரியத்தை வீண் அடிக்காதே, அம்மா! யாரையும் வார்த்தைகளால் நாம் துன்புருத்தக் கூடாது. மனதாலும் பழிவாங்கும் எண்ணத்தை வைக்காதே. பழிவாங்குவது சரியான தர்மம் அல்ல. நீ உன் ஆக்ரோஷத்தை அடக்கிக் கொள்.

அப்பா! கவலைபடாதீர்கள் நான் ஆத்திரபடாமல் தான்

இருப்பேன். அனாவசியமாக இருந்தால் நானும் அந்த தேவியை போல் ஆத்திர பட்டு கொடியவர்களை அழிப்பேன் என்னால் முடிந்த அளவிற்கு பொருமையை கடைபிடிக்கிறேன். எல்லை மீறினால் என்னால் அதை பார்த்து சகித்து கொண்டிருக்க முடியாது.

அம்மா! உன் விருப்பபடியே செய். எது எப்படி நடக்க வேண்டுமோ அதன்படி நடக்கும் அந்த ஜகதாம்பிகை என்ன நினைத்திருக் கிறாளோ அப்படி தான் அம்மா நடக்கும்.

எல்லோரும் முனிவரின் காலில் விழுந்தனர். நன்றாக நலமாக வாழுங்கள். நான் என் செயலை முடிக்கச் செல்கிறேன்.

அப்பா1 கவலையில்லாமல், மனசஞ்சலம் இல்லாமல், எங்களை பற்றி எல்லாம் சிந்திக்காமல் நீங்கள் நிம்மதியாக போய் வாருங்கள். நான் முன்பு கூறியது போல் உங்களுக்கு எவ்வித இடையூறும் வராமல் இருக்க அந்த ஈசனை பிரார்த்திக்கிறேன்.

எல்லோரும் கண்ணீர் மல்க முனிவருக்கு விடை அளித்தனர்.

எல்லாம் சர்வேஸ்வரன் செயல். ஜகதாம்பிகையே உன் திருவருள் எல்லையற்றதம்மா. இதோ நான் புறப்படுகிறேன். கங்காதேவிக்கு ஜே இமாலய பர்வதனுக்கு ஜே. தன் நீண்ட நாள் ஆசை நிறை வேறப்போகிறதே என்ற சந்தோஷம் மேல் ஒங்க வேகமாக சென்று கொண்டே இருந்தார்.

## அத்தியாயம்: 17

சோனன் நர்மதாவை பார்த்து கூறினான். நர்மதா இப்பொழுது நீ என்ன செய்ய போகிறாய். இங்கிருக்கிறாயா அல்லது எங்களுடன் வர போகிறாயா.

ஆமாம் அம்மா  தனியாக இங்கே எதற்க்கு இருக்க போகிறாய்?. எங்களுடன் வந்து விடேன்.

சோனா! நான் இப்பொழுது வரமுடியாது. திருமணம் ஆகாமல் உன்னுடன் வருவது சரியல்ல. உன்னை இங்கு இருக்க சொல்வதும் சரியல்ல. அதனால் நீ உன் தாய் தந்தையிடம் போய்விடு. அப்பா இத்தனை காலம் நீங்கள் அங்கே அந்த தலைவனின் துணை கொண்டு தான் இருந்தீர்கள். இப்பொழுது நீங்கள் இங்கு வந்து விட்டால் அது சரியாகாது. நானும் அங்கு வந்தால் குழப்பங்கள் தான் மேலோங்கும். அதனால் தற்போதைக்கு என்னை இங்கே தனியாக விடுங்கள். நீங்கள் இருவரும் செல்லுங்கள்.

அம்மா! மகளே உன்னை நான் இனி  தனியாக விட மாட்டேன். எனக்கு  அவர்கள் யாரும்  தேவையில்லை. அவர்களுக்கு இத்தனை காலம் நான் சேவை புரிந்து விட்டேன் என்னால் உன்னை விட்டு பிரியமுடியாதம்மா. பெண்ணே நீ எதை வேண்டுமானாலும் சொல் நான் செய்கிறேன். ஆனால் என்னை போ என்று மட்டும் கூறாதே. நான் இனி உன்னுடன் தான் இருப்பேன். என் மகள் எங்கிருக் கிறாளோ அது தான் எனக்கு சாஸ்வதமான இடம். அன்று நான் என் மனைவியுடன் வந்திருந்தால் உன்னை பிரிந்து இருக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை அல்லவா. அப்பொழுது கோழையாக இருந்து விட்டேன். இனியாவது நான் செய்த பாவத்திற்கு பிராய்சித்தத்தை கொடு.  என் மகளே என்னை அனுப்பாதே அம்மா அனுப்பாதே என்று நர்மதாவின் கைகளை பற்றி அழுதான்.

அவன் அழுவதை பார்த்து மணம் இரங்கினால் நர்மதா. நீங்கள் எங்கும் போக வேண்டாம் என்னுடனே இருங்கள் அப்பா. நான் உங்களை விட்டு பிரியவே மாட்டேன் அப்பா நாம் இங்கேயே இருந்துவிடலாம். ஈசனை பூஜை செய்து கொண்டும். என்னை காப்பாற்றிய அந்த முனிவர் வரும் வரை அவருக்காக நாம் பிரார்த்தனை செய்வோம் அப்பா.

சரியம்மா அப்படியே ஆகட்டும்.

சோனன் பார்த்து கொண்டே இருந்தான். என்ன நர்மதா இது நியாயம்? நானும் உங்களுடன் இங்கேயே இருந்து விடுகிறேனே. உன்னை இத்தனை காலம் விரும்பியவனுக்கு நீ அளிக்கும் தண்டனையா இது?. இது என்னம்மா நியாயம்?. என் பெற்றோர்கள் செய்த தவறுக்காக நான் பலியாகவேண்டுமா?. நீ செய்வது சரியாக இருக்கிறதா என்று யோசி.

சோனனே நான் எந்த தவறும் செய்யவில்லையே!. நான் உன்னை மணக்க மட்டேன் என்றும் கூறவில்லையே. முறையாக என் தாய்க்கு நடந்த அநீதியை உன் பெற்றோர்கள் ஒப்புக் கொண்டு அதற்கு பிராயசித்தமாக என்னை அழைத்து கொண்டு போய் உனக்கு மணம் முடித்து வைக்கட்டும். இது தான் நல்ல முடிவாக எனக்கு படுகிறது. அப்படி இல்லையேல் நான் உன்னை மணம் முடித்து கொண்டாலும் கெட்ட நடத்தையுடைய தாயின் மகள் அல்லவா இவள் அதனால் தான் எங்களது சம்மதமின்றி என் மகனையும் மணந்து கொண்டாள். என்று உன் பெற்றோர்கள் நாளை கூற முடியும். பிறகு என் தாய்க்கு வந்த பெயர் அப்படியே நிலையானது ஆகிவிடும். அதனால் தான் சொல்கிறேன். சோனா அவர்களாகவே மணம் திருந்தி வந்து என்னை அழைத்தால் தான் நான் உன்னை மணப்பேன். இல்லையேல் நம் திருமணம் நிச்சயம் நடைபெறாது. இது என்னை பெற்ற தாயின் மீது ஆணை.

என்ன நர்மதா, நீ எதற்கு பெரியவார்த்தைகள் கூறுகிறாய்? இப்பொழுது தானே முனிவர் கூறினார் ஆத்திரபடாதே என்று அதற்குள் ஆத்திரமும், அவசரமும் படுகிறாயே.

இதோ பார் நர்மதா நான் என் பெற்றோர்களுடன் பேசி அவர்களை திருத்தி உன்னை அவர்களே வந்து அழைத்து போகும் படி செய்கிறேன். மணந்தால் உன்னை மணப்பேன்.

இல்லையேல் எனக்கு திருமணமே வேண்டாம். நான் அதோ தெரிகிறதே ப்ருகு தீர்த்தம் அதற்கு மேல் சென்று தவம் புரிய அமர்ந்து விடுவேன். இது எனது சத்தியம் தெரிந்து கொள் வருகிறேன் என்று வேகமாக சென்றான்.

இவ்விருவர்கள் உரையாடலை கேட்டுகொண்டு இருந்த தந்தை ஏன் இவர்கள் இப்படி ஆவேச படுகிறார்கள். பொருமையாக நம் தலைவரிடம் பேசலாமே நல்ல விதமாகவும் பேசலாம் அல்லது நமது குலகுருவை தேடி அழைத்து அவர் மூலமாக எல்லாவற்றையும் பேசி ஒரு முடிவை எடுக்கலாமே அதற்குள் இவர்கள் ஏன் இப்படி அவசரப் படுகிறார்கள்.

என்னப்பா அப்படியே நின்று வீட்டீர்களே.

அம்மா நர்மதா நமக்கு என்று குலகுரு ஒருவர் இருக்கிறார் அம்மா. ஞான பீடத்தை மேற் கொண்டவர். ப்ருகு தீர்த்தத்தின் அருகில் எங்கோ தவம் புரிந்து கொண்டிருக்கிறார். அவரை நாம் தேடி பிடிக்க வேண்டும். அவரிடம் நடந்ததை சொன்னால் நம் தலைவரிடம் சொல்லி உன்னை ஏற்று கொள்ளும்படி செய்வார்.

அப்பா இதை பற்றிய கவலையைவிடுங்கள். நான் நித்ய பூஜைகளை செய்ய வேண்டும் என்று தன் பணிகளில் ஈடுபட்டு கொண்டாள்.

சோனன் தந்தையிடம் வந்தான். மீண்டும் ஆரம்பித்தான். நீங்கள் அந்த பெண்ணிற்கு செய்தது அநீதி அப்பா அநீதி. அதை ஏன் நீங்கள் புரிந்து கொள்ளமாட்டேன் என்கிறீர்கள்?. ஏன்டா ஒருத்தி பல சூரிய(தினம்) நாட்கள் வேறு இடத்திலிருந்து விட்டு, அதுவும் நம் பாஷை தெரியாதவரிடத்தில் இருந்து விட்டு பிறகு இருவருடன் சிரித்துக் கொண்டு வருகிறாள் என்றால், அதை ஒப்பு கொள்ளவா சொல்கிறாய். அடேய் நீயும் நாளை இவர்களுக்கு தலைவராக போகிறாய் புரிந்து கொள்ளடா புரிந்து கொள். நீ எங்கு போய் வருகிறாய் என்று எனக்கு நன்றாக தெரியும்டா அந்த பெண் யார் என்பதையும்

புரிந்து கொண்டிருக்கிறேன். அப்படி பட்டவளின் பெண் நம் குலத்திற்கு தலைவியாக வருவதை நான் ஒரு காலமும் ஒப்பு கொள்ள மாட்டேன்.

ஏனடா! உன்னை அவள் மயக்கினாளா? மகனே பெற்ற அப்பன் சொல்வதை கேளடா. அழகை பார்த்து மயங்க கூடாது. அழகு ஆபத்தானது. அது நம்மை அழித்து விடும். ! நாளை தலைவராக வரப்போகிறாயடா மக்கள் இழிவாக பேசும் அளவிற்கு நடக்காதே. நல்ல பெண்ணை மணந்து, நல்ல விதமாக மக்களை நடத்தி செல்லடா. உனக்கு வேண்டாமடா இந்த பெண். நான் சொல்வதை கேள்.

அப்பா! அதையே தான் நானும் கூறுகிறேன். நீங்கள் இறப்பதற்குள் நல்ல பெயரை எடுங்கள். நான் அநீதி அளித்ததால் அந்த பெண்ணின் பெண்ணை என் மகனுக்கு மணம் முடித்து வைக்கிறேன் என்று தர்மத்தை நிலை நாட்டுங்கள். தலைவரே தப்பு செய்தார் என்று நாளை ஊர் கூறும்படி செய்யாதீர்கள். அப்பா அழகாக பிறந்தது அவள் குற்றமல்ல. தூய உள்ளம் கொண்ட அந்த தாயின் கருணை தான் அவள் அழகிற்கு ஒரு காரணம். அதுமட்டும் அல்ல அப்பா எப்பொழுதும் நல்ல சித்தனையும், எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும், உலகம் சுபிட்சமாகட்டும் என்று அந்த ஈசனை பிரார்திக்கும் முனிவரின் வளர்ப்பு மகள் அப்பா.. அந்த அழகு கருணையால் வரும் அழகு, தயையின் அழகு, உலகம் போற்றி விளங்கும் அழகு, தெய்வீக தன்மை வாய்ந்த அழகு. பிறரை மயக்க வந்த அழகு அல்லப்பா. எல்லோரையும் வாழவைக்க வந்த அழகு. அவளை பற்றி அவதூறாக பேச உங்களுக்கு எப்படி அப்பா மணம் வந்தது.

மிருகங்களும் அவளை கண்டு தலைகுனிந்து செல்கிறதே அப்படிபட்டவளை பார்த்து நீங்கள் கூறுவது சரியல்ல அப்பா. ஒன்றை நன்றாக கூறுகிறேன் கேளுங்கள் மணந்தால் அவளை தான் மணப்பேன் இல்லையேல் நான் மணக்க மாட்டேன். எனக்கு திருமணமே வேண்டாம் இனி நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள் என்று சட்டென்று நடந்தான்.

வேடுவதலைவி அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள். என்ன நடக்குமோ ஒன்றும் புரிய வில்லையே பிறகு தலைவனை பார்த்தாள்.

ஏய்! உன் மகனை பார்த்தாயா, ஒரு தலைவன் என்றும் என்னை பாராமல் பேசிவிட்டு போகிறான். என்ன, என்ன பேசினான் பார்த்தாயா.! இப்படி பட்ட மகனை பெற்றதற்கு முதலில் உன்னை கொல்ல வேண்டும். தந்தையை எதிர்க்கும் அளவிற்கு அவனுக்கு தைரியமா? தலைவரை எதிர்கிறானே, இவன் ஏதோ நியாயங்களை பேசுகிறானே இவன் சொல்வது எதுவும் சரியல்ல யார் அங்கே உடனே ஒருவன் ஓடி வந்தான் வேடன் .

என்ன தலைவரே?.

அந்த வேடன் எங்கே? அவன் ஏதோ கதைகளை சொல்லி என் மகனின் மனதை மாற்றியிருக்கிறான். அவன் செய்யும் சூழ்ச்சி தான் இது. அவனை பிடித்து இழுத்து வாருங்கள் என்று கட்டளை இட்டான். இதோ நிற்கும் கொடிய மகனை பெற்ற தாயை பாருங்கள். பெற்ற தந்தையே எதிர்த்து பேசும் அளவிற்கு இந்த தாய் வளர்த்திருக்கிறாள். இவள் தான் நமக்கு முதல் எதிரி. இவளது கைகளையும் கால்களையும் மரத்தில் கட்டி போடுங்கள்.

மக்கள் தயங்கினர். தலைவியையா என்று யோசித்து நின்றனர்.
என்ன யோசித்து நிற்கிறீர்கள் இன்று இவளை விட்டாள் நாளை இதே போன்று உங்கள் மகன்கள் எல்லாம் எதிர்க்க நேரிடும். தலைவரின் மகன் தவறு செய்தான் அவனை பெற காரணமாய் இருந்த தாயையும் தலைவர் தண்டித்தார். இவர் நியாயமாக நடந்து கொண்டார் என்று நாளை உலகம் பேசும். கட்டி போடுங்கள்.

கை தட்டிக் கொண்டே வந்தான் மகன் சோனன். அப்பா

தலைவரே நல்ல வேடிக்கை. நீங்கள் எதை செய்தாலும் அது நியாயம் என்று உலகம் போற்ற வேண்டும்.

அடேய்! சோனா போதும் திறுத்து உன்னால் படும் அவஸ்த்தைகள் போதுமடா. ஒரு தாயின் வேதனையையும் புரிந்து கொள். அவர் சொல்படியும் நடந்து கேட்டு நட. ஏனடா இப்படி செய்கிறாய் என்று தாய் கதறினாள்.

அம்மா! நீயும் தலைவிதானே சற்று நியாய தர்மத்தை யோசித்து பாரம்மா இவர் செய்யும் அநியாயத்தை எடுத்து சொல்லம்மா.

அடேய்! போதுமடா போதும். உன்னை பெற்றதற்கு நான் தண்டனை அனுபவித்து விட்டேன். ச்ச நீயும் ஒரு மகனா? நீ என்ன தான் நினைத்து கொண்டு இருக்கிறாய் திருந்தடா.

அம்மா! சபையோர்களே, தலைவரே நான் எடுத்த முடிவு முடிவு தான் இதையாரலும் மாற்ற முடியாது.

இந்த தாயையும் மகனையும் கட்டி போடுங்கள். அந்த வேடன் எங்கிருக்கிறான் என்று பார்த்து அவனைப் பிடித்து இழுத்து வந்து தள்ளுங்கள் வேடவர் குலத்திற்கே அநீதி விளைவிக்கும் இவர்களை நாம் தண்டிப்போம். இவ்விருவருக்கும் உணவு எதுவும் தராதீர்கள். இப்படியே இவர்கள் தனியாக இங்கு கிடக்கட்டும். யாரும் இவர்களை பார்க்கக் கூடாது அல்லது இவர்களுக்கு உதவி புரிய கூடாது என்ன புரிகிறதா. அப்படி செய்பவர்களுக்கும் தண்டனை நிச்சயம். இனிபோய் அவரவர்கள் வேலைகளை கவனியுங்கள் என்று கட்டளை இட்டான் தலைவன்.

அனைவரும் கலைந்தனர்.

## அத்தியாயம்: 18

தலைவி மகனை பார்த்து கூறுகிறாள்.

பார்த்தாயாடா உன்னால் வந்த நிலமையை பார். நானும் இங்கு அவதிபடுகிறேன் பார். உனக்கு சந்தோஷம் தானே அவர் சொல்வதை ஏன்டா கேட்க கூடாது? எதற்க்காக இப்படி செய்கிறாய். நீ நன்றாக புரிந்து கொள்ளடா. அநீதிகள் நடக்கக் கூடாது அல்லவா. அதனால் தான் உன் தந்தை இவ்வளவு கடினமாக இருக்கிறார்.

அம்மா! தயவு செய்து நான் சொல்வதை கேளுங்கள்.

உன் பேச்சை நான் கேட்க தயாராக இல்லை. நீ எங்கள் பேச்சை கேட்காத போது நான் எதற்காக உன் பேச்சை கேட்க வேண்டும்.

அம்மா! என்னை நீங்களுமா புரிந்து கொள்ளவில்லை!.

என்னடா புரிந்து கொள்ள வேண்டும்?. ஒரு பெண்ணை பார்த்து மயங்கி இவ்வளவு வினைகளை ஏற்றாய். உன்னால் நானும் கிடந்து அவதிப்படுகிறேன். உன்னை பெற்றதற்கு இந்த தண்டனை எனக்கு வேண்டுமடா .

அம்மா அவசர படாதீர்கள், ஆத்திரபடாதீர்கள். உங்கள் மகன் மேல் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? பெற்ற மகனை நம்பாத போது தாய் என்ற பெயர் உங்களுக்கு வேண்டாம் அம்மா.

அடேய் உன்னை நம்பினது போதுமடா போதும்.
அம்மா! உங்களுக்கு என்னை பிடித்திருக்கிறதா?.

என்னடா கேள்வி இது. உன்னை பிடித்ததால் தானே நானும் அவதிபடுகிறேன்.

அம்மா உண்மையில் உங்களுக்கு என் மேல் பாசம் இருந்தால் நான் கூறுவதை நன்றாக கேளுங்கள் அம்மா. அம்மா உங்களுக்கு பாசம் இருக்கிறது அல்லவா. அப்படியானால்

நான் எதன் மேல் பாசம் வைத்திருக்கிறேனோ அதன் மேல் நீங்களும் பாசம் வைக்க வேண்டும் அல்லவா. அது தானம்மா உண்மையான பந்தம் என்று சொல்வது. பெற்றவர்களால் நிச்சயித்து மணக்கும் ஒருவன் அந்த பெண் மீது பாசமும், பற்றும் வைக்க வில்லையா. அதற்கு காரணம் பெற்றோர் கள் மீது அவன் காட்டும் அன்பும் பாசம் தானே?. பெற்றவர்கள் தனக்கு நல்லதை செய்வார்கள் என்ற நம்பிக்கை வைக்கிறான் அல்லவாம்மா. அதே போல் தான் அம்மா ஒரு மகன் மீதும் நீங்கள் நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். நான் தவறான வழியில் சென்றால் நிச்சயம் நீங்கள் என்னை திருத்த வேண்டும் அல்லது கொலையே செய்யலாம்.

அம்மா! நம் குல தெய்வத்தின் மீது ஆணை அம்மா. நான் எந்த தப்பும் செய்யவில்லை என்று அழது கொண்டே தாயை பார்த்தான்.

என்னடா சொல்கிறாய் நீ! உன்னை நான் நம்புகிறேன் கண்ணா, என் மகன் தவறான செயலை செய்ய மாட்டான் என்று நான் எண்ணியது உண்டடா. எந்த தாயும் தன் பிள்ளைகளை வெறுக்க மாட்டாள். அதிலும் உத்தம பிள்ளைகளை அரவே வெறுக்க மாட்டாள். அதே நேரத்தில் தவறு செய்யும் பிள்ளைகளை கொல்லவும் அஞ்சமாட்டாள் இது தானடா உண்மையான தாயின் தத்துவம். நான் இதை தானடா கற்று வந்தேன். கொடியவன் ஒருவன் இருந்தால் பெற்ற தாய்க்கு தான் அவமானமடா, பெற்ற தாய் வெளியில் மக்களிடையே தலை குனிந்து நிற்கிறாளடா. நல்ல மகனை பெற்றதாய் தலை நிமிர்ந்து நடக்கிறாள். இதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேனடா. நீ அந்த பெண்ணை போய் சந்தித்து வந்தும் நான் உன்னை கேள்விகள் கேட்கவில்லை காரணம் என்ன தெரியுமாடா?. என் மகன் எந்த தவறான நோக்கத் திலும் போகவில்லை என்பதை உணர்ந்திருக்கிறேன்.. இதையே நீ அவளை மணந்து இங்கே வந்திருந்தால் உன்னை வெட்டவும் நான அஞ்சமாட்டேன். பெற்றோர்கள் மேல் நீ வைத்திருக்கும் மதிப்பை நான் புரிந்து கொண்டு இருக்கிறேனடா. இதையே நான் உன் தந்தை யிடம் நீ

கொடுமையானவன் அல்ல என்று வாதாடி இருக்கிறேனடா. அதனால் தான் எனக்கு இந்த நிலமை ஏற்பட்டது. கண்ணா நடந்தவைகளை சொல். நான் கேட்டு கொள்கிறேன். நாங்கள் தவறு செய்தோம் என்று சொல்கிறாயே எல்லாம் விளக்கமாக கூறடா.

அம்மா! உன்மையில் நீங்கள் தெய்வம். அம்மா என்னை நன்றாக புரிந்து வைத்திருக்கிறீர்கள். நிச்சயம் நான் ஒரு தவறும் செய்யவில்லை அம்மா. உங்களுக்கு வந்த பழியை தான் நான் நீக்க வேண்டும் என்று இருக்கிறேன். அம்மா நம் தலைவர் தவறு செய்தார் என்று நாளை உலகம் கூறக்கூடாது. அதனால் தான் அம்மா நான் பாடுபட்டேன். நர்மதாவும் அப்படி பட்டவள் அல்ல அம்மா. உங்கள் சம்மதம் இல்லாமல் என்னை மணக்க மாட்டேன் என்று கூறிவிட்டாள் அம்மா. நடந்த வைகளை கூறுகிறேன் கேள் அம்மா என்று அனைத்தையும் தன் தாயிடம் கூறினான். இப்படியாக தான் நர்மதா அந்த ரிஷியுடம் வளர்ந்து வந்தாள் .அம்மா! இப்பொழுது அந்த மகரிஷியும் இல்லை யம்மா. இமயமலை நோக்கி சென்று விட்டார். அவள் பாவம் தந்தையுடன் அந்ந குகையில் இருக்கிறாள் அம்மா. இவர்கள் போய் அவளின் தந்தையை பிடிந்து வந்து விட்டால் அவள் தனியாகி விடுவாள் அம்மா.

மகனே! நீ சொன்னவைகளை கேட்டு விட்டேனடா. அன்றே நான் உன் தந்தையிடம் வாதாடி அவளுக்கு நீதி வாங்கி கொடுத்திருக்கலாம் ஏனோ நான் மௌனமாகி விட்டேனடா.

அம்மா! உங்கள் மௌனம் இன்று நம் குலத்திற்கே அவமான கேடாகி நின்றதே அம்மா.
அது தானடா நான் செய்த பெரிய தவறு. சில நேரங்களில் மௌனமாக இருப்பதும் பெரிய ஆபத்தை விளைவிக்கிறது. அதை நான் உனர்ந்து விட்டேன். இப்பொழுது என்னடா செய்யலாம்.

அம்மா! எனக்கும் ஒன்றும் புரியவில்லை. இவர்கள் அவள்

தந்தையை இங்கே இழுத்து வந்து விட்டாள் இனி என்ன என்ன விளைவுகள் வருமோ என்று பயமாக இருக்கிறதம்மா.

மகனே! ஒன்றை வேணாலும் செய்கிறாயா? நீ தப்பித்து சென்றுவிடு.

அம்மா! நான் போனால் உங்கள் கதி.

அடேய்! நான் செய்த பாவத்திற்கு நான் தண்டனை ஏற்று கொள்கிறேன். நீ தப்பித்து செல். நான் உன்னுடன் வந்தால். நாளை எனக்கும் இந்த பழி நேருமடா. நீ மட்டும் தப்பித்து செல்லடா.

அம்மா! நான் தப்பித்து செல்கிறேன். ஆனால் உங்கள் நிலையை நினைக்கும் பொழுது மனது மிகவும் வேதனை அடைகிறதம்மா.

அடேய் ஒரு தவறான நீதிக்கு தலைவி செவிசாய்த்ததால் தன்டனை அனுபவிக்கிறாள், நீ அதை பற்றி கவலைப் படாதே. நீ போய் நர்மதாவிடம் கூறு அவளையும் அவள் தாயையும் நான் மன்னித்து விட்டதாக . நான் மன்னிப்பதென்ன நான் அவள் காலில் விழந்து மன்னிப்பு கேட்டதாக சொல் என்னால் அவளுக்கு இத்தைனை காலம் துன்பம் ஏற்பட்டது, என்னை மன்னிக்குமாறு கேட்டுவிடடா என்று அழுதாள்.
அம்மா !அழாதீர்கள்.

மசனே! நான் இனி உன்னையோ, அவளையோ பார்ப்பேனா என்று தெரியாது. என் ஆசிகள் என்றும் உங்கள் இருவருக்கும் இருக்கட்டும். அந்த தூய்மையான பெண்ணை பார்க்கும் பாக்கியம் எனக்கில்லையடா. நான் செய்த பாவம் அப்படி.

அம்மா! என்கைகளும், கால்களும் கட்ட பட்டு இருக்கின்றனவே எப்படி அம்மா தப்பிப்பது?.

மகனே! ஒரு நல்ல செயலுக்கு செல்வதாக இருந்தால் வீரம் நம்மிடம் பிறக்க வேண்டுமடா. உன் உடலில் உள்ள அனைத்து பலங்களையும் செயல்படுத்தி இழு. உனது நர்மதையை காப்பாற்ற வேண்டும் என்று எண்ணிக் கொண்டு இழு. உம் வீரத்தை வர வை, உன் வீரம் எங்கே? ஊம், ஊம் மகனே

அவனும் பல வாறு வீரதீரத்துடன் முயன்றான் கட்டு பிரிந்து விட்டன. தாயிடம் வந்து ஆசி பெற்றான்.

போடா! வேகமாக போ வளமையாக போகும் வழியில் போகாதே. வேறு திசையில் செல். அவர்கள் செல்வதிற்குள் நீ செல்ல வேண்டும் .

அம்மா வேறு திசையில் சென்றால் நேரம் அதிகமாகுமேம்மா.

அடேய்! பேசி நேரத்தை வீணாக்காதே. இப்போழுதே பிடி ஒட்டம் (இங்கு இவர்கள் செய்த மற்றோரு தவறு வேறு திசையை நோக்கி இவன் சென்றது தான்). இவன் சென்றான்.

இங்கே காலை விடிய தொடங்கியது. வழக்கம் போல் நர்மதா சிவபூசைக்கு தயார் செய்து கொண்டிருத்தவள் தொலைவில் ஆட்கள் வருவதை கண்டாள். அப்பா வாருங்கள் இங்கே, அங்கே பாருங்கள் நிறைய ஆட்கள் நம்மை நோக்கி வருகின்றனர்..

அம்மா! நமக்கு ஆபத்து நேருகிறது. நாம் இவ்விடத்தை விட்டு வேகமாக ஒட வேண்டும்.

ச்ச! பார்த்தீர்களா அப்பா இந்த சோனனை நம்பக் கூடாது.

அம்மா! அவசர படாதே. தலைவரை பற்றி உனக்கு தெரியாது அவன் எதை செய்யவும் அஞ்சமாட்டார். யோசிக்க நேரம் இல்லை உடனே புறப்படு.

அப்பா! இவ்வழியாக ஒரு குறுகிய பாதை இருக்கிறது அதன் வழியாக வேகமாக சென்றால் வேறு பாஷை பேசுபவர்களின் எல்லையே அடைந்து விடலாம். எனக்கு அந்த பாஷையும் தெரியும் அப்பா முனிவர் எனக்கு இரண்டு பாஷைகளையும் கற்று தந்திருக்கிறார். என் தாயை பாதுகாத்து அனுப்பியவர்கள் அவர்கள் அப்பா. அதனால் நாம் அங்கே சென்று விடலாம். இருவரும் அத்திசை நோக்கி சென்றனர்.

ஆட்கள் திபு, திபு என்று மலையேறி வந்தனர். குகையை பார்த்தனர். குகையுனுள் யாரும் இல்லை. ஏமாந்து விட்டோமே எங்கே சென்றார்கள் இவர்கள்! .அதற்குள் ஒருவன் சொல்கிறான் அதோ அவர்கள் தொலை துரத்தில் சென்றுவிட்டார்கள். அவ்விடம் நாம் போக முடியாது. நாம் போய் உடனே தலைவரிடம் சொல்ல வேண்டும்.

அதற்க்குள் இங்கே...

ஏய் எங்கேடி உன் மகன் என்று தலைவியை அடித்தான்.

தலைவரே! எனக்கு ஏதும் தெரியாது அவன் எங்கு போனானோ.
இவளது கட்டை அவிழ்த்து விடுங்கள். தோலில் ஆன ஜாட்டியை கையில் எடுத்தான். இப்பொழுது உன் மகன் எங்கே போயிருக்கிறான் என்று சொல்லப் போசிறாயா அல்லது என்னிடம் உதை பட்டு கொள்ள போகிறாயா?..

வேடுவர் எல்லோரும் அப்படியே மௌனமாக நின்றனர். பாவம் நம் தலைவி என்று எல்லாம் மனதில் பேசிக்கொண்டனர். எல்லாம் இந்த சோனனால் வந்த வேலை என்று நினைத்துக் கொண்டனர்.

இவள் கூறினாள் நீங்கள் என்னை அடித்தாலும் பரவாயில்லை, கொன்றாலும் பரவாயில்லை. ஆனால்

ஒன்றை மட்டும் சொல்கிறேன் கேளுங்கள் என் மகன் கூறியது போல் அன்று நீங்கள் அளித்த தீர்ப்பு தவறு ஆனது தான். அதற்கு தக்க ஆதாரங்கள் இருக்கின்றன. உங்கள் தவறை புரிந்து கொண்டு நடங்கள். இப்பொழுதாவது திருந்துங்கள். ஏ! மக்களே நான் கூறுவது கேளுங்கள் இந்த இளவரசி மேல் அதாவது தலைவி மேல் உங்களுக்கு உண்மையான பக்தி இருந்தால் நான் சொல்வது தான் உண்மை நம் தலைவர் தப்பான தீர்ப்பை அளித்து விட்டார். அதற்கு பிராயசித்தமாக சோனனை (தலைவரின் மகன் எனது மகன்) அந்த புண்ணியவதியின் மகளான நர்மதாவை மணக்கப் போகிறான். அந்த புண்ணியவதி எந்த வித தவறும் செய்யவில்லை. அதனால் எல்லோரும் அவர்களை வாழ்த்துங்கள் என்று ஆவேசம் வந்தது போல் கத்தினாள்.

என்னடி திமிர் உனக்கு என்று தலைமுடியை பிடித்திழுத்தான மகன் சொன்னதை இப்படி கூட்டத்தில் சொல்கிறாயா. தலைவர் அளித்த தீர்ப்பு தவறு என்றா சொல்கிறாய்? இந்தா என்று ஜாட்டையால் அடித்தான்.

அடியுங்கள், என்னை கொல்லுங்கள் இருப்பினும் நீங்கள் அளித்த தீர்ப்பு தவறு தான் இப்பொழுதாவது திருந்தி மாற்றிக் கொள்ளுங்கள்.

ஆனால் அவன் எதையும் கேட்பதாக இல்லை. அவளை அடி அடியென்று ஜாட்டையால் நன்றாக அடித்தான்.

மக்களே தவறான தீர்ப்புக்கு மௌனமாக இருந்தேன் அல்லவா. அதனால் எனக்கு கிடைத்த இந்த தண்டனை, இது எனக்கு சந்தோஷத்தை தான் தருகிறது. தவறை உணர்ந்து தண்டனையை நான் ஏற்று கொள்கிறேன். ஊம் அடியுங்கள் நிறுத்தாதிர்கள் என்றாள்.

என்ன தைரியம் உனக்கு என்று மீண்டும் பல முறை அடித்தான், சுழன்று மயங்கி விழுந்தாள்.

இவளை எடுத்து சென்று ஏதாவதொரு மிருகத்திற்கு இரையாக்குங்கள். ஊம் அப்புறப்படுத்துங்கள் என்றான்.

இருவர் தூக்கி சென்றனர். அதற்குள் மற்ற வேடர்கள் அங்கே வந்தனர்.

தலைவரே!.

என்ன?.

அந்த வேடனும், அந்த பெண்ணும் வேறு இடத்தை நோக்கி சென்று விட்டனர்.

ஒ ஒ--அப்படியா சரி சோனனை போய் தேடுங்கள் என்று ஒரு கும்பலை அனுப்பினான். அவன் தொலைவில் இருந்தால் கொன்றும் அழைத்து வருங்கள் என்று கட்டளை பிறப்பித்தான்.

வேடர்கள் திகைத்தனர். என்ன கொடுமையாக நடந்து கொள்கிறான். ஏன் இப்படி நம்தலைவர் புத்திமாறினார். ஐயோ ஒன்றும் புரியவல்லையே என்று மக்களுள் குழப்பம் நேர்ந்தது. இருப்பினும் பயம்., என்னதான் இருந்தாலும் தலைவர் சொல்படி தானே கேட்க வேண்டும் என்று அவர் அவர்கள் பேசி கொண்டே சென்றனர்.

ஒரு வேடனை அழைத்தான் நீ பொய் அந்த வேறு பாஷை பேசும் மனித இடத்திற்கு செல். அந்த பெண்ணிற்கும் சோனனுக்கும் திருமணம் செய்ய போகிறோம் என்று சொல். அப்பொழுது அவ்விருவறையும் அனுப்பி விடுவார்கள். நம் எல்லைக்கு வந்ததும் அவர்கள் இருவரையும் அங்கேயே கொன்று தலையை என்னிடம் ஒப்படையுங்கள் என்று கட்டளையிட்டான்.

அதே போன்று ஆட்கள் அங்கே சென்றனர். எல்லையில் பதுங்கி சில ஆட்கள் நின்றனர் இருவர் மட்டும் சென்றார்கள்

ஒரு முக்கிற குறிப்பு:- இவை எல்லாம் நடக்க நாட்கள் பல ஆகின்றன இங்கு செல்வதற்க்கும், அங்கு செல்வதற்க்கும் நாட்கள் பல ஆகும். அதை நான் இங்கு நாட்களை பற்றி குறிப்பிடவில்லை.

நேராக அந்த தலைவரிடம் வந்தான். இவன் இவன் பாஷையினர் இருவரையும் ஒப்படைக்குமாறு கேட்டான்.

அந்த தலைவருக்கு ஒன்றும் புரியவில்லை இரண்டு பாஷையும் பேச கூடிய பெண் நர்மதா தான். அவளை அழைத்து வந்தார்கள். இவர்கள் கூறியதை அப்படியே நர்மதா அந்த தலைவருக்கு கூறினாள்.கூறி விட்டு சொன்னாள் நானும், என் தந்தையும் உடனே புறப்படுகிறோம். சோனன் எங்களுகாக நல்ல தீர்ப்பு அனுப்பி இருக்கிறான் அதனால் நாங்கள் உடனே புறப்படுகிறோம். எங்களை இத்தனை காலம் பாதுகாத்து வந்ததற்கு உங்களுக்கு மிக்க நன்றி.

அம்மா! நர்மதா அவசரபடாதே இத்தனை காலம் வேண்டாமென்று சொல்லியவர் உடனே உங்களை எப்படி ஒப்பு கொள்வார்.

ஐயா! அன்றே ஒப்பு கொண்டு ஒருவேலை ஆட்களை அனுப்பி இருக்கலாம் அல்லவா? நாங்கள் தவறாக புரிந்து கொண்டு இங்கே ஒடி வந்து இருக்கலாம் அல்லவா?

நர்மதா! நீ என்ன தான் சமாதானம் சொன்னாலும் என் மனது ஒப்பவில்லையம்மா ஒன்றை வேண்டுமானாலும் செய்யலாம். உன் தந்தையை முதலில் அனுப்பு அவர் போய் ஒப்பந்தம் பேசட்டும். பிறகு நீ செல் என்றார். இது நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன் அம்மா பொருமையாக இங்கு இரு.

ஐயா!என் தாய்க்கு வந்தது போல் பழி எனக்கும் வந்தால்.

அப்படி நேர வாய்ப்பில்லை அம்மா. உன் கணவர் மீது உனக்கு நம்பிக்கை இருக்கிறதல்லவா.

ஐயா! அவர் இன்னும் கணவராக வில்லையே ஆகபோகிறவர்.

சரியம்மா வாய்தவறி வந்துவிட்டது. சரி அவர் மீது உனக்கு நம்பிக்கை இருக்கிறதல்லவா அதனால் கவலைவேண்டாம் இந்த ஆட்களிடம் சொல் உன் தந்தையை முதலில் அனுப்புகிறேன் என்று

அப்படியே நர்மதாவும் ஆட்களிடம் சொல்லி தன் தந்தையை முதலில் அனுப்பினாள்..இந்த வேடுவரின் தலைவன் எதற்கும் நமது நான்கு ஆட்களை அனுப்புவோம் என்று அனுப்பினான். இவர்கள் மறைந்தே பின் தொடர்ந்து செல்லட்டும். நாம் என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்.

இவர்கள் எல்லையை கடந்தனர். ஆட்கள் குபீரென்று எழுந்து வந்தனர் ஏய் நமது தலைவருக்கு தீங்கு நினைத்தவன் உன்னை சும்மா விடுவேனா பார் என்று மக்கள் கூச்சலிட்டனர் அவனை அடித்து அவன் தலையை வெட்டி எடுத்துக் கொண்டு சென்றனர் இதை மறைந்திருந்து பார்த்த இப்பகுதி ஆட்கள்.அப்பா என்ன கொடுமைக்காரர்கள் இவர்கள் தந்திரமாக அழைத்து ஆட்களை. கொல்கிறார்களே இதை உடனே நாம். நம் தலைவருக்கு கூற வேண்டும் என்று இவர்கள் சென்றனர்.

## அத்தியாயம்: 19

தலைவியை எடுத்து சென்றவர்கள் அமர்ந்திருக்க மெதுவாக கண்விழித்தாள். என்ன என்னை எங்கே எடுத்து செல்கிறீர்கள் என்று கேட்டாள்.

அம்மா உங்களை மிருகத்திற்கு இறையாக்கச் சொன்னார் தலைவர் என்றார்கள். அம்மா எங்களுக்கு அவ்விதம் செய்ய மனம் வர வில்லை அதனால் உங்களை இங்கே

படுக்கவிட்டு நாங்கள் காவல் இருக்கிறோம். எங்களை தாயை போன்று காப்பாற்றினீர்கள் உங்களுக்கு இவ்விதம் நடப்பது சரியென்று தோன்றவில்லை. அதனால் நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அப்படியே செய்கிறோம் அம்மா.

என் அருமை பிள்ளைகளே நன்றியடா நன்றி. நல்ல விஸ்வாசம் படைத்தவர்களடா நீங்கள். என்னை மிருகம் அடித்து தின்றதாக போய் தலைவரிடம் சொல்லிவிடுங்கள். நான் நமது குல குருவை சந்தித்து நடந்தவைகளை கூறி நம் குலத்திற்கு நல்ல பெருமையை தேடி வருகிறேன். அப்பொழுது தான் நான் செய்த பாவமும் தீருமடா.

சரி அம்மா நீங்கள் யார் கண்ணிலும் படாமல் சென்றுவிடுங்கள்.

குல குருவை நோக்கி அவள் புறப்பட்டாள்.

சோனன் ஒருவரிடம் பிடிபட்டான். ஐயா! உங்கள் தந்தை மிகவும் கொடிய கோவத்தில் இருக்கிறார் உங்களுக்கு ஆபத்து ஐயா ஆபத்து.

என் ஆபத்தை பற்றி கவலை இல்லை. நர்மதாவையும், அவள் தந்தையையும் நான் காப்பாற்ற வேண்டும்.
ஐயா! நான் சொல்வதை கேளுங்கள். அவர்கள் இப்பொழுது அந்த குகையில் இல்லை. வேறு பாஷை பேசுபவரிடம் போய் சேர்ந்து இருக்கிறார்கள்..எப்படியோ அவர்கள் பத்திரமாக இருக்கிறார்கள் நீங்கள் அவர்களை பற்றி எல்லாம் யோசிக்க வேண்டாம் (குறிப்பு:- பாவம் இவனுக்கு நடந்தவைகள் தெரியாது. இவன் சோனனை தேடி புறப்பட்டபிறகு தலைவன் இம்மாதிரியான கட்டளையை கொடுத்துள்ளார்).

அப்படியா அவர்கள் நன்றாக இருந்தால் அது போதும்.

ஐயா! தற்போது நீங்கள் உள்ளே வராமல் இருந்தால் நலமாக இருக்கும்.

சரி உள்ளே வராமல் நான் என்ன தான் நான் செய்யட்டும். நானும் வேறு பாஷை பேசுவரிடம் போய் விட்டடுமா?.

ஐயா! அப்படி போக முடியாது. நம் ஆட்கள் எல்லாம் திசைகளிலும் இருக்கிறார்கள். உங்களுக்கு ஆபத்து நேர்ந்தாலும் நேரலாம் ஒன்றை வேண்டுமானால் செய்யுங்களேன். நீங்கள் இப்படியே நமது குருவை பார்க்க சென்று விடுங்களேன். அவரிடம் நடந்தவைகளை கூறி நம் குருவை அழைத்து வந்தால் தலைவர் அவர் பேச்சை மீற மாட்டார். பிறகு குருவை அழைத்து சென்று நாம் நர்மதாவையும், அவள் தந்தையையும் அழைத்து வந்துவிடலாம்.

இதுவும் நல்ல யோசனையாக தான் இருக்கிறது .

ஐயா! பார்த்து செல்லுங்கள் மிகஅடர்ந்த காடு இந்த நதியையே தொடர்ந்து செல்லுங்கள். கடுமையாக இருக்கும் ,கவலைப்படாமல் சென்று வெற்றியுடன் வாருங்கள் என்று சோனனை அனுப்பினர்.

இங்கே நர்மதாவின் தந்தை இறந்தார் என்பதை கேட்டதும் ஆத்திரமுற்றாள் நர்மதா, நயவஞ்சகமாக இவர்கள் செய்கிறார்களே! ஐயோ என் தந்தையை கொன்று விட்டார்களே. தலைவரே! இதற்கு நியாயமில்லையா. இப்படி செய்தவர்களை தண்டிக்க மாட்டீர்களா. ஐயோ! அநியாயம் நடந்து விட்டது. கொடியவன் தாயை, என் தந்தையை இப்படி நாசம் செய்து விட்டார்களே. சோனா இதற்கு நீயும் உடந்தையா?. ஐயோ ஒன்றும் புரியவில்லையே என்று கதறினாள்.

கவலைப்படாதே பெண்ணே உனக்காக நம் ஆட்களை அனுப்புகிறேன். முறையாக உன்னை திருமணம் செய்து கொள்ளும்படி சொல்கிறேன்.

போன ஆட்கள் மீண்டும் திரும்பி வந்தனர்.

என்ன சொன்னார் என்று கேட்டான்.

அவர்கள் பாஷை எங்களுக்கு புரியவில்லை இருப்பினும் ஒரளவு நாங்கள் யூகித்தோம். அதாவது நீங்கள் நர்மதாவை ஒப்படைக்கா விட்டால் ஆட்களை விட்டு நம்மை எல்லாம் அடிப்பார்களாம்.

அனுப்ப முடியாது என்று சொல். நம்மை நம்பி வந்தவர்களை காப்பது தான் நமது கடமை என்று சொல். நர்மதா இதை அவர்களிடம் இந்த விதமாக பாஷையில் சொல்லுங்கள் என்று சொல்லி அனுப்பினாள். போன ஆட்கள் திரும்பி வரவில்லை. அதிகம் ஆட்கள் இவர்களை தேடி வந்தனர். இவர்களுக்கும், அவர்களுக்கும் மிகுந்த போராட்டம் தொடங்கிறது. வேறு பாஷைகாரர்கள் பலர் மரணம் அடைந்தனர். காரணம் இந்த வேடுவர்கள் அக்கம் பக்கதில் உள்ள வேடுவர்களையும் அழைத்து வந்தனர் இப்படியாக வேறு பாஷையின் வேடுவ தலைவன் கொல்லப்பட்டான். பலரும் அடிக்கப் பட்டனர் .

ஆத்திரமுற்றாள் நர்மதா எடுத்தாள் கூறான வேலாயுதத்தை அம்மா ஜகதாம்பிகை எனக்கு சக்தியை கொடு. அநியாயம் செய்பவர்களை நான் அளித்திடுவேன் . குரு நாதா நான் எவ்வளவோ பொருமையாக இருந்தேன். இவர்கள் என் பொருமையை சோதித்து விட்டார். இனி என்னால் பொருத்திருக்க முடியாது என்னை மன்னித்து விடுங்கள். ஆவேசம் மேல் ஒங்க கொதித்து எழுந்தால் நர்மதா கொன்று குவித்தாள் பலரை.. மக்கள் அவள் ஆவேசத்தை பார்த்து பயந்தனர் ஒடி ஒளிந்தனர். ஒளிந்த இடத்தில் எல்லாம் சென்று கொன்றாள். யாரையும் விட்டு வைக்காமல் கொன்றால் ஆக்ரோஷம் மேல் ஒங்க மக்கள் பயந்து ஒடினர். கொன்று குவித்தவள் ஆவசம் அடங்க நீரில் இறங்கி குளித்தாள். பல காலம் நீரில் தன்னை சாந்தப் படுத்திக் கொண்டிருந்தாள் .

அதற்குள் சோனனும், அவன் தாயும் குருவை சந்தித்து

நடந்தவைகளை கூறினர்.

அம்மா இவ்வளவு கால தாமதமாக வந்து விட்டீர்களே. புறபடுங்கள் உடனே என்று(அன்று வந்தவர் இந்த சந்திரமகராஜ்) அரசனிடம் வந்து அதாவது இந்த வேடுவ தலைவனிடம் வந்து என்ன தவறு செய்து விட்டாய். நீ செய்தவைகள் அனைத்தும் அக்ரமமாயிற்றே. பகைமைகள் இப்பொழுது உருவாக காரணமாகி விட்டாயே. ஏ! பாதகனே போய் உடனே மன்னிப்பு கேளு வா. பலரும் ஒன்று கூடி பல மக்கள் நர்மதாவை காண வந்து கொண்டு இருந்தனர் .

நர்மதா தன்னை சாந்த படுத்திக் கொண்டு சிவபூஜை செய்து கொண்டிருந்தாள். தொலைவில் மக்கள் கூட்டம் வருவதை பார்த்தாள். அடேய் நய வஞ்சகனே என்னை அடிக்க மீண்டும் ஆட்களுடன் வருகிறாயா என்று முடியை விரித்துக் கொண்டாள். ஆத்திரத்துடன் எழுந்தாள். அடேய் வேடுவ தலைவா என்று கத்தினாள்.

சந்திரமகராஜ் நில் நர்மதா நில் நான் சொல்வதை சற்று கேள் என்று கூறினார். சோனனும் கத்தினான். ஆனால் எதுவும் அவள் காதில் விழவில்லை. அடேய் பாதகர்களே உங்கள் குலம் அழியட்டும். உங்களுக்கு இனி எங்கும் இடமில்லாமல் இருக்கட்டும். நீங்கள் ஊர் ஊராக திரிந்து அலையுங்கள். உங்கள் மரியாதை போகட்டும். உங்கள் குலம் அழிந்து நாசமாகட்டும். அடேய் தலைவா இந்த ஜன்மம் இல்லையடா நீ எத்தனை ஜன்மம் எடுத்தாலும் நன்றாக துயரபடுவாய். உனக்கு துன்பம் தான் மேலோங்கும். இந்த பூமியில் அசுரர்கள் மேலோங்குவர் உங்களை எல்லாம் அடித்து நொருக்குவர். என்னை நயவஞ்சகமாகவா கொல்ல பார்க்கிறாய். இதோ பார் என் பிரவாகத்தை நான் யார் என்பதை காட்டுகிறேன் .

சந்திரமாகஜ் அதற்க்குள் ஒடி வந்தார். நர்மதா நில் வேண்டாம், வேண்டம் உன் ஆவேசம் நில் அம்மா நில் நான் செல்வதை கேள். அம்மா பெண்ணின் சாபம் ஆபத்து,

நில்லம்மா.

நர்மதா பெரிதாக புன்னகைத்து நதியில் வீழ்ந்தாள். புன்னகைத்துக்கொண்டே பெரிய சப்தத்துடன் வார்த்தைகள் வந்தது. இதோபார் பிரவாகமாக வந்து உங்களை அழிக்கிறேன் பிரவாகமாக ஒடுவேன். எல்லோரையும் நாசம் செய்வேன் என்று பலத்த கூச்சலிட்டாள். நதி பிராவாகமாக பெருக்கேடுத்து ஒடியது திசைகளில் எல்லாம் நீர் நிரம்ப தொடங்கின.

ஏய்! நர்மதா நில் இவ்வளவு சொல்லியும் நீ கேளமல் செய்கிறாய் அல்லவா கங்கை போன்ற புகழ் உனக்கு இல்லாமல் போகும் என்று சந்திரமகராஜ் நர்மதாவை சாபம் இட்டார்.

அதனால் தான் ஞானபீடமும், பல ஞானிகள் இங்கு வாழ்ந்தாலும் அவளின் புகழ் சாந்தமாகவே இருந்தன. நதியின் பிரவாகம் குறைய தொடங்கியது மக்களும் அன்று முதல் பிரச்சனைகள், எதிரிகள் என்று தொடங்க ஆரம்பித்து. நல்ல வீரம் உடையவன் மற்றவர்களை தங்களுக்கு அடிமையாக்கிக் கொண்டனர். அசுரர்கள் வந்து மக்களை துன்புருத்தினர். இதற்கு என்ன தான் விமோசனம் என்று எல்லோரும் திகைத்தனர். ஈசனை பிரார்த்தித்தனர்.

நர்மதாவை ஈசன் அழைத்தார். ஞானபீடத்தின் தேவதையே, ஞானியர்களை காப்பவளே, தீய என்னமும் நயவஞ்சகமும் கொண்டவர்கள், உன் ஞான பீடத்திற்கு வர முடியாது அம்மா. நீ ஞானியர்களின் வாசஸ்தலம் என்று நர்மதாவை தேவர்களும், ஈசனும் புகழ்ந்தனர் புகழ்ச்சியெல்லாம் கேட்டு மனம் குளிர்ந்தாள்

அம்மா! மக்கள் அசுரர்களால் பாதிப்படுகின்றனர். இது நீ இட்ட சாபம் இதற்க்கு விமோசனத்தை கொடு அம்மா, தேவதையே! பூமி செழிக்க வேண்டும். தர்மம் நிலைக்க வேண்டும் கருணை புரிந்தருள்வாய்.

நான் உங்கள் புகழை ஏற்றுக் கொண்டேன். அசுரர்களை அழிக்க இறைவனின் அவதாரங்கள் தொடங்கும். நான் சாந்தமாய் அனைவருக்கும் ஆசிர்வதிக்கிறேன்.

தேவர்கள் எல்லோரும் கலசம் வைத்து ஷோடஷ உபசாரம் செய்து அவளுக்கு நீராட்டினார்கள். நர்மதா கங்கை பேன்று நீ ஞானபீடமாக இங்கே இருப்பாய். இந்த நதியின் பெயர் நர்மதா தீர்த்தம் ஆகட்டும் ப்ருகுவால் இந்த தீர்த்தம் உற்ப்பத்தி ஆனதால் நீ ப்ருகுவின் மகளாவாய். உலகம் உள்ள வரையில் நீ என்றும் தேவதையாக திகழ்ந்து எல்லோருக்கும் அருள்வாய் அம்மா . உன்னால் அனை வருக்கும் ஞானம் உண்டாகட்டும். நீ நல்ல உத்தமி திருமணம் ஆகாதவர்கள் உன்னை நினைத்து பூஜை செய்தால் அவர்களுக்கு திருமணம் நிச்சயம் ஆகும். கணவனை பிரிந்தவர்கள் உன்னை பூஜித்தால் நிச்சயம் ஒன்று சேருவார்கள். எல்லாவற்றிர்க்கும் மேலான ஞானத்தை வேண்டுபவருக்கு ஞானத்தை அருளும் ஞானம்பிகை அம்மா நீ. உன் புகழ் ஒங்கட்டும். நீ உலகில் இருந்து அனைவருக்கும் நல் தொண்டினை செய்வாயாக என்று. தேவர்களும், மும்மூர்த்திகளும் வாழ்த்திவிட்டு சென்றனர்.

சந்திரமகராஜ் அம்மா ஞான சொரூபினியே பாவம் அந்த வேடுவன் மனம் திருந்தி உன்னை ஏற்றுக் கொள்ள வந்தான் அம்மா அதற்குள் நீ ஆவேசபட்டு சபித்துவிட்டாயே. தாயே! அவனுக்கு விமோசனத்தை கொடு அம்மா. இப்பூவுலகம் உள்ளவரையில் அவன் பிறந்து அவதிப் படட்டும் என்று அவனை சபித்து விட்டாயே திருந்தி வந்தவனை சபித்தாள் என்ற பெயர் உனக்கு வரும் அல்லவா. அது இல்லாம் இருக்க அவனுக்கு ஒரு விமோசனம் கொடு தாயே.

குரு சந்திரமகராஜே! கவலை வேண்டாம் கலியுகத்தில் இவனுக்கு மகளாக சாட்சாத் காரமான அந்த தேவி ( ஜகதாத்ரி வாக்கு: அதாவது இங்கே என் மகள் தேவியை குறிப்பிடுகிறாள்.) தேவி பிறப்பாள் இவன் எதிர்பட்ட வேறு

பாஷை வேடுவர்களை அழித்ததால் இவனுக்கு மகளாக பிறந்த தேவி அவர்களுக்கு பணிவிடை செய்வாள். செய்து இவன் பாவத்தை கழிப்பாள். சரி தாயே உன் விருப்பப்படியே ஆகட்டும் நீ சொல்லிய வாறே அனைத்தும் நடக்கட்டும் அவனுக்கு பாப விமோசனம் அளித்த புண்ணியவதியே நீ பல காலம் நீடுழி வாழ வேண்டும் அம்மா. உனது பெருமை என்றும் நிலைத்திருக்கட்டும்.

என்ன சீடர்களே இந்த நர்மதையின் புகழை பார்த்தீர்களா?. இவள் பிறப்பின் பெருமையை பாருங்கள். இவள் பிறப்பை தெரிந்து கொண்டால் ஞானம் கிட்டும். நர்மதாவை வணங்க முதலில் கன்னி பூஜை செய்ய வேண்டும் ஒர் கன்னியை ஆசனத்தில் அமர்த்தி அவளை நர்மதாவாக பாவித்து பரிபூரண சிங்காரம் கொடுக்க வேண்டும். (குறிப்பு:- இங்கே சிங்காரம் என்பது மஞ்சள், குங்குமம், வளையல், கொலுசு, நல்ல பட்டாடைகள், வெற்றிலை பாக்கு, பழங்கள் உடன் நல்ல முற்றிய தேங்காயோ ஆல்லது கொப்பரையோ இதை நாம் கொடுக்க வேண்டும் நிறைய பூக்களை தர வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் கன்னி பெண்களுக்கு திருமணம் நிச்சயம் ஆனதும் முதலில் இந்த பூஜையை செய்து விட்டு தான் மற்ற எல்லாவற்றையும் தொடங்குவார்கள்.) என்ன சீடர்களே நர்மதாவின் புகழை கேட்டீர்களல்லவா?.

குருடே! எங்களுக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது.

சீடர்களே! உங்கள் சந்தேகம் என்ன என்று எனக்கு தெரியும். நீங்கள் கேட்கப் போவது தேவி என்பவள் யார்? அவள் எதற்காக கலியுகத்தில் பிறக்க வேண்டும்? யாரோ செய்த தவறிற்கு அவள் பரிகாரம் செய்ய வேண்டுமா? இந்த கேள்விகளை தானே நீங்கள் கேட்கப் போகிறீர்கள்.
எல்லோரும் ஆம் என்று தலை அசைத்தனர்.

அந்த நர்மதாவின் சரித்திரம் இத்துடன் பூரணம் அடையவில்லை. இன்னும் ஒரு பாகம் உள்ளது. அதை படிக்க வேண்டும். இந்த நர்மதாவின் சரித்திரம் படிப்பவர்கள்

பூரணபாகத்தையும் படித்து முடிக்கத்தான் வேண்டும். அப்பொழுது தான் பரிபூரண மங்களம் ஏற்படும். இனி உங்கள் கேள்விகலுக்கு பதிலை சொல்கிறேன். நர்மதா விடம் விடை பெற்றுக் கொண்டு கங்கையை கண்டு இமயத்திற்கு தவம் செய்ய போகிறேன் என்று கூறினார் ரிஷி. நர்மதாவிற்கு நல்ல அறிவுரைகளை கூறி புறப்பட்டார். புறப்பட்டவர் இமாயத்திற்கு சென்றார் கோமுகத்தில் நீராடி விட்டு அந்த கங்கா தேவியை குறித்து தவம் செய்தார்.

கங்கா தேவியும் அவர் முன் தோன்றி ரிஷியே தாங்கள் இங்கிருந்து மேலே நமது ஜகதாத்ரி வனத்திற்கு தாங்கள் போகலாம் என்றாள்.

தாயே! மனிதர்களின் பாவங்களை நீக்குபவளே என்றும் தூய்மையாக திகழ்பவளே முதலை வாகனத்தில் அமர்பவளே உனக்கு நிகர் வேறு நதி ஏதம்மா? பரந்தாமனின் பாதங்களில் இருந்து உற்பத்தியானவளே. அந்த ஈசனின் ஜடாமுடியில் நிலை கொண்டவளே பகீரத தவ பயனால் கருணையுடன் அனைவருக்கும் காட்சி தருபவளே, முப்பெரும் தேவிகள் நீராடும் புண்ணிய தீர்த்தமே, ஜகதாத்ரி வனத்தில் வாசம் செய்யும் ஜனனியே, உன் திருவருள் என்றும் எங்களுக்கு வேண்டும், அம்மா, தாயே, தேவதையே தயையுடன் நீ எப்பொழுது உலகில் தோன்றுவாய்? அதாவது தேவதையாக தோன்றுவாய்?.( நதியாக இல்லாமல் நேவதையாக தோன்றுவாய் என்று கேட்கிறார் ).

தபஸ்வியே! நானும் தோன்றுவேன் என் மூலம் பீஷ்மன் என்ற மகாபுத்திரன் தோன்றுவான். தவசிரேஷ்டனாக விளங்குவான். மகாபாரத போரில் ஏகாதசி அன்று முள் படுக்கையில் அதாவது முட்கள் நிறைந்த படுக்கையில் விழுவான். அந்த பரந்தாமன் கருணை கூர்ந்து விஸ்வரூப தரிசனத்தை அவனுக்கு அளித்து ( காட்சி தந்து ) அவனை தன் உள் ஐக்கிய படுத்திக் கொள்வார்.

தாயே தயாபரி உனக்கு பிறக்க போகும் குழந்தை இப்படி

துயரப்பட வேண்டுமா?.

கேளுங்கள் மகாரிஷியே கேளுங்கள். நதி எப்பொழுதும் தியாகம் செய்கிறது. அது தன் நலம் கருதி வாழ்வதில்லை. பிறரின் நலத்திற்காக தான் வாழ்கிறது. பிறருக்காக இரவு என்றும் பகல் என்றும் பாராமல் உழைத்துக் கொண்டே இருக்கிறது. தன்னை பற்றி பொருட் படுத்தாமல் மற்றவர்களின் துன்பத்தை துடைக்கிறது. இப்படிபட்ட நதி தேவதையின் புதல்வன். எப்படி மகரிஷி இருப்பான்?. இந்த அத்தனை குணங்களும் அந்த பீஷ்மரிடம் பொருந்திவிடும். அவன் செய்த தியாகமும், புண்யபலனும் அதிகம் இருப்பதால் அவன் உடலை வெறும் பூமியில் வைக்க முடியாது. அதை தாங்கும் சக்தி பூமிக்கு இல்லை. குடும்பத்தில் இருந்து கொண்டே, ஒரு ஒரு ராஜ்யத்தில் இருந்து கொண்டே பிரம்மச்சரியத்தை கடைபிடித்து சந்யாசியாக வாழ்ந்தான் அதனால் தான் மகரிஷியே அம்புகளை எய்தி அதன் மேல் படுத்தான். அங்கும் பார்த்தீர்களா தன்னால் பூமிக்கு கேடுவிளைய கூடாது என்ற நல்லெண்ணத்தில், தான் துயரபட்டாலும் உலகக்ஷேமம் உண்டாக வேண்டும் மென்று கருதி அந்த முட்படுக்கையில் படுத்தான். அத்தனை காலம் அவன் செய்த பூஜா பலனின் பெருமை உலகம் உள்ள வரையில் கூறும். அந்த பூஜாபலனின் கருணையால் அந்த பரந்தாமனே அவனுக்கு விஸ்வருப தரிசனம் காண்பித்து விமோசனத்தை கொடுத்தார். இப்படிபட்ட ஒரு மகனை பெற்ற தாயின் சந்தோஷம் எல்லையற்றதய்யா எல்லை அற்றது.

பிள்ளைகளை பெறுவதில் பெருமை இல்லை. நாம் ஒரு பிள்ளைகளை பெற்றாலும் உலகம் போற்றும் படியும் உலகத்திற்காக வாழ்ந்தான் என்பதையும் ஒரு தாய் உலக மக்களால் தன் மகனை போற்றும் போது எவ்வளவு ஆனந்தம் அடைகிறாள் தெரியுமா?. அவன் அடையும் துயரம் பெரிதல்ல. அவன் எடுக்கும் நல்ல பெயர் தான் உலகில் நிற்கும். என்ன மகரிஷியே புரிந்து கொண்டீர்களா?. என் மகன் நல்ல காரியத்திற்காக பிறந்து துன்பங்களை பெற்றாலும் அவன் உலகில் நல்லதை செய்து நல்லவன்

என்ற பெயர் எடுத்ததால் அதுவே போதுமான தல்லவா?.

தாயே! பாகீரதி உன் கருனை எல்லையற்றதம்மா. ஒவ்வொரு தாயும் இதை தெரிந்து கொள்ள வேண்டும், அம்மா, தாயே புண்ணியத்தின் வடிவமே என்னை ஆசிர்வதியம்மா.

முனிவரே மங்களம் உண்டாகட்டும் நீங்கள் எடுத்த செயல்கள் நல்ல விதமாகட்டும் என்று கங்கா தேவி மறைந்தாள்.

(முக்கிய குறிப்பு:- கங்கை தோன்றியதையும் கங்கை மறைந்து கொண்டதையும் பிறகு பீஷ்மர் பிறக்க காரணமும் இதில் விளக்கமாக கூறவில்லை. இது நமக்கு தெரிந்தவையால் நாம் அந்த ஆரம்ப கதையை இதில் சேர்த்து கொள்ள வேண்டும்)

மகரிஷி கங்கையிடம் ஆசி பெற்ற பிறகு நாம் இனி ஜகதாத்ரி வனத்திற்கு போக வேண்டும். தாயே ஜகன்மாதா எல்லாம் உன் செயல் அம்மா அனைத்திற்கும் மூலதாரினி, சக்திஸ்வருபினியே உன்னை காண வந்து கொண்டே இருக்கிறேன் அம்மா என்று பிரார்த்திக் கொண்டு இமாலயத்திலிருந்து பிரயாணித்து நடந்து கொண்டே சென்றார். அப்பொழுது தன்னை அறியாமல் தன் வளர்ப்பு மகளின் ஞாபகம் வந்தது. நர்மதா உனக்கும் சோனனுக்கும் திருமணம் ஆகியிருக்குமோ என்ன நடக்கிறதோ தெரியவில்லையே. நர்மதா நீயும் கங்கையை போல் ஒரு நல்ல குழந்தையை உலகிற்கு தர வேண்டும் அம்மா. அந்த குழந்தையும் உலகில் நல்ல பெயர் எடுக்க வேண்டும் அம்மா.

ஈஸ்வரா! என் பிரார்த்தனையை ஏற்று கொள்ளப்பா. உன் குழந்தை நர்மதாவிற்கு எல்லா நல்லவைகளை செய்யப்பா என்று பிரார்த்தித்துக் கொண்டே வந்து கொண்டு இருந்தார்

## அத்தியாயம்: 20

மகரிஷி திடீரென்று ஒரு பெண் சிரிப்பதை பார்த்தார்.

என்ன யாரங்கே சிரிக்கிறார்கள் என்று இவர் உயரத்தில் சென்று கொண்டிருப்பதால் கீழே பார்த்தார். பகீரதியின் நதியோரம் ஒரு பெண் குளித்துக் கொண்டிருந்தாள். சற்று தொலைவில் ஓர் மரத்தின் கீழ் ஒரு முனிவர் அமர்ந்து கொண்டு இருந்தார். இவள் அவரை பார்த்து ஏதோ சொல்லிக் கொண்டு சிரித்து கொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்தார். யார் இந்த பெண் முப்பெரும் தேவியும் ஒருங்கே வைத்து பார்க்கும் அழகை போன்று இருக்கிறாளே, நல்ல தேஜஸ்வி சூரியனின் தேஜஸ்ஸோ ஊம் ஊம் அதற்கு மேலும் இருக்கிறதே. தேவதைகளுக்கு எல்லாம் அதிபதியோ!. அம்மா தாயே சக்தி ஸ்வரூபினி என்னை சோதிக்து பார்க்கிறாயா. உன்னை அடையாளம் கண்டு விடுவேன் என்றா? தாயே ஜகத்ஜனனி உன் விளையாடல்கள் போதும் அம்மா எனக்கு உன் சக்தி ஸ்ரூபத்தை காண்பி அம்மா என்று உச்சியிலிருந்தே பிரார்த்திக் கொண்டிருந்தார்.
தேவி கங்கையிலிருந்து எழுந்து ஸ்வாமி! இங்கு ஒரு முனிவரின் வாடை வருகிறதே. தவ ஸ்ரேஷ்டர் ஒருவர் வந்திருக்கிறார் போல் தெரிகிறது.

தேவி அதை பற்றி கவலை எதற்க்கம்மா எத்தனையோ தபஸ்விகள் இவ்வழியாக உன் தாயின் இருப்பிடத்திற்கு செல்வார்கள். வா நாம் போய் நம் பணிகளில் ஈடுபடலாம். இருவரும் தங்கள் பணிகளை புரிய உள்ளே சென்றுவிட்டனர்.

இவ்வளவு நேரம் ஜகன் மாதாவை பிராத்தித்துக் கொண்டு இருந்த முனிவர், போதும் அம்மா உன் விளையாடல் தரிசனம் கொடம்மா என்று கண்ணை திறந்தார். அவர் கீழே பார்க்கும் போது யாருமில்லை. ஆஹா! என்ன விந்தை சற்று முன் நான் இங்கு பார்த்தது என்ன?. தாயே இது என்ன மாயம். மாயா ஸ்வரூபினி மாயை உற்பத்தி செய்பவளே எங்கம்மா சென்றாய் ? தேவி கருனை கண் பாரம்மா என்று பிராத்தித்தார். இவர் பிராத்தித்தது என் ( ஜகதாத்ரியின் ) காதில் விழுந்தது. மேலும் ஏதாவது ஒரு தவறு நடந்துவிட போகிறதே என்று எண்ணி உடனே நான் ( ஜகதாத்ரி ) முனிவருக்கு அசிரீரியாக கூறினாள். தவமுனி சிரேஷ்டரே!

வாங்கள். தாங்கள் என்னை நோக்கி வர வேண்டும். மற்றவைகளை தங்களுக்கு இங்கே கூறுகிறேன். நீங்கள் எதையும் பொருட் படுத்தாமல் வாருங்கள்.

தாயே! சாகம்பரி, பிரம்மி, பர்வதவர்த்தினி, பராசக்தி உன் பாதகமலங்களில் எனது சரணம் அம்மா. இதோ உன்னிடம் வருகிறேன் அம்மா. முனிவர் என் இருப்பிடத்திற்கு வந்தார். தாயே காருண்ய சுந்தரியே, கதம்பவன வாஸினியே, காலங்களை நிர்ணயிப்பவளே அந்த ஆதிசக்தியின் அம்ச சொரூபினியே தேவி நீ எங்களுக்காக பலரூபங்களை உலகத்திற்க்கு எடுத்தாயே உன்னை துதித்தவருக்கு துணையிருக்கிறாயே, அகங்காரிகளை விரட்டுக்கிறாயே, தனியாக துயரத்தில் நிற்பவருக்கு தன்னையே தந்தருளும் தயாமாத ஸ்வருபினி கல்வி, வீரம், செல்வம் எனப்படும் முன்றையும் வாரி வழங்கும் தெய்வமே காரணமாயிருந்து, கார்யமாய் செய்து காத்து நிற்கும் கார்ய வாஸினியே, சிம்மத்தை துணை கொண்டு சிந்தூர திலகமிட்ட இந்த பஞ்சபீடத்தின் ஆட்சி புரியும் ஸ்ரீ ஓம் ஆதிசக்தி அம்ச ரூபினியே, ராஜ்ய பரிபாலினியே, ராஜராஜஸ்வரியே இந்த மகாதபஸ்வியின் சரணங்களை ஏற்கொள்ளம்மா. தாயே ஜகதாத்ரி உனது பாதங்களை சரண் ஆடைகிறேன்.

மகாதபஸ்வியே வாருங்கள் என் கடாக்ஷமும். நமது ஸ்ரீஓம் ஆதிசக்தி தேவியின் பரிபூரண திருவருளும் உங்களுக்கு என்றும் இருக்கட்டும். உங்கள் வரவு நல்லதாகட்டும். மகாமுனிவரே நீங்கள் கீழே அங்கே பார்த்தது என் மகள் தேவி, மற்றும் உத்திரேஷ்டமகரிஷி இவ்விருவர்களை தான் நீங்கள் பார்த்தீர்கள் .

தாயே! தங்கள் மகளா ஒன்றும் புரியவில்லையே. அம்மா தயை கூர்ந்து முழுவிவரங்களையும் தாங்கள் திருவாய் மொழிந்தால் நன்றாக இருக்கும் அம்மா.

தவ சிரேஷ்டரே! பலகாலம் நீங்கள் தவங்கள் புரிந்திருக்கிறீர்கள். தன்னல மற்று வாழ்ந்தீர்கள் உங்களுக்கு

இதை கூற நான் பெருமை அடைகிறேன். இந்த சரித்திரத்தை எல்லோரும் கேட்க தான் வேண்டும். இந்த சரித்திரத்தை கூற எனக்கு வாய்பு அளித்த அந்த நமது எல்லா வற்றிற்கும் மூல முழு முதற் சக்தியாய் விளங்கும் நமது ஸ்ரீஓம் ஆதி சக்திக்கு எனது பல கோடி நமஸ்காரங்கள். அந்த ஸ்ரீஓம் ஆதிசக்தி தேவியை , அவள் புகழை எந்நேரமும் நாம் பாடலாம். எனது தாயின் புகழை பாடுவதைவிட வேறு என்ன நான் செய்ய போசிறேன். தவ சிரேஷ்டரே நமது ஸ்ரீஓம் ஆதிசக்தியின் மகிமைகள் அபாரம். அதை கூறிக் கொண்டே இருக்கலாம். எத்தனை உலகங்கள் உற்பத்தி ஆனாலும், எத்தனை தேவ கோடிகளும், மக்கட் கோடிகளும் இருந்தாலும் அத்தனையும் நம் தாயின் ரோமங்களில் உற்பத்தி ஆகின்றன. ஒர் இடம் உற்பத்தியும், மறு இடம் அழிவையும் ஏற் கொள்பவள் அவள். அந்த தாயின் மகிமையை நாம் பாடிக் கொண்டே போகலாம். எப்படி என் தாயிற்கு ஆரம்பமும் முடிவும் இல்லையோ அதே போன்று அவளது மகிமைக்கு ஆரம்மும், முடிவும் இல்லை

தவ சிரேஷ்டரே! . பல கோடி பிரம்மாண்டங்களுக்கு தாயாக இருப்பவள் நம்மையும் உதாசீன படுத்தாமல் ஏற்று கொள்கிறாள். எல்லாவற்றிற்கும் இருப்பிடம் ஸ்ரீஓம் ஆதிசக்தி தானே. அவளது பெருமை இப்புவி எங்கும் பரவ ஒர் சக்தியை அனுப்பியிருக்கிறாள். அந்த சக்திதான் இந்த தேவி என்று தேவியின் கதையை கூறத் தொடங்கினேன். உங்கள் எல்லோருக்கும் தேவியின் கதை தெரிந்ததால் கூறி முடித்த பிறகு என்ன பேசினோம் என்பதில் இருந்து ஆரம்பிக்கிறேன்.

தவ சிரேஷ்டரே! கேட்டீர்களா நம் தாயின் பெருமையை.

அம்மா! தயாபரி, கருணை கடலே நான் என்ன பாக்கியம் செய்தேன் அம்மா. இந்த தபஸ்வியையும் நீ ஏற்றுக் கொண்டு நமது தாயின் பெருமையை கூறினாயே! அம்மா நான் எத்தனை ஜன்மங்கள் எடுத்து உனக்கு பணிவிடை செய்தாலும் அவை ஈடாகாது அம்மா. தாயே நமது தாயின் பெருமையை கேட்க, கேட்க மனம் பூரிப்படைகிறதம்மா.

தாயே இதை நான் கேட்க, இதன் மூலம் எனக்கு கிடைத்த சந்தோஷம் ஈடு இணையற்றது அம்மா. தாயே ஓர் வேண்டு கோள். இந்த மகத்தான மகிமையை எனக்கு தந்து அருளிய உனக்கு நான் பணிவிடை செய்ய வேண்டும் அம்மா என்னை உனது சேவகிகளுக்குள் ஒருத்தி ஆக்கிக்கொள். தவ சிரேஷ்டரே! கவலை வேண்டாம். தங்கள் விருப்பப்படியே நடக்கட்டும். தற்போது எனக்கு சேவை புரிந்து வரும் இந்த சிம்மம் உம்மை போன்ற பெரிய தபஸ்வி பெரிய மகரிஷி அவரது காலம் இப்பொழுது முடிந்து அவர் முக்தி அடைய போகிறார். அதனால் அடுத்தது தாங்கள் சிம்மமாக இருந்து எனக்கு பணிபுரிவீர்கள்,

முக்கியகுறிப்பு:- இவர் இப்படி சிம்மமாக பணியை ஏற்றது, தை மூன்றாம் வெள்ளியாகும்.

அம்மா! தயாபரி பெரும் பாக்கியத்தை தந்தாயே. தன்யன் ஆனேன் அம்மா தன்யன் ஆனேன். அம்மா தாயே நான் வளர்த்த மகள் நர்மதாவின் நிலமை என்ன?

தவ சிரேஷ்டரே நர்மதை அவசரபட்டுவிட்டாள். அதனால் நடந்தவைகளை பாருங்கள் என்று விளக்கமாக கூறினேன். அந்த வேடனுக்கு அதாவது வேடனின் தலைவனுக்கு சாபவிமோசனம் வேண்டும் படி கூறினார். நான் நர்மதையிடம் தேவியை பற்றி கூறி தாங்கள் கங்கையை சந்தித்து வந்த போது எண்ணியதையும் கூறினேன். உங்கள் விருப்பத்தை பூர்த்தி செய்வது ஒரு மகளின் கடமையல்லவா இத்தனை காலம் நீங்கள் அவளை வளர்த்து வந்தீர்கள். அதனால் உங்கள் விருப்பத்தை நிறைவு படுத்துவது அவளது கடமையல்லவா. நீங்கள் நர்மதாவையே வர வேண்டும் என்று எண்ணவில்லை. அவள் மூலம் ஒரு குழந்தை வேண்டும் என்று எண்ணிணீர்கள். இதனால் குரு சாபத்தால் நர்மதாவிற்கு இப்பொழுது புகழ் எதுவும் இல்லை. நடக்க போகும் யுகங்களில் அவளுக்கு மகத்துவம் இல்லை. கலியுகத்தில் நம் தேவி பதினெட்டு ஜன்மங்கள் எடுப்பாள் அல்லவா. அதில் ஒரு ஜன்மம் உங்களது விருப்பம் போல்

ஆகட்டும் என்று நர்மதாவிடம் கூறினேன். அவளும் சந்திர குரு மகராஜ்க்கு வாக்கு அளித்தாள். இந்த தேவி பெண்ணாக பிறந்து அங்கே சேவைகளை புரிந்து அந்த வேடரின் பாபத்தை நீக்குவாள். அந்த வேடருக்கு முக்தி மார்கத்தை காட்டுவாள்.

தவ சிரேஷ்டரே! தனக்காக வாழ்வது சுலபமானது. ஆனால் பிறருக்காக வாழ்வது மிகவும் கடினமானது. அப்படி வாழ்வது தான் உண்மையானது என்பதை காட்டுவதற்காக தேவியின் பதினெட்டு அவதாரங்களில் இதுவும் ஒரு அவதாரம் முக்கியமாகும். உங்கள் விருப்பமும் பூர்த்தியாகும்.

தாயே! இந்த முனிவரின் எண்ணத்தையும் நிறை வேற்றுபவளே என் மகள் நர்மதா பூமி உள்ளவரையில் வாழட்டும் தாயே உன் கருணை எல்லையற்றதம்மா. உந்தன் திருவாய் மொழியை கேட்டு நான் தன்யன் ஆனேன் அம்மா இவ்வாறு கூறி வணங்கினார். வணங்கியவர் மேற்படி சொன்ன தினத்தன்று அடுத்த சிம்மமாக பதவியேற்றார். இதனால் தான் ஞானமார்க்கத்தின் முக்கிய இடம் நர்மதாவாக திகழ்ந்தது. காலங்கள் சென்றன.

## இரண்டாவது நர்மதாவின் கதை ஆரம்பம்:

## அத்தியாயம்: 21

ஓர் கிராமம். கிராமத்தில் சிவ பூஜை செய்யும் ஒரு குடும்பம் இருந்து வந்தது உலக வழக்கத்தில் பண்டாரம் என்று சொல்லுவார்கள். இவர்கள் சிவனுக்காக தினமும் பூக்களை பறித்து வந்து மாலை கட்டி தருவார்கள். மிகவும் சுத்தமானவர்கள். சிவ பூஜையை அன்றி வேறு எதையும் எண்ணாதவர்கள். சிவபூஜை கைங்கரியத்தை தவிர வேறு எதையும செய்ய மாட்டார்கள் அக்காலத்தில் இவர்கள் சிவதொண்டு செய்வதால் இவர்களுக்கு என சொற்ப நிலங்களும், இவர்கள் தங்க வசதியும் கொடுத்தனர் மக்கள். அதாவது ராஜ்யத்தில் கொடுத்தனர் இவர்கள் சிவ பூஜை

செய்யும் குருக்களுக்கு ஒருபடி கீழ் வருவார்கள்.. சிவகுருக்கள் ஆக்ஞையில்லாமல் சன்னதிக்குள் அதாவது கர்பகிரகத்தின் உள் செல்ல மாட்டார்கள். இவர்கள் நல்ல சீடர்களாக விளங்கினார்கள். சிவனைப் பற்றிய பெருமையையும் சதா சிவபூஜையும் செய்து கொண்டு வந்தனர்.

இக்குலத்தில் மாதேஸ்வரபண்டா என்று ஒருவர் இருந்தார். அவரது துணைவி பார்வதி மாயி (அம்மா) அதாவது இன்றைய கால கட்டத்தில் பார்க்கும் பொழுது மராட்டிய மொழியை சேர்ந்தவர்களாக இருப்பார்கள்.( இந்த பார்வதி மாயி முதல் நர்மதாவில் வேடுவ குலத்தில் தலைவனாக இருந்து நர்மதா விடம் மன்னிப்பு கேட்க வந்த சோனனின் தந்தை) பார்வதிமாயி தன் கணவனுக்கு நல்ல பணி விடைகளை செய்து வந்தாள். இவர்கள் நர்மதை நதிக்கரையின் ஒரம் உள்ள கிராமத்தில் இருந்தனர். இவர்கள் தங்கியிருந்தது சற்று உட்புறமாக இருந்தது. இந்த நர்மதை கரையின் எதிர்புறத்திலும் ஒரு கிராமம் இருந்தது. அங்கும் மனிதர்கள் வாழ்ந்து வந்தனர் .( இக்கிராமம் தான் வேறு பாஷை கொண்ட கிராமம் அதாவது வேறு பாஷை கொண்ட வேடுவன் இருந்தான் அல்லவா அந்த கிராமமாகும்) இன்றைய காலகட்டத்தில் பார்க்கும் பொழுது இவர்கள் ஹிந்தி பேசி வந்தனர்.

மராட்டியர்கள் ஆதியில் இந்த கிராமத்தை விட்டு பிழைப்பிற்க்காக எதிர் கிராமத்திற்கு சென்றனர் அவர்கள் அப்படியே தங்கி தங்கள் குலத்தை பெருக்கினர். இருப்பினும் இந்த மராட்டியர்கள் கம்மியாகத் தான் இருந்தார்கள்.

இந்த பார்வதி மாயி கருதரித்திருந்தாள் நிறைமாத கர்பிணி ஆன அவள் சிவனுக்கு வேண்டிய பணிவிடைகளை செய்து வந்தாள்.

ஸ்வாமி! பூஜைக்கு வேண்டிய பணிவிடைகளை செய்து விட்டேன். நான் நர்மதை கரைக்கு சென்று நீராடி விட்டு வரட்டுமா? இன்று சிவராத்ரியாயிற்றே இதுவரையில் நான்

சிவராத்திரியில் நீராடுவதை விட்டதே இல்லை. அதே போல் இந்த மகா சிவராத்ரியான இன்றும் நான் நீராட போக வேண்டும் ஸ்வாமி.

வேண்டாம் அம்மா உன் உடல் நிலையை பார்த்துக் கொள். நிறைமாதம் ஆயிற்று இப்பொழுது நீ செல்வது சரியல்ல.
ஸ்வாமி என்னை தவறாக எண்ணாதீர்கள் . நம் உறவினர்கள் எல்லோரும் போகிறார்கள். அப்படி ஏதாவது என்றால் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள், நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் போய் வருகிறேன்.

சரியம்மா பார்த்து செல் நிறைய நேரம் நீரில் இருக்காதே. சீக்கிரம் வந்து விடு என்றார்.
பார்வதிமாயியும் உறவினர்களுடன் நர்மதை கரைக்கு வந்தாள். இவர்கள் பேசியும் சிரித்துக் கொண்டும் நீராடிக் கொண்டு இருந்தனர். தீடீரென்று பார்வதி மாயிக்கு வலி ஏற்பட்டது. உடனே கரைக்கு வந்தாள். பெண்களில் ஒருவர் மூத்தவர் துணியை பிடித்துக் கொள்ளுமாறு இருவரிடம் சொன்னாள். எல்லோரும் சிவனை ஜபம் செய்யுங்கள் என்றாள். குழந்தை பிறந்தது.

நர்மதா நதிக் கரையில் பிறந்ததால் இவளுக்கு நர்மதா என்று பெயர் வைத்தனர். அந்த நர்மதையை போன்று அழகாகவும், பார்ப்பவர்கள் எல்லாம் எடுத்து வைத்துக் கொள்ளும்படியும் இருந்தாள், எல்லோரும் நர்மதை தாயின் புதல்வி என்று இவளை அப்பொழுதே கூறினர். நர்மதையின் புதல்வி நம் தேவி இவ்வாறு இங்கே பிறந்தாள் (பார்வதி மாயியின் பெண்ணாக).

தேவிக்கு அதாவது நர்மதாவுக்கு இரண்டு வயது ஆயிற்று மிகவும் சுட்டிதனமாகவும், எல்லா கேள்விகளையும் கேட்பவளாய் இருந்தாள்.

நர்மதா பாட்டியை பார்த்தாள். பாட்டி நீ ஏன் அம்மாவை போல் பொட்டு வைப்பதில்லை?.

கண்ணே! குழந்தே இதெல்லாம் கேட்கக் கூடாது. எல்லாம் நேரம் வரும் போது நீயாக தெரிந்து கொள்வாய்..

ஊ ஊம் இப்பொழுது சொல்லு எனக்கு இப்பொழுதே தெரிந்தாக வேண்டும் என்று அடம்பிடித்தாள்.

பார்வதிமாயி உள்ளே வந்தாள். ஏய்! என்ன நீ இங்கே அடம் பிடிக்கிறாய்? பாட்டியை தொந்தரவு செய்யாதே.

அவள் ஒன்றும் தொந்தரவு செய்யவில்லையம்மா. ஏதோ குழந்தை என்றாள் பாட்டி.

இல்லையம்மா நான் தொந்தரவு தான் செய்தேன். பாட்டியை ஏன் பொட்டுவைக்க வில்லை என்று கேட்டேனம்மா.

என்ன கேள்விகள் எல்லாம் கேட்கிறாய் என்று கையை ஓங்கினாள் பார்வதி.

பாட்டி குழந்தையை அரவணைத்துக் கொண்டு, பொய் சொல்லாமல் உண்மை சொல்கிறாள் அல்லவா அதை முதலில் ஒப்பு கொள்.

அது சரி இவள் என்ன, என்ன பேச்சுகள் பேசுவது.

குழந்தை தானேம்மா அவளுக்கு என்ன தெரியும்?.

இப்படியே விட்டால்? அதுவும் பெண் குழந்தை இரண்டு வயது நிரம்பிவிட்டது. இன்னும் கல்யாணம் எல்லாம் ஆக வேண்டாமா?. இவள் இப்படி வாயாடுவது சரியா சொல்லுங்கள். அப்படி தான் அன்று குருக்கள் வீட்டிற்கு போய் இருக்கிறாள். அங்கும் ஏதோ வம்பு செய்து விட்டு வந்திருக்கிறாள்.

பாட்டி! நான் அங்கு வம்பு செய்ய வில்லை. குருக்களை

பார்த்து ஒரு கேள்வி தான் கேட்டு விட்டு வந்தேன். அம்மா என் மேல் வீண் பழியை சுமத்துகிறாள் பாருங்கள் .

வீண்பழியா அடி என்று கன்னத்தில் கிள்ளிவிட்டாள்.

பாட்டி !அம்மா செய்வது நியாயமில்லை.

ஏன் அம்மா குழந்தையை கிள்ளினாய்?. சரி கண்ணா அம்மாவுக்கு ஒன்றும் தெரியாது. ஆமாம் நீ அங்கு என்ன செய்து வந்தாய் அதை சொல்லேன்.

அதுவா பாட்டி நான் நேற்று போனேனா குருக்கள் ஒரு சொம்பில் நீரை எடுத்து அவர் பாட்டுக்கு கீழே விட்டார் பிறகு மீண்டும் நீரை எடுத்தார் சொம்பில். அந்த நீரை துளசிசெடி மீது விட்டார். இதை நான்பார்த்தேனா பாட்டி எனக்கு ஒரு சந்தேகம் வந்தது. எதற்காக முதல் சொம்பு நீரை வீணாக தரையில் விட்டீர்கள். அந்த முதல் சொம்பு நீரை துளசியில் விட்டிருக்கலாம் அல்லவா என்று கேட்டேன், இவ்வளவு தான் பாட்டி நான் கேட்டேன், ஐயோ! அந்த மாமாவிற்கு வந்ததே கோபம். இதெல்லாம் உனக்கு ஒன்றும் தெரியாது. சிறுமி சிறுமியை போல் இரு அதிக பிரசங்கிதனம் வேண்டாம் இப்படி திட்டினார் பாட்டி.

பெண்ணே! நீ இனி மேல் அங்கே போகாதே அவர்கள் குருக்கள், அவர்கள் இடத்திற்க்கொல்லாம் நாம் போய் தொந்தரவு செய்யக்கூடாது.

குருக்கள் என்றால் என்ன பாட்டி?.

பார்த்தீர்களா? ஆரம்பித்து விட்டாள். இவள் வாய் தான் சற்று மூடாதோ எதையாவது ஒரு கேள்வியை கேட்டுக் கொண்டிருக்கிறாள். யாரை பார்த்தாலும் இது என்ன? அது என்ன? என்கிறாள்.

போகட்டும் விடு குழந்தை தானே.

அம்மா! குருக்கள் என்றாள் சிவ பூஜை செய்பவர்கள்.

பாட்டி நாமும் தான் சிவபூஜை செய்கிறோம்?.

அம்மா! தாயே நர்மதா தேவி உன் பாதங்களில் வனங்குகிறேன் அம்மா. மேல் கொண்டு கேள்விகளை கேட்காமல் இரம்மா.

பாட்டி! உனக்கு பதில் தெரியாதா?. தெரியாது என்றால் தெரியாது என்று சொல்லேன் .

சரி அப்படிதான் வைத்துக்கொள்ளேன். எனக்கு ஒன்றும் தெரியாது அம்மா என்றாள் பாட்டி.

சரி, சரி நர்மதா உன் அப்பா வந்திருக்கிறார் பார் போ அவரை போய் கேள்விகளை கேளு என்று வெளியில் அனுப்பினால் பார்வதி.

மாமியாரும், மருமகளும் பேசிக் கொண்டனர்.

இவளுக்கு எவன் தான் வந்து வாய்க்கப் போகிறானோ என்று தெரியவில்லையே?. எவ்வளவு வாய். இந்த வாய் அடங்காதா! எப்பப்பாரு எதையாவது ஒன்றை கேட்டுக் கொண்டே இருக்கிறாள். எல்லா நல்ல குணங்களும் உள்ளன, இந்த வாயை குறைத்தால் நன்றாக இருக்கும்.

மாமியார் சிரித்து கொண்டே சொன்னால் குழந்தையை அப்படி சொல்லாதே. நாம் இப்பொழுது சொல்வது நாளை உண்மையாகி விட்டால் நானும் நீயும் தான் வேதனை அடைவோம். எதையும் திட்டாதே. அவள் நன்றாக இருக்கட்டும்.

அதற்குள் நர்மதாவின் தந்தை உள்ளே வந்தார். என்ன இருவரும் ஏதோ விஷயத்தை பற்றி பேசி கொண்டிருக்கிறீர்கள்?.

எல்லாம் உங்கள் பெண்ணை பற்றி தான்.

நீ சும்மா இரு பார்வதி, ஒன்றும் இல்லையடா அவள் குழந்தை ஏதோ பேசுகிறாள்.

ஏதோ இல்லை ஸ்வாமி ஏதோ இல்லை, உங்கம்மாவை பார்த்து பொட்டு ஏன் வைக்கவில்லை என்று கேட்கிறாள். இந்த வயதில் கேட்க வேண்டிய கேள்வியா இது?.

பார்வதி! போகட்டும் விடு. இதை எல்லாம் பெரிது செய்யாதே நானே வேதனை அடையவில்லையே. பிறகு நீ ஏன் அவள் மேல் ஆத்திரப்படுகிறாய்?.

ஆமாம் உங்களுக்கு பேத்தி என்பதால் மிக்கபிரியம். அதனால் அவள் எது சொன்னாலும் பரவாயில்லை. ஆனால் நாளை கல்யாணம் ஆக வேண்டியவள் அல்லவா?.

பார்வதி வயது வந்தால் எல்லாம் சரியாகிவிடும்.

இதை கேட்டுக் கொண்டே இருந்த நர்மதாவின் தந்தை சிரித்தார். எந்த இடத்திற்கு போனாலும் இவளது பேச்சு தான். ஊம் இந்த பெண் எப்படி தான் வாழ போகிறாளோ தெரியவில்லை. சரி எங்கே அவள்.

உங்களை தான் பார்க்க வருகிறேன் என்று வந்தாளே நான் தான் அனுப்பினேன் என்றால் பார்வதி.

ஆமாம் என்னுடன் வந்தாள். நான் பூஜை அறையில் பூஜைக்கு வேண்டியவற்றை வைத்து விட்டு வந்தேனே. இவள் எங்கு சென்று இருக்கிறாள்.

ஆமாம் உங்கள் மகள் எங்காவது வாயாடிக் கொண்டு இருப்பாள்.

இவர் மௌனமாக எல்லாம் அந்த ஈசன் செயல் என்று பூஜை

அறைக்குள் சென்றார்.

இவர்கள் வீட்டில் சிறிய ஈசனின் லிங்கம் இருந்தது. அதன் முன் மௌனமாக அமர்ந்து இருத்தாள் நர்மதா. கண்ணை மூடிக் கொண்டு இருந்தாள், கைகள் இரண்டும் மூடிக் கொண்டிருந்தன. இவள் அமர்ந்திருப்பதை பார்த்த தந்தை அந்த பார்வதி பரமசிவனை மணப்பதற்காக தவம் புரிந்தாள் என்பார்களே. அவள் இப்படி தான் புரிந்தாளோ. என்று எண்ணியவாறு மௌனமாக வெளியில் வந்தார். பார்வதியையும், தன் தாயையும் சைகை காண்பித்து அழைத்தார்.
இவர்கள் என்ன என்றனர் மௌனமாக வாருங்கள் என்று சைகை கான்பித்தார்.

எல்லோரும் உள்ளே வந்து பார்த்தனர். அழகாக அமர்ந்திருந்தாள் தாய்க்கு கண்ணீர் வந்தது. எவ்வளவு அருமையாக உட்கார்ந் திருக்கிறாள் என்றால் மெல்லிய குரலில் .

நீ தான் என் பெண்ணை திட்டினாயே. இப்பொழுது பார் அவள் எப்படி உட்கார்த்திருக்கிறாள் என்று!. இவள் நர்மதாவின் புதல்வி. அவளை போலவே சிவபூஜையில் ஈடுபட்டு இருக்கிறாள் பார். என் மகள் அல்லவா அந்த சிவ பூஜை எவ்வளவு பணிவாக வந்திருக்கிறது பாரென்று தந்தை பெருமையாக கூறினார்.

ஊ ஊம் இருக்கட்டும். சுமந்தவள் நான். தேவகி சுமந்தாளாம் யசோதை பெருமை அடித்துக் கொண்டாளாம். அதே போல் நான் சுமந்தேன். நீங்கள் பெருமை அடித்து கொள்ளுங்கள். ஊக்கும் என்றாள்.

இவர்கள் குசு குசு என்று பேசுவதை கேட்ட நர்மதா சட்டென்று தியானத்தில் இருந்து கலைந்தவள் போல் எழுந்தாள். என்ன நீங்கள் எல்லோரும் வேடிக்கை பார்க்கிறீர்கள்?. ச்சே! ச்சே ஒரு மனுஷியை நிம்மதியாக பூஜை செய்யவும் விடுவதில்லை

உங்களை எல்லாம் திருத்தவே முடியாது என்று தன் பிஞ்சு கைகளை தலையில் அடித்துக் கொண்டாள்.

மூவரும் அவள் அருகிள் அமர்ந்து. ஒரே குரலில் அம்மா தாயே! சிவனிடம் தாங்கள் என்னதான் பிரார்த்தனை செய்தீர்கள் நாங்களும் தெரிந்து கொள்ளளாமா?.
நான் ஏதாவது சொன்னால் எப்ப பார் கேள்விகளை கேட்கிறாயே என்கிறீர்கள். நீங்கள் மட்டும் ஏன் என்னை கேள்விகள் கேட்கிறீர்கள்?.. இதெல்லாம் சின்னவள் விஷயம் இதில் பெரியவர்கள் தலையிட கூடாது.
மூவரும் சிரித்துக் கொண்டனர். இவளை கட்டி அனைத்தனர்

தாய் அவளை பார்த்து என் கண்ணில்லை, என்னை பெற்ற தாய் தானே நீ? சொல்லம்மா, நீ என்ன பிரார்த்தனை செய்தாய் என்று. (பார்வதிக்கு தாய் இல்லை. நர்மதா நதியை தான் தாயாகவே நினைத்திருந்தாள். அதனால் இந்த குழந்தையையும் அடிக்கடி என்னை பெற்ற தாயே என்று செல்லமாக அழைப்பாள். இப்படி அழைத்தவுடன் நர்மதா எவ்வளவு கோவத்தில் இருந்தாலும் என்ன பணி செய்து கொண்டிருந்தாலும் உடனே அதை எல்லாம் விட்டு தாயிடம் வந்து விடுவாள்.) அதே போல் இப்பொழுது சொன்னவுடன் தாயின் கழுத்தை இருக்க கட்டிகொண்டாள்.

அம்மா நான் சிவனிடம் என்ன கேட்டேன் தெரியுமா?

சொல்லு கண்ணா.

அங்கே பார் அந்த அத்தை வீட்டில் என்னை போல் ஒரு பெண் இருக்கிறாள் அல்லவா?

ஆமாம் அதற்கு என்ன இப்போ?.

அம்மா! இப்பொழுது அவர்களுக்கு இன்னொரு குழந்தை இருக்கிறதம்மா. அது அவளது தங்கையாம். நான் அவளை கேட்டேன் எப்படி டீ உனக்கு தங்கை வந்தது என்று

அவளும் சொன்னாள். சிவனை தினமும் கேட்டு வந்தாளாம் அதனால் அவளுக்கு தங்கை கிடைத்திருக்கிறாள். அம்மா! அவள் அம்மா தான் சொன்னாளாம் தினமும் நீ சிவனை கேளு என்று. நீ தான் எனக்கெதுவும் சொல்வதில்லையே என்னை திட்டுகிறாயே. அதனால் நானே யோசித்தேன் நானே சிவனை கேட்க ஆரம்பித்து விட்டேன் . சரிதானே அப்பா நான் செய்வது.

மூவரும் கண்ணீ மல்க அவளை அரவனைத்துக் கொண்டனர். பார்த்தியா பார்வதி! என் பேத்தியை எவ்வளவு நல்ல குணம் பாரடி உனக்காக அவள் பிராத்தனை செய்கிறாள்.

அடேய்! குழந்தைக்கு திருஷ்டி பட்டு விடப் போகிறது. பத்திரமாக அவளை வைத்துக் கொள்ளுங்கள். நமக்கு இருப்பது இந்த ஓர் ஆஸ்தி இவளை நல்லவிதமாக ஒருவனிடம் நாம் கைபிடித்து தர வேண்டும். ஊம் இவளுக்கு ஏற்றவன் எங்கிருக்கிறானோ என்று பாட்டி முனுமுனுத்துக் கொண்டு சென்றாள்.

வாயிலில் ஒரு குரல் வந்தது ஐயா! யாரும் இல்லையா வீட்டில்?.

வாருங்கள் வாருங்கள் சோமநாதரே வாருங்கள் எப்படி உங்கள் சௌக்கியம் எல்லாம்?.

மாதேஸ்வரா! எல்லாம் அந்த ஈசனின் செயலில் நல்ல விதமாய் செல்கிறதப்பா.

என்ன அக்கரையிலிருந்து இக்கரைக்கு வந்து விட்டீர்கள்?.

ஒன்றும் இல்லை சில பண்டங்களை மாற்றி விட்டு போகலாம் என்று வந்தேன் அப்படியே நம் குலத்தவராயிற்றே நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்று பார்த்து விட்டு இங்கு சாப்பிட்டு விட்டு தான் போக போகிறேன் .

ஐயோ! இதென்ன பெரியவார்த்தை தராளமாக நீ இங்கு வந்து சாப்பிடலாமே.

அதனால் தான் அப்பா உரிமையுடன் கேட்டேன் . நம் குலத்தவர்கள் வெளியில் எதுவும் உண்பதில்லை அல்லவா. சரி இருக்கவே இருக்கிறாய் நீ தூரத்தில் உறவும் கூட, அதே நேரத்தில் நாம் இருவரும் நல்ல நண்பர்கள் அதனால் தான் இங்கே வந்தேன் அப்பப்பா என்ன வெய்யில்!.

சற்று மோர் குடிக்கிறீர்களா?.

இரு கை கால்களை அலம்மி கொண்டு வருகிறேன்.

நர்மதா அவள் தந்தையை பார்த்து கேட்கிறாள் அப்பா இங்கே வாயேன் இரகசியமாக காதில் யாரப்பா அது உயரமா இருக்கிறாரே?.

என்னப்பா ?என்ன உன் மகள் ஏதோ கேட்கிறாளே!.

ஒன்றுமில்லை குழந்தை நீ யார் என்று கேட்கிறாள்.

அம்மா! உங்க அப்பன் இருக்கிறானே உங்க அப்பன் அவனுக்கு நன்பன் அம்மா.

சரி மாமா நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?.

ஊம்! பேஷ், பேஷ் நன்றாக தான் பேசுகிறாள் நான் எதிர்த்த கரையில் அதோ அங்கே இருக்கிறேன் அம்மா. ரொம்ப தூரம். இந்த நர்மதை ஆற்றை தான்டி தான் போக வேண்டும்.

ஆற்றில் போவீர்களா!.

ஆமாம் அம்மா.

உங்களுக்கு பயமாக இருக்காது!?.

பயம் எல்லாம் இருக்காது அம்மா. நர்மதா தாய் இப்படி தான் நம்மை சேர்க்கிறாள் அம்மா.

ஆற்றில் சுழல் வரும் மூழ்கிவிடுவார் என்று எல்லாம் சொல்கிறார்களே?.

பார்வதி உள்ளிருந்தே நர்மதா வா இங்கே என்றாள்.

இதோ வருகிறேன் அம்மா. ஒரே ஒரு கேள்வி தான் இருக்கிறது ஆமாம் ஆற்றில் சூழலில் படகு முழுகாதா யாரும் சாகமாட்டார்களா?.

அப்படி போவர்களும் உண்டம்மா எல்லாம் அவரவர்கள் விதி. அப்படி போவதை நாங்கள் அந்த நர்மதா தாய் எடுத்துக் கொண்டாள் என்று சொல்லுவோம்.

என்ன நீங்கள் குழந்தையிடம் போய் எல்லா வர்த்தைகளும்

நர்மதா உள்ளே போ இப்படி எல்லாம் பெரியவர்களை தொந்தரவு படுத்தக் கூடாது.

குழந்தை தானேப்பா விடு .

என்ன குழந்தை? வயது இரண்டு ஆகிறது. இன்னும் நான்கு ஐந்து வருடத்தில் திருமணம் செய்ய வேண்டும்.

ஆமாம் உன் பெண் சிவராத்திரியில் பிறந்தவள் அல்லவா?. ஜாதகம் எல்லாம் கணித்து விட்டாயா?.

அது ஏனோ தெரியவில்லை எனக்கு ஏனோ மனம் வரவில்லை. குருக்களிடம் சென்று கொடுக்க வேண்டும். இப்பொழுது என்ன அவசரம் என்று அப்படியே தள்ளி போட்டு விட்டேன்.

ஒன்றை செய் நீ ஜாதகமே கணிக்காதே எல்லாம் அந்த சர்வேஸ்வரன் செயல் என்று விடுவோம். என்மகன் மூத்தவன் இருக்கிறான் அவனுக்கு இப்பொழுது வயது பத்து அவன் பெயர் காசிநாத் என்று வைத்திருக்கிறேன். இரண்டாவது மகன் இருக்கிறான் விஸ்வநாத் என்று பெயர் வைத்திருக்கிறேன். மூன்றாவது என்று இழுத்து கொண்டே சிரித்தார்.
என்ன மூன்றாவது ஸ்ரீநாத்தோ என்று சிரித்தான்.

ஸ்ரீநாத் வந்தால் ஸ்ரீநாத் இல்லையேல் அன்னபூர்ணா.

ஒஹோ! அப்படியா விஷயம்  ஆமாம் இன்னும் எத்தனை நாளில் வரும்.

ஊம் இன்னும் இருக்கிறது, மூன்று நான்கு மாதங்கள். மாதையா! நான் சொல்வதை கேள். உன் பெண்ணை என் மூத்த பையனுக்கு மனைவி ஆக்கிக் கொள்கிறேன். கவலையைவிடு.

அது சரி  சோமநாத் உன் மனைவி கங்காபாய்.....

அவள் சற்று ஒரு மாதிரி தான். அதையெல்லாம் நீ பொருட்படுத்தாதே. இதோ பார் பையன் நல்லவன் அதனால் யோசிக்காதே. நான் தான் இருக்கிறேனே எல்லாம் சமாளித்து கொள்வேன் எனக்கு உன் பெண்ணை ரொம்ப பிடித்திருக்கிறது அவள் தானய்யா என் வீட்டு மருமகள் நீ ஒப்புக்கொள்ள வில்லை என்றாள் நான் தூக்கிசென்று விடுவேன். என் மகனுக்கு அவளை கட்டி விடுவேன்.

இருவரும் சிரித்துக் கொண்டே உள்ளே வந்தார்கள்.

அதெல்லாம் வேண்டாம் சோமநாத் எல்லாம் அந்த ஈசன் செயல் ஆகட்டும்.

## அத்தியாயம்: 22

இப்பொழுது நர்மதாவிற்கு நான்கு வயதுகள் நிரம்பின.

பார்வதிமாயி பிரசவ வலியால் துடித்து கொண்டிருந்தாள்.

அப்பா! அம்மாவுக்கு என்ன ஆயிற்று!. ஏன் இப்படி கஷ்டபடுகிறாள்?. நீ போ உள்ளே, போய் பார் அவளை, இல்லையேல் என்னை அனுப்பு.

நாம் அங்கெல்லாம் போகக் கூடாதம்மா. நீ குட்டி பாப்பாவை கேட்டாய் அல்லவா?. இப்பொழுது குட்டி பாப்பா வர போகிறான் பார். குட்டி பாப்பா வேண்டுமென்றால் நீ போய் சிவனிடம் பூஜை செய் என்றார்.

தந்தை சொல்லியதை கேட்டு மகளும் சரி அப்பா நான் சிவனை பூஜிக்கிறேன் என்று உள்ளே செண்றாள் சிவனிடம் உட்கார்ந்து கண்ணை மூடினாள். எத்தனை நேரம் போனதோ தெரியவில்லை, குழந்தை அழும் குரல் கேட்டது. கண் விழித்து வெளியே ஓடி வந்தாள்.

வீட்டில் அனைவர் முகத்திலும் சிரிப்பு இருந்தது.

அப்பா, அப்பா குட்டி பாப்பா எங்கே அப்பா?.

உள்ளே இருக்கிறான் அம்மா, உனக்கு தம்பி பிறந்திருக்கிறான் அம்மா.

தம்பியாப்பா?. அது குட்டி பாப்பாதானே?.

கண்ணு அது குட்டி பாப்பா தான்.

அப்பா நான் போய் தூக்கட்டுமா?.

இப்பொழுது எல்லாம் நீ தூக்கக் கூடாது. கொஞ்ச நாட்கள்

கழித்து நீ தூக்கலாம்.

அப்பா இவனுக்கு என்ன மூக்கே இல்லையே!. அப்பா இவன் கண் ஏன் குட்டி குட்டியாக இருக்கிறது?. ஐய இந்த குட்டி பாப்பா எனக்கு பிடிக்கவில்லை.

ஏய்! நர்மதா அப்படி எல்லாம் சொல்லக் கூடாது.

பின் என்னப்பா தலையில் முடியே இல்லை!.

இவள் கேட்கும் கேள்விகளை பார்த்து எல்லோரும் சிரித்தனர். இங்கே இவளது தம்பியாக உத்திரேஷ்ட மகரிஷி பிறந்தார்.

குழந்தைக்கு ஒரு வயது நிரம்பியது இவனுக்கு நல்ல பெயர் சூட்ட வேண்டுமே என்று எல்லோரும் யோசித்து கொண்டிருந்தனர்.

சட்டென்று நர்மதா அங்கு வந்தாள், அப்பா தம்பிக்கு பெயர் வைக்க போகிறீர்களாமே?.

அதை பற்றி தானம்மா நாங்கள் எல்லோரும் யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

அப்பா நீங்கள் ரொம்ப மோசம் அப்பா.

திகைத்துவிட்டார் ஏனம்மா என்ன சொல்கிறாய்?.

பின் என்ன நம்ம சிவன் தானே இந்த தம்பி பாப்பாவை கொடுத்திருக்கிறார். அப்ப நாம் சிவன் பெயரை தானே வைக்க வேண்டும்.

ஆமாம் அம்மா நீ சொல்வதும் சரிதான் கண்ணு, சிவன் என்று கூப்பிட்டாள் நன்றாக இருக்காது அம்மா அதன் அர்த்தம் வேறாகி விடும். ஆனால் சிவஜி என்று அழைக்கலாம்.(

சிவஜி என்பது தான் பிற்காலத்தில் சிவாஜி என்று வந்தது பெயர்.) சிவஜி என்ற பெயர் இங்கே உத்திரேஷ்ட மகரிஷிக்கு சூட்டப்பட்டது.

அக்காவும், தம்பியும் இங்கே அதிக பாசமாக இருந்தனர். ஒருவரை விட்டு ஒருவர் பிரிவதே கடின மாயிற்று.

ஏய்! சிவா அக்காவின் மேல் அதிக பாசம் வைக்காதே. இன்னும் ஓரிரண்டு வருடங்களில் திருமணம் செய்து கொண்டு போய் விடுவாள். பிறகு நீ தனியாக தான் இருக்க வேண்டும்.

அக்கா! உண்மையாகவா என்னை விட்டு போய் விடுவாயா ?என்றான்.

உன்னையும் அழைத்து போகிறேனடா என்றாள் நர்மதா.

ஆமாம் அவனையும் அழைத்துக்கொள் எங்களையும் அழைத்துப் போ போடி வேலையத்தவளே .

எனக்கு நிறைய வேலை இருக்கிறது, நீ தான் வேலை இல்லாமல் இருக்கிறாய் என்றாள் தாயை நோக்கி .

சரி, சரி மாட்டு தொழுவத்தை எல்லாம் சுத்தப்படுத்து,. வீட்டை எல்லாம் சுத்தப்படுத்தி வை .

ஏன்! என்னவாம் பெரிய விஷேசம் என்றாள் நர்மதா.

அம்மா! தாயே என்னை பெற்றவளே உன்னை பெண் பார்க்க வருகிறார்களம்மா.

ஐய என் மகளே எப்பொழுது அம்மா?.

அழகு காட்டுவதை பார் வரேன் இருடி உன்னை என்று ஓடி வந்து கட்டி அனைத்தாள். என் கண்ணே அடுத்த வாரம்

வருகிறார்கள்.

அம்மா! நான் பெரியவளாகி விட்டேனா. இப்பொழுதே என்னை அழைத்து சென்று விடுவார்களா?.

சீ !பைத்தியம் இப்பொழுது உன்னை பெண் பார்ப்பார்கள். பிறகு நல்ல நாளாக பார்த்து திருமணம் செய்வோம். பிறகு நீ ஒரு நான்கு, ஐந்து வருடம் எங்களுடன் இருந்து விட்டு போகலாம், ஆனால் அவர்கள் விருப்பப்பட்டால் தான் நடக்கும் . அவர்கள் உன்னை அழைத்து போகிறேன் என்றால் நாங்களும் விட்டுவிடுவோம் அம்மா.

அம்மா! அந்த சோமநாத் மாமா தானே கவலையை விடுங்கள் நான் அவரிடமே பேசி இங்கே தங்கு வதற்கு ஏற்பாடு செய்து கொள்கிறேன் .

போடி! பெண்ணே ஒன்றும் புரியாது உனக்கு. கேள்வி தான் கேட்க தெரியும் உனக்கு என்று சிரித்துக் கொண்டே அவரவர் வேலைக்காக இவர்கள் பிரிந்தனர் . .

நர்மதைக்கு இப்பொழுது எட்டு வயது நிரம்பியது அதாவது ஏழு வயது முடிந்து எட்டு வயது.

திருமண ஏற்பாடுகள் விமரிசையாக நடந்து கொண்டிருந்தன. நர்மதை எப்பொழுதும் போல் எல்லோருடனும் பேசிக்கொண்டும் சுற்றி கொண்டும் வந்திருந்தாள். அவளுக்கு திருமணம் என்பதே அவளுக்கே தெரியாமல் ஏதோ நடந்து கொண்டு இருக்கிறது.

எல்லோரும் இந்த பெண்னை பார் ஒன்றுமே தெரியாதவளாக இருக்கிறாளே! என்றனர்.

பாட்டி! தன் அந்த நாள் அனுபவத்தை சொன்னாள். இவளுக்காவது பரவாயில்லை இப்பொழுது எட்டு வயது

எனக்கு ஆறு வயதில் முடித்து விட்டார்கள். அப்பொழுதே என்னை அழைத்தும் சென்று விட்டனர்.

ஊரில் உள்ளவர்கள் அனைவருமே சந்தோஷமாக இருந்தனர். அதே நேரத்தில் நர்மதா நம்மை பிரியபோகிறாளே என்று வருத்தமும் இருந்தன. நல்ல பெண், நல்ல குழந்தை அங்கு சென்றாலும் நல்ல பேரை வாங்கி விடுவாள், என்ன கேள்விகள் கேட்பதை நிருத்திவிட்டால் இன்னும் உத்தமி ஆகிவிடுவாள்.

எல்லாம் போக போக சரியாகிவிடும். அந்த கங்காபாய் சற்று மேசமானவள் தான், வீட்டிலும் இவள் சமாளித்து விடுவாள், இப்படி எல்லோரும் அமர்க்களப்பட்டனர் .

அக்கரையில் இருந்து பலர் இக்கரைக்கு வந்து சென்றனர்.

கங்காபாய் அவளது மூன்று சிறிய பிள்ளைகள்.அதாவது இரண்டு பிள்ளைகள், ஒரு பெண்.வந்தனர். பெரிய பிள்ளை வரவில்லை கல்யாணத்திற்கு உரியவன். வேலைகள் இருப்பதால் பிறகு வருவான் என்று கூறினாள். ஆட்களுக்கு பொருட்கள் எல்லாம் தர வேண்டும் அதனால் அவனும் அவன் தந்தையும் பிறகு வருவார்கள் என்றாள்.

ஆமாம், ஆமாம் வேலைகள் நிறைய இருக்கும் அல்லவா?.

அதையேன் கேட்கிரீர்கள் போங்கள், வயலில் வேலை செய்பவர்களுடன் பெரிய பாடாகி விட்டது.

இதெல்லாம் சகஜம் தான் சம்மந்தியம்மா.

அவர்களுக்கு தங்குவதற்கு வசதி மற்றதெல்லாம் செய்து வைத்தனர்.

ஏ! நர்மதா இன்னும் உன் கணவர் வரவில்லையாம். பாவம் இவளுக்கு கணவர் என்றால் யார் என்றே புரியவில்லை.

யார் வந்தால் என்ன வராட்டி எனக்கு என்ன?.

அடி மண்டு !அவர் வந்தால் தான் கல்யாணம் தெரிந்து கொள்.

உக்கும் போ என்றாள் நர்மதா.

இப்படி கூச்சலும், அமர்க்களமாக இங்கே இருந்தனர்.

அக்கரையில் தந்தை மகனிடம் அடேய் நீ யாவது சிக்கிரம் செல்லடா. அவர்கள் நம்மை பற்றி தப்பாக நினைப்பார்கள்.

அப்பா! இன்னும் ஒரு மாதம் உள்ளது. ஏன் இப்பொழுதே அவசரப்படுகிறீர்கள்?. .

நன்றாக இருக்கிறதடா நீ சொல்வது!. சம்பிரதாயங்கள் எல்லாம் இருக்கிறது. அப்படியெல்லாம் நீ சொல்வது போல் உடனே நடக்காது.

அப்பா நாம் இருவரும் ஒன்றாக போகலாம், எதற்க்கு அவசரப்படுகிறீர்கள்?.

அடேய்! நான் சொல்வதை தான் கேளேன், நீ புறப்படு. நான் இன்னும் கம்பு மூட்டைகளை எல்லாம் அடுக்கி விட்டு வருகிறேன். வேலை ஆட்களிடம் எல்லாம் சரியாக வேலைகளை சொல்லிவிட்டு வர வேண்டும். அதே போல் கம்பு, நெல், கோதுமை உன் மாமியார் வீட்டிற்கு அனுப்பிவிடு. நாம் பொருட்களை கொடுத்து தான் பெண்ணை அழைத்து வரவேண்டும். அவர்கள் என்ன செய்கிறார்களோ செய்யட்டும். சம்பிராய வழக்கங்களுக்கு மாறாக நாம் நடக்க கூடாது. அடேய் ! அப்படியே நம் தோட்டத்தில் விளைந்த காய்கள் எல்லாம் பறித்து எடுத்து செல்.

அப்பா! ஆகட்டும் பொறுமையாக இருங்கள், நாட்கள்

இன்னும் இருக்கின்றன

அடேய்! நம் உறவினர்கள் எல்லோரும் போய் விட்டனர் டா,. நீ புறப்படு .

இவர்கள் கரைக்கு வந்தனர். பரிசல் காரன் பவ்யமாக கைகட்டி தலைகுனிந்து நின்றான். ஐயா! இவ்வளவு மூட்டைகளையும் ஒரு பரிசலில் ஏற்றிவிடலாம். நம் சாமியை நான் இன்னொரு பரிசில் அனுப்புகிறேன். ஆனால் இன்னும் என் தம்பி வரவில்லை. அவன் வந்த பிறகு நம் சாமி வரட்டும். நான் இதை எல்லாம் ஏற்றி முதலில் செல்கிறேன் என்று பவ்யமுடன் கூறினான்.

அப்பா !அவன் சொல்வதும் வாஸ்தவம் தான் அப்பா. அப்பா எனக்கு நீண்ட நாட்களாக பரிசல் நானே போட வேண்டுமென்ற ஆசை அப்பா.

பரிசல்காரன், வேண்டாம் சாமி பழக்கமில்லாதவர்கள் இதில் வரக் கூடாது சாமி.

ஒன்றும் ஆகாதய்யா நீ முன்னே போய் கொண்டே இரு நான் பின்னால் வருகிறேன் அவ்வளவு தானே?.

தந்தையும் யோசித்தார் பாவம் ஆசைப் படுகிறான். இன்னும் கல்யாணம் ஆனால் குடும்பம் என்று இருந்து விடுவான். இளம் வயதுதானே ஏதோ விரும்புகிறான். ஆனால் மகனிடம் இதோ பார் எனக்கு இஷ்டமில்லை என்றார்.

அப்பா, அப்பா தயவு செய்து அப்பா ஒரே ஒரு முறை.

வேண்டாம் சாமி பொருமையாக இருங்கள் இதோ என் தம்பி வந்து விடுவான் .

அட! நீ சும்மா இருய்யா, எதற்க்கு பயப்படுகிறாய்? உன்னுடன் தானே வர போகிறேன்.

இவன் அதிகம் வற்புருத்தவே தந்தையும் பரிசல் காரனும் மௌனமானார்கள். பிறகு உன் இஷ்டம் என்றார் தந்தை.

இரண்டு பரிசில்களும் போய்க் கொண்டே இருந்தது.

தந்தை தொலைவில் இருந்து பார்த்து கொண்டிருந்தார். பரவாயில்லை பையன் நன்றாக தான் போகிறான் போன ஜன்மத்தில் இவர்களுக்கு மகனாக இருப்பானோ என்னவோ என்று சிரித்துக் கொண்டான் . சரி இவன் போகிறான் இனி நாம் வேலையை பார்க்கலாம் என்று புறப்பட ஆயத்தமானார் . திடீரென்று சூறாவளி காற்று வீச தொடங்கியது. ஐயோ காற்று வீசுகிறதே என்று சற்று நின்று பார்ப்போம் என்று நின்றார்.

சாமி! ஜாக்கிரதையாக வாருங்கள், காற்று வீசுகிறது. இதை எப்பொழுதும் நம்ப முடியாது. திடீர் திடீர் என்று காற்று வீசும்.

சுழல் காற்று அதி பயங்கரமாக வீசிற்று. மழை பெய்ய தொடங்கிற்று. இரண்டு பரிசலும் பிரிக்கப்பட்டன. இவன் சுழல் காற்றில் சிக்கிக்கொண்டான். காப்பாற்று ,காப்பாற்று என்று கத்தினான்.

தந்தை இக்கரையிலிருந்து ஐயோ மகனே! என்று கதறினார். எதுவும் பலன் அளிக்கவில்லை சுழலில் சிக்கிக் கொண்டு அடித்து செல்லப்பட்டான்.

அதிக தொலை தூரத்தில் பிணமாக கரையில் இருந்தான்.

தந்தை, மகனை தேட ஆட்களை அனுப்பினார், இவரும் அக்கரைக்கு விரைந்து சென்றார். மக்கள் அனைவரும் கரையில் தேடினார்கள், மகன் பிணமாக கிடந்தான். ஊரே அழத்தொடங்கியது.

## அத்தியாயம்: 23

கல்யாணத்திற்காக வந்திருந்த கூட்டங்கள் எல்லாம் கலைந்து சென்று விட்டனர் .

நாட்கள் நகர்ந்தன

நர்மதா தன் தம்பியுடன் விளையாடிக் கொண்டிருந்தாள்

பார்வதிமாயி அழைத்தாள். நர்மதா அடிக்கடி வெளியில் சுற்றுவதை நிறுத்திக் கொள். வெளியில் விளையாடக் கூடாது தெரிந்ததா.

அவள் விளையாடி கொண்டிருக்கட்டும் எதற்காக அவளை நீ தண்டிக்கிறாய் என்றார் தந்தை.

ஸ்வாமி! எனக்கும் விருப்பம் இல்லை தான் என்று கண்களில் நீர் மல்க கூறினாள். ஊரில் உள்ளவர்கள் இவள் முகத்தில் முழிப்பது பாபம் என்கிறார்கள். இவளுடன் விளையாடவும் பெண்களை அனுப்புவதில்லை. இவள் ஒரு பாப பட்ட ஜன்மமாம். இன்னும் அவளுக்கு ஒன்றுமே தெரியவில்லை. ஆனால் அவளுக்கு வந்த பழியை பாருங்கள் என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே அழுதாள்.

பார்வதி! அழாதே எல்லாம் அந்த ஈசனின் செயல். இதன் மூலம் ஏதாவது நல்லது நடக்கவும் செய்து இருக்கலாம் அல்லவா?. நாம் எதற்காக அனாவசியமாக வேதனைபட வேண்டும்.

ஸ்வாமி! நான் எந்த ஜன்மத்தில் என்ன பாவம் செய்தேனோ தெரியவில்லையே. எந்த பெண்ணிற்கு நான் துரோகம் செய்தேனோ தெரியவில்லை. அதன் பாபம் இன்று என் பெண்ணை தாக்குகிறதே.

பார்வதி! அவளை எதுவும் தாக்கவில்லை. அவள்

சந்தோஷமாக விளையாடி கொண்டிருக்கிறாள். எதை பற்றியும் கவலையும் படவில்லை. நாம் தான் வேதனையும், கவலையும் படுகிறோம். இதெல்லாம் நாம் செய்த பாவம். நாம் பார்த்து, பார்த்து துக்க படவேண்டும் என்று இருக்கிறது. பார்வதி! ஒன்றை சொல்கிறேன் கேள். தசரதனுக்கு புத்திர பாக்கியம் இல்லை. அதனால் யாகம் செய்து புத்திரர்களை அடைந்தான் அல்லவா?. புத்திரர்களை அடைந்தவன் நிம்மதியாகவா வாழ்ந்தான்?. ராமன் இரண்டு முறையும் நிம்மதியாக தானே காட்டிற்கு சென்றான். அந்த இரண்டு முறையும் சஞ்சலமும், வேதனையும் அடைந்தது யார்? தசரதன் தானே?. இது தான் அம்மா புத்திர சோகம் என்பது. இது அவர்களுக்கு ஒன்றுமில்லை. அவர்களை பெற்ற நாம் பார்த்து, பார்த்து அழ வேண்டும் அம்மா பார்த்து பார்த்து அழ வேண்டும். நாம் செய்த பாவம் அத்தனை கொடியது, அதன் பலனை இப்பொழுது அனுபவிக்கிறோம். கொடிய பாவங்களை செய்பவர்களுக்கு தான் இப்படியான தட்டனை கிடைக்கும்.. இந்த சோகம் இருக்கிறதே, இதை விட கொடியது வேறு எதுவும் இல்லை. நாம் செய்த பாவத்தை கழிக்க அந்த ஈசனை பிரார்த்திப்போம் நீ அனாவசியமாக குழந்தையை எதுவும் சொல்லாதே..

ஆம் பார்வதி ஒன்றை சொல்ல மறந்து விட்டேனே. அடுத்த வாரம் நமது பெரிய குருக்கள் தலைமையில் நம்மவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து நர்மதாவிற்கு என்ன செய்யலாம் என்று பேப்ச போகிறார்கள்.

இதைக் கேட்டு கொண்டே வந்தாள் தாய்.. ஆமாண்டா பெரியவர்கள் இதுக்கெல்லாம் மட்டும் சரியாக வந்து விடுவார்கள். கூட்டமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம். நம் குழந்தை நம்மிடத்தில் இருந்து விட்டு போகட்டும். அவள் தம்பி இருக்கிறான். அவளை பார்த்துக் கொள்ள. நம் காலம் முடிந்தாலும் அவன் பார்த்துக் கொள்வான். குழந்தையை அனாவசியமாக எதையாவது சொல்லாதீர்கள். அவள் நம்மிடத்திலேயே இருந்து விட்டு போகட்டும். கூட்டமாம் கூட்டம் இந்த பெரியவர்கள் மற்றவர்களை

பேச வேண்டுமானால் வந்து விடுவார்கள். வேலை இல்லை இவர்களுக்கு என்று முனுமுனுத்துக் கொண்டே சென்றாள்.

பார்வதி,! அம்மா புரிந்து கொள்ளவே மாட்டேன் என்கிறாளே.

நீங்கள் விடுங்கள் பெரியவர் கூட்டம் என்றால் நாம் போய்த் தான் ஆக வேண்டும். அவர்கள் நிழலில் தானே நாம் வாழ்கிறோம் அதனால் நாம் அவர்களுக்கு மதிப்பு கொடுக்கத் தான் வேண்டும். ஸ்வாமி கவலையை விட்டு நம் பணிகளில் ஈடுபடுவோம் என்று அவளும் உள்ளே சென்றாள்.

ஈஸ்வரா! இன்னும் என்ன, என்ன நடக்கப்போகிறதோ? எல்லாம் உன் செயல்.

ஊரில் முக்கியமான பெரிய மனிதர்கள் கூடினர். சோமநாத்தும், கங்காபாயும் வந்திருத்தார்கள். அவர்கள் தரப்பிலும் சில பெரியவர்கள் வந்திருந்தார்கள் இவர்கள் தரப்பிலும் பெரியவர்கள் இருந்தார்கள், பொதுவாக எல்லாவற்றிர்க்கும் மூத்தவராக ஒரு குருக்கள் அமர்ந்திருந்தார்.

ஊம் என்ன, நாம் எப்படி என்ன தீர்மானிக்கலாம்?..

என்ன தீர்மானிக்க இருக்கிறது. நம் பெண்ணிற்கு நாம் அவனை நிச்சயம் செய்தோம். நிச்சயம் செய்தால் அவன் தான் கணவன் என்று ஆகிவிட்டது. இனி இவள் வேறுமணம் செய்து கொள்ளக் கூடாது. பருவம் எய்திய பிறகு நாம் சம்பிரதாய சடங்குகள் செய்ய வேண்டும் என்றனர் ஊர்மக்கள். அதாவது நர்மதாவின் பக்கம் உள்ளவர்கள்.

சோமதாத் கூறினான் என்ன ஸ்வாமி இன்னும் திருமணமே ஆகவில்லை. அதற்குள் அவளுக்கு விதவை என்று கூறுவது சரியல்லவே. வேண்டுமானால் அவளை நான் எனது இரண்டாவது மகனுக்கு கட்டுகிறேன்.

கங்காபாய் சட்டேன்று மெல்லிய குரலில் திட்டினாள், பேசாமல் இருங்கள். உங்களுக்கு என்ன புத்தியில்லை கர்மம் அவள் வருவதற்குள் ஒரு பிள்ளையை நான் கொடுத்து விட்டேன். இன்னும் அடுத்த பிள்ளையும் கொடுக்க வேண்டுமா?. உங்களுக்கு புத்தி ஏன் தான் இப்படி போகிறதோ தெரியவில்லை.

கூட்டத்தில் ஒருவர் என்னம்மா என்ன சொல்கிறீர்?.

அவள் என்று இழுத்தார் சோமநாத்.

எனக்கு இஷ்டம் இல்லை பட்டென்று கங்காபாய் கூறினாள்.

சோமநாத் இருவரும் மணம் ஒன்று சேர்ந்து ஒப்புவது தான் நல்லது.

நர்மதா தரப்பில் இருப்பவர்களும் கூறினர். அவளுக்கு மாங்கல்ய பாக்யம் இல்லை அப்படி இருக்கும் போது அந்த பெண் கூறுவதிலும் தவறில்லையே. நாளை அவர்கள் இரண்டாவது மகனுக்கும் கேடு வந்தால் நாமா பார்த்துக் கொள்வது?. அதனால் அவர்கள் சொல்வதும் சரிதான்.

சரி ஐயா இவ்வளவு சொல்கிறீர்களே, உங்களில் யாராவது ஒருவர் மருமகளாக ஆக்கிக் கொள்ளுங்கள் என்றார் சோமநாத்.

ஆத்திர படாதீர்கள் சோமநாத். அது எப்படி முடியும். சம்பிரதாயங்கள் எல்லாம் இல்லையா?.

ஆமாம் ! ஐயா ஒரு கன்னி கழியாதவள், அவள் எந்த சம்பிராதயத்தில் வருகிறாள்?.
சோமநாத் ஒருவனுக்கு ஒருத்தி என்று நிச்சயம் ஆன பிறகு அவனை விட்டு வேறு ஒருவனை மணப்பது நம் குலத்திற்க்கு அழகல்ல.

ஆமாம், ஐயா! நீங்கள் சொல்வது வாஸ்தவம் தான். இப்பொழுது அந்த குழந்தையா வேண்டாம் என்று சொன்னாள். நாம் அல்லவா அவளுக்கு நிர்ணயிக்க வேண்டும் அவளுக்கும் ஒன்றும் தெரியாது கணவன் என்ற பெயருக்கே அர்த்தம் தெரியாதவள். அவளை போய் நீங்கள் உதாசின ப்படுத்துவது சரியல்ல என்றார் சோமநாத்.

கங்காபாய் சோமநாத்திடம் சொன்னாள் உங்களுக்கு ஏதாவது நடந்து விட்டதா என்ன? அவர்கள் ஏதாவது மாயா ஜாலம், மந்திர ஜாலம் செய்து விட்டார்களா இப்படி நீங்கள் அவர்களுக்கு பனிந்து வருகிறீர்களே?.

சும்மா இருடீ நீயும் பெண் தானே? .

சோமநாத் நீங்கள் சொல்வது எல்லாம் சரிதான், ஆனால் காலத்திற்கு ஒப்பாதைய்யா. நாம் அன்று முதல் வந்த வழக்கங்களை இப்பொழுது மாற்றுவது சரியல்ல. இப்படி மாற்றினால் நம் குலம் கெட்டுவிடும். அதனால் அவள் விதி அவ்வளவு தான் என்று தாம் தீர்மானிக்க வேண்டியது தான். இதை அனாவசியமாக பெரிது படுத்தாதீர். நம் முன்னோர்கள் வகுத்து வந்த சம்பிரதாயங்களை உடைக்காதீர்கள்.

ஆமாம் சோமநாத் நம் பெரிய குருக்கள் சொல்வதும் சரிதான்.

இரண்டு தரப்பிலும் மக்கள் ஆமாம் என்றனர்.

சோமநாத் நர்மதாவின் தந்தையை பார்த்து கை கூப்பினார். ( இதற்கு மேல் நான் என்ன செய் முடியும் என்பது போல்)

இவ்வாறு இந்த பிரச்சனையை முடித்தார்கள் .

சரி! இவளுக்கு திருமணம் இல்லை என்றாகி விட்டது. இவள் யார் வீட்டில் இருப்பாள்.?

பார்வதி தன் கணவரிடம் மெதுவாக கூறினாள் பெரியோர்கள் முன்பே கூறிவிடுங்கள். நம் வீட்டிதான் இருப்பாள் நம் மகள் என்று நாம் எதற்க்கு அவளை அவர்கள் வீட்டிற்க்கு அனுப்ப வேண்டும்?..

சரி, சரி தலை அசைத்து, எங்க வீட்டிலேயே இருந்து விடட்டும் என்றார்.

கங்காபாய் அவளது அக்காவிடம் மெல்லிய குரலில் இந்த தரித்திரம் எங்காவது இருந்து போகட்டும். நம் வீட்டிற்கு வராமல் இருந்தால் சரி என்று கூறினாள் .

காங்காபாயின் அக்கா சட்டென்று ஐயோ! கங்காபாய் நமக்கு வீட்டு வேலைகள் செய்ய ஆள் இல்லை. உனக்கு அங்கே, இங்கே போக வேண்டுமானாலும் முடிவதில்லை. ஒரு தலைவலி, கால்வலி என்றால் வீட்டு வேலை செய்ய ஆள் இருக்கும் அல்லவா?.

அது சரி அக்கா இந்த தரித்திரத்தை எதற்கு வைத்துக் கொள்ள வேண்டும். விஸ்வநாதனுக்கு திருமணம் ஆனால் அவள் பார்த்து கொள்கிறாள்.

ஐய! கங்கா ஒன்றும் புரியாமல் இருக்கிறாயே, அவள் எப்படிபட்டவள் வருகிறாளோ தெரியாது. இந்த பெண் நல்லவள். பெண்ணை உன் இஷ்டப்படி நீ ஆட்டி வைக்கலாம். மற்றவர்களை பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும் (அதாவது மற்ற மருமகள்களை பற்றி). அதனால் நீ பேசாமல் நம்ம வீட்டிற்கு வரும் படி சொல்லி விடு.

கங்காபாய் சோமநாத்திடம் பாவம் அவள் அவர்கள் வீட்டில் பார்த்து பார்த்து அவர்கள் துண்ப படுவார்கள். நம் பிள்ளையே போய் விட்டான். இவளை பார்த்தாவது நாம் சந்தோஷ படலாம் அல்லவா?. நம் பிள்ளைக்கு பதிலாக இவளை நாம் நம் வீட்டில் வைத்து கொள்ளாலாமே!.

சோமநாதிற்கு ஆச்சரியமாக இருந்தது இது கங்காபாயா பேசுவது! இவள் ஏதாவது சதி செய்கிறாளோ?. சரி எதுவானாலும் நாம் பார்த்துக் கொள்ளலாம். இல்லை நர்மதா எங்கள் வீட்டில் இருக்கட்டும் ஏன் என்றால் பிள்ளை போன வருத்தத்திற்க்கு இவளை பார்த்தால் எங்களுக்கு மனது சாந்தியாக இருக்கும் அல்லவா? . அதனால் எங்கள் வீட்டில் இருக்கட்டும்.

கங்கா அவர்கள் இப்பொழுதே அனுப்பி விட போகிறார்கள், சனி தொலைந்தது என்று அவர்கள் அனுப்பிவிடுவார்கள் அவளால் இப்பொழுது ஒன்றும் வேலை செய்ய முடியாது, எல்லா வேலைகளையும் கற்று கொடுத்து விட்டு பருவம் எய்திய பிறகு அனுப்பச்சொல்.

கங்கா சோமநாதனின் காதை கடித்தாள் பாவம் அவர்கள் இப்பொழுதே அழைத்து சென்றால் வருத்தப்படுவார்கள் அல்லவா? சிறிது காலம் அவர்களுடன் இருக்கட்டும் பிறகு நாம் அழைத்து செல்கிறோம் என்று செல்லிவிடுங்கள்.

ஈஸ்வரா! இவ்வளவு நல்லகுணம் இவளுக்கு எப்படி வந்தது!. இது நம் கங்காபாய் தானா ஒன்றும் புரியவில்லையே!. இவள் சதிகாரி இவள் என்ன செய்கிறாளோ புரியவில்லையே? போதாத குறைக்கு இவள் அக்கா வேறு. அவள் கொடுமை காரி. ஊம்.

என்ன சோமநாத் எப்பெழுது அழைத்து செல்ல போகிறீர்கள்? மௌனமாக இருக்கிறீர்களே! என்றார் கூட்டத்தில் பெரியவர்.

ஸ்வாமி! இப்பொழுது அழைத்து போனால் பாவம் அவர்களுக்கு வேதனை அதிகரிக்கும் அதனால் கொஞ்ச காலம் கழித்து நாங்களே வந்து அழைத்து செல்கிறோம்.

சரி அப்பொழுது சம்பிரதாய சடங்குகள்.
ஸ்வாமி! கூட்டத்தினரே இந்த ஒரு விஷயத்திலாவது என்

விருப்பப்படி விடுங்கள். சம்பிரதாய சடங்குகள் எதுவும் அவளுக்கு தேவையில்லை இதோ இந்த நர்மதை போன்று அந்த நர்மதை கன்னி பெண்ணாகவே இருந்துவிட்டு போகட்டும். இந்த அறியாத வயதில் அப்படி சடங்குகள் செய்வது எனக்கு அவ்வளவாக விருப்பம் இல்லை .

கூட்டத்தில் பெரியவர் சரி சோமநாத் சொல்லியது போல் அவர் விருப்பபடியே இருக்கட்டுமே. அவள் எப்படியும் அவர்கள் வீட்டில் தான் இருக்கப் போகிறாள். அதனால் அப்படியே இருக்கட்டும். இதில் நமக்கொன்றும் ஆட்சேபனை இல்லை.

ஆமாம் ஆமாம் இது அவர் அவர்கள் விருப்பம்.

சரி இனி அவரவர் வேலையை பார்ப்போம் கூட்டம் கலையட்டும் என்று பெரியவர் எழுத்து போனார்.

பார்வதியும், மாதேஷ்வரனும் சோமநாத் கையை பற்றி அழுதனர். தயாள குணம் ஐயா உமக்கு. .

மாதையா! நர்மதா எனக்கு மருமகளாக இல்லா விட்டால் போகட்டும் இன்று முதல் அவள் என் குல தெய்வம் ஐயா! தெய்வம். எங்கள் வீட்டிற்கு வாழ வந்த தெய்வம். நான் அவளை மங்கள கரமாக தான் பார்க்க விரும்புகிறேன். அவள் குழந்தை அவளுக்கு இன்னும் ஒன்றும் தெரியாது. பருவம் எய்தி கன்னி கழித்தால் தான் சம்பிரதாய சடங்குகள், அது மட்டும் அல்ல என் மகன் என்ன தாலிகட்டிவிட்டா சென்றான்?. நாமாக இப்பொழுது ஒன்றை கட்டி அதை அறுப்பானேன்?. அது இல்லாமலே போகட்டும். நீங்கள் அவளை பற்றிய கவலை வேண்டாம் நான் பார்த்து கொள்கிறேன். கொஞ்சம் வயதானதும் நானே வந்து அழைத்து போகிறேன். மூன்று, நான்கு வருடங்கள் கழித்து நான் அவளை அழைத்து போகிறேன்.

சரி சோமநாத் அவர்களே.

சோமநாத்தும் இவர்களிடம் விடை பெற்று சென்றார்.

கங்காபாயும் பார்வதியிடம் வந்து கவலைப்பட வேண்டாம் பார்வதி ஏதோ நடந்தது நடந்து விட்டது உன் பெண் எங்களுடன் இருந்துவிடட்டும் முறைப்படி நீ திருமணம் செய்து கொடுத்திருந்தால் அவள் எங்களுடன் தானே இருப்பாள். அதனால் நாங்களே அவளை அழைத்து செல்கிறோம் நீ கவலைப்படாதே . எப்போதாவது உனக்கு பார்க்க வேண்டும் என்று இருந்தால் ஒரு வேளை வந்து பார்த்து விட்டு போய்விடு.

பார்வதி ஒன்றுமே சொல்லவில்லை தலையை அசைத்தாள்.

நாட்கள் நகர்ந்தன.

## அத்தியாயம்: 24

நர்மதாவிற்க்கும், தம்பிக்கும் பாசம் அதிகரித்துக் கொண்டே போனது.

நர்மதாவிற்கு வீட்டு வேலைகள் அனைத்தையும் கற்று தந்தாள் பார்வதி.

பாட்டியும் அடிக்கடி நர்மதாவுக்கு புத்திகள் சொல்லி வந்தாள்.

பருவம் எய்தினாள்.

பருவம் எய்திய பிறகு பார்வதி நர்மதாவிடம் கூறினாள். நர்மதா நீ இனி பொட்டு வைக்க கூடாதம்மா பொட்டும், பூவும் நீ தொடவே கூடாது. பாட்டி வாயில் துணியை பொத்திக் கொண்டு அழுதாள், அழுது கொண்டே நினைத்தால். இந்த பெண்ணின் வாயை பார் அன்று இது தான் சொன்னது ஏன் பொட்டு வைக்கவில்லை என்று.

ஐயோ ஈஸ்வரா! என் வாயால் எல்லாம் நேரம் வரும் புரிந்து கொள்வாய் என்று சொன்னேனே. அது இந்த குழந்தைக்கு இப்படியா வரவேண்டும். இந்த வாய் இருப்பதை விட இல்லாமலாவது போய் இருக்கலாம் என்று மிகவும் நொந்து கொண்டாள் தன்னை.

அம்மா! ஏனம்மா நான் பொட்டு வைக்கக் கூடாது?. இத்தனை நாள் நான் வைத்திருந்தேனே!.

கணவன் இல்லாதவர்கள் பொட்டு வைக்கக் கூடாது அம்மா.

அம்மா! என் கணவர் யார்? அவர் எப்படி இருப்பார்?. எப்படி இறந்து போனார்?. எனக்கு கல்யாணமே செய்யவில்லையே அம்மா!. இல்லை செய்து விட்டீர்களா?. எனக்கு சரியான ஞாபகம் இல்லை .

என்னை பெற்ற தாயே என்று அவளை கட்டிக் கொண்டு அழுதாள். எல்லாம் காலத்தின் கோலமடி . எல்லா வற்றையும் சொல்லுகிறேன் கேள் மீண்டும் நடந்ததை அனைத்தும் இப்பொழுது நடந்தது போல் கூறினாள்.

அம்மா நான் சோமநாத் மாமா வீட்டிற்கு போக வேண்டுமா?.

வேறு வழியில்லை அம்மா. நீ அங்கு தான் போக வேண்டும்.

சரி அம்மா அப்படியே அங்கு போகிறேன் என்றாள்.

பார்வதி திகைத்து பார்த்தாள்.

உண்மைதானம்மா. நான் சிறிய வயது இருக்கும் போது சோமநாத் மாமா ஒன்று சொல்வார் தெரியுமா யாராவது சுழலில் சிக்கிக் கொண்டால் அவர்களை நர்மதா தேவி எடுத்து கொண்டாள் என்று அர்த்தம், நம் விதி என்று விட்டு விட வேண்டும். அதனால் என் தாய் நர்மதா தானே அழைத்து சென்று இருக்கிறாள் என்னை அவர்கள் வீட்டிற்கு

சேவை புரியும் படி கட்டளை இட்டிருக்கிறாள். அதன்படி செய்து விட்டால் போகிறது என்று சிரித்துக் கொண்டே போனாள்.

பார்வதி யோசித்தாள். இவ்வளவையும் கேட்டு விட்டு இவள் சிரித்துக் கொண்டு போகிறாளே இவளுக்கு வருத்தமே ஏற்படவில்லையே புரிந்து தான் செய்கிறாளா, அல்லது புரியாமலே இருக்கிறாளா என்று ஆச்சிரியமாக அவளை பார்த்துஸ் கொண்டு இருந்தாள்.

என்ன பார்வதி உன் மகளை அப்படியே பார்த்துக் கொண்டு இருக்கிறாய்?.

ஸ்வாமி! நான் என்னத்தை சொல்ல. நம் நர்மதாவிடம் எல்லா விவரங்களையும் கூறினேன். அவள் சந்தோஷமாக அவர்கள் வீட்டிற்கு போகிறேன் என்று சொல்லி சிரித்துக் கொண்டே போகிறாள்.

பார்வதி! அவள் எல்லாம் புரிந்து கொண்டு இருப்பாள். அவள் தேவதை அம்மா எதைப் பற்றியும் அவள் கவலைப்படுவதில்லை. நான் நிறைய அவளை கவனித்து இருக்கிறேன். அந்த ஈசன் நமக்கு அளித்த வரபிரசாதம் அம்மா காலம் வந்துவிட்டது அவளை நாம் பிரிய வேண்டும். பார்வதி நீ என்ன தான் சொல் அவள் கையால் பூமாலை தொடுத்து அந்த ஈசனுக்கு போடும் பொழுது அந்த ஈசன் பிரகாசமாக சிரிப்பதை காண்கிறேன். கோவில் குருக்களும் அடிக்கடி இதையே தான் சொல்லுவார் தூய்மையானவள் அம்மா சிறிய தவறுகள் செய்கிறாள் அது மனித இயல்பு அல்லவா?. அதுவும் செய்யாமல் இருந்தால் நம்முடன் வாழ அவசியமே இல்லையே. தெய்வமாக இருந்து விட்டு போய்விடலாம்.

ஸ்வாமி! அதுமட்டும் அல்ல சின்ன வயதில் எப்படி எல்லாம் வாயாடுவாள் எதற்கெடுத்தாலும் கேள்விகள் கேட்பாள்! இப்பொழுது கேள்விகளே கேட்பதில்லை எதை

சொன்னாலும் மௌனமாக சிரித்து விட்டு போகிறாள். பார்வதி! அவள் வாழ்க்கைக்கு வேண்டிய பதில் கிடைத்து விட்டது அல்லவா அதனால் மொளனமாகி விட்டாள். எப்பொழுதும் நீ சொல்வாயே கேள்வி கேட்காதே, கேள்வி கேட்காதே என்று அது இப்பொழுது மௌனமாகிவிட்டாள் உன் வாயும் பலித்து விட்டது.

போதும் ஸ்வாமி என் வேதனையை கிளறாதீர்கள். தினமும் நான் படும் வேதனை எல்லையற்றது. என்ன பாவம் செய்தேனோ இந்த துன்பத்தை பார்க்கிறேன் எல்லாம் அந்த ஈசன் தான் பதில் கூறவேண்டும் என்று அழுது கொண்டே சென்றாள்.

நாட்கள் நகர்ந்தன.

சோமநாத், கங்காபாய் இருவரும் வந்தார்கள். நர்மதாவை அழைத்து சென்றனர்.

பார்வதி அழுதாள்.

சிவாஜி அம்மா அக்காவுடன் போவேன் என்று அடம் பிடித்தான்.

அடேய்! நீ குருக்களிடம் சென்று உன் தந்தையை போல் எல்லாம் கற்றுக் கொள்ள வேணடும். அக்காவுடன் போகிறேன் என்று எல்லாம் அடம்பிடிக்கக் கூடாது என்று அவனை இழுத்து உள்ளே தாளிட்டாள்.

தம்பியை விட்டு போகிறோமே என்று கவலை ஏற்பட்டது நர்மதாவிற்கு இருப்பினும் நாம் போக தானே வேண்டும் என்று மனதை திடப்படுத்திக் கொண்டு அவர்களுடன் புறப்பட்டாள்.

இவர்கள் வந்து இரண்டு , மூன்று நாட்கள் எல்லாம் நல்ல

படியாக சென்றது.
கங்காபாய் தன் சுயரூபத்தை எடுத்துக் கொண்டாள். காலையில் திட்ட தொடங்கினாள். சீ! சனியனே, ராசியில்லதவளே, என் மகனை கொன்றாய் அல்லவா உனக்கு பார் என்ன, என்ன தண்டனை தருகிறேன் என்று கத்தினாள். வீட்டு வேலைகள் எல்லாம் கொஞ்சம், கொஞ் சமாக அதிகரித்தது. எல்லா பெறுப்புக்களையும் செய்ய தொடங்கினாள்.

கங்காபாய் கணவனிடம் ஊம் இன்னும் இந்த விஸ்வநாதனுக்கு திருமணம் ஆகவில்லை காதில் போட்டுக் கொள்ளாமல் உட்கார்ந்து இருக்கிறீர்களே என்றாள் .

ஊம் ஒருத்தி மாட்டிக் கொண்டாள் உன்னிடம், இன்னொருத்தி வேறா என்று மனதில் எண்ணிக் கொண்டான்.

எங்கு போனாலும் ராசியில்லாதவர்கள் என்று பெண் கொடுப்பதில்லை தெரிந்ததா என்றாள் கங்காபாய்.

ராசியில்லாதவர்கள் என்று இல்லை நீ ராக்ஷசி என்று.

என்ன சொன்னீர்கள்? எல்லாம் இந்த நர்மதா வந்த திமிரு இன்னும் இரண்டு பிள்ளைகளுக்கு திருமணம் ஆகவில்லை. ஒரு பெண் வேறு இருக்கிறாள். அவளுக்கும் திருமணம் விரைவில் முடிக்கவேண்டும் வயதாகிறது . உங்கள் நர்மதாவை தலையில் துக்கி வைத்து ஆடாதீர்கள்.

ஈஸ்வரா! பாவம் அந்த பெண்ணை இந்த பாடு படுத்துகிறாளே!..

பெண் வீட்டார் ஒருவர் வந்தார். சோமநாத்! நான் வேறு கிராமத்திலிருந்து வருகிறேன். உங்கள் மகனுக்கு என் மகளை கொடுக்கலாம் என்றிருக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள். நான் நல்ல ஆஸ்தி உடையவர் தான்.

இவர் பெண்ணை இங்கே கொண்டு வந்தால் என்ன என்று சோமநாத் யோசித்தார். சரி உட்காருங்கள் நாம் பேசலாம் ஒரு முடிவை எடுப்போம் என்றார் சோமநாத்.

கங்காபாயும் முன்னால் வந்து உட்கார்ந்தாள். இவர்களுக்கு இருக்கும் ஆஸ்தியை பற்றி எல்லாம் விசாரித்தாள்.

அம்மா !பெரிய மருமகளை நீங்கள் பெரிய மனது செய்து உங்கள் வீட்டிலேயே வைத்திருக்கிறீர்களாம். அதை கேட்கவே பெருமையாக இருக்கிறது.

என்ன செய்வது மகன் போய் விட்டான். என் மருமகளை மகனாக நினைக்க வேண்டும். பாவம் அந்த குழந்தை அவர்கள் வீட்டாரும் அவளை பார்த்து வருத்த படுவார்கள் அல்லவா. அப்படி ஒன்றும் பெரிய குடும்பமும் இல்லை ஏதோ சுமாரான குடும்பம். அவர்கள். எதற்கு இந்த பெண்ணை அங்கே விட்டு அவர்களுக்கு கஷ்டத்தை கொடுப்பானேன் என்று நான் அழைத்து வந்து விட்டேன்.

இவர்கள் இங்கே பேசிக் கொண்டு இருக்கும் பொழுது சோமநாத் அங்கு இல்லை. தனியாக நர்மதாவை சந்தித்து என்னம்மா இந்த வரனை நம் விஸ்வநாத்திற்கு முடிக்கலாமா?.

அப்பா! எதற்க்காக என்னை கேட்கிறீர்கள்!. பெரியவர்கள் நீங்கள் இருக்கும் பொழுது நீங்கள் தான் நிச்சயம் செய்ய வேண்டும்.

அம்மா! நர்மதா என்னை பொறுத்த வரை இந்த வீட்டில் தெய்வம் நீ, உன் அடக்கமும், நீ செய்யும் இத்தனை வேலைகளை பார்க்கும் போது நான் எங்கோ தவறு செய்து விட்டேனோ என்று தினமும் உள்ளத்தில் கதறுகிறேன் அம்மா என்று கண்ணீர் வடித்தார். அந்த சிறிய வயதில் நீ என்னை மாமா, மாமா என்று எவ்வளவு கேள்விகள் கேட்பாய். அதெல்லாம் எங்கேம்மா போயிற்று?. அம்மா! என் குலதேவதை சொல்லம்மா, இந்தவரனை நான்

முடிக்கட்டுமா, வேண்டாமா?. இவர்கள் நம்மை விட வசதி படைத்தவர்கள் அதனால் யோசிக்கிறேன்.

அப்பா! வசதிபடைத்தால் என்ன? நம் விஸ்வநாத்திற்கு அப்படி வசதியாக இருக்க வேண்டுமென்ற ஆசை அதிகம் அப்பா. அதனால் அவர் விருப்பப்படி செய்து விடலாமே .

சரி அம்மா அவனையும் ஒரு வார்த்தை கேட்டு விட்டு தீர்மானம் செய்கிறோம்.

என்ன சோமநாதரே நான் வரட்டுமா என்றார்.

ஆங், ஆங் மகன் வரட்டும் எல்லாம் நாம் பேசிக் கொள்ளலாம்.

மகனை ஒரு வார்த்தை கேட்டு விட்டு வந்து சொல்லுங்கள் .

சரி என்றார் சோமநாத்,

வந்தவர் சென்றார்.

விஸ்வநாத்திடம் தந்தை எல்லாவற்றையும் கூறினார் அவன் சற்று மௌனமாக இருந்து விட்டு உள்ளே வந்தான். மாயி என்றான். நர்மதாவை எல்லோரும் மாயி என்று அழைப்பார்கள் அதாவது தாய் என்று தான் அழைப்பார்கள் மாயி எனக்கு பெண் கேட்க ஆள் வந்தார்களாம் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?.

பாத்திரங்களை தேய்துக் கொண்டிருந்தாள், எல்லாம் அப்பா என்னிடம் சொல்லிவிட்டார். நம் விஸ்வநாத்திற்கு ஏற்றவள் தான் என்று சொல்லி விட்டேன்.

மாயி! பெண்ணை உங்களுக்கு பிடித்து இருந்தால் திருமணம் இல்லையேல் இல்லை.
என்னடா அந்த சனியனிடம் பேச்சு?.

ஒன்றுமில்லை அம்மா என்று உள்ளே சென்றான்.

அவன் பயந்து சென்றதை பார்த்து நர்மதா சிரித்தாள்.

மொட்டு என்று தலையில் ஒரு குட்டை வைத்தாள் கங்காபாய். என்னடி சிரிப்பு? அதான் போய் சேர்ந்தானே. அது எப்படி வரும் சிரிப்பு உனக்கு ?என்றாள்.

தலையை தேய்த்துக் கொண்டாள் நர்மத,ா தலையை தேய்த்துக் கொண்டே, சிரித்துக் கொண்டே வேலை செய்தால்.

இதோ பார் பெண் பார்க்க எல்லாம் நீ வரக்கூடாது தெரியுதா. அபசகுனமாட்டும் அங்கே வந்து நிற்காதே.

இவள் தலை அசைத்தாள். இவள் வீட்டில் எல்லா வேலையும் செய்தாள். அது மட்டுமல்லாமல் நர்மதை கரைக்கு சென்று நீரை எடுத்து வருவாள். அங்கு யார் யார் உதவி என்று சொல்கிறார்களே, இவள் உதவி செய்து விட்டு வருவாள். தாமதமாக வந்தால் எங்கு மாமியார் கோபித்து கொள்வாறோ என்று வேகமாக வந்து விடுவாள். இவர்கள் குலத்தவர் எல்லோருமே இவளை மாயி என்று அழைத்தனர். அதே போல் மலர்களை பறித்து மாலை தொடுத்து சிவனின் கோவிலுக்கு கொடுத்தனுப்புவாள் சோமநாதிடம் கொடுத் தனுப்புவாள். எப்பொழுதும் சிரித்த முகத்துடன், மங்களகரமாக காண்பாள். பலர் இவளை ஒதுக்கினாலும் பிறகு கொஞ்ச, கொஞ்சமாக இவளை புரிந்து கொண்டு இவளை எல்லாவற்றிற்கும் அழைப்பார்கள்.

தன் வீட்டில் நடப்பனவற்றை எதுவும் வெளியில் சொல்ல மாட்டாள். பலருக்கு இவள் மாமியாரை பற்றி நன்றாக தெரிந்ததால் இவளை நன்றாகவும் கவனித்து வந்தார்கள். அவ்வப்போது தன் வீட்டிற்கும் இவள் சோமநாத்திடம் சொல்லி அனுப்புவாள் நான் நலமாக இருக்கிறேன் எந்தவித கவலையும் வேண்டாம் அவர்களுக்கு என்று.

அத்தியாயம்: 25

ஒரு நாள் மாயி என்று அழைத்துக் கொண்டே ஒருத்தி உள்ளே வந்தாள்.

கங்காபாய் என்ன அவளுக்கு?. இப்பொழுது? எல்லாம் அந்த சனியன் அங்கே தான் இருக்கிறது என்றாள்.

அவளை அப்படி சொல்லாதீர்கள் அம்மா. பலருக்கு அவள் எவ்வளவோ நன்மைகளும், சேவைகளும் செய்கிறாள்.

சரி, சரி உங்களுடன் எனக்கு என்ன பேச்சு?.,

மாயி...

நர்மதா ஒடி வந்தாள், என்னம்மா என்னவாயிற்று?.

என் பெண் பிரசவத்திற்கு வந்திருக்கிறாள். மாதம் நிரம்பிவிட்டது, வயித்து வலி என்று துடிக்கிறாள் நீ வந்து போனாயானால் எல்லாம் சரியாகிவிடும் .

இது என்னடி புதிய கதை! இதுக்கே வாழ்க்கை இல்லை, இதுக்கு என்னத்த பிரசவத்தை பற்றி தெரியும்? இத்தை போய் கூப்பிடுகிறீர்களே!..

சோமநாத், சும்மா இரு கங்காபாய் உன்னை தவிர ஊரில் உள்ளவர்கள் அனைவரும் அவளை நன்றாக புரிந்து இருக்கிறார்கள். ஏன் நம் சாதியை விட கீழ் சாதியினர். அவளை தெய்வமாகவே மதிக்கிறார்கள். நம்ம வருக்கு தான் திமிர் உன்னை போல. நர்மதா நீ போய் வா.

நேராக சிவன் வைத்திருக்கும் அறைக்கு சென்றாள் ஈஸ்வரா! எனக்கு புத்தி தெரிந்த நாள் முதல் குழந்தைக்காக உன்னிடம் தான் பிரார்த்தனை செய்தேன் இதுவரை எல்லா பிரசவமும்

உன் கருணையால் நல்ல படியாக நடந்தேறியது. இன்னும் நீ தான் துனை இருக்க வேண்டும் அப்பா என்று விபூதியை தன் நேற்றியில் இட்டுக் கொண்டாள். கொஞ்சம் விபூதியை கையில் எடுத்துக் கொண்டு வாருங்கள் போகலாம் என்று போனாள்.

கங்காபாய் அப்படியே பார்த்துக் கொண்டு நின்றாள்.

சோமநாத் இவளை பார்த்து கங்கா! நீ மாறேன் அடுத்த மருமகள் வரப்போகிறாள் பார், உன்னை ஆட்டிவைப்பாள் அப்பொழுது உனக்கு இந்த நர்மதாவின் உதவி தேவைப்படும், நீ நல்லவளாக இரேன்.

நான் இந்த சனியனை மதிக்க மட்டேன். என் பிள்ளையை கொன்றவள். அமங்கலி. கர்மம் கர்மம்.

ஏ கங்கா! அப்படி பட்ட வார்த்தைகளை உபயோகிக்காதே உனக்கு ஒன்று தெரியுமா? இவளை நர்மதை கன்னி பெண்ணாக அமர்த்தி பூஜை செய்து இருக்கிறார்கள்.

ஆமாம் அந்த திருமணம் நாசமா போகும்.

அடி, உன் வாயில் நல்லதே வராதா? அவர்கள் நன்றாக தான் இருக்கிறார்கள்.

ஆமாம் உங்கள் மருமகளை தூக்கிவைத்து கொள்ளுங்கள், பாவி மனுஷர்கள் ஏதோ செய்து விட்டார்கள் இந்த மனுஷனுக்கு. அக்கரையில் உள்ளவர்களே அப்படி தான் என்று சொல்கிறார்கள், இந்த மனுஷனுக்கு என்ன செய்தார்களோ தெரியவில்லையே?. எதற்கெடுத்தாலும் நர்மதா, நர்மதா. ஊம் என் அடுத்தவள் மருமகள் வரட்டும்

விஸ்வநாத்திற்கு கல்யானம் நிச்சயமாக தொடங்கியது.
சோமநாத் விஸ்வநாத்தை அழைத்தார் இதோ பார் நம் குலத்தில் வாழ வந்த தெய்வம் மாயி முதலில் கன்னி பூஜைக்கு

செய்ய வேண்டியவை எல்லாம் வாங்கி அவள் கையில் கொடுத்து விடு. பிறகு உன் அம்மா சம்பிரதாயப்படி யாருக்கு வேண்டுமானாலும் செய்யட்டும் என்ன தெரிகிறதா?.

சரி அப்பா அப்படியே செய்கிறேன். அதே போன்று இவன் எல்லாவற்றையும் மாயிடம் கொடுத்தான். சிரித்து கொண்டே அதை வாங்கினாள் நர்மதா.

என்ன மாயி சிரிக்கிறாய்!.

நான் என்ன சொல்ல? இது எதற்கும் நான் தகுதியில்லாதவள். ஏதோ கீழ் ஜாதிகாரர்கள் என்னை கன்னியாக அமர்த்தி பூஜை செய்தார்கள் என்பதற்காக நீங்களும் இப்படி கொடுப்பது நியாயமா.

மாயி என்னையும் அப்பாவையும் பொறுத்தவரையில் நீ எங்கள் குல தெய்வம் தான்.

சரி, சரி கவலையை விடு என்று சிரித்துக் கொண்டாள். இப்படி இவள் பெரும் துணிகளை எல்லாம் ஈசன் முன்னால் வைத்து விட்டு தாயே நர்மதா, ஈஸ்வரா இந்த குழந்தைகளை ஆசிர்வதித்து நன்றாக வாழ்க்கையை நடத்த செய்யுங்கள் என்று பிரார்த்தித்துக் கொண்டு குருக்களிடம் போய் இதை யாராவது ஏழை எதுவும் இல்லாமல் கஷ்டபடுகிறார்களே அவர்களுக்கு கொடுத்து விடுங்கள் என்று கொடுத்து விடுவாள். தான் ஒரு போதும் உபயோகித்ததில்லை

அம்மா நர்மதா!நீ உண்மையில் அந்த நர்மதாவின் மறு அவதாரம் அம்மா. உன் தியாகமும், நல்ல குணம் நான் தினமும் பாராட்டுகிறேன் அம்மா. சில நேரங்களில், உன் வாழ்க்கையை இப்படி வீனாக்கி விட்டானே என்று நான் இந்த ஈஸ்சனையும் திட்டி இருக்கிறேன அம்மா.
மாமா அந்த ஈசன் என் வாழ்க்கையை வீணாக்கவில்லை எல்லோருக்கும் உபகாரம் செய்ய என்னை இப்படி படைத்திருக்கிறான்.

அம்மா! ஆதியில் நான் உன்னை தவறாக நினைத்தேன். நான் என்ன பலரும் நினைத்தனர் நீ எதிரில் வந்தால் பாபம் என்றார்கள். உன்னை பார்த்தால் எவ்வித செயலும் நடவாது என்றார்கள். ஏன் உன்னை கோவிலுக்கே வர அனுமதிக்கவில்லை. எல்லாம் உன் மாமனார் சோமநாத் செய்த புண்ணியம் அம்மா அவர் தான் உன்னை தைரியமாக வெளியில் போ என்று அனுப்பியவர்.

ஆமாம் !மாமா முதலில் நான் தயங்கினேன் தெரியுமா?. நீ என் பெண் ஆனால் நான் சொல்வதை செய்ய வேண்டும் என்று அதட்டினார். நானும் மெல்ல வெளியில் வந்தேன், பல எதிர்ப்புகள் இருந்தாலும் நீ எல்லோருக்கும் உதவி செய் அம்மா. அவர்கள் எதிர்ப்பை பொருட்படுத்தாதே நாளை உனக்கு எல்லாம் நல்லதாக முடியும் என்று எனக்கு தைரியம் மூட்டினார்.

ஆமாம்! நர்மதா நீ பலருக்கு நல்லது செய்து இருக்கிறாய், எங்கள் எல்லோருக்கும் எவ்வளவோ உதவி செய்திருக்கிறாய் ஒன்றா, இரண்டா அடுக்கிக் கொண்டே போகலாம். ஏன் என் பெண்ணும் அவர் கணவரும் பிரிந்து இருந்தார்கள் அவர்களை சேர்த்து வைக்க இந்த சின்ன வயதில் எவ்ளோ பாடுபட்டாய். இன்று அவர்கள் நன்றாக இருக்கிறார்கள் என்றாள் அதர்க்கு நீ தானேம்மா காரணம்.

மாமா! எல்லாம் அந்த ஈசன் செயல்.

ஆமாம் உன் தம்பிக்கு வரன் பார்த்து கொண்டிருக்கிறார்களே?.

அவன் கல்யாணமே வேண்டாம் என்று இருக்கிறான். என்னை அங்கு வந்து விடும் படி அழைக்கிறான் இப்பொழுதெல்லாம் வாரம் ஒரு முறை வந்து போகிறானே. உன் மாமியார் ஒன்றும் சொல்வதில்லையா?.

அதையெல்லாம் அவன் பொருட்படுத்துவதில்லை. ஸ்ரீ நாத்தும்

அவனும் நல்ல நண்பர்கள். ஏதோ பண்டமாற்றத்திற்காக வருவது போல் வந்து விட்டு போகிறான். என்னை பிரிந்து அவனால் இருக்கவே முடியவில்லை பாருங்கள்.

நர்மதா! அவன் என்னம்மா நீ ஏழு நாட்கள் இந்த கோவிலுக்கு வராமல் இருந்ததை பார்த்தவுடனே மனது எவ்வளவு வேதனையடைகிறது தெரியுமா?. உன் கையால் தொடுக்கும் அந்த மாலைக்கு மகிமை அதிகம்மா. ஏன் நீ வரவில்லை என்றால் அந்த ஈசனே வருத்தப்பட்டு கொள்கிறான் போல் தெரிகிறது .

சரி மாமா நான் வருகிறேன் நேரமாகிவிட்டது.

ஈஸ்வரா! பாவம் இந்த பெண் இவள் எப்பொழுது படுக்கிறாள்? எப்பொழுது எழுந்திருக்கிறாள் என்பது யாருக்கும் தெரியாது, அப்பா எவ்வளவு வேலைகள் செய்கிறாள் இவளை அடுத்த ஜன்மத்திலாவது நன்றாக வைத்து விடு ஈஸ்வரா இந்த மாயி நன்றாக இருக்கட்டும் என்று மனதுல் பிரார்த்தித்து கொண்டு தன் பூஜை பனிகளை தெடங்கினார்.

விஸ்வநாத் திருமண சடங்குகள் தொடங்கின, இவர்கள் எல்லோரும் புறப்பட தயாராக இருந்தார்கள்.

சோமநாத் கூறுகிறார் மாயி நீ என்ன செய்ய போகிறாய்.

என்னத்துக்கு அந்த சனியனை கூப்பிடுகிறீர்கள், இப்பொழுது அபசகுணம் நாம் எல்லோரும் போகலாம். அவள் இங்கு இருக்கட்டும் அவள் எதற்க்கு கல்யானத்திற்க்கு எல்லாம்,? நல்ல காரியத்திற்கு எல்லாம் அமங்கலிகள் வரக் கூடாது இங்கேயே கிடக்கட்டும் என்றாள் கங்காபாய்.

ஏ! கங்கா எதற்க்கடி வார்த்தைகளால் துன்புறுத்துகிறாய்? அது நல்லதல்ல நீ உன் மகன்கள், உன் மகள் செல்லுங்கள்.

நான் இங்கே இருந்து விட்டு சிலவேலைகளை முடித்துக கொண்டு நர்மதாவை அழைத்து வருகிறேன்.

இதோ பாருங்கள் நான் போனால் உங்களுடன் தான் போவேன் போதும் நான் பட்ட அவஸ்தைகள் எல்லாம். நாம் எல்லோரும் ஒன்றாக போகலாம். இந்த அபாக்கிய வதிவர வேண்டாம். அவள் வந்தாள் நான் வரமாட்டேன். நீங்களும், உங்கள் பிள்ளைகளும் தீர்மானம் செய்து கொள்ளுங்கள்.

அடியே!. நர்மதா என் பிள்ளை உன் மைத்துனன் உனக்கும் அவன் பிள்ளை மாதிரி தான். அவன் நன்றாக இருக்க வேண்டுமானால், நீ இந்த திருமண்த்திற்கு வர கூடாது என்ன தெரிகிறதா? உன் மாமனார் பலதை சொல்வார். நான் சொல்வதை கேள். நம் குழந்தைகள் நன்றாக இருக்க வேண்டும். நீ வந்து அதையும் நாசம் செய்து விடாதே.

நர்மதா மௌனமாக தலையசைத்தாள்.

விஸ்வநாத் என்ன மாயி இப்படி எல்லாம் பேசுகிறாயே ( அம்மாவையும் மாயி என்று தான் அழைப்பார்கள். ) பாவம் நர்மதா மாயும் வரட்டும்.

நர்மதா அவனை ஆச்சரியமாக பார்த்தாள். பரவாயில்லையே இவனுக்கு தைரியம் வந்திருக்கிறதே!. எங்கே மாமியார் தன்னை பார்த்து விடுவாரோ என்று தலையை குனிந்து கொண்டாள்.

அடேய்! நான் சொல்வதை கேள். உன் திருமணத்திற்கு அவள் வரக் கூடாது. அப்படி நீங்கள் எல்லோரும் சதி செய்தால் நான் இந்த ஆற்றில் விழுந்து சாவேன்.
நர்மதா சட்டென்று அம்மா எதற்கு பெரிய வார்த்தைகள் எல்லாம் கூறுகிறீர்கள். நான் நிச்சயம் வரப் போவதில்லை, கவலை வேண்டாம். நான் எல்லாவற்றையும் பார்த்து கொள்கிறேன். அப்பா நீங்களும் வெளியில் என்ன, என்ன செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டு போங்கள் அதையும்

நான் பார்த்து கொள்கிறேன்.

அதற்ககுள் அன்னபூரனி மாயி நானும் உன்னுடன் இருந்து விடட்டுமா. நானும் வேலைகளை உன்னுடன் செய்கிறேனே.

ஏய்! அன்னபூர்னா சும்மாயிருக்க மாட்டாய். உனக்கு திருமணம் ஆக வேண்டும். இப்பொழுதே வயது ஏறி விட்டது. நாலு பேர் உன்னை இந்த திருமணத்தில் பார்த்தால் தான் ஏதாவது ஒரு சம்பந்தம் அமையும். உன் ஜாதகப்படி தோஷம் வேறு உனக்கு. இந்த கர்மத்துடன் இருக்கிறாளம் இவளுக்கு எப்படி தான் புத்தி மாறுகிறதோ தெரியவில்லை.

சோமநாத் சட்டென்று துணியை உதறி தோளில் போட்டார். ஊம் இவள் திமிர் என்று தான் அடங்குமோ, இந்த ராக்ஷசி என்று அவதிப்பட போகிறாளோ என்று முனுமுனுத்து வெளியில் சென்றார்.

விஸ்வநாத் தந்தையை பின் தொடர்ந்து கொண்டே ஊம் இன்னும் வரபோகிறவள் என்ன பாடுபடபோகிறாளோ. அது எதில் முடியுமோ ஈஸ்வரா, மாயியை போல் இருந்து விட்டால் பரவாயில்லை நம் தாயை போல் இருந்து விட்டாள் அவ்வளவு தான் என்று பெருமூச்சுடன் வெளியே சென்றான்.

அன்னபூர்னா! இந்த வீட்டில் வாயை திறக்க நமக்கு அருகதையே இல்லை. எவனாவது ஒருவன் என்னை சீக்கிரம் அழைத்து போகக் கூடாது சே! என்ன வாழ்க்கை என்று முனுமுனுத்துக கொண்டே அவளும் சென்றாள்.

நர்மதா இந்த ஒரு மாதம் உனக்கு வேலை கம்மியாக தானே இருக்கும், இரண்டு மூன்று, மூட்டைகள் கோதுமையை அரைத்து வைத்து விடு. சம்பந்திகள் எல்லாம் வந்து போனால் நமக்கு செலவாகும் அல்லவா. அப்படியே நேரம் இருக்கும் போது கம்பையும் என்றாள்.

சரி அம்மா நான் எல்லாவற்றையும் பார்த்துக கொள்கிறேன்.

நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

அதற்குதானடி உன்னிடம் சொல்கிறேன் எல்லாம் ஒழுங்காக பார்த்துக கொள்.

சரி என்று தலை அசைத்தாள்.

அவரவர்கள் பணியில் ஈடுபட்டனர்.

## அத்தியாயம்.26

சிவாஜியும், ஸ்ரீநாத்தும் உள்ளே வந்தனர் கங்காபாய் சிவாஜி வந்ததை பார்த்ததும் மூஞ்சை திருப்பிக் கொண்டு உள்ளே சென்றாள். கர்மம் இது ஒரு தரித்திரம் வருகிறது.

அம்மா உள்ளே போவதை பார்த்த ஸ்ரீநாத் மெதுவாக நர்மதா அருகில் வந்தான். மாயி உங்கள் பாட்டிக்கு உடம்பு சரியில்லையாம். மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறாளாம். உங்களை பார்க்க வேண்டும் என்கிறாள் என்ன செய்ய போகிறீர்கள் மாயி?.

ஸ்ரீநாத் கல்யாண வேலைகள் இங்கு அதிகம் நான் போனால் இதையெல்லாம் கவனிப்பது யார்?.

அது சரி மாயி பாட்டி போய் விட்டாளானாள்.

நர்மதா சிரித்துக் கொண்டே போய் விட்டாளானால் போகட்டும் அவ்வளவு தான்.

என்ன மாயி கொஞ்சமும் கவலை இல்லாமல் இப்படி சொல்கிறீர்களே!.

ஸ்ரீநாத்தை தேடுவது போல் சிவாஜி உள்ளே வந்தான். மாயி ஒரு முறை பாட்டியை பார்த்து விட்டு வந்து விடேன். உன் மாமியார் கிடக்கிறாள் எப்பொழுதும் தான் உன்னை

திட்டிகொண்டு இருக்கிறாள். அவளை பொருட்படுத்தாதே நான் வேண்டுமானால் கூறி உன்னை அழைத்து செல்கிறேன் என்னுடன் வா மாயி என்றான் சிவாஜி.

சிவாஜி பெரியவர்களை அப்படி சொல்லக்கூடாது.

போ மாயி என்ன பெரியவர்கள் இவர்கள்?. இவள் செத்தால் தான் உனக்கு நிம்மதி என்று ஆத்திரத்தில் கூறினான்.

பளார் என்று கன்னத்தில் அறைந்தாள். சிவாஜி என்ன வார்த்தை பேசுகிறாய்?. எந்த இடத்தில், என்ன பேச்சு என்று தெரியவில்லையா.?

மாயி! அவன் சொன்னதில் என்ன தப்பு இருக்கிறது?. நீ போக வேண்டியது தானே. நீ எதற்காக போக மாட்டேன் என்கிறாய்? அதை எனக்கு சொல்லு என்று ஸ்ரீநாத் கூறினான்.

ஸ்ரீநாந் நான் சொல்வதை இருவரும் நன்றாக கேளுங்கள் ஒரு பெண்ணிற்கு புகுந்த வீடு தான் எல்லாம். இங்கே ஆயிரம் பணிகள் இருக்க இதையெல்லாம் போட்டு விட்டு நான் என்ன அங்கே போவதா?.

அது சரி மாயி உன்னை வளர்த்து ஆளாக்கியவள். இன்றோ நாளையோ என்று இருக்கிறாள் அவளை நீ போய் பார்க்க வேண்டாமா.

தப்பு, ஸ்ரீநாத் தப்பு இங்கே கல்யாண அமர்க்களம் இருக்கிறது. இதை விட்டு போவது தவறு, எப்பொழுது என்னை இங்கே கட்டி கொடுத்து விட்டார்களோ அப்பொழுதே பந்தங்கள் எல்லாம் அறுந்து விட்டன. நம் பாசங்களை மனதில் வைக்க வேண்டும் செயலில் காண்பிக்க கூடாது. புகுந்த வீட்டிற்கு வந்தவள் தாய் வீட்டை பற்றி நினைப்பதே தவறு. ஏன் சிவாஜி வந்து போகிறானே இதுவே தப்பு தான். இதோ பார் சிவாஜி, பாட்டி தானே வயசானவள் எப்படியும் ஒரு நாள்

போக தான் வேண்டும். அதனால் இதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளாதே. அவள் ஆத்மா சாந்தியடைய நான் ஈஸ்வரனை பிரார்த்தித்துக கொள்கிறேன்.

மாயி ஒன்று மட்டும் சொல்கிறேன். நான் நிச்சயம் வந்து தான் போவேன். என்னால் உன்னை விட்டு பிரிந்து இருக்க முடியாது. ஸ்ரீநாத் என் நண்பன் நாங்கள் இருவரும் நெருக்கமானவர்கள் இதில் ஊரில் எல்லோருக்கும் தெரிந்தவையே அதனால் யாரும் தப்பாக பேச முடியாது.

அடேய்! சிவாஜி உன்னை திருத்தவே முடியாதடா.

மாயி உனக்கென்ன பாசமே இல்லையா?.

சிவாஜி அன்பு இருக்க வேண்டுமடா, பற்று இருக்கக் கூடாது. நாம் எல்லாவற்றிற்கும் தயராக இருக்க வேண்டும். ஒரு பெண் என்பவள் தியாகியடா. அப்படி வாழ்ந்தால் தான் பெண்மைக்கே அர்த்தம் இருக்கிறது. தன் நலம் கருதாது வாழ வேண்டும். புகுந்த வீட்டிற்கு நன்மையை செய்ய வேண்டும். அப்படி இருந்தால் தான் பிறந்த வீட்டிற்கு மதிப்பு. இதெல்லாம் உனக்கு எங்கே இருந்து தெரிய போகிறது. விரைவில் உங்கள் இருவருக்கும் திருமணத்தை முடித்து விட்டால் பிறகு நீங்களும் புரிந்து கொள்வீர்கள் என்று சிரித்தாள்.

சிவாஜி! மாயியை திருத்த முடியாது. அவள் நினைத்த படியே எல்லாம் நடக்கட்டும். வா நாம் போகலாம். மெள்ள நடந்து கொண்டே இந்த வீட்டு பூதம் நம்மை பார்த்தால் ஆபத்து பின் மாயி உதைபடுவாள் சிரித்துக் கொண்டே இவர்கள் வெளியில் வந்தனர்.

ஸ்ரீநாத் இந்த மாயியால் எப்படியடா சிரித்துக கொண்டே இருக்க முடிகிறது. எனக்கு சின்ன விஷயத்திற்கே கோபம் வந்து விடுகிறது ஆனால் என்னுடைய அக்கா நேர் மாறாக இருக்கிறாளே!. சந்தோஷமாக எல்லா வேலைகளையும்

செய்கிறாளே!.

சிவாஜி! அது மட்டும் இல்லை எங்கள் வீட்டு பூதம் இருக்கிறதே பாதி நாட்களில் இரவில் மாயிக்கு ஒன்றும் கொடுப்பதில்லை, பகலிலும் அரை வயிறோ, முக்கால் வயிறோ தான் உண்கிறாள். ஆனால் எதையும் அவள் கவலைப்படுவதில்லை அப்பா இருந்தால் அவளுக்கு உணவு எப்படி தருகிறாள் என்று பார்த்து நன்றாக கொடுப்பார்ரடா. இவள் எதையுமே கவலைப்படுவதில்லை. அதனால் தான் அப்பா இவளை அடிக்கடி தேவதை என்பார். தன்னலம் கருதாமல் உழைக்கிறாள் பார்.

ஸ்ரீநாத் நானும் நீயும் திருமணமே செய்து கொள்ள வேண்டாம். நீ மாயியை பார்த்துக் கொள். நான் என் அம்மா அப்பாவை பார்த்து கொள்கிறேன். இந்த பெரியவர்கள் காலம் முடிந்தவுடன் நானும் நீயும் மாயியை அழைத்துக கொண்டு எங்காவது தொலைவில் போய் மாயியை உட்கார்த்தி வைத்து விட்டு நாம் இருவரும் சேவை புரிய வேண்டும் என்று கண்ணீர்ருடன் கூறினான் சிவாஜி.

கவலைப்படாதே சிவாஜி, நீ எது சொன்னாலும் கேட்கிறேன். அப்பா வருகிறார்

சோமநாத் சிவாஜியை கவனித்து ,என்ன சிவாஜி என்ன அழுகிறாய்?.

ஒன்றுமில்லை அப்பா இவர்கள் பாட்டிகது உடல் நலம் சரியில்லையாம். மாயியை அழைத்து போகலாம் என்று வந்திருக்கிறான்.

மாயி வர  மாட்டேன் என்று சொல்லியிருப்பாளே.

அதெப்படி அப்பா! அவ்வளவு சரியாக சொல்கிறீர்கள்! என்றான் ஸ்ரீநாத்.

அடேய்! எனக்கு அவளை பற்றி  நன்றாக தெரியும், சிவாஜி நீ விட்டிற்கு போ நான் மாயிடம் பேசி அனுப்புகிறேன். இங்கு கல்யாண காரியம் வேறு கல்யாணத்திற்கு அப்பா நீ எல்லாம் வந்து விட வேண்டும்.

மாமா நாங்கள் வருவது சற்று சந்தேகம். ஒரு வேளை பாட்டி.

ச்சே! ச்சே அபசகுணமாக பேசாதே பாட்டி நல்லவள் இன்னும் கொஞ்ச  காலம் அவள் வாழட்டுமே.

இல்லை மாமா இப்பொழுதே உடல் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது அதனால் தான் சொன்னேன்.

சரி, சரி நீ போய் அப்பாவுக்கு துணையாக இரு. இங்கு ஸ்ரீநாத் துடன் சுத்தாதே.

ஆமாம் வீட்டில் தான் உன் பூதம் நிம்மதியாக இருக்க விடுவதில்லையே.

அடேய்! ஸ்ரீநாத் பெற்றவளை அப்படி சொல்லக் கூடாது. உன்னை பெற்றதாய் அவள். உனக்கு ஒரு பூதம் வரும் இரு என்று சோமநாத்  சிரித்துக் கொண்டே உள்ளே சென்றார்.

இருவரும் சிரித்துக் கொண்டே வெளியில் சென்றனர்.

(குறிப்பு:- இரண்டு தோழிகளில் ஒரு தோழி ஸ்ரீநாத் ஆகும் நமது நர்மதாவின் மேல் அதிக பாசமும் பரிவும் வைத்திருந்தான்.

## அத்தியாயம்:27

சோமநாத் யோசித்துக் கொண்டிருந்தார். கங்காபாயை தேடிக் கொண்டு யாரே வந்தனர். கல்யாணத்தை பற்றியும் இடத்தை பற்றியும் எல்லாம்  கங்காபாயும் தேடி வந்தவரும் பேசி கொண்டிருந்தனர்.

சோமநாத் சும்மா சிரிப்பது போல் சிரித்தார்.

கங்காபாய் சேர்ந்தவர்கள் என்றால் அவருக்கு பிடிக்காது. மெதுவாக அவ்விடத்தை விட்டு எழுந்து நர்மதாவிடம் வந்தார்.

மாயி.. செய்திகளை எல்லாம் கேட்டேன்.

இவள் சிரித்து கொண்டே சரி அப்பா நீங்கள் வரும் போதே நான் புரிந்து கொண்டேன். நான் எங்கும் போக மாட்டேன் நல்ல படியாக போய் நீங்கள் திருமணத்தை முடித்து விட்டு வாருக்கள்.

மாயி! நாங்கள் திருமணத்திற்கு போனபிறகு காலை பரிசலில் போய் மலைபரிசலில் வந்து விடேன். பாவம் அந்த ஆத்மாவும் சாந்தியடையும் அல்லவா.

அப்பா! அதற்கு இங்கிருந்தே பிரார்த்தனை செய்து கொள்ளலாம். ஒருவருக்கு தெரியாமல் செய்வது மகா குற்றமாகும் அப்பா. அப்படி எதற்கு ஏமாற்றி விட்டு போக வேண்டும். பாவம் அம்மா ஏதோ திட்டி கொண்டிருக் கிறார்கள். அதற்காக நாம் இப்படியெல்லாம் பழி வாங்கக் கூடாது நாளை இதுவே என்னை பற்றி தவறாக நினைக்க வாய்ப்பு உண்டல்லவா?. அப்படி ஒன்றும் பாட்டியை போய் பார்க்க வேண்டும் என்று அவசியமில்லையே. நான் அங்கு தானே வளர்ந்தேன். அதனால் இதை பற்றி நீங்கள் கவலைபடாதீர்கள். திருமணத்திற்கு எடுத்து வைக்க வேண்டியவை எல்லாம் எடுத்து வையுங்கள். அப்பா பாட்டிக்கு உடம்பு சரியில்லை என்று அம்மாவிடம் சொல்லாதீர்கள். பாவம் வேதனைபடுவார்.

ஐயோ! நர்மதா அவளிடம் சொல்லாமல் இருப்பதே நல்லது தான். அவள் தரித்திரம், அபசகுணம் கல்யாணத்திற்கு போக வேண்டிய நேரத்தில் இதெல்லாமா என்று ஆர்பாட்டம் செய்வாள். அதற்காக வேண்டுமானால் நாம் சொல்லாமல்

இருக்கலாம் என்று புன்னகைத்தார்.

அப்பா! நீங்கள் தானே கூறியிருக்கிறீர்கள் அயராமல் சேவை செய்து கொண்டு வா, ஒரு நாள் இல்லையில் ஒரு நாள் மனிதர்கள் உன்னை புரிந்துக் கொள்வார்கள் என்று.

அது சரி தான் மாயி உலகமே திருந்தினாலும் இந்த பிசாசு திருந்துமா என்பது சந்தேகம் தான்.

அப்பா! அம்மாவை அப்படி எல்லாம் கூறாதீர்கள். என் மேல் உரிமை இருப்பதால் தானே அவர்கள் திட்டுகிறார்கள்.

அம்மா தாயே பர தேவதையே உன்னை வணங்குகிறேன் அம்மா உன் பொறுமைக்கும் ஒரு எல்லை இருக்க வேண்டும் அதை மீறி நீ நடக்கிறாய்.

இவள் சிரித்துக் கொண்டே தன் பணிகளை தொடர்ந்தாள்.

அவரும் இவளை திருத்தவே முடியாது என்று கூறிக் கொண்டே சென்றார்.

ஈஸ்வரா இன்று என்ன நடக்கிறது எல்லோரும் என்னை பார்த்து திருத்தவே முடியாது என்று சொல்கிறார்களே. நான் என்ன தவறா செய்கிறேன்!. எனக்கு தெரிந்த வரை நான் நல்லது தானே செய்கிறேன்!. இவர்கள் ஏன் இப்படி கூறுகிறார்கள் என்று புன்னகைத்துக் கொண்டே வேலையை செய்து கொண்டிருந்தாள்.

அச்சமயம் பார்த்து கங்காபாய் உள்ளே வந்தாள். இவள் தலைமுடியை பிடித்து இழுத்தாள். அடியே என்னடி அது எப்பப் பார் ஒரு சிரிப்பு, வந்தவர்களுக்கு மோர் கொடுக்கலாம் என்று எல்லாம் இல்லை உன் வாழ்க்கை தான் சிரிப்பாய் சிரிக்கிறதே இன்னும் என்ன? சிரிப்பு ஒரு கேடா என்று தலையில் அடித்தாள். தலை சுவற்றில் முட்டியது.

அப்பா! ஈஸ்வரா என்று மனதுள் எண்ணிக் கொண்டாள். நர்மதா. தலையை துடைத்துக் கொண்டே மோரை தயார் செய்தாள். இந்தாருங்கள் அம்மா மோர் அவர்களுக்கு கொண்டு கொடுங்கள்.

ஊம், ஊம் கல்யாணத்திற்கு போக என் துணியெல்லாம் தயார் செய்தாயா?.

எல்லாம் தயாராக உள்ளது அம்மா.

கல்யாணம் இனிதே நடந்தேறியது.

## அத்தியாயம்: 28

புதிய மருமகளும் வீட்டில் வந்து விட்டாள்.

நர்மதாவின் பாட்டி இறந்தும் விட்டாள். ஆனால் நர்மதா எதற்கும் போகவில்லை. சோமநாத் மட்டும் போய் வந்தார். மற்றகாரியங்களுக்கு ஸ்ரீநாதும் போய் வந்தான். நாங்கள் எவ்வளவு சொல்லியும் மாயி வரவில்லை என்று பார்வதிக்கும், மாதையாவுக்கும் தெரிவித்தனர்.

பார்வதி இங்கு நடப்பவைகளை ஸ்ரீநாத் மூலமும், சிவாஜி மூலமும் தெரிந்து கொண்டு தான் வந்தாள். நர்மதாவை நினைத்து அழுது, அழுது அவ்வேதனையில் மெலிந்து கிடந்தாள்.

சில நாட்களில் ஆன்னபூரனிக்கும் திருமணம் ஆனது. அவளும் வீட்டை விட்டு சென்றாள். அவள் திருமணத்திற்கு அனைத்து வேலைகளையும் நர்மதா தான் செய்து வந்தாள். தன் பெண்ணின் திருமணம் போல் எல்லா வற்றையும் செய்தாள்.

விஸ்வநாத்தின் மனைவி வேலைகள் எதுவும் செய்வதில்லை. அவள் மாமியாருடன் பேசியும் மாமியாருடன் சுற்றியும்

வந்தாள். அவளும் நர்மதாவை அடித்தும், அதட்டியும் வேலை வாங்கினாள்.

சோமநாத் விஸ்வநாதிடம் கூறினார். உன் மனைவி செய்வதெல்லாம் அக்கிரமம். அவளை கண்டித்துவை.

ஆமாம் ஆதியில் உன் மனைவி செய்தாள். அதை இப்போது இவள் செய்கிறாள்.

அடேய்! நான் உன் அம்மாவை கண்டித்து தான் வருகிறேன்.

அதே போல் தானப்பா நானும் எவ்வளவு கண்டித்தாலும், அவள் திருந்துவதாக தெரியவில்லை. அவள் வசதி படைத்தவள். நான் என்னப்பா செய்யட்டும்?.

அடேய்! உனக்கு மாயியை பார்த்தால் பரிதாபமாக தெரியவில்லையா?.

இதற்க்கு என்ன தான் வழி சொல்லுங்கள். ஸ்ரீநாதிற்கு திருமணம் ஆகட்டும் எல்லாம் ஒரு வழியாக சரியாய விடும் என்று நினைக்கிறேன்.

ஊம் அதையும் பார்த்து விடலாமடா. நமது அன்னபூர்ணா கல்யாணத்தின் போது ஒருவர் வந்திருந்தார். அவருக்கு இரண்டு பெண்களாம். நல்ல குணம் படைத்தவர்கள். பெண்களும் லக்ஷணமாய் சாந்தமாகவும் இருக்கிறார்கள். நம்மை போன்ற குடும்பம் தான். ஒரு பெண்ணை ஸ்ரீநாத்திற்கும், ஒரு பெண்ணை சிவாஜிக்கும் திருமணம் செய்து விடலாம் என்று நினைக்கிறேன். பெரியவள் சற்று வயது போய்விட்டது அதனால் அவள் சிவாஜிக்கும் பொருந்துவாள், சிறியவள் நம் ஸ்ரீநாத்திற்கு பொருந்துவாள். .அது மட்டுமல்ல விஸ்வா இந்த மாதையா சிவாஜிக்கு திருமணம் செய்வதாக இல்லை. அவன் எதையும் கண்டுக்காமல் சிவனே என்று இருக்கிறான். பார்வதியும் முடியாமல் கிடக்கிறாள் இதை எல்லாம் பார்த்தால் நாம் தான் முன்னின்று செய்ய வேண்டும் இந்த

இரண்டும் பிள்ளைகளும் நல்ல நண்பர்கள் வேரா இவர்களும் பிரியாமல் இருப்பார்கள் அல்லவா.

இதற்கு இவ்விருவரும் ஒத்து கொள்ள வேண்டுமப்பா?.

ஒத்து கொள்வதென்ன?. ஒத்து கொள்ளத்தான் வேண்டும்.

சரி அப்பா மாயிடம் சொன்னீர்களா?.

சொன்னேனடா அவள் உங்கள் இஷ்டம் என்றாள்.

சரி அப்படியென்றால் நாம் முடித்து விட வேண்டியது தான்.

பிறகு சோமநாத் ஸ்ரீநாத்யையும், சிவாஜியையுப் அழைத்தார். திருமணத்திற்கு ஒப்புக் கொள்ளும்படி செய்தார்.

கங்காபாய் இதற்கு சற்றும் ஒப்புக் கொள்ளவில்லை, சிவாஜிக்கு அந்த பெண்ணை கொடுப்பது சரியல்ல என்றாள்.

ஆனால் சோமநாத் இதில் கண்டிப்பாக இருந்தார். நீ எடுக்க போவது ஒரு பெண், மற்ற பெண் யாரை மணந்தால் உனக்கு என்ன என்று திட்ட வட்டமாக கூறிவிட்டார்.

அன்னபூர்ணா பிரசவத்திற்கு வந்திருந்தாள். அவள் வரப் போகிறாள் என்பதை அறிந்த விஸ்வநாத்தின் மனைவி அம்மா! எனக்கும் உடல் நிலை சரியில்லை. நான் என் தாய் வீட்டிற்கு போய் குழந்தை எல்லாம் பிறந்த பிறகு வருகிறேன் என்றாள் .( அவளும் அப்பொழுது கர்பவதியாக இருந்தாள்.)

சரி நீ போய் வா என்று அவளை அனுப்பினார்கள்.

அன்னபூர்னாவிற்கு எல்லா பணிவிடைகளையும் நர்மதா செய்தாள். நல்ல விதமாக அவளுக்கு குழந்தை பிறந்தது. மாதங்களும் கழிந்தன. மாயி உன் தயவால் எல்லாம் நல்ல படியாக நடந்தது என்று நர்மதாவை கட்க்டி கொண்டு

அழுதாள் அன்னபூர்ணா.

சீ! பைத்தியமே எதற்க்கு அழுகிறாய். எல்லாம் அந்த ஈசன் செயல் நமது என்ன இருக்கிறது.

போதும், போதும் இருவரும் கொஞ்சுவது என்றாள் கங்காபாய்.

அன்னபூர்ணி கோபமுற்றாள் மாயி என்று உரத்த குரலில் அழைத்தாள் நீ மாறவே மாட்டாயா?. பார் விஸ்வநாதின் மனைவி இருந்தாளா இங்கே?. பாட்டி இறந்தாள், அம்மாவின் உடல் நிலைசரியில்லை எதையும் பொருட்படுத்தாமல் இந்த ஜீவன் இங்கே உழைக்கிறதே.

அடி அன்னபூர்ணா இவளுக்கு பிள்ளை குட்டி ஏது? அந்த அருமை தான் இவளுக்கு என்ன தெரியும்?. பாவம் அந்த பெண் நல்ல வசதியாக வாழ்ந்தவள் உடல் நிலை சரியில்லை என்று போய் இருக்கிறாள்.

அது சரி அம்மா இத்தனை நாட்கள் அவள் இங்கே என்ன தான் வேலை செய்தாள்?. உன்னை சுற்றி சுற்றி வத்தாள். அதனால் தூக்கி வைத்து கொண்டாடு.

அடியே! அன்னபூர்ணா வாய் அதிகமடி உனக்கு என்று தலையில் அடித்தாள்.

அம்மா என்னையா அடிக்கிறாய்? உன்கைகள் நாசமாகட்டும்.

பெற்ற தாயை பார்த்து என்ன சொல்கிறாய் என்று மீண்டும் கையை ஓங்கினாள்.

நர்மதா குறுக்கே வந்தாள் என்ன அன்பூர்ணா அம்மாவை அப்படி எல்லாம் சொல்லக் கூடாது.

போ மாயி இவள் ராக்ஷசி நானும் தான் என் மாமியார்

வீட்டீல் இருக்கிறேன். என்னை எவ்வளவு நன்றாக பார்த்துக் கொள்கிறார்கள் தெரியுமா? அதற்கு காரணம் உன்னை பார்த்து பொருமையாக இருப்பது எப்படி என்றும், வேலை செய்வது எப்படி என்றும் கற்று கொண்டேன். மாயி நீ இல்லையானால் நான் என்றோ இந்த வீட்டிற்கு வந்திருப்பேன் நான் உன்னிடம் வளர்ந்ததால் பிழைத்தேன் இவளிடம் வளர்ந்திருந்தால் அவ்வளவு தான் என்கதி.

கங்காபாய் வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டாள். ஐயோ, ஐயோ பெற்ற மகளே என்னை திட்டுகிறோளே எல்லாம் இந்த பிசாசு செய்த வேலை. எல்லோரையும் மயக்கி விட்டாள் பாவி, சண்டாளி, என் வீட்டே நாசம் ஆயிற்று ஐயோ, ஐயோ இந்த வீட்டில் அநீதி நடக்கிறதே இதை யாரும் காதில் வாங்கி கொள்ள மாட்டேன் என்கிறீர்களே. அடியே! என் பிள்ளையை கொன்ற பாவியே என்று தான் நீ சாவாயோ அன்று தான் இந்த குடும்பத்தில் நிம்மதி என்று நர்மதாவை அடித்தாள்.

அம்மாவை பிடித்து தள்ளினாள் அன்னபூரணி. பாவம் அந்த தேவதை எதற்கு சாக வேண்டும்?. நீ செத்தால் எல்லோருக்கும் விமோசனம். உன்னை போல் ஒரு ஜன்மம் இருப்பதைவிட இறப்பதே மேல், எங்காவது போய் செத்து தொலையேன். அப்பாவும் நிம்மதியாக இருப்பார் என்று கண்டமேனிக்கு தாயை திட்டிக்கொண்டே போனாள் அன்னபூரணா.

அன்னபூரணி என்ன வார்த்தைகள் சொல்கிறாய். பெரியவர் சிறியவர் என்று மரியாதை இல்லாமல் பேசுகிறாயே. இப்படியா நீ நடந்து கொள்வது?. மாமியார் வீட்டிற்கு போனவள் பண்பாக நடந்து கொள்ள வேண்டும் என்றாள் நர்மதா .

போதும் சும்மா இரு மாயி அன்றிலிருந்து நான் இதை எல்லாம் பார்த்து, பார்த்து வெறுத்து விட்டேன். நீ படும் வேதனை போதும். உன் தாய் வீட்டிற்காவது போவது தானே எதற்காக இந்த கொடுமை எல்லாம் அனுபவிக்கிறாய்.?.

ஏய்! அன்னபூரணா என்று சற்று உரத்தகுரலில் நர்மதா பேசினாள் நீ அதிகம் பேசுகிறாய். இந்த வீட்டின் விஷயத்தில் தலையிட உனக்கு உரிமையில்லை, போ உன் குழந்தைக்கு பால் கொடுத்து உன் வேலையை பார்.

இத்தனைகாலம் அவள் கோபம் வந்து யாருமே பார்த்தவர்களில்லை. என்மாயியா பேசுகிறாள் என்று அப்படியே நின்றாள் அன்னபூர்ணா. கங்காபாயும் அப்படியே திகைத்து பார்த்தாள். வீட்டில் மௌனம் நிலவியது.

நர்மதா தன் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தாள்.

நடந்தவைகளை சோமநாத்திடம் அன்னபூர்ணா கூறினாள் என்னை தலையிடாதே என்று மாயி கூறிவிட்டாளே என்று அழுதாள், அப்பா நான் மாயிக்காக தானே பரிந்து பேசினேன், அவள் ஏன் என்னை கண்டித்துக் கொள்ள வேண்டும்.

பெண்ணே! மேலும் விபரீதம் ஏற்படக் கூடாது என்பதற்காக தான் அவள் சொல்லியிருப்பாள். அது மட்டும் அல்ல, நீ உன் தாயை திட்டியது மாயிக்கு கோபம் வந்திருக்கும். இதையெல்லாம் மனதில் வைக்காதே. போ, போய் மாயிடம் பேசு போ என்றார்.
அன்னபூர்ணாவும் மாயி என்று உள்ளே வந்தாள். நர்மதாவும் அவளை கட்டிக் கொண்டு முத்தமிட்டாள். உன்னை திட்டி விட்டேன் கண்ணா என்னை மன்னித்துவிடு என்றாள்.

மாயி தவறு நான் தானே செய்தேன். நீ ஒன்றும் செய்யவில்லை அல்லவா?.

அண்ணபூர்னா! நீ நான் வளர்த்த குழந்தை என்று சொன்னாய். பிறகு கடுமையான வார்த்தைகளை கூறினாய். என் குழந்தை தவறு செய்யக் கூடாது என்ற எண்ணத்தில் தான் உன்னை நான் திட்டினேன் அம்மா.

மாயி உன்னை நன்றாக புரிந்து இருக்கிறேன் அம்மா.

இருவரும் சிரித்து கொண்டனர். குழந்தை அழுகிறான் போல் இருக்கிறது போ போ .

இல்லை மாயி உங்களுடன் வேலை செய்கிறேன்.

எப்படியும் நீ மாமியார் வீட்டிற்கு போனால் வேலைகள் செய்யத்தானே வேண்டும்.

மாயி! உனக்கு நன்றாக தெரியுமே அந்த வீட்டில் நான் ஆறாவது மருமகள், ஐந்து பெரியமருமகள் இருக்கிறார்கள். ஆனால் எல்லோரும் நாங்கள் ஒத்துமையாகவும் நல்லவிதமாகவும் இருக்கிறோம்.

சரி சரி அம்மா தாயே நான் இருக்கும் வரையில் நீ சுகமாக இருக்க வேண்டும்.

மாயி! நீ எப்பொழுதும் இருக்க வேண்டும். உன்னை பார்க்க தான் நான் வருகிறேன். உன்னை என் வீட்டார்களும் நன்றாக புரிந்து வைத்து இருக்கிறார்கள். என் மாமியார் அடிக்கடி சொல்லுவார். பாவம் அந்த பெண் இரண்டு நாட்களாவது நம் வீட்டில் வைத்து கொள்ளலாம் என்றால் அந்த கங்காபாய் விட மட்டாள். அந்த பெண்ணை போட்டு இப்படி பிழிகிறார்களே அந்த பெண்னை பார்த்து தான் அன்னபூர்னியை மணந்தோம் என்று அடிக்கடி என் மாமியார் கூறுவார்.

சரி ,சரி போதும் புராணம், போ போய் வேலையை பார் என்றாள் மாயி.

சில நாட்கள் கழிந்தன.

## அத்தியாயம்:29

ஸ்ரீநாத்திற்கும், சிவாஜிக்கும் திருமணம் நடந்தேறியது.

சிவாஜியின் மணைவி மற்றொரு பணி பெண்ணாவாள். ஸ்ரீநாத்தின் மணைவியும் மிகுந்த நல்ல குணம் படைத்தவளாக இருந்தாள்.

நாட்கள் நகர்ந்தன.

விஸ்வநாத்தின் மணைவி வருவதும் போவதுமாக இருந்தாள். அதை புரிந்து கொண்ட சோமநாத் ஒன்று உன் மணைவியுடன் அங்கேயே இரு, இல்லையேல் அவளை இங்கே இருக்கச் சொல். ஸ்ரீநாத்தின் மனைவி மாயியுடன் நன்றாக ஒத்து போகிறாள். உன் மனைவியும் அம்மாவும் தான் இப்போது பிரச்சனை நீ அவளை அழைத்துக் கொண்டு அவள் வீட்டிற்கு போய் விடு. அவள் உன் அம்மாவுடன் சேர்ந்தால் உருப்படமாட்டாள். அதனால் நீ அவளை பிரித்து விடு. அவளுக்கு மாயியின் அருமை எல்லாம் சொல்லி திருத்தி அழைத்து கொண்டுவா. இதை நம் மாயிக்காக செய்ய வேண்டும். நான் உன்னை பிரிந்து போக சொல்லவில்லை அவளை திருத்தி அழைத்து வந்து விடு.

விஸ்வநாத்தும் தன் மனைவியை அழைத்துக் கொண்டு மாமியார் வீட்டிற்கு சென்று விட்டான்.

எவ்வளவோ மாயி சொல்லியும் அவன் கேட்கவில்லை. மகன் அதாவது விஸ்வநாத் பிரிகிறான் என்று மாயி தான் ஏங்கினாள். அதற்கும் கங்காபாய் எல்லாம் இந்த சனியனால் வந்தது நேற்று வந்தவளை தூக்கி வைத்துக் கொண்டு இன்று பெரியவளை விரட்டுகிறது என்று தினமும் வாயில் வந்த படி திட்டிக் கொண்டு வந்தாள்.

மாயி அதற்கும் கவலைபடவில்லை.

நர்மதாவின் தாய் மரண மடைந்தாள். அதற்கும் அவள்

போகவில்லை. சிவாஜி பல முறை வந்து அழைத்தான். ஆகட்டும் பார்க்கலாம் என்று சொல்லி அனுப்பினாள்

கங்காபாய் படுத்த படுக்கையானாள். அவளுக்கு எல்லாவித பணிவிடைகளையும் மாயி செய்து வந்தாள். மாயியை நன்றாக உணர்ந்து தான் செய்த தவறுகளை எண்ணி தினமும் அழுதாள்.

சோமநாத் நிம்மதியாக இருந்தார். இப்பொழுதாவது இவள் திருந்தட்டும் என்று.

கங்காபாயும் திருந்திக் கொண்டு வந்தாள்.

ஸ்ரீநாத்தும் அவன் மனைவியும் மாயியை நன்றாக கவனித்தனர்.

ஒரு நாள்

மாயி விஸ்வநாத்தும் அவன் மனைவி குழந்தைகள் எல்லோரும் இங்கே வர போகிறார்களாம். அவளும் நன்றாக திருந்தி விட்டாளாம் என்றார் சோமநாத்.

கங்காபாய் மெல்ல எழுந்து வந்து எல்லாவற்றிர்க்கும் காரணம் நான் தானே மாயி என்னை மன்னித்து விடம்மா.

அம்மா! ஏன் பெரிய வார்த்தைகளை கூறுகிறீர்கள்.

மாயி பெற்ற தாயை போல் எனக்கு நீ சேவை செய்தாயே. ஒரு தாயும் இவ்வளவு சேவை செய்வாளா என்பது சந்தேகம் தான் அம்மா, நீ பட்ட துன்பம் போதும் அம்மா போதும். நான் பல பிறவிகள் எடுத்து உனக்கு சேவை செய்ய போகிறேன். அப்பொழுது தான் நான் செய்த கொடுமைகள் போகும் என்னை பெற்ற தாயே, எங்கள் குலதெய்வமே என்றாள் கங்காபாய்.

மாயிக்கு சிரிப்பு வந்தது என்னை பெற்ற தாயே என்று சொன்னவுடன் இரண்டு வயதில் நம் தாய் கூறினாள். நாம் அன்றே எல்லோருக்கும் தாயாகிவிட்டோம் ஈஸ்வரா! இதை நானும் உலக மக்களும் புரிந்து கொள்ளவில்லையே இந்த ஐம்பது வயதிலும் என்னை என் மாமியார் என்ன பெற்றதாயே என்று அழைக்கிறாளே. மூத்தவர்களுக்கெல்லாம் நான் தாயா என்ன.

என்ன நர்மதா என்ன சிரிக்கிறாய்.

கங்காபாயும் சொல்லு நர்மதா நாங்களும் சிரிக்கிறோம்மே.

ஆமாம் சொல்லு மாயி என்றாள் ஸ்ரீநாத்தின் மணைவி.

தான் எண்ணியதை சொன்னாள் எல்லோரும் சிரித்தனர்.

உண்மையில் மாயி நீ எல்லோரையும் பெற்றவள் தான் பெற்றவளுக்கு தான் பொருமை இருக்கும் . இந்த பூமியை பெற்ற பூமா தேவியம்மா நீ இதில் உள்ளவர்கள் அனைவரும் உன் குமுந்தைகள் தானே, கெட்ட குழந்தையையும் திருத்தி நல்ல குழந்தை ஆக்குகிறாய்.அதனால் நீ பூமிதாய் என்றாள் கங்காபாய்.

சோமநாத் உண்மை தான் கங்காபாய். இந்த உலகத்தின் தெய்வம் அவள். நம் குலத்தை காக்க வந்த தேவதை.

சரி சரி போதும் அப்பா.

விஸ்வநாத்தும் அவன் மனைவியும் வரபோகிற்கள். அன்னபூரணி அவள் கணவர் எல்லோரையும் அழையுங்கள். பிள்ளைகளையும் அழையுங்கள்.

ஏனம்மா சிவாஜியையும் அவன் மணைவியையும் அழைக்கிறோமே ?.
ஊம் சரி ,இந்த வார திங்கட்கிழமை நாம் எல்லோருமாக

சேர்த்து இந்த ஈசனுக்கு பூஜை செய்வோம் மகா அபிஷேகம் செய்வோம்.

மாயி பல வீடுகளில் கேட்டு நான் நிறை பூக்களை பறித்து வருகிறேன் நீ நிறைய மாலை தொடுக்க வேண்டும் நம் வீடு சாந்தம் நிலவ அந்த ஈஸ்வரனை பிரார்த்திப்போம் என்றான் ஸ்ரீநாத்.

ஆகட்டும் என்று சிரித்தாள் மாயி

அதே போல் சோமவாரம் திங்கட்கிழமை வந்தது. உங்கள் குறிப்பின் படி அன்று ஆருந்ரா தரிசனம் என்பார்கள். எல்லோரும் கூட்டமாக சிவனின் கோவிலுக்கு வந்திருந்தனர்.

மாயி உன்கையாலேயே எல்லா மாலைகளையும் கொடு.

அப்பா, அம்மா பெரியவர்கள் நீங்கள் இருக்க நான் கொடுக்கலாமா?..

கங்காபாய். நர்மதா என்னை பெற்ற தாயே நீ தான் கொடுக்க வேண்டும்

குருக்களும் வயது போயிருந்தது. ஆமாம் நர்மதா நீ தான் உன்கையால் தர வேண்டும். உன் துயரத்திற்கெல்லாம் விடிவு காலம் வந்து விட்டது அம்மா.

துயரமா எனக்கேது என்று சிரித்தாள்.

எல்லாம் அந்த ஈசனின் செயல் அம்மா.

குருக்களே அவன் இல்லையேல் நாம் ஏது?. எல்லாவற்றிற்கும் காரணகர்த்தா அவன் தானே.

அம்மா நர்மதா நீ தேவதையம்மா தேவதை என்று கூறினார் குருக்கள்

அலங்காரங்கள் நன்று நடந்தது.

சிவனும் அன்று அதிக பிரகாசமாக தென்பட்டான். ஆரத்தி பாடல் முடிந்தன நர்மதா சிவாஜியை அழைத்தாள்.

என்ன மாயி என்றான்.

அதோ பாரடா ஈசன் தரிசனம் தருகிறான்.

மாயி உனக்கு என்ன வாயிற்று என்றான் சிவாஜி.

எனக்கு தலை சுற்றுவது போல் இருக்கிறதடா அந்த ஈசன் என் கண் முன் நிற்கிறான். என்னை அழைக்கிறானடா. நான் வந்த வேலை முடியப் போகிறது.

மாயி அப்படி எல்லாம் சொல்லாதே எங்களை விட்டு நீ பிரியக் கூடாது என்று தன் மடியில் அவளை படுக்க வைத்துக் கொண்டான்.

சோமநாத் அருகில் வந்தார். மாயி என்னம்மா ஆயிற்று உனக்கு? மெதுவாக அவளை தூக்கி தங்கள் இருப்பிடத்திற்கு வந்தனர்.

சிவாஜி தன் மடியில் போட்டுக் கொண்டு அவளை கட்டிக் கொண்டு இருந்தான்.

மாயி என்னம்மா பதிலே கூறாமல் இருக்கிறாயே.

சோமநாத்தும் மாயி உனக்கு என்னம்மா ஆயிற்று?. இந்த அப்பா கூப்பிடுகிறேன் என்னை இந்த வயதில் தனியாக விட்டு விட்டு சென்றுவிடாதேம்மா. உன் பலத்தில் தான் நான் இத்தனை காலம் வாழ்ந்தேன் என்றார்.

மாயி மெதுவாக கண் திறந்து எல்லோரையும் ஒரு முறை

பார்த்தாள். சிவாஜியை கட்டி அனைத்து முத்தமிட்டாள். எல்லோரையும் ஆசிர்வதித்தாள். அப்பா நான் வந்த வேலை முடிந்து விட்டது போகிறேன்.

அம்மா! என்னை ஈசன் அழைக்கிறான் நான் போகிறேன். விஸ்வநாத்தும், ஸ்ரீநாத்தும் மாயி என்று வந்தனர். இருவர் தலைகளிலும் தன் கையை வைத்தாள். குழந்தைகளே நீங்கள் எல்லோரும் ஒரு குறைவும் இன்றி வாழுங்கள். எல்லாம் அந்த ஈசன் செயல். ஈஸ்வரா என்று கண்ணை மூடிக் கொண்டாள் மாயி.

இப்படியாக நர்மதா தன் உயிரை துறந்தாள்.

## அத்தியாயம்: 30

சீடர்களே! பார்த்தீர்களா ஒரு பெண்ணின் பெருமையை நாம் புரிந்து கொள்ள வேண்டும் பெண்கள் கோவப்படாமலும் ஆத்திரப் படாமலும் இருக்க வேண்டும் பொருமையாக இருந்தால் நாம் எதையும் வெல்லளாம் பெண்களுக்கு சன்னியாசம் கொடுப்பதில்லை காரணம் இயற்கையிலே அக்குணம் அவர்களுக்கு உள்ளது பிறக்கும் போது தன் வீட்டவர்க்கு உதவி புரிகிறாள் மணக்கும் போது தன் கணவன் வீட்டாருக்கும் கணவனுக்கும் உதவி புரிகிறாள், பின் பிள்ளைகள் பெற அப்பிள்ளைகளுக்கு சேவை புரிகிறாள் தனக்கேன்று எதையும் யோசிக்காதவள் பெண்

தான் வாழ வேண்டும் என்று கருதமாட்டாள் பிறர் நலனுக்காக வாழவாள் உன்மையான் பெண் என்பது இவள் தான். தான் தனது என்று இல்லாம் நம் வாழ் நாள் முழுவதும் பிறருக்காக வாழ வேண்டும் இவை தானே சன்னியாசிகளும் செய்கிறார்கள் இவள் சிறு குடும்பத்தில் இருந்து கொண்டே செய்துவிடுகிறாள் இதற்கது என்று துறவு பூண்டு சன்னியாசிகள் இதை கை ஆளுகின்றனர். ஒரு பெண் பற்றில்லாமல் அன்புடன் வாழ வேண்டும்,

சன்னியாச தர்மமும் அதை தானே கூறுகிறது. சீடர்களே! குடும்பத்தில் இருந்து கொண்டே தன்னை பற்றி எதுவுமே நினைக்காமல் தனக்கு சுகம் துக்கம் என்று எதுவும் இல்லாமல் தன்னை இகழ்வாக நினைத்தவருக்கும் நல்ல விதமாக சேவை புரிந்து அவர்களையும் மாற்றினாள். இவளும் ஒரு தூய சன்னியாசிக்கு ஒப்பாவாள் அல்லவா? இந்த தேவியின் பெருமையை நாம் சொல்லிக் கொண்டே போகலாம்

சீடர்களே! இப்பொழுது தான் இந்த நர்மதாவின் கடைசி பாகம் முடிவு பெருகிறது பெண்கள் திருமணம் ஆவதற்க்கு முன்பு ஒரு பௌர்னமியை தங்கள் குருவிற்க்கு பூஜை செய்து விட்டு பிறகு இந்த சரித்திரத்தை பாராயனம் செய்ய வேண்டும், அமாவாசைக்குள் இதை முடிக்கவேண்டும். முடித்த பிறகு ஒரு நல்ல நாளை பார்த்து குருவிற்கு முறைப்படி பூஜை செய்து பிறகு ஒரு நல்ல கன்னிகையை இவர்களை விட வயதில் சிறியவளாக இருக்கவேண்டும் அழைத்து அந்த கன்னிகைக்கு இந்த இரண்டு நர்மதாவையும் மனதில் நினைத்து கொண்டு பாத பூஜை செய்ய வேண்டும். பிறகு முன்பு சொன்னது போல் அவைகளை கொடுத்து சிங்காரத்தை கொடுத்து விட்டு அவளை வனங்க வேண்டும் வணங்கிய பின்பு, தான் கன்னிகைக்கு நல்ல உனவை அளித்து பின் தானும் உனவு உட்கொள்ளவேண்டும் அன்று எல்லோரையும் அழைத்தும் உணவளிக்கலாம் இது இன்னும் விசேஷமானது. இந்த பதினைந்து நாட்கள் படிக்கும் பொழுது ஒரு வேலை தான் உண்ண வேண்டும் இவர்கள் பஞ்சுகளில் படுக்கலாகாது (குறிப்பு:- இங்கே மெத்தை போன்ற தலைகானி வஸ்துக்கள் உள்ளன அல்லவா அவை எல்லாம் உபயோகிக்க கூடாது) இந்த பதினைந்து நாட்களும் நேஸ்டையாக இருக்க வேண்டும் இந்த பதினைந்து நாட்களுக்கு ஏற்றார் போல் புராணத்தை பிரித்துக் கொள்ள வேண்டும் . நான் அப்படி தான் பிரித்திருக்கிறேன் இருப்பினும சரிவர பிரித்துக் கொள்ளலாம்.

இப்புராணத்தை கேட்கும் கன்னி பெண்கள் நல்ல கணவனை அடைவார்கள். வாழ்வில் எவ்வித துயரமும் இல்லாமல் வாழ்வார்கள் இந்த புரானத்தை படிப்பவர்களுக்கு ஜன்ம சாபம் நீங்கும், ஜன்ம பாவம் நீங்கும் இந்த புராணத்தை படிப்பவர்கள் நல்ல குழந்தைகளை அடைகின்றனர், குழந்தை இல்லாதவர்களும் அதே போன்று படிக்கலாம். அந்த புராணம் மிகவும் மகத்தானது இதை ஒவ்வொவரும் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

சீடர்களே! நர்மதாவின் புராணத்தை கேட்டீர்கள் அல்லவா. இதோ நம்மிடத்தில் வந்திருக்கும் தம்பதியர்கள் யார் தெரியுமா?.

எல்லோரும் திகைத்து இவ்விருவரை பார்த்தனர். இவர்களும் ஒன்றும் புரியாமல். குருவை பார்த்தனர்.

குரு தெய்வீக புன்னகை பூத்தார் இந்த உண்மையும் சொல்கிறேன் கேளுங்கள். இதோ இவர் அந்த வேடுவ தலைவன் கண்ணீர் மல்க இவர் நின்று கொண்டிருந்தார். இதோ இந்த அம்மையார் வேடுவரின் தலைவி எப்படி என்று ஆச்சரியமாக இருக்கிறதா?. நர்மதா சாபம் இடுகிறாள். அப்பொழுது தலைவி சந்திரமகராஜை கேட்கிறாள் நானும் இதற்கு காரணம் தானே, என்ன தான் நான் திருந்தினாலும் செய்த தவறு தவறு தானே. அதற்கு நானும் பரிகாரம் தேட வேண்டும் குருநாதா, தாங்கள் தான் எனக்கு அருள வேண்டும் மீண்டும் இவள் பிறக்கும் போது நானும் இருக்க வேண்டும் என் பாபத்தை நானும் தீர்க்க வேண்டும். மௌனமாக இருப்பது தவறு தானே. தவறை எதிர்த்து பேசாமல் இருந்து விட்டேனே. நானும் பாவிதானே. இதனால் குருவே உங்கள் பாதங்களில் அனந்த கோடி நமஸ்காரங்கள். எனக்கும் அருள் புரியுங்கள்.

அப்படியே ஆகட்டும் நீ திருந்திய நீயே பாவத்தை ஏற்கொள்ள வருகிறாய் உனக்கு என்றும் அந்த ஈசனின் திருவருள் இருக்கும் அம்மா, கவலைப்படாதே. அந்த தேவி பிறக்கும் பொழுது நீ உதவியும் இருப்பாய். நீ திருந்தி கணவனையும் விட்டு ஒடி வந்தாய் அல்லவா அதனால் அப்பிறவியில். நீ தேவிக்கு உதவியாக இருப்பாய் என்று திருவாய் மொழிந்தார். என்ன சீடர்களே புரியவில்லையா. அந்த சோமநாத் வேறு யாரும் அல்ல அந்த வேடுவரின் தலைவி தான். அந்த தலைவன் செய்த பாவம், போன ஜன்மத்தில் பார்வதி மாயியாக பிறந்தான். துக்கத்தை அனுபவித்தான். அதில் கொஞ்டம் இருத்ததை இப்பிறவியில் தீர்த்துக் கொண்டார். சோமநாத் ஊர் மக்களை எதிர்த்து தன் விஸ்வநாத்திற்கு நர்மதாவை மணந்திருக்கலாம் அல்லவா, அங்கு ஒரு பாவம் செய்ததால் தான் மீண்டும் இங்கு பிறந்திருக்கிறார்கள். தம்பதியினர்களே உங்கள் பாவம் தீர்ந்து விட்டன. நீங்கள் தூய்மை அடைந்து விட்டீர்கள். இனி அத்த ஈசனை பிரார்தித்து அவன் திருவடியை சேருங்கள்.

இருவரும் ஆனந்த கண்ணீல் மல்கினர்.

நாங்கள் பெரும் பாக்கியமனவர்கள் தான், ஸ்வாமி! எங்களின் ஜன்மத்தை எடுத்து உரைத்தவரே உங்களை புகழ வார்த்தைகளே இல்லை. உங்கள் கருணை தான் அளவுக்கு கடந்தது. எங்களை அழைத்து எங்களுக்கு சாப விமோசனம் அளித்தவரே எங்கள் இருவக்கும் ஒரு வேண்டுகோள் இருக்கின்றன. அதையும் தாங்கள் நிவர்த்தி செய்ய வேண்டும்.

சொல்லுங்கள் மகாத்மாக்களே சொல்லுங்கள்

இருவரும் ஒரே குரலில் சொன்னார்கள். ஸ்வாமி! அந்த தேவியின் இனி எடுக்க போகும் பிறப்புகளிலும் நாங்களும் பிறந்து எங்காவது ஏதாவது ஒரு சேவை அவளுக்கு செய்ய வேண்டும்.

மகாத்மாக்களே இதற்கு நீங்கள் எல்லாம் வல்ல, எல்லாவற்றிற்கும் மூத்தவளாயிருக்கும் அந்த ஸ்ரீஓம் ஆதிசக்தியின் அம்சமாகிய ஜகதாத்ரியை தான் தியானிக்க வேண்டும். இமாலயத்திற்கு சென்று அவளை தியானியுங்கள். எல்லாம் நல்ல விதமாக முடியும்.

சீடர்களே! இதனால் தான் நான் கூறினேன். இந்த சரித்திரத்தை படிப்பவருக்கு ஜன்ம சாபம் நீங்கும் என்று. இந்த நர்மதைக்கு மேகலா தேவி என்றும் ஒரு பெயர் உண்டு. இந்த நதியில் நீராடினால் ஞானம் பெறுகும். சீடர்களே! இந்த ஞான பீடமும் அந்த நர்மதையின் உற்பத்தி ஸ்தலத்தில், நீரில் இருந்துவிடும். நீங்கள் எல்லோரும் ஒவ்வொரு திக்காக சென்று அந்த தேவியை பிரார்த்தித்து முக்தி அடையுங்கள். எனக்கு வந்த வேலை முடிந்து விட்டது. நானும் இனி பல வேலைகளை தொடர வேண்டும். இவ்விடத்தை விட்டு நானும் புறப்படுகிறேன் என்று கூறி எல்லோரும் நூற்று எட்டு முறை நர்மதாவில் மூழ்கி எழுந்து அந்த நர்மதாவை மனதார பிரார்த்தித்து எல்லோருக்கும் மங்களங்கள் உண்டாகட்டும். எல்லோரும் நலமாக இருக்கட்டும் என்று விடை பெற்றுக் கொண்டார் காலமகரிஷி

ஜகதாத்ரி உவாச:- எல்லா மங்களங்களும் நிலவட்டும். எங்கும் சாந்தி நிலவட்டும் ஞானியர்கள் இருந்து கொண்டு உபதேசங்கள் செய்யட்டும். எல்லோரும் நர்மதாவின் புகழ் பாடட்டும் ஸ்ரீஓம் ஆதிசக்தி தேவிக்கு சரணம் . இத்துடன் நர்மதாவின் சரித்திரம் முடிவடைகிறது.
குறிப்புக்கள்:- நர்மதாவை பூஜிப்பவர்கள் தினமும் அவளுக்கு இனிப்பு வழங்க வேண்டும், இனிப்பும், பழங்களும் வைக்க வேண்டும். புளிப்பான பழங்களை வைக்க கூடாது முக்கிய குறிப்பு: இந்த நர்மதாவை வளர்த்த ரிஷியின் பெயர் கான்வ மகராஷி அவரை பற்றிய விவரங்கள் எதுவும் உங்களுக்கு வருவது சிரமமாககும் அதாவது அந்த விவரங்கள் கிடைப்பது

சற்று சிமமாகும் அடுத்தது சந்திரன் என்று கூறுவதால்
இது சாட்சாத் சந்திரனை குறிக்கும் அதற்க்கு
பிறகு சந்திரன் என்ற பெயரில் ஞானி வந்திருந்தார்
இந்த கதையில் வரும் சந்திரன் ஆதி சந்திரன் நாம்
தினமும் பார்க்கிறோமே அந்த சந்திரனின் அவதாரம்
தான். அதனால் குழப்பங்கள் எதுவும் வரக்கூடாது.
ஞானபீடமும் நீரில் இருந்தது. நல்ல ரிஷிகளும்
எல்லோரும் பிரிந்து சென்று விட்டனர். அந்த இருவரும்
இமாலயத்திற்க்கு வந்து என்ன குறித்து ஜபம் செய்தனர்
பல காலம் அவர்கள் ஜபம் செய்தார்கள் நானும்
அவர்களுக்கு பிரதக்ஷமானேன் உங்கள் தவத்தை
மெச்சுகிறேன் ஆனால் தேவி மூன்று ஜன்மங்களுக்கு
பிறகு அவள் தியானத்தில் அமர்ந்து விடுவாள் நீங்கள்
பிறக்க வேண்டும் என்று கேட்டால் கர்மவசத்தில்
ஜன்மங்கள் பல எடுக்க வேண்டி வரும் இது உங்களுக்கு
பரவாயில்லையா.

தாயே! தயாபரி நாங்கள் செய்த கொடுமைக்கு பல
ஜன்மங்கள் எடுத்தாலும் பரவாயில்லை இந்த தேவி
பிறக்கும் இடத்தில் எல்லாம் நாங்களும் பிறக்க வேண்டும்

அவளது பிறப்பு ஜன்மாக்கள் போய்க் கொண்டே
இருக்கிறது கவலைப்படாதிர்கள் அவளை போய் நீங்கள்
நிச்சயம் சேருவீர்கள்.

தாயே! கருனா தெய்வமே எங்களை வாழ்த்தி அனுப்பம்மா
இவ்விருவர்களையும் மனமார வாழ்த்தி அனுப்பினேன்
இந்ந சரித்திரத்தை என் மூலம் உங்கள் குருவின் சரீரம்
இந்த நதியின் உற்ப்பதி தலம் இம்முன்றும் ஒருங்கே
அமைந்ததால் நீங்கள் புண்ணிவான்கள் ஆகிறீர்கள் நாம்
செய்யும் செயல் அனைத்தும் நல்லவிதமாக செல்லட்டும்.

முற்றும்
பெயர்:- நர்மதா
பிறந்த தேதி:- மகா சிவராத்திரி

நாடு:- இந்தியா
பிறந்த ஊர்:-
புகுந்த ஊர்:-
மொழி:- மராட்டி